# மார்க்கம்

சமூக பொருளியல் பண்பாட்டு ஆய்வுச் சஞ்சிகை

## இலங்கையின் பொருளாதாரம்


✦ நிலைநிற்கும் அபிவிருத்தி
*கொட்பிரே குணதிலக*

✦ இலங்கையின் கைத்தொழில் வளர்ச்சி
*யோகா இராசநாயகம்*

✦ சர்வதேச வர்த்தகமும் பொருளாதார அபிவிருத்தியும்
*கா. கந்தையா*

✦ இலங்கையின் வரிஅமைப்பு
*பா. சிவாஜி*

✦ எஸ்காப் நாடுகளுக்கிடையிலான வர்த்தக முதலீட்டு வாய்ப்புக்கள்
*டக்ளஸ் ஜெய்சேகரா*

✦ நிறுவனங்களிலான முரண்பாடுகள்
*நித்தியலட்சுமி சண்முகம்*

✦ திருகோணமலையின் வரட்சிப் போக்குகள்
*கே. ராஜேந்திரம்*

✦ மாயைக் கோட்பாடு
*ஏ. என். கிருஷ்ணவேணி*

✦ சுதந்திர வர்த்தக வலையம்

✦ மக்களின் அபிவிருத்தி

✦ ஊழியின் விளிம்பில்



Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 3169



மார்கா நிறுவக வெளியீடு

~~இதழ் 1, மலர் 4,~~ 1993

மலர் 1 இதழ் 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A GOLDEN BUD
BLOOMS ON THE
SAVINGS SCENE

Ran Kekulu

*A CHILDREN'S
SAVINGS SCHEME
FROM*
**BANK OF CEYLON**

BANK OF CEYLON

**Bank of Ceylon**
Bankers to the Nation

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.......

# மார்க்கம்

சமூக பொருளியல் பண்பாட்டு ஆய்வுச் சஞ்சிகை

**மலர் - 1, இதழ் 4, 1993**

மார்கா ஆய்வு நிறுவகத்தின் ஆய்வுச் சஞ்சிகையான இது மூலச் சொல்லின் தமிழ் வடிவமாக **"மார்க்கம்"** எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. மார்க்கம் என்பது **"வழி", "பாதை"** யைச் சுட்டுவதாகும். **"மார்க"** என்னும் வடமொழியிற் சுட்டப்பெறும் பன்மைப் பொருள் "மார்க்கம்" என்னும் தமிழ் வடிவத்தினுள் தொக்கு நிற்கும். மார்க்கம் பால் பகா அஃறிணைப் பெயராகும். எனவே இங்கு நாம் ஒரு **"வழியை"** மாத்திரம் சுட்டாது உண்மையின் தேடலுக்கான பல்வேறு மார்க்கங்களையே சுட்டுகின்றோம். இந்தியக் கலை மரபில் **"மார்க்க"** என்பது செந்நெறிக் கலைகளைச் சுட்டும் என்பதையும் நாம் நாட்டிய சாஸ்திரம், சிலப்பதிகார உரைகள் வழியாக அறிகிறோம். மார்க்கத்தின் உள்ளடக்கம் இந்தச் செந்நெறிப்பாட்டை உறுதி செய்வதாக இருத்தல் வேண்டும். இது கட்டுரையாளர்களுக்கான கடமையாகவும் வாசகரின் உரிமையாகவும் அமைதல் வேண்டுமென்பது எமது அவா.

**கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்கள் மார்கா நிறுவகத்தின் கருத்துக்கள் அல்ல, அவை கட்டுரையாசிரியர்களின் கருத்துக்களே.**

**மார்க்கம் தனி இதழ் ரூபா 25/-**
**வருடச் சந்தா (4 இதழ்கள்) ரூபா 100/-**

**மார்க்கம் இதழைப் பெற விரும்புவோர் நியூட்டன் பெர்னாண்டோவின் பெயருக்கு ஹாவ்லொக் ரவுன் (கொழும்பு-5) தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாகக் காசுக்கட்டளை அனுப்புதல் வேண்டும்.**

## *வாசகருடன் சில வார்த்தைகள்..........!*

இன்றைய சமூக, பொருளாதார சிந்தனைகள் உலகளாவிய ரீதியில் பல்வேறு பரிமாணங்களைப் பெற்று வருகின்றன. இப் பரிமாணங்கள் பற்றிய ஆய்வுகளை இத்துறையில் நாட்டம் கொண்ட இளைய தலைமுறையினர்க்கு தமிழில் தருவதற்கான சாதனங்கள் இல்லாதது பெரும் குறையாகும். இக்குறையை ஓரளவுக்கேனும் நீக்கி அண்மைக்கால சமூக விஞ்ஞானத்துறைக் கருத்துக்களுடன் பரிச்சயம் கொள்ளச் செய்வதே மார்க்கம் மேற்கொண்டுள்ள பணியாகும்.

அறிவைத்தேடல் என்பது இன்றைய சமூக அரசியல் சூழ்நிலைகளில் "சிந்தனை வளர்ச்சி" என்னும் சீரிய கருத்தை மறந்து "பரீட்சையில் சித்தி" என்னும் குறுகிய வட்டத்துக்குள் புதைந்து போய்விட்டமை தமிழ் பேசும் சமூகத்துக்கு நேர்ந்த சாபக்கேடாகும். புதிய கருத்துக்கள் பற்றிய அறிவைத் தேடலுக்கு உதவும் வகையில் கற்றுத் தேர்ந்த எம்மவர்கள் எதனைப்படைத் துள்ளனர் என்பதையும் இங்கு மார்க்கம் மனவேதனையுடன் வினவுகிறது.

எனவே சமகாலத்தில் சர்வதேசரீதியாகவும் தேசியரீதியாகவும் வெளிவருகின்ற சமூகவிஞ்ஞானத்துறை சார்ந்த புதிய சிந்தனைப் போக்குகள், நோக்குகள் ஆகியவற்றை இயலுமானவரை கூடிய விரைவில் தமிழில் தர மார்க்கம் ஆர்வம் கொண்டுள்ளது. இன்றைய சூழ்நிலையில் மார்க்கத்தின் இந்த இதழையும் எம்மால் வெளிக்கொணர முடிந்தமைக்கு வாசகர்களாகிய நீங்கள் காட்டிய ஆர்வமும் உற்சாகமுமே காரணம். எமது அடுத்த இதழின் கருப்பொருள் "வறுமையும் வேலையின்மையும்" என்பதை இச்சந்தர்ப்பத்தில் மார்க்கம் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறது.

ஆசிரியர்

★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MARKAM

A Journal for the study of Society, Economy and Culture

Vol. 1, No. 4, 1993



ADVISORY COMMITTEE

Mr. Godfrey Gunatilleke
Dr. V. Kanesalingam
Mr. Newton Fernando
Prof. K. Sivathamby
Prof. V.Nithiyananthan
Mr. R. Sivachandran

EDITOR

S.Antony Norbert

EDITORIAL ASSISTANTS

Miss. Narmada Kamalanathan
Miss. Jayaluxmi Ponniah



TYPE SETTING

Unique Typesetters
2/3, Plaza Complex
33, Galle Road
Colombo 6.

PRINTING

Unie Arts (PVT) Ltd.
48 B, Bloemendhal Road
Colombo 13.

PUBLICATION

Marga Institute
(Sri Lanka Center for Development Studies)
61, Isipathana Mawatha
Colombo 5.


## CONTENTS


Page

* Strategic Policies and Initiatives for Sustainable Development in Sri Lanka . 4
  *Godfrey Gunatilleke*
* Industrial Development in Sri Lanka - A Historical perspective. 9
  *Prof. Yoga Rajanayagam*
* Economic Development and International Trade Sri Lankan experience. 13
  *K. Kandiah*
* Tax Systems in Sri lanka - An over view 22
  *B.Sivaji*
* Trade and Investment opportunities in the ESCAP Region with special reference to Sri Lanka. 32
  *Douglas Jayasekera*
* Conflicts within Organizations and their Impacts. 41
  *Miss. Nithiya Luxmy Shanmugam*
* A Climatic study of Incidence of Drought in Trincomalee District. 49
  *K. Rajendram*
* Concept of Maya in Advaita Vedanta and Saiva Siddhanta. 54
  *Mrs. A. N. Krishnaveny*
* Free Trade Zones in Asian Countries 8
* Development of,by and for the People 20
* On Verge of the Doom 58



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

# மார்க்கம்

சமூக பொருளியல் பண்பாட்டு ஆய்வுச் சஞ்சிகை

இதழ் - 1, மலர் 4, 1993

**ஆலோசனைக்குழு**

திரு. கொட்பிரே குணதிலக
கலாநிதி வ. கணேசலிங்கம்
திரு. நியூட்டன் பெர்னாண்டோ
பேரா. கா. சிவத்தம்பி
பேரா. வி. நித்தியானந்தன்
திரு. இரா சிவச்சந்திரன்

**ஆசிரியர்**

எஸ். அன்ரனி நோபேட்

**ஆசிரிய உதவியாளர்**

செல்வி நர்மதா கமலநாதன்
செல்வி ஜெயலஷ்மி பொன்னையா

**கணணி அச்சமைப்பு**

யுனிக் ரைப்செட்டர்ஸ்
2/3 பிளாசா கட்டிடம்
33, காலிவீதி,
கொழும்பு - 6

**அச்சிடுதல்**

யுனி ஆர்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
48 பி, புளுமெண்டால் வீதி,
கொழும்பு - 13

**வெளியீடு**

மார்கா நிறுவகம்
61, இசிப்பத்தன மாவத்த,
கொழும்பு - 5

## பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| * இலங்கையில் நிலை நிற்கும் அபிவிருத்திக்கான திறமுறைக் கொள்கைகளும் ஆரம்ப முயற்சிகளும் **கொட்பிரே குணதிலக** | 4 |
| * இலங்கையின் கைத்தொழில் வளர்ச்சி - ஒரு வரலாற்றுக் கண்ணோக்கு **பேராசிரியர் யோகா இராசநாயகம்** | 9 |
| * சர்வதேச வர்த்தகமும் பொருளாதார அபிவிருத்தியும் இலங்கை அனுபவம். **கா. கந்தையா** | 13 |
| * இலங்கையின் வரிஅமைப்பு முறை. **பா. சிவாஜி** | 22 |
| * ஆசிய- பசிபிக் பிரதேச சமூக பொருளாதார ஆணைக்குழுவின் அங்கத்துவ நாடுகளுக் கிடையிலான வர்த்தக, முதலீட்டு வாய்ப்புக்களும் - இலங்கையின் விசேட தொடர்புகளும். **டக்ளஸ் ஜெயசேகரா** | 32 |
| * நிறுவனங்களிலான முரண்பாடுகளும் அவற்றின் தாக்கங்களும் **செல்வி நித்தியலட்சுமி சண்முகம்** | 41 |
| * திருகோணமலைப் பிரதேசத்தின் வரட்சிப் நிகழ்வு பற்றிய ஓர் ஆய்வு **கே. இராஜேந்திரம்** | 49 |
| * அத்துவைதத்திலும் சைவசித்தாந்தத்திலும் மாயைக்கோட்பாடு **திருமதி ஏ.என்.கிருஷ்ணவேணி** | 54 |
| * ஆசிய நாடுகளில் சுதந்திர வர்த்தக வலையங்கள் | 8 |
| * மக்களால்,மக்களின்,மக்களுக்கான அபிவிருத்தி | 20 |
| * ஊழியின் விளிம்பில் | 58 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நிலைநிற்கும் அபிவிருத்திக்கான திறமுறைக் கொள்கைகளும் ஆரம்ப முயற்சிகளும்

**கொட்பிரே குணதிலக**

நிலைத்து நிற்றல் (Sustainability) தொடர்பான சகல பிரச்சினைகளையும் அவற்றிற்கு முகம் கொடுப்பதற்காக மேற் கொள்ளவேண்டிய ஆரம்ப முயற்சிகளையும் (initiatives) பற்றி அளவீடுகள் செய்வது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல. இங்கு நிலை நிற்கும் அபிவிருத்தி பற்றி கூடுதலாக, திறமுறை இயல்பு கொண்ட கருத்துக்களே முன் வைக்கப்படுகின்றன. அத்துடன் மிக முக்கியமான வளங்களின் முகாமைத்துவத்துக்கான கொள்கைகள் மற்றும் நிறுவன அமைப்புக்களில் செய்யப்படவேண்டிய மீள் சீராக்கங்கள் (readjustments) பற்றியும் இங்கு தொட்டுக் காட்டப்படுகின்றது. மேலும் வளப்பயன்பாட்டு ஒழுங்கில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் போது அவை விவசாயம், கைத்தொழில், நகர அபிவிருத்தி மற்றும் ஒரு தீவுக்குரிய உயிரினச் சூழல் முறைமையில் (an island eco - system) ஏற்படுத்தும் தாக்கங்களின் விளைவாக உருவாகும் முக்கிய பிரச்சினைகளும் இங்கு இனங்காணப்படுகின்றன.

நிலை நிற்கும் அபிவிருத்தி (sustainable development) என்பது இலங்கையைப் பொறுத்தளவில் இரு முதன்மை நிபந்தனைகளை இணைக்கும் ஒரு முக்கிய செயல்முறையாகும். முதலாவது நிபந்தனையானது இயற்கையான அடித்தளம் மற்றும் எதிர்காலத்தில் நிலைநிற்கும் அபிவிருத்திக்கு அதன் சாத்தியம் ஆகியவற்றில் ஏற்படும் இக்கட்டான நிலைகள். இரண்டாவது நிபந்தனை - இடைக்காலத்தில் முகங் கொடுக்க வேண்டிய அபிவிருத்தித் தேவைகள் பற்றியது. இத் தேவைகள் கடந்தகால அபிவிருத்திச் செயல் முறைகளால் உருவாகி இப்போது தவிர்க்க முடியாதவையாக மாறியவைகளாகும். வேலையின்மையின் அளவுமீறிய விகிதத்தை ஓரளவு நியாயமான மட்டத்துக்குக் குறைத்தல். தீவிர வறுமையை நீக்குதல் ஆகியவை ஒழுங்கு முறையில் அமைந்துள்ள உள்ளார்ந்த நெருக்குதல்களாகும். இவற்றை வெற்றிகரமாக முகங் கொடுக்கக் கூடிய வல்லமையுள்ள ஒரு நிலை நிற்கும் அபிவிருத்தித் திறமுறையை அடைய இக்கட்டுரை முயல்கிறது.

வளப்பயன்பாட்டைப்பினை வலுவிழக்கச் செய்த கடந்த கால அபிவிருத்திப் போக்குகள், கொள்கைகள் பற்றியும் அறிந்திருக்க வேண்டும். ஒரு புறத்தில் விவசாய விரிவாக்கமும், ஆரம்பகால சனத்தொகை துரித வளர்ச்சியும், கொள்கைச் சட்டகமும் (policy framework) வினைத்திறனற்ற வளப் பங்கீடுகளை உருவாக்கி அதன் காரணமாகப் புதிய நிலங்களின் பாரிய அபிவிருத்திக்கான சாத்தியக் கூறுகளை அழித்துவிட்டன. கடந்த கால திறமுறைகளின் விளைவாகப் பொருளாதார வளர்ச்சிக்கும், தொழிலாளர் உறிஞ்சலுக்குமிடையே ஏற்பட்ட சமமின்மையானது இன்று பயங்கரமான நிலையினை அடைந்துள்ளது. மறுபுறத்தில் சமூகத்துறை தொடர்பான கொள்கைகளும் அவற்றின் விளைவான மனித வலு அபிவிருத்தியும் சனத்தொகை மாற்றங்களையும் சனத்தொகை வளர்ச்சில் ஒரு சீரான வீழ்ச்சியையும் தோற்றுவித்து எதிர்கால பிரச்சினைகளைச் சமாளிக்கக் கூடிய நிலையைத் தோற்றுவித்துள்ளன.

இக்கட்டுரையானது நிலைநிறுத்தப்படக் கூடிய எதிர்கால அபிவிருத்தித்திட்டங்களை விபரிக்கின்றது. இதில் இரண்டு கட்டங்கள் உள்ளன. எனினும் இவற்றில் தீர்க்கமானது 1990 களைப் பற்றி முதலாவது கட்டமாகும். கடந்த கால அபிவிருத்தி முயற்சியின் விளைவுகளை மோசமான சமமின்மைகளால் உருவாக்கப்பட்ட தட்டிக் கழிக்க முடியாத விடயங்கள் சார்பான சில தெரிவுகளை இது விளக்குகின்றது. இந்த அபிவிருத்திக் கட்டங்கள்(development scenarios) வளங்களின் பயன்பாட்டுப் போக்கில் நீண்டகாலத்தில் ஏற்படக் கூடிய சில மாற்றங்களைக் காட்டுவனவாக உள்ளன.

**முதலாவது** - சனத்தொகை மாற்றங்களும், வளர்ச்சி வீதத்தின் வீழ்ச்சியும் சனத்தொகையை இன்றைய நிலையைவிட சுமார் ஒன்றரை மடங்காக ஸ்திரப்படுத்தும். இப்போக்குகள் உருவாக்கும் "சனத்தொகை - வளங்களின் சமநிலை" நிலை நிற்கும் அபிவிருத்திக்கான நிலைமைகளை விருத்திசெய்யும்.

**இரண்டாவது** - கடந்தகால அபிவிருத்தித் திறமுறைகள், காட்டு நிலங்களை விவசாய நிலங்களாக மாற்றும், விரிவாக்க முயற்சியில் பெரிதும் தங்கியிருந்தன. இவ்வகையான நிலப்பயன்பாட்டு முறைகள் எதிர்காலத்தில் நிலைக்கக் கூடியனவல்ல. இத்தகைய செயற்பாடானது ஏற்கனவே காடுகளின் அளவை உயிரினச் சூழற் தேவைகளைப் பொறுத்தவரையில் மிக ஆபத்தான நிலைக்குக் குறைத்துவிட்டன. எனவே விவசாய வளர்ச்சியானது நிலத்தின் உற்பத்திகளை உயர்த்துவதிலேயே பெருமளவுக்குத் தங்கியுள்ளது. இது இன்றுள்ள ஒவ்வொரு விவசாய முறைமையிலும் புதுமையான சூழலில் அழுத்தங்களை (Stress) உருவாக்கும். அத்துடன் நிலப்பயன்பாட்டில் பலபுதிய ஒழுக்காற்றுகளையும் தோற்றுவிக்கும். எனினும் இங்கு எதிர்வு கூறப்பட்ட எதிர்கால அபிவிருத்தித் தோற்றப்பாடுகள் ஒருவிடயத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. அதாவது சரியான முகாமைத்துவத்துக்கு உள்ளாகிய நிலவளங்கள் விவசாய வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளன. இது ஒட்டு மொத்தமான திறமுறைக்கு(overall strategy) அவசியமானது.

திரு. கொட்பிரே குணதிலக
நிறைவேற்றுப் பணிப்பாளர்
மார்கா நிறுவகம்
கொழும்பு - 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூன்றாவது** - விரிவாக்கம், வளர்ச்சி தொடர்பாக விவசாயத்துறையின் இயலளவு வரையறைகள் பிரதான அபிவிருத்தி முயற்சிகளைக் கைத்தொழில் துறைக்கு மாற்றும் கடந்த காலத்தைவிட வேலைப்படை உறிஞ்சல் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் இது முக்கிய பங்கு வகிக்கக் கூடும். இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ள அபிவிருத்தித் தோற்றப்பாடுகள் நகரசனத்தொகை 3.5 மில்லியனிலிருந்து (1990) 2000 ஆம் ஆண்டில் 6 மில்லியன் ஆகவும் இதே காலகட்டத்தில் கைத்தொழிலின் பங்கு 25.2 வீதத்திலிருந்து 34.2 வீதமாகவும் உயரும் என எதிர்வு கூறுகின்றன. கைத்தொழிலுக்கான வரையறுக்கப்பட்ட இயற்கை வளங்களின் தளத்துடன் ஒப்பிடும் போது இலங்கை இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களிலேயே பெருமளவுக்குத் தங்கியிருக்க வேண்டும். எனவே இத்தகைய குறைந்து செல்லும் இயற்கை வளத் தளம் நிலைநிற்கும் அபிவிருத்திக்கு ஒரு தீர்க்கமான திறமுறையாக இருக்க முடியாது. அதுமட்டுமல்லாமல் இலங்கை தனது கனிய வளங்களையும் உத்தமப் பண்பாட்டுக்கு உள்ளாக்க வேண்டும். எதிர்கால அபிவிருத்தியில் கைத்தொழிலின் சூழலியற் பிரச்சினைகளும் நகர வளர்ச்சியும் தீவிரமடையும். கடந்தகால அபிவிருத்தி ஒழுங்கானது ஒரு கிராமிய - நகர சமநிலையைப் பேணிவந்துள்ளது. இது ஒரு வளர்முக நாட்டில் வழமையானதல்ல. எனினும் சார்பளவில் நகராக்க வீதமும் கைத்தொழில் வளர்ச்சியும் மிகவும் குறைவாக இருந்தபோதிலும் நகர உள்ளாக்க கட்டமைப்பின் இயலளவில், சூழல் மாசடைதல் மற்றும் கழிவகற்றல் ஆகிய பிரச்சினைகள் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. எதிர்வு கூறப்பட்டுள்ள தீவிர கைத்தொழிலாக்கத்தின் காரணமாக எழக்கூடிய சூழலியற் பிரச்சினைகளைச் சமாளிக்க சிறப்பாக உருவாக்கப்பட்ட கொள்கைகளும் முறைமைகளும் தேவையாகும். இவைகள் சூழல் பாதுகாப்பு முகாமைத்துவம் ஆகியவற்றுக்கான போதிய வளங்களை ஒன்று திரட்டக் கூடியவையாகவும் அந்நோக்கத்தை நிறைவேற்ற நிர்வாக, நிறுவன இயலளவுகளை உருவாக்கக் கூடியவையாகவும் அமைதல் வேண்டும்.

## நிலை நிற்கும் அபிவிருத்திக்கான பிரதான மூன்று தகுதிவிதிகள்

இலங்கையின் நிலைமை தொடர்பாக இவ்ஆய்வானது நிலைத்த அபிவிருத்திக்கான திறமுறைகளின் பிரதான அம்சங்களை வரையறை செய்ய முற்படுகின்றது. அபிவிருத்தி என்பது நிலைத்து நிற்க வேண்டுமெனில் அது மூன்று பொதுவான தகுதிவிதிகளைத் திருப்திப் படுத்த வேண்டும். அவை வளர்ச்சி, ஒப்புரவு (equity) பங்களிப்பு என்பதாகும். (1) இலங்கையில் நிலைநிற்கும் வளர்ச்சியானது வேலைப்படையினரை உள்வாங்குவதற்கான போதுமான இயலளவு கொண்ட விரைவான வளர்ச்சியை உற்பத்தியில் எட்டப்பட வேண்டும். திறமையான மூலவளப் பகிர்வு இதற்கு அவசியமானது. (2) வளர்ச்சியின் போக்கு சமமானதாக இருக்கவேண்டும். வறுமையானவர்களின் உற்பத்தி இயளலவிலும் வருமானம் தரும் சொத்துக்களிலும் நிலையான அதிகரிப்புக்கு வழிவகுக்க வேண்டும். (3) கிராமிய, பிரதேசிய, மாகாண மட்டங்களில் நிறுவனரீதியான கட்டமைப்புக்களைத் தீர்மானம் எடுப்பதற்கு பன்முகப்படுத்தல் வேண்டும். இவ்வாறு செய்வதன் காரணமாக ஒவ்வொரு மட்டங்களிலும் பொருளாதார சூழலில் வளங்களைப் பயன்படுத்துவதிலும் முகாமைத்துவத்திலும் உள்ளூர் சமூகங்களின் பங்களிப்பையும் பெறமுடிகிறது.

## அபிவிருத்திக் கொள்கையில் பிரதான மீள் சீரமைப்புகள்

நிலைநிற்கும் அபிவிருத்தி தொடர்பாக திறமுறை சகல முக்கிய அபிவிருத்திக் கொள்கைகளையும் தழுவியுள்ளது. அவையாவன; (1) செலாவணி முகாமைத்துவம், பணநிரம்பல், அரசாங்க வருமானமும் செலவீடும் பற்றிய பேரின-பொருளாதாரக் கொள்கைகள் . (2) விவசாயம், கைத்தொழில் மற்றும் பல்வேறு சேவைகள் தொடர்பான துறை சார்ந்த கொள்கைகள். இக்கொள்கைகள் யாவும் கிடைக்கக் கூடிய வளங்களின் முகாமைத்துவத்துக்காக ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளன. வளப்பங்கீட்டுச் செயல்முறை (process of allocation) என்பது நிலைநிற்கும் அபிவிருத்திக்கான அடிப்படை நிபந்தனைகளில் ஒன்றாகும். அதாவது வளங்களின் உச்சவினைத்திறனை அடையக் கூடியதாக இவ்வளப்பங்கீடு அமைய வேண்டும். அத்தகைய வினைத்திறன் ஒவ்வொரு பயன்படுத்தப்பட்ட வள அலகினதும் (இயற்கையான அல்லது செயற்கையான) மிகக் கூடிய பெறுமதி காட்டப்படத்தக்கதாக அமைய வேண்டும். இந்நோக்கங்களை அடையக் கூடிய விதத்திலேயே பேரின-பொருளாதார மற்றும் துறை சார்ந்த கொள்கைகள் வடிவமைக்கப்படவேண்டும்.

ஆனால் இங்கு திரும்பத்திரும்ப வற்புறுத்தப்படும் ஒருவிடயம் உள்ளது. அதாவது நிலைநிற்கும் அபிவிருத்திக்குப் பேரினப் பொருளாதார பங்கீட்டு வினைத்திறன் ( macro economic allocative efficiency ) ஓர் அத்தியாவசிய நிபந்தனையாக விளங்குகின்ற போதும் அதுவே போதுமானதாக அமைந்து விடுவதில்லை. அது மனிதனால் ஏற்படுத்தப்பட்ட மூலதனத்தின் தேய்மானத்தை கவனத்திற் கொள்கின்றது. ஆனால் இயற்கை மூலதனத்தின் சுருங்குதலையும், அபிவிருத்திக்கான உயரினச் சூழல் செலவினங்களையும் (Ecological cost) நிராகரிக்கின்றது. நிலைத்தல் மற்றும் உயிர்வாழ்தலுக்கான உயிரினச் சூழலில் இவற்றின் தாக்கங்கள் குறித்த பகுப்பாய்வில் இவ்விரண்டு கொள்கைகளுமே (பேரின, துறைசார்ந்த) தம்மை இலகுவில் உட்படுத்திக் கொள்வதில்லை. உற்பத்தித்திறன் வெளியீடு தொடர்பாக வினைத்திறன் மிக்க வளப் பயன்பாடுபற்றிய கொள்கைகளும், உயரினச் சூழல் சமநிலை வளங்களின் நிலைநிற்றல் தொடர்பான கொள்கைகளும் ஒன்றினையொன்று சார்ந்து செல்லல் வேண்டும். இந்நோக்கத்திற்காக இவ்விரு கொள்கைகளும் அவற்றின் நிலைத்தல் மற்றும் உயிரினச்சூழலில் அவை ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பாக பகுப்பாய்வு செய்யப்படுதல் வேண்டும். அத்துடன் இவற்றின் நடைமுறைப்படுத்தலில் சூழலியல் செலவினம் அதிகமாகும் போது சீரமைக்கப்படவும் வேண்டும்.

சூழலைச் சிறப்பாகக் குறித்த கொள்கைகள் யாவும் வடிவமைக்கப்பட வேண்டும். ஏற்கனவே வெளிவந்த, வரக்கூடிய சூழலியல் அபாயங்கள் இனங்காணப்பட்டால் இக் கொள்கைகள் சிறப்பாக உருவமைக்கப்படக்கூடும். இதனை விழிப்புடன் அவதானித்து அமுலாக்கலை உறுதிப்படுத்தும் முகமாக ஓர் அமைப்பு நிறுவப்பட வேண்டும். 1990 க்கு முன்னர் வளப் பயன்பாடு பற்றிய கொள்கைகள் மிகவும் பலவீனமாகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவானவையாகவும் இருந்தன. 1980 களில் இக்கொள்கைகள் பாரிய மாறுதல்களுக்கு உட்பட்டதுடன் உறுதியானவையாகவும் இருந்தன. அடுத்து எதிர்கால அபிவிருத்தித் தோற்றப்பாடுகளின் நோக்கங்களை அடைவதற்கு எத்தகைய திறமுறை மீள் சீராக்கல்கள் தேவை என்பதை ஆய்வு செய்வோம்.

### (1.) மூலதனம், வளங்கள் ஆகியவற்றின் வினைத்திறன் மிக்க பயன்பாடு

ஒரு மூலதன அலகுக்கான வெளியீடு, வேலை ஆகியவற்றில் குறிப்பிடக் கூடிய வளர்ச்சி என்பது இந்த எதிர்கால அபிவிருத்தி தொடர்பான முக்கிய அனுமானங்களில் ஒன்றாகும். பழைய முறையான போக்குகளே நிலவுமாயின் அதன் விளைவானது, நிலைத்த அபிவிருத்திக்குத் தேவையான உயர்நிலை வலுச்சமநிலையை (higher equilibrium) அண்மிக்க முடியாது. முன்பைவிட மூலதனப் பயன்பாடு கூடிய வினைத்திறன் மிக்கதாக இருக்கவேண்டும். இப்போதுள்ள மூலதனமும், புதிய மூலதனமும் கூடிய உற்பத்தித்திறன் கொண்டிருக்க வேண்டும். மூலவளத்தின் வினைத்திறனை உயர்த்த வேண்டுமெனின் ஆழமான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். இதற்காகப் பயன்படுத்தப்படும் திறமுறையானது உயர் விளைவு தரும் மூலதனம், கூடிய வேலைவாய்ப்பு ஆகியவற்றின் இணைப்பை வலியுறுத்த வேண்டும். இத்தகைய திறமுறையின் ஓர் அம்சமானது மொத்த மூலதனத்தில் தனியார் துறை மூலதனத்தின் பங்கினை உயர்த்துதலாகும். இதனை அடைய பொதுச் செலவீடுகளைக் குறைத்து அதன் மூலமாக வீட்டுத்துறைச் சேமிப்புக்களின் பெரும்பகுதி தனியார் துறையைச் சென்றடையத்தக்கதாக வரவு செலவுத்திட்ட முகாமைத்துவம் மேற்கொள்ளப்படவேண்டும். இது தொடர்பான இன்றைய கொள்கைகள் மாற்றி யமைக்கப்படவேண்டும். இன்று தனியார் சேமிப்புக்கள் பொதுச் செலவீடுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. இதற்காகத் தேசிய சேமிப்பு வங்கி, ஊழியர் சேமலாப நிதி ஆகியவற்றிலுள்ள வைப்புக்கள் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய சேமிப்புக்களின் பெரும்பகுதி தனியார் துறை முதலீடுகளுக்குக் கிடைக்க வழி செய்யப்படல் வேண்டும். இதற்காக மூலதன திறமுறையில் பாரிய மீள் சீரமைப்பு செய்யப்பட்டே ஆகவேண்டும். இன்னொரு மட்டத்தில் மூலதன ஆக்கத்தின் பல்வேறுபகுதிகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டுச் செலவினங்களைக் குறைத்து விரயங்களை ஒழிக்கும் வழிவகைகள் இனங்காணப்படல் வேண்டும். சகலதுறைகளிலுமுள்ள மூலதனத்தின், உற்பத்தித்திறன் வளர்ச்சிக்கான சகல சாத்தியக் கூறுகளும் பயன்படுத்தப்படவேண்டும். இவற்றை அடைய வழிவகுக்கும் கொள்கைகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் எதிர்காலத் திறமுறையின் மையமாக இருக்க வேண்டும்.

அடிப்படையில் மூலதனத்தின் வினைத்திறனும், உற்பத்தித்திறனும் பேரினப்- பொருளாதார கொள்கை அமைப்பிலும் பொருளாதாரத்தின் வளங்களை வினைத்திறனுடன் பங்கீடு செய்யும் அதன் இயலளவிலும் தங்கியுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில், அரசினால் ஒழுங்குபடுத்தப்பட்ட பொருளாதாரத்தில் வினைத்திறனற்ற இலாபப் பங்கீடு மானியங்கள், விலைக் கட்டுப்பாடுகள் ஆகியவை மெதுவான வளர்ச்சி, மூலதனச் சுருக்கம், பலவகையான சூழல் பாதிப்புகள் ஆகியவற்றுக்குக் காரணமாயின. 1977 இன் பின் ஏற்பட்ட கொள்கை மாற்றங்கள் கூடிய வினைத் திறன் மிக்க வளப்பங்கீடுகளை ஏற்படுத்தின. அத்துடன் வளப்பங்கீட்டினை மேலும் திறன்மிக்கதாக ஆக்குவதற்கு இக் கொள்கை அமைப்பில் தொடர்ச்சியான திருத்தங்கள் ஏற்பட்டன. செலாவணி விகிதம், வெளியக சமமின்மையைத் திருத்தும் வகையில் சீரமைக்கப்பட்டது. சர்வதேச ரீதியாகப் போட்டியிடக் கூடியதாகப் பொருளாதாரம் மாற்றப்பட்டது. வளங்கள் ஏற்றுமதித்துறைக்குத் திருப்பப்பட்டன. மானியங்களின் பெரும்பகுதியும் விலைக்கட்டுப்பாடுகளும் கணிசமான அளவுக்குக் குறைக்கப்பட்டன. 1970 களின் பிற்பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட இக் கொள்கைச் சீர் திருத்தங்கள் பல்வேறு மாற்றங்களை உருவாக்கின. உணவு மானியங்கள், பொதுப் போக்குவரத்து, அரசினால் வழங்கப்படுகின்ற பலவேறு பொருட்கள், சேவைகள் ஆகியவற்றுக்கான மானியங்கள் குறைக்கப்பட்டன. அண்மைக் காலத்தில் உற்பத்தியாளர், நுகர்வோர் மானியங்கள் குறைக்கப்பட்டன. அல்லது நீக்கப்பட்டன. கடந்த காலத்தில் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டங்களில் ஒரு சுமையாக இருந்த பொதுத்துறை வர்த்தக நடவடிக்கைகள் தனியார் மயப்படுத்தப்பட்டன. பல பொதுத்துறை தொழின்முயற்சிகள், தனியார்துறை பங்களிப்புடன் பொதுக் கம்பனியாக மாற்றப்பட்டன. எதிர்காலக் கொள்கைகள் பொருளாதாரத்தை இதே வழியில் முன்னெடுத்துச் செல்லும். எனவே வளப்பங்கீட்டின் வினைத் திறமையை உயர்த்துவதற்காகப் பல்வேறு பேரின - பொருளாதாரக் கொள்கைச் சீராக்கங்கள் இன்று நடந்த வண்ணம் இருக்கின்றன.

### (2) சமூக நலன்களின் மறுமதிப்பீடு

இத்தகைய கொள்கைச் சீராக்கங்களின் சமூகத்தாக்கங்கள் குறித்துப் பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டன. சீராக்கத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட விலை உயர்வுகள் குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களை வெகுவாகப் பாதித்தன. சனத் தொகையில் 25 வீதம் போஷாக்கின்மை, வறுமை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டன. 1979 க்குப் பிற்பட்ட திறமுறையானது பங்கீட்டு வினைத்திறனை வளர்த்த போதும் இத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்கத் தவறிவிட்டது. இப்பிரச்சினைக்கு முகங்கொடுக்க அரசாங்கமானது வறுமை ஒழிப்புத்திட்டத்தை மேற்கொண்டது. இத்திட்டமானது நுகர்வு மற்றும் கணிசமான முதலீடுகளுக்கு வளங்களை ஏழைமக்களுக்குத் திருப்பியது. வறிய மக்களின் சொத்துரிமை, வருவாய் தேடும் இயலளவு ஆகியவற்றை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டமானது நிலைநிற்கும் அபிவிருத்திக்கான திறமுறையில் முக்கிய தாக்கங்களை ஏற்படுத்தும் புதிய பரிமாணத்தை வழங்கியது. ஒருபுறத்தில் தொகையான பிரச்சினைகளைச் சமாளிக்கும் வாய்ப்புக்களை வழங்கியது. அத்துடன் கீழ்மட்டங்களில் வளர்ச்சிக்கான திட்டமிடல் மற்றும் முகாமைத்துவத்திற்கான சந்தர்ப்பங்களை வழங்கியது. இவைகள் நிலை நிற்கும் அபிவிருத்தித் தேவைகளுடன் இசைந்தவையாகும். மறுபுறத்தில் இது முக்கிய கொள்கை முரண்பாடுகளையும் கொண்டு வந்தது. எதிர்காலதில் அடைவதற்காகத் திட்டமிடப்பட்டிருக்கும் அபிவிருத்தியினை அடைவதற்கு இம்முரண்பாடுகள் தீர்க்கப்படவேண்டியது அவசியமாகும். உண்மையில் நிலைநிற்கும் அபிவிருத்திக்கான இடைக்கால திறமுறைகள் பூரண வறுமையைக் குறைக்க வேண்டும். அத்துடன் சமூகப் பாதுகாப்பிற்கான அடித்தளத்தையும் இடவேண்டும். ஆனால் இன்றைய சமூக நலத்திட்டங்களும், எதிர்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிடப்பட்டுள்ள திட்டங்களும் அரசாங்க வரவு செலவுத்திட்டத்தில் பாரிய சுமையை ஏற்படுத்துகின்றன. இவைகள் பொருளாதார முகாமைத்துவத்தின் எல்லைகளை வெகுவாக மீறுகின்றன. இன்று அரசாங்கம் ஒரு தொகையான சமூக நலத் திட்டங்களை அமுல்படுத்துகின்றது. சுகாதாரம், கல்விபோன்ற பொதுத்திட்டங்களைத் தவிர உணவு முத்திரை, வறுமை நிவாரணம், இலவச நூல் விநியோகம் போன்ற பல்வேறு திட்டங்களை நடைமுறைப் படுத்துகின்றது. அரசாங்க வரவுசெலவுத் திட்டத்திலுள்ள சமூக நலத்திட்டங்கள் தொடர்பான முழுப்பகுதியும் மறுமதிப்பீட்டுக்கும் ஆய்வுக்கும் உள்ளாக்கப்பட்டு, (1) அது ஒன்றுதிரட்டப்படக் கூடிய வளங்களின் அடிப்படையில் யதார்த்த பூர்வமான பொருத்தப்பாடு கொண்டிருக்க வேண்டும். (2) ஒரு முழுமையான சமூக நலக்கொள்கை என்னும் கட்டுக்கோப்புக்குள் பல்வேறு திட்டங்களும் ஆய்வு செய்யப்பட்டு அவற்றின் பங்கு திட்டவட்டமாகத் தீர்மானிக்கப்படவேண்டும். அத்துடன் அவற்றின் வினைத்திறனையும், நியாயமான விநியோகத்தையும் உறுதிப்படுத்தப்படவேண்டும். (3) காலப்போக்கில் இத்திட்டங்களில் உட்பட்டிருக்கும் மக்களை வறுமையிலிருந்தும், அரசாங்க உதவிகளில் தங்கியிருத்தலில் இருந்தும் விடுதலை அடையும் வகையில் இத்திட்டங்கள் இடைக்கால, நெடுங்கால நோக்கங்களைக் கொண்டிருக்க வேண்டும். சமூக நலத்திட்டங்கள், வறியமக்களின் வருமான மட்டத்தை உயர்த்தும் வறுமை ஒழிப்புத் திறமுறைகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டிருக்க வேண்டும். இலங்கையின் வறுமை ஒழிப்புத் திட்டம் இத்தகைய மறுமதிப்பீட்டுக்கான வாய்ப்பினை வழங்குகின்றது. ஏற்கனவே இவ்வழியில் பல்வேறு அடியெடுப்புகள் எடுக்கப்பட்டுள்ளன. இங்கு விபரிக்கப்பட்டவாறான ஒரு பூரண சமூகநலக் கொள்கை (Comprehensive welfare policy) நிலைநிற்கும் அபிவிருத்திக்கு மிகவும் முக்கியமான மூலாதாரமாகும்.

### (3) விலைகளும் வரிகளும் (Pricing and Taxation)

இங்கு இதுவரை கூறப்பட்டவைகள் ஒரு முக்கியமான கொள்கை மூலகத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. நிலைத்தலைப் பொறுத்தவரையில் இது மிகவும் முக்கியமானது. இயற்கை வளங்கள் சூழலுடன் சார்ந்ததாக உள்ள விலையமைப்பும் வரியமைப்பும் பற்றியே இங்கு குறிப்பிடப்படுகின்றது. அரசாங்கம் பரந்த கடமைகளைக் கொண்ட ஒரு வரிவிதிப்பு ஆணைக்குழுவை (Taxation Commission) நியமித்துள்ளது. சூழல் பாதுகாப்பு, உயிரின சூழல் நிலைத்தல் ஆகியவற்றுக்கான வளங்களைத் திரட்டுவதற்கு இப்போதுள்ள அமைப்பின் இயலளவை ஆராய்ந்து தேவையான விதந்துரைகளைச் செய்ய வேண்டியது இவ்வாணைக் குழுவின் கடமைகளில் ஒன்றாகும். சூழலை மாசடையச் செய்பவர்களே அதன் செலவினங்களையும் பொறுப்பேற்றல், வரிவிதிப்பு, சூழல் பாதுகாப்பு, சிறந்த வதிவிட வசதிகள் ஆகியவற்றுக்கு ஏற்ற வகையில் நகர்ப்புற உள்ளகக் கட்டமைப்பை உறுதிப்படுத்த அதிகாரிக்கு உதவும் வகையில் அரசிறை திரட்டல் ஆகியவையும் இக்கடமைகளில் அடங்கும்.

### (4) வள இடைவெளி, வளங்களைத்திரட்டல் மற்றும் ஏற்றுமதி சார்ந்த வளர்ச்சி

இங்கு சமர்ப்பிக்கப்பட்ட அபிவிருத்தித் தோற்றப்பாடுகளுக்குத் தேவையான மூலவள அசைவில் ( Resource mobilisation) இரு அம்சங்கள் முக்கியமானவை. இவை மொத்தப் பெறுபேறுகளைப் பாதிக்கக்கூடியவை, முதலாவது பாரிய வள இடைவெளி (Resource gap) ஆகும். இதுவெளிநாட்டுச் சேமிப்புக்களால் நிரப்பப்படக் கூடியது. நிலைநிற்கும் அபிவிருத்திக்கான திறமுறைகள் இவ்விடைவெளியைக் குறைக்க முயற்சிப்பதோடு உள்நாட்டு வளந்திரட்டலில் பெருமளவுக்குத் தங்கியிருப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. எனினும் அபிவிருத்தியின் முதற்கட்டத்தில் வெளிநாட்டு வளங்களின் திரட்டலில் பெருமளவுக்குத் தங்கியிருக்க வேண்டியுள்ளது. இவ்விடைவெளியை நிரப்புவதில் உத்தியோக ரீதியான வெளி உதவிகளும், நேரடியான வெளிநாட்டு முதலீடுகளும் முக்கிய பங்கினை வகிக்கின்றன. பல காரணங்களுக்காக வெளியக வளப்பாய்ச்சலில் கணிசமான வெளிநாட்டு முதலீடுகள் விரும்பத்தக்கவை. இம்முதலீடுகள் கடன் சேவைச் சுமையைத் தம்மில் கொண்டிருக்கும் ஏற்றுமதி சார்ந்த வளர்ச்சியில் தங்கியிருக்கும் ஒரு பொருளாதாரத்துக்கு மிகவும் தேவையான சந்தைத் தொடர்புகளையும், தொழின் முறையியலையும் வழங்கும். இந்நிலைமை ஒரு பொருத்தமான கொள்கையம்சத்தை (Policy regime ) வேண்டி நிற்கின்றது. வெளிநாட்டு முதலீடு தொடர்பான இக் கொள்கையானது வெளிநாட்டு முதலீடுகளுக்கான ஊக்கிகளுக்கும் அத்தகைய முதலீடுகள் நிலைத்தலின் நோக்கங்களுக்கு இசைவாக வைத்திருக்கக் கூடிய பாதுகாப்புக்குமிடையே ஒரு சமநிலையைப்பேண வேண்டும். கொள்கைகள் வெளிநாட்டு முதலீட்டு ஊக்கிகள் தொடர்பான தற்போதைய சகல முக்கிய அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது. தேசிய மயமாக்கலுக்கு எதிரான உத்தரவாதம் இலாபங்களைக் கொண்டு செல்லல், வரிவிடுதலைகள், வரிதள்ளுபடிகள், ஏற்றுமதி ஊக்கிகள் என்பன இவற்றுள் அடங்கும்.

இரண்டாவது முக்கிய அம்சமானது நாம் எதிர்நோக்கும் ஏற்றுமதி சார்ந்த வளர்ச்சி இயல்பாகும். இது விவசாய வளர்ச்சிக்கும் கைத்தொழில் வளர்ச்சிக்கும் பொருத்தமானது. இலங்கைப் பொருளாதாரமானது சர்வதேசப் பொருளாதார மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் தன்னைச் சீரமைத்துக் கொள்ள வேண்டும். எனவே நாம் கைக் கொள்ளும் திறமுறைகளில் மாறுதன்மையும், நிச்சயமற்ற தன்மையும் காணப்படுகின்றன. திறமுறை உருவாக்குதல், திட்டமிடுதல் ஆகியவை தொடர்பான முழு செயன்முறையும் இதற்கு ஏற்ற வகையில் அமைய வேண்டும். வெளிநோக்கிய, ஏற்றுமதி சார்ந்த அபிவிருத்தித் தேவைகளுக்கு ஏற்ற விதத்தில் சகல உள்நாட்டுக் கொள்கைகளும் அமைய வேண்டும். செலாவணி விகிதம், வரிஅமைப்பு, உள்நாட்டு விலைகள் ஆகியவை இத்தேவைகளைக் கருத்திற் கொள்ள வேண்டும். சர்வதேச போட்டித்தன்மை, பொருத்தப்பாடு ஆகியவற்றுக்கு முகங்கொடுக்கும் வண்ணம் மனித வளங்கள் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். கல்விக் கொள்கைகள், திறன்கள் உருவாக்கம் மற்றும் தொழில்நுட்ப மாற்றம் ஆகியவை இந்த முடிவை நோக்கி இணைக்கப்படல் வேண்டும்.

### (5) நிறுவன சட்டக அமைப்பை (Institutional framework) விருத்தி செய்தல்

1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அபிவிருத்தி தொடர்பான சூழல் பிரச்சினைகள் பற்றிப் பல நடவடிக்கைகளை இலங்கை மேற்கொண்டது. கொள்கை உருவாக்கத்துக்கும், இணைப்புக்குமான மத்திய சூழல் அதிகாரசபை (CEA - Central Environmental Authority)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கப்பட்டது. அத்துடன் ஒழுங்கு முறைகளும் நடவடிக்கை முறைகளும் அறிமுகம் செய்யப்பட்டன. சூழல் தாக்கத்தை மதிப்பீடு செய்யும் முறையும் ஆரம்பிக்கப்பட்டது. சூழல் பற்றிப் பலவேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. சூழல் பாதுகாப்பு சம்பந்தமான ஒருதேசிய திறமுறையும் உருவாக்கப்பட்டது. சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் சூழல்பாதுகாப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. கைத்தொழில் மாசடைதல் தொடர்பான நியமனங்கள் உருவாக்கப்பட்டன. பொதுமக்கள் மத்தியில் சூழல் பற்றி அறிவை விருத்தி செய்து சூழல் பாதுகாப்பில் அவர்களது கவனத்தை ஈடுபடுத்த ஒருமுகப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மரம் நடும் இயக்கம் இத்தகைய சமூகப் பங்கு பற்றலுக்கு உதாரணமாகும். தவிர அரசாங்கமல்லாத நிறுவனங்களும் சூழல் பிரச்சினைகளில் ஈடுபடுகின்றன. இந்த அபிவிருத்திகள் யாவும் ஒரு கொள்கை அமைப்பினையும் ஒரு நிறுவன அடித்தளத்தையும் உருவாக்க உதவியுள்ளன. இந்நிலையானது ஒரு நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கான ஒரு திறமுறையை அமுல்படுத்த மிகவும் சாதகமானது.

### (6) ஒருங்கிணைக்கப்பட்ட முகாமைத்துவத்துக்கான வளஅலகுகளை இனங் காணல்

எவ்வாறெனினும் நிலைத்தல் தொடர்பான ஒரு தேசியத் திறமுறை மற்றும் கொள்கை அமைப்பை உருவாக்குவதில் ஒரு பெரும் பிரச்சினை உள்ளது. இயற்கை வளங்களின் தளம் சம்பந்தமான முகாமைக்கான பொறுப்பு சிதறுண்டு கிடப்பதே அதுவாகும். ஓர் ஆற்று வடி நிலப்பகுதியை எடுத்துக் கொண்டால் சூழல் முகாமைத்துவம் நிலை நிற்கும் அபிவிருத்தியும் இவ்வாற்று வளத்துடன் தொடர்புடைய பல்வேறு அரசாங்க நிறுவனங்களின் ஒத்துழைப்பை வேண்டி நிற்பதை அறியலாம்.

நிலைத்த அபிவிருத்திக்கான ஒரு காத்திரமான திறமுறையும் கொள்கை அமைப்பும் முதலில் வளமுகாமைத்துவம் தொடர்பாக இனங்காண வேண்டியது அவசியமாகும். பிரதான சூழலியற் பிரச்சினைகளைப் பொறுத்த வரையில் இது உடனடியாகச் செய்யப்படக் கூடியதே. இதனைத் தொடர்ந்து இந்தவள அலகில் குவிந்துள்ள பல்வேறு முகாமை நிறுவனங்களையும் இனங்கண்டு அதன் பயன்பாடு முகாமைத்துவம் தொடர்பான அவற்றின் பொறுப்புக்கள் வரையறை செய்யப்படுதல் அவசியமானது. பின்னர் வள அலகின் முகாமைத்துவம் தொடர்பான இணைப்பு, மற்றும் பரிபாலனத்துக்கான காத்திரமான ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். இத்தகைய நிறுவனரீதியான அமைப்பின் உயர் நிலையமாக மத்திய சூழல் அதிகாரசபை செயற்படவேண்டும். இத்தகைய சூழல் முகாமைத்துவ அமைப்புக்குள், தேசியத்துறை சார்ந்த கொள்கைகள், சூழல், நிலைத்தல் ஆகியவற்றில் கொண்டுள்ள தாக்கங்கள் தொடர்பான ஆய்வுகள் இலகுவாக விளக்கம் பெறுகின்றன. ஆரம்ப நிலையில் மத்திய அதிகார சபை சில முக்கியமான வள அலகுகளை அடையாளம் செய்து நிறுவன அமைப்பு மற்றும் கொள்கை ஆய்வு மாதிரிகளை உருவாக்குவது மிகவும் பயனுள்ளது.

### (7) அதிகாரப் பரவலாக்க முறைமைக்குள் வளமுகாமைத்துவம்

இத்தகைய அணுகுமுறை மாகாண சபைகளின் உருவாக்கம் மற்றும் அதிகாரப் பரவலாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில்

தொடர்ச்சி 20 ஆம் பக்கத்தில்..

## ஆசிய நாடுகளில் சுதந்திர வர்த்தக வலயங்கள்: ஓர் அறிமுகம்

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் சர்வதேச பொருளாதார அரசியல் அமைப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு, ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட கைத்தொழிலாக்கத்தின் திறமுறைகள் முக்கிய பங்கினை அளித்துள்ளன. யுத்தத்தின் பின் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் புதிதாக சுதந்திரமடைந்த அரசுகள் இதுவரைகாலமும் குடியேற்றவாத பொருளாதார ஒழுங்கமைப்பில் தம்மை முற்றாக ஈடுபடுத்தியிருந்த நிலையினை மாற்றிப் பொருத்தமான தேசிய பொருளாதாரத்துக்குத் தம்மை எவ்வாறு உருமாற்றம் செய்து கொள்வதென்பதில் சிக்கல்களை எதிர் நோக்கியிருந்தன. இத்தகைய பின்னணியில் வகுக்கப்பட்ட கைத்தொழில் திறமுறைகளின் விளைவாக ஏற்பட்டதே "ஏற்றுமதி பதப்படுத்தல் (செய்முறை) வலயம்" (Export Processing Zone) அல்லது "சுதந்திர வர்த்தக வலயம்" (Free Trade Zone) எனப்படும். இவ்வலயங்கள் ஏற்றுமதியைப் பிரதான நோக்காகக் கொண்ட சிறு அளவான கைத்தொழில் பிரிவுகளைக் கொண்டிருந்தன. ஒரு சிறு நிலப்பிரதேசத்தில் வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்கள் சில சலுகைகளை அனுபவிக்கும் வகையில் அமைந்திருந்தது. நிதி ஊக்குவிப்புக்கள், வரி மற்றும் சுங்கச் சலுகைகள், குறைவான விலையில் நிலம், கட்டிடங்கள், கட்டுமான சேவைகள் என்பன அரசினால் வழங்கப்பட்டன. எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி நடுத்தரப் பொருட்கள், மூலப் பொருட்களை இறக்குமதி செய்யவும் முடிந்தது.

முன்பு சுதந்திர வர்த்தகப் பகுதிகள், சுதந்திர துறைகள் என்று அழைக்கப்பட்டவைகளின் அடுத்த கட்ட வளர்ச்சிதான் இவ் ஏற்றுமதி செய்முறை வலயங்களாகும். எனினும் இரண்டாம் உலக யுத்தத்தின் பின் ஏற்பட்ட சர்வதேச பொருளாதாரத்தின் மீள் அமைப்பின் பின் இவற்றின் நோக்கங்கள் வித்தியாசமானவையாக அமைந்தன. ஏற்றுமதிக்கான பொருட்களைத் தயாரிப்பது மட்டுமன்றி இந்நிறுவனங்கள் வெளிநாட்டாருக்கு உரிமையுடையதாகவும் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குவனவாகவும் அமைந்தன. பன்னாட்டு கொம்பனிகளின் கைத்தொழில் பிரிவுகளான இவை 1960 இன் பின் மலிவான தொழிலாளர் நிரம்பலின் காரணமாக வளர்முக நாடுகளை நோக்கி இவற்றின் உற்பத்தி நடவடிக்கைகள் நகர்த்தப்பட்டன. இதன்பின் ஏற்றுமதி செய்முறை வலயங்கள் (EPZ) புதிய சர்வதேச தொழிற் பிரிப்பில் (Division of Labour) தனித்துவமான இடத்தைப் பெறத் தொடங்கின.

முதலாவது ஏற்றுமதி செய்முறை வலயத்தின் தோற்றம் 1959 இல் அயர்லாந்தில் உள்ள சானொன் விமான நிலையத்தில் (Shannon Airport) நடைமுறைக்கு வந்ததாக இருந்தாலும் வளர்முக நாடுகளில் இதன் தோற்றம் 1960 இன் நடுப் பகுதிகளில் தான் ஆரம்பமாகியது. 1970 களில் முன் என்றுமில்லாதவாறு ஆசியா, லத்தின் அமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்றுமதி செய்முறை

தொடர்ச்சி 31 ஆம் பக்கத்தில்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கைத்தொழில் வளர்ச்சி: ஒரு வரலாற்றுக் கண்ணோக்கு

யோகா இராசநாயகம்

I

19 ஆம் நூற்றாண்டில் இருந்து இலங்கைப் பொருளாதாரமானது பிரதானமாகத் தேயிலை, றப்பர் தெங்கு ஆகிய பிரதான விவசாயக்கைத்தொழினாலேயே வலுவூட்டப்பட்டு வந்தது. இவ் ஏற்றுமதி உற்பத்திகளுடன் இணைந்த பதனிடல் செய்முறைகளானது மரபுரீதியான விவசாய உற்பத்தியாகவே கருதப்பட்டன. ஆனால் தயாரிப்புத்துறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மிகச் சிறிய சதவீதத்தையே கொண்டிருந்தது. அண்மைக் காலங்களில் குறிப்பாக 1987, 1988 ஆம் ஆண்டுகளில் இரண்டாம் தரத்துறையின் ஏனைய பிரிவுகள், நீங்கலாக 16.8 சதவீதத்தையே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தயாரிப்புப் பகுதி கொண்டிருந்தது. இது 1989 இல் 17. 8 சதவீதமாகவும் 1990 இல் 18.3 சதவீதமாகவும் உயர்வடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அண்மைக் காலங்களில் அரசினால் இடையிடையே மேற்கொள்ளப்பட்ட தலையீடுகளினால் இத்துறை யானது நாட்டின் பொருளாதாரத்தின் பிரதான அங்கமாக விருத்தியடைந்துள்ளது.

காலனித்துவ ஆட்சிக் காலத்தில் தாய் நாட்டின் அரசானது சொந்தப் பொருளாதாரத்துக்கு மூலப் பொருட்களை வழங்கக்கூடிய பெருந்தோட்டத்துறையையே இலங்கையில் விருத்தி செய்வதில் விருப்பம் கொண்டிருந்தது. இதனால் ஏனைய சுதேசியக் கைத்தொழில்களும் வாழ்க்கைப் பயிர்ச்செய்கையும் புறக்கணிக்கப்பட்டன. அதனோடு தாய்நாட்டில் தயாரிக்கப்படுகின்ற பொருள்களுக்கான நல்ல இலாபம் தரும் சந்தையாக இலங்கை மாற்றப்பட்டது. உலகயுத்தங்களின் காரணமாகவும் 1930 களில் ஏற்பட்ட பொருளாதாரப் பெருமந்த நிலையும் ஏற்பட்டபோது முற்றிலும் விவசாய ஏற்றுமதியில் தங்கியிருந்த இலங்கைத் தீவின் பொருளாதாரத்தில் நிச்சயமற்ற நிலை தோன்றியது. இதனால் இத்தகைய அனைத்து நோய்களுக்கும் பரிகாரம் காணும் முகமாக கைத்தொழிலாக்கத்தினூடாகப் பொருளாதாரத்தைப் பன்முகப் படுத்துவதற்கான விரைவான முயற்சிகள் எடுக்கப்பட்டன.

இலங்கையின் கைத்தொழிலானது பொதுவாக பெரும்பாலான வளர்முக நாடுகளின் போக்கையே பின்பற்றியிருந்தது. இச்செயற்பாட்டின் மரபுரீதியான அனுபவங்களின் அடிப்படையில் வளர்ந்த கைவினைக் கைத்தொழில்கள் நவீன தொழிற்சாலைகளினடிப்படையில் அமைந்த வினைத் திட்டங்களினால் படிப்படியாக இணைந்து வளர்ச்சி பெற்றது. விரைவாக மேற்கொள்ளப்பட்ட விசேட முயற்சிகள் தொடர்ச்சியான திட்டங்களை திட்டமிடுவதற்கென வழிகளை ஏற்படுத்தியது. வரலாற்றுரீதியாக, இலங்கையில் இந்த அபிவிருத்தியானது ஏறக்குறைய ஏழு தசாப்தங்களுக்கு முன்பு ஆரம்பித்தது எனலாம். இவ்வரலாற்று ரீதியான வளர்ச்சிப் போக்கினை 5 பிரதான கால கட்டங்களாகப் பிரித்து ஆராயமுடியும். அவையாவன:

**(1) போருக்கு முந்திய காலம் (1920 - 38)**
**(2) போரும் - போருக்குப்பிந்திய காலம் (1939 - 47)**
**(3) சுதந்திரத்திற்குப் பிந்திய காலம் I (1948 - 55)**
**(4) சுதந்திரத்திற்குப் பிந்திய காலம் II (1956 - 77)**
**(5) நவீன காலம் (1978 இல் இருந்து - )**

இங்கு கூறப்பட்டகால கட்டங்கள் முடிந்த முடிவான எல்லை நிர்ணயம் அல்ல. எனினும் கைத் தொழிற் கொள்கையிலும் விருத்தியிலும் தெளிவாகத் தெரிந்த தொடர்ச்சியற்ற தன்மைகளை அழுத்திக் கூறுவதற்கான நோக்கத்திற்குப் பயனுடையதாக இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

II

**போருக்கு முந்திய காலம் (1920 - 38)**

கைத்தொழிலாக்கத்தை (பெருந்தோட்டத்துறையை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் தவிர்ந்த) நோக்கிய ஆரம்ப முயற்சி முதலாம் உலக யுத்தகாலத்தில் மேற்கொள்ளப்பட்டதை அறியமுடிகின்றது. காலனித்துவ ஆளுனரினால் இலங்கைத்தீவின் கைத்தொழிலின் உள்ளார்ந்த தன்மைகளை ஆய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவானது குடியேற்ற நாட்டின் பொருளாதார வளங்களின் அபிவிருத்தி பற்றிய அறிக்கையைத் தயாரித்தது. இதுவே இலங்கையின் கைத்தொழில் யுகத்தின் ஆரம்பமெனக் குறிப்பிடப்படுகின்றது. (Legislative Council; Colonial Govt, 1921, S.P.VI). 1922 இல் அடுத்த கைத்தொழில் ஆணைக்குழுவின் அறிக்கை அதன் முழுவடிவில் வெளியிடப்பட்டதுடன் அப்போது இருந்த கைத்தொழில்களை விருத்தி செய்வதற்கும் புதியவற்றைத் ஸ்தாபிப்பதற்குமான சந்தர்ப்பங்களை விபரமாகக் குறிப்பிட்டது. அத்துடன் சில மலிவான சக்தியைக் குறிப்பாக நீர்மின்சக்திக்கான வளங்கள் அளிக்கப்படும் வரை கைத்தொழில் விருத்தியானது தாமதிக்கப்படவேண்டும் என வாதிட்டது. இவ்விரிவான ஆய்வில் தொழிற்சாலையை அடிப்படையாகக் கொண்ட பிரிவுகளை விருத்தி செய்வதற்குப் பொருத்தமான தயாரிப்புத்துறை நடவடிக்கையாக சீமேந்து, செங்கற்கள், ஓடுகள், அடைக்கும் பெட்டிகள் நூற்றலும் நெசவும் ஆகிய தயாரிப்புக்களை அடையாளம் செய்தது. அத்துடன் அப்போது வீட்டுக் கைத் தொழில்களாகக் கருதப்பட்ட தச்சுத்தொழில், கூடைகள் செய்தல், பிடவை நெசவு, வெண்கட்டிகள் செய்தல், லேஸ் (நாடா) செய்தல் ஆகியவற்றின் விருத்தியையும் பரிந்துரை செய்தது. புதிய கைத்தொழில்கள் தொடர்பாக முன்னோடியான வேலைகளை அரசாங்கம் செய்ய வேண்டியதன் அவசியத் தேவையை இவ் ஆணைக் குழு அழுத்திக் கூறியது.

பேராசிரியர் யோகா இராசநாயகம்
B.A.(Hons);Ph.D(Camb.);F.R.G.S.
புவியியற்றுறை
கொழும்புப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழில் மற்றும் ஆராச்சிகளை முன்னெடுப்பதற்கு ஒரு மத்திய பணியகத்தை (Central Bureau of Industry & Research] ஸ்தாபிப்பதே மிகப் பிரதானமான பரிந்துரையாக இருந்தது. இவ்வறிக்கையின் பின் 1924 இல் காலனித்துவ அரசாங்கம் உடனடியாக மின் சக்தித்திட்டத்துக்கென தேவையான நிதியை ஒதுக்கியது குறிப்பிடத்தக்கது. ஆனால் எதிர்காலக் கைத்தொழில் முன்னேற்றத்திற்கான சிறந்த அடிப்படையைக் கொண்ட இத்திட்டம் தொடரமுடியாது போயிற்று. 1927 இல் இம் முழுத்திட்டமும் பின் தள்ளிப் போடப்பட்டமைக்குப் பங்களித்த பல காரணங்களில் சிறந்த திட்டமிடலின்மையும், பொருத்தமற்ற முகாமைத்துவமும் பிரதானமாகக் காணப்பட்டது. (Ceylon Banking Commission, 1934, p.3-5) 1950 ஆம் ஆண்டு வரை இத்திட்டம் உயிர்ப்புப் பெறவில்லை. கைத்தொழில் ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு ஊக்கமளிக்க எடுக்கப்பட்ட முயற்சிகளின் உத்வேகம் பலமிழக்கலாயிற்று. இதற்குத் தயாரிப்புத் துறைக் கைத்தொழில்களைக் கொண்ட நாடுகள் விவசாயத்தைப் பிரதானமாகக் கொண்ட நாடுகளில் தமது சந்தைகளை மீட்டெடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான முயற்சிகள் காரணமாக அமைந்தது. 1930 களில் காணப்பட்ட பொருளாதார மந்தநிலையானது நாட்டின் பொருளாதாரத்தை நலிவடையச் செய்ததினால் கைத்தொழில் அபிவிருத்தியில் ஏறக்குறைய செயற்பாடற்ற ஒரு பின்னிடைவை மீண்டும் ஏற்படுத்தியது. (Technical Advisor on Industries, 1935) .

இப்பின்னிடைவு ஏற்பட்டு ஏறக்குறைய ஒரு தசாப்தத்தின் பின் உள்நாட்டு மூலவளங்களை ஒழுங்கமைப்பாக விருத்திசெய்வதன் தேவையானது 1931 ஆம் ஆண்டு டொனமூர் சீர்திருத்தத்தின் பின்பு பதவிக்கு வந்த அரசாங்கத்தினால் அறிமுகம் செய்யப்பட்டது. கைத்தொழிலாக்கத்தினூடாக வேலையின்மை, கீழுழைப்பு ஆகியவை தீர்க்கப்படவேண்டிய பிரதான பிரச்சினைகளாகக் கருதப்பட்டாலும் (Oliver. 1957, p.66) தயாரிப்புத்துறைக் கைத்தொழில் நடவடிக்கைகளின் விரிவாக்கமானது உயர்வருமானத்தை அடைந்து கொள்வதற்கான ஒரே ஒரு பாதையென நோக்கப்பட்டது. இது ஒரு சிறந்த பரிகாரமாக வளர்முக நாடுகளின் அனுபவங்களிலிருந்து உதாரணங்களுடன் விளக்கப்பட்டது. புதிய அரசாங்கத்தினால் கைத்தொழில் விருத்தியானது தனியான நிர்வாகப் பகுதியாகப் பிரிக்கப்பட்டது. இருந்தபோதும் சீர்திருத்தங்களுடன் உலகலாளவிய பொருளாதார மந்த நிலையின் நிகழ்வுகள் இலங்கைத் தீவின் முன்னேற்றத்தைத் தடுத்ததுடன் பொருளாதாரத்தின் பொதுவான போக்கினைப் பலமிழக்க வைத்தது. இம்மந்த நிலையானது இலங்கையின் பொருளாதாரத்தை மிகக் கடுமையாகப் பாதித்தது. பிரதான ஏற்றுமதிகள் உற்பத்திகள் வீழ்ச்சியடைந்தன. அதனால் தேசிய கொள்வனவுச் சக்தியில் சடுதியான சுருக்கம் ஏற்பட்டது. ஒருசில கைத்தொழில்களில் மாத்திரம் தங்கியிருக்கும் அபாயத்தை இந்நிலைமை தெளிவாக விளக்கியதுடன் நாட்டின் பொருளாதார அமைப்பில் காணப்படும் பலவீனத்தைத் தெளிவாக வெளிப்படுத்தியது. இப்பிரச்சினைகளின் விளைவாக இலங்கையானது மீண்டும் பொருளாதாரத்தைப் பன்முகப் படுத்தவும், உற்பத்திக்கான புதிய வழிகளை விருத்தி செய்யவும் வேண்டிய அவசியத் தேவையை உணர்ந்தது. இப்புதிய உத்வேகமும், பொருளாதார தேசியத்துவத்தின் எழுச்சியும் காணப்பட்டாலும் சுதேசிய சனத்தொகையானது வேகம் குறைந்ததாகவும் மூலதன வழிகளுக்கான முயற்சிகளில் ஊக்கமற்றும் காணப்பட்டது. சமூகமானது முயற்சியின்மையைக் கொண்டிருந்தது. அரசாங்க சேவை அல்லது அரச தொழிலின் மகத்துவம் படித்த இளைஞர்களைக் கவர்கின்ற தன்மை அண்மைக்காலம் வரைக்கும் நிலைபெற்றிருந்ததைக் காணமுடிகின்றது. இச்சூழ்நிலைகளிலேயே இலங்கையின் கைத்தொழிலாக்கமானது ஆரம்பமானது. கைத்தொழில் அபிவிருத்தியானது புதிய தனியான நிர்வாகப் பகுதியாக 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியலமைப்பில் அலுவலக அந்தஸ்த்தைப் பெற்றதன் பின் உடனடியாக நாட்டின் கைத்தொழில் உள்ளார்ந்த வளத்தைத் தீர்மானிப்பதற்கான அவசிய வேலையாக 1932 இல் கைத்தொழில் வர்த்தகத்துக்கான தனியான அலுவலகம் ஏற்படுத்துப்பட்டது. இந்நடவடிக்கைகளில் மென்மேலும் முன்னேற்றங்கள் காணப்பட்டாலும் யுத்தமும், பொருளாதார மந்தநிலைமைகளும் அவற்றைத் தடுப்பனவாகவே இருந்தன. குடிசைக் கைத்தொழில்கள் அரசாங்கத்தினால் தாராள உதவி பெற்றது. 1935 இல் நீண்ட காலத்திட்டங்களினடிப்படையில் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றுள் உள்நாட்டு உணவு உற்பத்தியைத் தரவல்ல விவசாயத்துறை நிறுவனங்கள், தயாரிப்புப் பொருட்களுக்கான உள்ளூர் கிராக்கியைப் பூர்த்தி செய்யவும் சாதாரண கைத்தொழிலுக்கான திட்டமிடல் மற்றும் உள்ளூர் மூலவளங்களைப் பூரணமாகப் பயன்படுத்தும் ஒழுங்குகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. (Technical Advisor on Industries, 1935, p.15). பெரும்பாலும் அழுத்தங்கள் சிறிய - குடிசைக் கைத்தொழிலுக்கே கொடுக்கப்பட்டிருந்தன. 1936 இன் பின் ஏற்பட்ட பொருளாதார முன்னேற்றத்தின் பின் அரசசபையினால் (State Council) ஏறக்குறைய 3 மில்லியன் ரூபாய் கைத்தொழில் முயற்சிகளுக்கு ஒதுக்கப்பட்டதுடன் தேவையான தொழில்நுட்ப அறிவுடையவர்களின் நிரம்பலை அதிகரிப்பதற்கு வெளிநாடுகளுக்குப் பயிற்சிக்காக இலங்கையர் அனுப்பப்பட்டனர். (Director of Commerce and Industries, 1938, p.228-235). இத்தகைய முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும் இலங்கையின் கைத்தொழிலாக்கம் இக்காலத்தில் எத்தகைய குறிப்பிடத்தக்க மாற்றத்தையும் அடையவில்லை.

1938 இல் கைத்தொழில் நடவடிக்கைகளில் திட்டமிட்டவிருத்தியை ஏற்படுத்தவதற்குத் தனியான வர்த்தக கைத்தொழில் திணைக்களம் ஏற்படுத்தப்பட்டது. இத்திணைக்களத்தின் உடனடி வேலையாக குடிசைக் கைத்தொழில் அமைப்பினை மேலும் உறுதி செய்வதாக இருந்தது. போருக்கு முந்திய இக்காலத்தில் சிறியளவான இயந்திரபாவனையுடன் சிறிய கைத்தொழில்களை ஏற்படுத்துவதில் அரசு மேலதிகமான சிரத்தை காட்டியது. கடதாசி உற்பத்தியினை மேற் கொள்வதற்கு முன்பு உள்ளூர் புற்களின் பொருத்தப்பாடு பற்றிப் பரிசோதனை செய்வதற்கு ஆரம்ப ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டம் வெற்றியளிக்கவில்லை. பிரித்தானிய நிறுவனம் உள்ளூரில் றப்பர் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ஒரு திட்டத்தை அரச சபை ஏற்றுக் கொண்டாலும் உள்ளூர் தயாரிப்பாளர்களின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டது. அதேவேளை உள்ளூர் சிங்கோணா (Cinchona) பயிரிடுவோர்களுக்கு உதவுவதற்கு தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஒட்டுப்பலகைத் தொழிற்சாலை இக்காலத்தில் விவசாய ஏற்றுமதிக் கைத் தொழில்களின் தேவையை வழங்குவதற்குக் கருத்திற்கொள்ளப்பட்டது. இத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்திட்டங்கள் எல்லாம் உள்ளூர் சந்தைத் தேவைகளின் அடிப்படையிலேயே திட்டமிடப்பட்டனவே ஒழிய தனியுரிமைகளாக இல்லை. ஆனால் வழியைக் காட்டுவதற்காகவே (Oliver, 1957, p.78) எனலாம். 1939 இல் உறுதியான கொள்கைகளின் விளைவாக தும்புத் தொழிற்சாலை மாதிரியாக ஏற்படுத்தப்பட்டது. உதவிபெறும் வங்கிகளிடமிருந்து நிதிவசதிகளைப் பெற்றுத் தனியார் துறையை விருத்திசெய்யலாமென்ற நம்பிக்கை அரசசபையிடம் காணப்பட்டது. இரண்டாம் யுத்தத்தின் ஆரம்பத்தினால் முழுத் திட்டமும் தடைப்பட்டது. நாட்டின் பொருளாதாரம் பாதிப்பிற்குள்ளாகியது.

### III

**போர் மற்றும் போருக்குப் பிந்திய காலம் (1939 – 47)**

இவ்யுத்த காலத்திலேயே தொழிற்சாலைகளின் ஆரம்பத்தைக் கொண்ட கைத் தொழிலாக்கம் இலங்கையில் ஆரம்பித்தது. யுத்தத்திற்குத் தேவையானவை உள்ளூரில் தயாரிக்கப்பட்டன. அரசாங்கத்தினாலும் தனியார்துறையினாலும் இவை ஏற்படுத்தப்பட்டன. முதலிலேயே காணப்பட்ட தனியார் முயற்சிகள் குறிப்பாக சவர்க்காரம், தீப்பெட்டி, புடவை நெய்தல் ஆகிய தயாரிப்புகள் தவிர்ந்த தெரியாத துறைகளில் தனியார் முதலீட்டாளர்கள் முதலிடத் தயக்கம் கொண்டவர்களாக இருந்தனர். இதனால் அரசாங்கம் இப்பிரச்சினையில் தலையிட்டு முன்னெடுத்துச் செல்ல உதாரணங்கள் காணப்பட்டன. அநேக தொழிற்சாலைகள் இக்காலத்தில் நிறுவப்பட்டன. அவை யுத்தகாலத்தின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்வனவாகவே இருந்தன. இருந்தபோதிலும் குடிசை மற்றும் சிறுகைத்தொழில்கள் அரசாங்கத்திடமிருந்து பெற்ற உதவிகளினால் இக்காலத்தில் விரைவான விருத்தியை அடைந்தன.

இவ்யுத்தகாலத்தில் அமைக்கப்பட்ட கைத்தொழிற்சாலைகளில் பொருத்தப்பட்டிருந்த கருவிகள் யாவும் இரண்டாம்தர உள்ளூர் இயந்திரங்களாகவும், திறனற்றவையாகவும் அமைந்திருந்தன. இவ் இயந்திரங்கள் உண்மையில் முன்னோடியான இயந்திரப் பொறிகளாக இல்லாமல் அவை கொண்டிருக்க வேண்டிய அளவுத் திட்டத்திலும் சிறியனவாகவும் சமாதான காலத்திற்கென ஒழுங்கமைப்பில் வடிவமைக்கப்பட்டனவாகவும் அமைந்திருந்தன. இவ் இயந்திரங்கள் உண்மையில் முன்னோடியான இயந்திரப் பொறிகளாக இல்லாமல் அவை கொண்டிருக்க வேண்டிய அளவுத் திட்டத்திலும் சிறியனவாகவும் இருந்தன. (Director of Industries and Commerce, 1940 - 47). மிகக் கவனமான தொழில்நுட்ப, திறனாற்றல் ஆலோசனையின் பின்பு இக்கைத்தொழில்கள் தெரிவு செய்யப்பட்டனவாக இருந்தாலும் யுத்தநிலைமைகள் பாரிய தொழில் முயற்சிகளைப் பாதிப்பனவாகக் காணப்பட்டன. (Government of ceylon, 1946, p.9). அவசரகால நிலைமைகளில் அமைக்கப்பட்ட தொழிற்சாலைகள் தும்பு மற்றும் ஒட்டுப் பலகைகளுடன் சில பொருட்களான கண்ணாடி, மட்பாண்டங்கள், இரும்புருக்கு, அசிற்றித்திரவம், கடதாசி, மருந்து வகைகள் தொப்பிகள், தோல் பொருட்கள் என்பனவற்றையும் உற்பத்தி செய்தன.

யுத்தத்திற்கு முன்பு கொழும்பு நகரில் (Slave Island) ஆரம்பிக்கப்பட்ட தும்புத் தொழிற்சாலை சில தந்திரோபாய காரணங்களுக்காக கொழும்பிலிருந்து ஏறக்குறைய 22 மைல்கள் வடக்கே கட்டுநாயக்காவுக்கு நகர்த்தப்பட்டது. உண்மையில் போதுமான திட்டமிடலுடன் இக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலை தென் மாகாணத்தில் ஜின் தோட்டையில் தேயிலைக் கூடுகளைச் செய்வதற்கான ஒட்டுப்பலகைத் தயாரிப்பேயாகும். இத்தொழிற்சாலை ஆரம்பகாலத்தில் தனியார் நிறுவன முகாமைத்துவத்துக்கான கேள்வியைக் கோரியபோதும் கொள்வனவு செய்ய எவரும் முன் வராததினால் அரசாங்கமே முழுப்பங்குகளையும் வாங்கியது. தனியார் நிறுவனங்கள் அறியப்படாத துறைகளில் முயற்சிகளை ஆரம்பிக்க அஞ்சுகின்ற போக்கு காணப்பட்டது. இதனால் அடுத்து வந்த கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பான அரசாங்கக் கொள்கையானது போருக்குப் பிந்திய கைத்தொழில் அரச முகாமைத்துவத்தினையும் உரிமையையும் வலியுறுத்தி நின்றது.

1941 இல் மருதானையில் இரும்புருக்குத் தொழிற்சாலை இரண்டாம் தர பாவிக்கப்பட்ட இந்திய இயந்திரங்களைப் பொருத்தியும் புகையிரதத்துறையில் இருந்து பெறப்பட்ட கழிக்கப்பட்ட கொதிகலன்களைக் கொண்டும் (boiler) நிறுவப்பட்டது. கட்டிட மற்றும் அமைப்பு வேலைகளுக்கு அழுத்தப்பட்ட தகடுகளும் கம்பிகளும் (Rolled bars and rods) உற்பத்தி செய்யப்பட்டது. கண்ணாடி உற்பத்திகளின் தயாரிப்பானது பிறிதொரு போர்க்கால நிறுவனமாகும். கொழும்பு நகரில் 1941 இல் கையேற்கப்பட்ட கட்டிடத்தில் அமைய இருந்த இத்தொழிற்சாலையானது அக்கட்டிடம் இராணுவ நோக்கங்களுக்காக தேவைப்பட்டதினால் கொழும்பு நகரிலிருந்து வடக்கே 23 மைலில் உள்ள நாத்தாண்டியாவுக்கு நகர்த்தப்பட்டது. அவ்விடத்தில் கண்ணாடி செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் சிலிக்கா மணல் காணப்படுகின்றது. கடதாசியை உற்பத்திசெய்யும் தொழிற்சாலை கொழும்பு நகரில் அமைக்கப்படுவதாக இருந்து பின்பு காக்கபள்ளி (Kakkapalliya) என்ற இடத்துக்கு நகர்த்தப்பட்டது. 1944இல் மட்பாண்டத் தொழிற்சாலை நீர்கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது. மட்டக்குளியாவில் சப்பாத்துத் தொழிற்சாலையும், மாதம்பே (Madampe) என்னுமிடத்தில் அசிற்றிக் அசிட் என்னும் தொழிற்சாலையும் யுத்தகால தொழில் முயற்சிகளில் ஏனையவையாகும்.

இக்காலத்தில் ஏற்பட்ட கைத்தொழில் முயற்சிகள் யாவும் கொழும்பு நகரில் ஏறக்குறைய 30 மைல் வீச்சுப் பகுதிக்குள்ளேயே அமைந்திருந்தன. அரசாங்கத்தினால் ஆயத்தமற்ற நிலையில் உடனடியாகத் தொடங்கப்பட்டமையும் கொழும்புப் பகுதிக்குள் இப்பொருட்களுக்குப் பாரிய உள்ளூர் கேள்வி இருந்தமையும் இக்கால கைத்தொழில்களின் அமைவிட ஒழுங்கினைத் தீர்மானித்தவையாக இருந்தன. பெரும்பாலான சனத்தொகை இப்பகுதியில் செறிந்திருந்தமையும் இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்கள் துறைமுகத்தினூடாக இறக்குமதி செய்யும் வசதியிருந்தமையும் ஏனைய காரணங்களாகக் கூறப்படலாம்.

யுத்தகாலத்தில் புடவைக் கைத்தொழில் குயினைன், மருந்து, சீமெந்து, போன்ற ஏனைய கருத்திட்டங்களும் அபிவிருத்திக்கான நோக்கங்களாக அமைந்திருந்தன. இத்தகைய யுத்தகால கைத்தொழில் முயற்சிளைத் ஸ்தாபிப்பதில் அரசானது மிகுந்த அக்கறை செலுத்தியிருந்தது உண்மையெனினும் நீண்டகால அதன் உரிமையையும் முகாமைத்துவத்தையும் பற்றிய உறுதியான தீர்மானங்களை எடுக்கவில்லையென்றே குறிப்பிட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1946 இல் அரசசபையினால் வெளியிடப்பட்ட ஏலவே ஸ்தாபிக்கப்பட்ட முயற்சிகள் மேல் அறிவித்தல் வரும்வரை அரசமுயற்சிகளாகவே தொடரும் என்ற பதிலில் இருந்து தெளிவாகத் தெரிவதைக் காணலாம்.

சமாதான நிலைமை திரும்பியவுடன் அரசானது இலங்கையின் கைத்தொழிலாக்கம் தொடர்பாக அதன் ஆதிக்கத்தையும், தெளிவான கொள்கையையும் வரையறை செய்வதற்கான தேவையை எதிர்நோக்கியது. வேலைவாய்ப்பினை வழங்கவும், வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் அரச உத்தரவாதத்துடன் கூடிய கைத் தொழிலாக்கம் அவசியம் என வாதிடப்பட்டது. கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கை தொடர்பாக 1946 ஆம் ஆண்டு அறிக்கை இத்துறையில் அரச கொள்கையை வெளியிடுவதற்கு மிக முக்கியமானதாக இருந்தது. அதன் தீர்மானத்தின்படி கைத்தொழில் அபிவிருத்தியானது தேசத்தின் பொது நன்மை கருதியும் அரச கட்டுப்பாட்டுக்குள் நெறிப்படுத்தப்பட வேண்டும் எனக் கூறப்பட்டது. இதனால் 1939 – 46 க்குமிடையில் அரச சபையின் கைத்தொழில் கொள்கையானது குறிப்பிடத்தக்க மாற்றத்தை அடைந்தது. அறிக்கையில் குறிப்பிடப்பட்டதன்படி கட்டுப்பாட்டின் நோக்கமானது கைத்தொழிலாக்கத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்குப் பங்களிக்கக் கூடிய உடனடிக் காரணிகளை ஒழுங்குபடுத்துவதேயாகும். (Goverment of Ceylon 1946, p.15) அவற்றுள் மிகப் பிரதானமான காரணிகள் பின்வருமாறு ;

1. மூலப் பொருட்களையும் சக்தியையும் முழுஅளவில் பயன்படுத்தல்
2. மூலப் பொருட்களின் போதுமானதன்மை, தொழிலாளர் அல்லது சக்தி, போக்குவரத்து, சனத்தொகையைப் பயன்படுத்தல் ஆகியவற்றை நாடளாவிய ரீதியில் கைத்தொழில்களின் பொருளாதாரப் பரம்பலை கவனத்திற் கொள்ள வேண்டும்.
3. வேலைக்கமர்த்தப்பட்ட தொழிளார்களின் வாழ்வு நிலைமைகள் போதுமான வேதனங்களுக்கான சலுகைகள்

இக்காலத்தில் வெளிநாட்டு நிறுவனங்களினால் மேற் கொள்ளப்படும் மூலதனத்தைக் கவருவதற்கான அரசின் ஆர்வம் மிகவும் குறைவாகவே இருந்தது. பல்வேறு துறையினால் கைத்தொழில்களை அபிவிருத்திக்காக வகைப்படுத்தும் போது அவை (1) அடிப்படைக் கைத்தொழில் – அரச தனியுரிமை கொண்டவை (2) அடிப்படை சாராக் கைத்தொழில் – அனுமதிப் பத்திரமுறையின் ( Licensing System ) கீழ் தனியார் முதலாளித்துவத்திற்கு விடப்பட்டவை என இரு பிரிவாகப் பிரிக்கப்படும். அடிப்படைக் கைத்தொழில்களின் வகைகள் பின்வருமாறு;

(1) சக்தி தொடர்பான கைத்தொழில்கள்
(2) இரும்புருக்கு, சீமெந்து ஆகியவற்றை உள்ளடக்கிய பாரக் கைத்தொழில்கள்
(3) உர இரசாயனப் பிரிவுகளை உள்ளடக்கிய இரசாயன பாரக் கைத்தொழில்கள்
(4) குறிப்பிடப்பட்ட மருந்துகள் மற்றும் மருந்துவகைகளைத் தயாரிக்கும் கைத்தொழில்கள்
(5) பருத்தி நூற்றல் (Cotton Spinning) கைத்தொழில்கள்

அரசாங்கத்திணைக்களங்களினால் நேரடியான கண்காணிப்புக்குப் பதிலாக இம்முயற்சிகள் தனிப்பட்ட கூட்டுத்தாபனங்களின் நிர்வாகத்தின் கீழ் இருக்க வேண்டுமெனப் பரிந்துரை செய்யப்பட்டது. அடிப்படையான கைத்தொழில் தொடர்பாக அரசு கொண்டிருந்த கொள்கையின்படி பொதுமக்கள் கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பம் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. யாரும் முன்வராத நிலையில் அம்முயற்சிகளை அரசு சொந்தமாக நடத்துவதற்கு விருப்பம் கொண்டிருந்தது. அவ் அதிகார அறிவிப்பின்பின் சில குறிப்பிட்ட கைத்தொழில்களைக் கொண்ட பாரிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கான சாத்தியம் பற்றிய ஆரம்ப ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் சீமெந்து முதலிலும் அடுத்ததாக கோஸ்டிக்சோடா, புடைவை, இரும்புருக்கு, கடதாசித் தயாரிப்புகள் என்பனவும் கவனத்திற் கொள்ளப்பட்டன. 1947 இல் போருக்குப் பிந்திய அபிவிருத்தி யோசனைகளில் அதே அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய பரிந்துரை செய்யப்பட்டது. அதற்கு மேலாக சிறிய அளவிலான குடிசைக் கைத்தொழில்களான துணி நெய்தல், பாய்கள் செய்தல்,லேஸ் வேலைப்பாடுகள், தும்புப் பொருட்கள், மரவேலைப்பாடுகள் ( wooden ornaments) பொம்மைகள்,Silver and brass ware என்பன ஸ்தாபிக்கப்பட்டன அல்லது மீள் வளர்ச்சி பெறலாயின. போர்க்காலத்தில் புடைவைகளுக்கு ஏற்பட்ட அருந்தல் நிலைமைகள் கைத்தறிக் கைத்தொழில்களின் (Handloom Industry ) வளர்ச்சியைத் தூண்டுவனவாக இருந்தன.

போருக்குப் பிந்திய கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் கொள்கை சம்பந்தமாக கூறும் போது இலங்கையின் பிரதான தயாரிப்புத்துறையானது குறிப்பிடத்தக்க எண்ணிக்கை கொண்ட அரசு ஆதரவு பெற்ற யுத்தகால தொழிற்சாலைகளைக் கொண்டிருந்தமையைக் குறிப்பிடலாம். அவற்றினைவிடச் சில தனியார் கைத்தொழில்களும் அமைந்திருந்த அதேவேளை புதிய முயற்சிகளுக்கான ஆரம்ப ஆய்வுகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தன எனக் குறிப்பிடலாம். 1947 ஆம் ஆண்டு அரசு ஆதரவு தொழிற்சாலைகள் (New state - owned factories) என்னும் அறிக்கையில் தெளிவாகக் கூறப்பட்டதன் படி அரசாங்கமானது இயலுமான வகையில் பாரிய கைத்தொழிற்திட்டங்களைக் குறிப்பாக உற்பத்தியில் குறிப்பிடத்தக்க பொருளாதார அளவுத் திட்டங்களை அடைந்து கொள்வதற்கு அவை வழியாக இருக்குமென்பதினால் அதன் சார்பாக இருந்தது. இத்தகைய அதிகார அறிவிப்பினால் இக்கால கைத்தொழில் அபிவிருத்தியின் கால கட்டமானது ஒருமுடிவுக்கு வந்ததுடன் கைத்தொழில் முயற்சிகளில் அரசின் ஆதிக்கம் மேலோங்கியும் இருந்தது. பாரிய திட்டங்கள் தனியார் நிறுவனங்கள் அல்லது தனிப்பட்டவர்களின் சக்திக்கு அப்பாற்பட்டதாக இருப்பதினால் அவற்றை அமுல்படுத்துவதில் அரச ஊக்குவிப்புக்களும், சொந்தமாக்கலும் முகாமைத்துவமும் மிக அவசியமானது எனக் கருதப்பட்டது.( Goverment of Ceylon,1947.p.4)

அடுத்த இதழில் தொடரும்..........

❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச வர்த்தகமும் பொருளாதார அபிவிருத்தியும்: இலங்கை அனுபவம்

**கா. கந்தையா**

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

## I

19 ம் நூற்றாண்டு பழம் பொருளியலாளர்களது சர்வதேச வர்த்தகக் கோட்பாடு, காரணிகளின் உற்பத்தித் திறனில் ஏற்படுகின்ற வேறுபாடே நாடுகளிடையே வர்த்தகம் ஏற்படுவதற்கான பிரதான காரணமாக அமைகிறது எனக் கூறி உலக நாடுகள் எவ்வாறு சர்வதேச வர்த்தகத்தின் மூலம் நன்மையடைய முடியும் என்பதனை விரிவாக விளக்கியுள்ளது. பழம் பொருளியலாளர்களின் வர்த்தகக் கோட்பாட்டினை விருத்தி செய்வதாக நவபழம் பொருளியலாளர்களின் காரணி அளிப்புக் கோட்பாடு விளக்குகின்றது. இக்கோட்பாட்டின் சாராம்சம் என்னவெனில் எல்லா நாடுகளும் கட்டுப்பாடற்ற வர்த்தக அமைப்பு முறை ஒன்றின் மூலம் நன்மை பெறுவதால் உலக உற்பத்தி அதிகரிக்கும் என்பதாகும். சர்வதேச வர்த்தகம் பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி என்பவை ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையாகும். சர்வதேச வர்த்தகம் என்பது தனியே பொருட்கள் சேவைகளை ஏற்றுமதி, இறக்குமதி செய்வது என்பதோடு மட்டுப்படுத்தப்பட்டதல்ல. இதற்கும் தொழில்நுட்ப அறிவு, வினைத்திறன் போன்ற அம்சங்களும் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. அத்துடன் வெளிநாட்டு முதலீடுகளையும், முயற்சியாளர்களையும் பரிமாற்றம் செய்கின்ற ஊடகமாகவும் சர்வதேச வர்த்தகம் விளங்குகின்றது.

சர்வதேச வர்த்தகத்தின் மூலம் மேற்கூறிய வகையில் சாதகமான விளைவுகள் ஏற்பட முடியும் எனக் கருதிய போதும் DC, LDC களுக்கிடையிலான தற்போதைய விரிசல் நிலைக்கு இது காரணம் எனக் கூறுவோரும் உள்ளனர். உதாரணமாக பிரபிஷ் சிங், நேர்க்ஸ் போன்ற கட்டமைப்பாளர்களது விளக்கம் இவ்வகையானதே. இவர்களைவிட மார்க்சிய வர்த்தக கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட நவமார்க்சியவாதிகளாகிய சாமீர் அமீன், போல்பரண், குண்டா பிராங் என்போரால் முன்வைக்கப்படுகின்ற மைய - சுற்றயல் கோட்பாட்டு விளக்கமும் சர்வதேச வர்த்தகம் மைய நாடுகளிற்குச் சாதகமாக அமைந்துள்ளதையே விளக்குகிறது. எவ்வாறெனினும் ஒப்பீட்டு நயக்கோட்பாடு எதிர்வு கூறியது போல் சர்வதேச வர்த்தகம் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி, வருமானப் பங்கீடு என்பவற்றிற்குச் சாதகமாக அமையாது, மாறாக அபிவிருத்தியடைந்த நாடுகளினது செல்வந்தர்களுக்கும், பல்தேசியக் கம்பனிகளுக்கும் வாய்ப்பாகச் செயற்பட்டுள்ளது என்பதே உண்மையாகும்.

கா. கந்தையா
B.A (Hons); M.Sc (Cey); M.A (Thai)
சிரேஷ்ட விரிவுரையாளர்
பொருளியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்

சர்வதேச வர்த்தக உபாயங்கள் ஒவ்வொரு நாடுகளுக்குமான பொருளாதார அமைப்பு, அந்நாட்டின் அபிவிருத்தி உபாயங்கள் என்பவற்றோடு தொடர்புடையதாக அடையாளம் காண முடியும். ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி அணுகு முறைக்கு பிரதான மூலமாக அமைவது அந்நாட்டின் வர்த்தக உபாயம் எனலாம். வெளிப்படுத்திய சர்வதேச வர்த்தகக் கொள்கையினை வர்த்தகச் செயலாற்றம், அதற்கான ஊக்குவிப்பு அமைப்புக்களின் பண்புகள், வர்த்தகக் கொள்கைக்கான பிரதான கருவிகளின் தன்மை என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு ஒரு நாட்டின் சர்வதேச வர்த்தக உபாயத்தின் நெறிப்படுத்தலை வகைப்படுத்திக் கொள்ளலாம். சர்வதேச வர்த்தகத்தின் வெளிப்படுத்திய கொள்கையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்றுமதியின் பங்கு, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இறக்குமதியின் பங்கு, வர்த்தகத்தில் தங்கியிருத்தல் வீதம் என்பவற்றையே விளக்குகின்றது (1).

நடைமுறையில் வர்த்தக உபாயங்களை வெளிநோக்கிய (ஏற்றுமதி மேம்பாடு) உள்நோக்கிய (இறக்குமதிப் பதிலீடு) வர்த்தக உபாயங்கள் என இரண்டாகப் பிரிக்கலாம். வெளிநோக்கிய உபாயமானது கைத்தொழில் - வர்த்தக கொள்கைகளைப் பொறுத்து உள்நாட்டுச் சந்தைக்கான உற்பத்தி, ஏற்றுமதிக்கான உற்பத்தி எனவோ அல்லது உள்நாட்டுக் கொள்வனவுக்கும் வெளிநாட்டுக் கொள்வனவுக்குமெனவோ பேதுப்படுத்துவதில்லை. மாறாக வர்த்தக உபாயம் கைத்தொழில் ஊக்குவிப்புக்களை வெளிநாட்டுச் சந்தையை விட உள்நாட்டுச் சந்தைக்கே சார்பான தொன்றாக மாற்றுகின்றது. இவ்வணுகு முறை இறக்குமதிப் பதிலீட்டு உபாயம் எனவும் குறிப்பிடப்படுவதுண்டு (2).

இலங்கைப் பொருளாதாரம் படிப்படியாக வர்த்தக தங்கியிருத்தலில் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்றுமதி, இறக்குமதி துறைகளின் பங்கு படிப்படியாக அதிகரித்து வருகின்றது. 1970–74 ஆண்டு காலப்பகுதியில் வர்த்தகத்தில் தங்கியிருத்தல் விகிதமானது 34 ஆக இருந்து 1978 - 85ல் 62 விகிதமாக அதிகரித்துள்ளது (3). ஏற்றுமதி, இறக்குமதி ஆகிய இரு செயற்பாடுகளும் பொருளாதாரத்தின் மிக முக்கிய துறைகளாக வளர்ச்சி பெற்று வருவதுடன் கடந்த ஒரு தசாப்த காலத்தில் பெருமளவான கட்டமைப்பு மாற்றங்களையும் பெற்றுள்ளன. ஏற்றுமதித் துறையானது பெருந்தோட்ட உற்பத்தியில் பெற்று வந்த முக்கியத்துவம் குறைவடைந்து படிப்படியாக கைத்தொழில் துறை ஏற்றுமதிகள் அதிலும் குறிப்பாக உடுதுணிகள் ஏற்றுமதி முக்கியம் பெறுவதும், இறக்குமதியில் நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி குறைவடைந்து இடைத்தர முதலீட்டு பொருட்களின் இறக்குமதி அதிகளவான பங்கினை வகிப்பதையும் அவதானிக்க முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழேயுள்ள அட்டவணை கடந்த இரண்டு தசாப்த காலத்தில், இலங்கையின் வர்த்தகத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும், அது இலங்கையின் பொருளாதாரத்தில் எவ்வகையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பதனையும் விளக்குகின்றது.

**அட்டவணை 1**

**இலங்கையின் சர்வதேச வர்த்தகப் போக்கும், மாற்றங்களும், (1970 - 1990)**

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| 1970 | 16.4 | 14,9 | 31.7 | 2.6 | 84 | 86.4 |
| 1971 | 14.9 | 14.5 | 29.4 | 1.5 | 78 | 87.1 |
| 1972 | 14.4 | 13.2 | 27.6 | 1.3 | 75 | 88.2 |
| 1973 | 15.0 | 14.3 | 29.3 | 0.9 | 65 | 88.0 |
| 1974 | 20.0 | 14.7 | 34.8 | 3.8 | 58 | 72.9 |
| 1975 | 19.5 | 14.9 | 34.5 | 2.9 | 46 | 73.4 |
| 1976 | 16.2 | 16.0 | 32.2 | 0.2 | 62 | 87.0 |
| 1977 | 16.6 | 18.0 | 34.7 | 3.5 | 81 | 105.6 |
| 1978 | 35.4 | 30.9 | 66.3 | 2.4 | 80 | 84.7 |
| 1979 | 43.1 | 29.2 | 72.3 | 6.8 | 121.4 | 67.7 |
| 1980 | 51.0 | 26.4 | 75.7 | 16.4 | 106.7 | 52.0 |
| 1981 | 43.0 | 24.7 | 67.8 | 10.0 | 100.0 | 56.8 |
| 1982 | 42.3 | 21.6 | 63.9 | 11.9 | 93.8 | 50.8 |
| 1983 | 37.5 | 20.6 | 58.1 | 9.1 | 115.3 | 55.4 |
| 1984 | 31.2 | 24.5 | 55.6 | 0.9 | 140.2 | 75.8 |
| 1985 | 33.3 | 22.3 | 55.6 | 7.0 | 114.8 | 64.5 |
| 1986 | 30.4 | 19.0 | 49.4 | 6.6 | 110.7 | 61.3 |
| 1987 | 34.4 | 23.1 | 57.5 | 5.6 | 113.8 | 67.2 |
| 1988 | 35.0 | 23.1 | 58.1 | 6.8 | 105.6 | 65.9 |
| 1989 | 35.2 | 24.6 | 59.8 | 4.9 | 98.9 | 70.0 |
| 1990 | 37.0 | 27.4 | 64.4 | 3.3 | 89.5 | 73.9 |

(கட்டுரையாளரினால் கணிப்பிடப்பட்டது)

**குறிப்பு;**

1. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இறக்குமதியின் வீதம்.
2. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்றுமதியின் வீதம்
3. வர்த்தகத்தில் தங்கியிருந்தல் வீதம் (1) + (2) அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்றுமதி இறக்குமதிகளின் கூட்டுத் தொகையின் விகிதம்.
4. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நடைமுறைக் கணக்கு வீதம்.
5. வர்த்தக மாற்று வீதம். ஏற்றுமதி விலைச்சுட்டெண்ணை இறக்குமதி விலைச்சுட்டெண்ணால் பிரித்து 100 ஆல் பெருக்க வருவது. 1978 வரையிலான வர்த்தக மாற்று வீதச்சுட்டெண் 1967 ம் ஆண்டினையும் 1978 க்குப் பின்புள்ள சுட்டெண் 1981 ம் ஆண்டினை அடியாண்டாகவும் கொண்டுள்ளதால் இவற்றினை ஒப்பிட முடியாது.
6. ஏற்றுமதி இறக்குமதி வீதாசாரத்தினைக் காட்டுகிறது.

அடுத்து இரண்டாவது பகுதி இலங்கையின் சர்வதேச வர்த்தகப் போக்குகளையும் பொருளாதார அபிவிருத்தியையும் விளக்குகிறது. மூன்றாவது பகுதியில் 1960 – 1977 வரையுள்ள "இறுக்கமான உள்நோக்கிய" வர்த்தகக் கொள்கையினைப் பின்பற்றிய காலப் பகுதியாக வரையறுத்து இக்காலப் பகுதியில் காணப்பட்ட சர்வதேச வர்த்தகக் கட்டுப்பாடுகள் குறிப்பாக இறக்குமதித் தடைகள், வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கான வாய்ப்புக்கள் இல்லாமை, அரசாங்கத் தலையீடுகள் என்பனவற்றால் ஏற்பட்ட மந்த அபிவிருத்தி என்பன விளக்கப்பட்டுள்ளன. நான்காவது பகுதியானது 1977 – 1990 வரையுள்ள காலப் பகுதியில் இலங்கையின் பொருளாதாரத்தில் தாராளமயமாக்கல் நடவடிக்கைகளையும் இதனால் இலங்கையில் வர்த்தக பொருளாதார அபிவிருத்தியில் ஏற்பட்ட மாற்றங்களும் விளக்கப்படுகிறது. இவ்வாய்வில் கிடைக்கின்ற முடிவுகளும், கொள்கை நடைமுறைப்படுத்தலில் உள்ள முரண்பாடுகளும் இசைவின்மைகளும் விளக்கப்படுகின்றது.

**11**

## திறந்த பொருளாதாரம் (1948 – 1960)

சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்திலிருந்து ஏறக்குறைய ஒரு தசாப்த காலத்திற்கு தொடர்ந்தும் இலங்கை திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்தது. 1950 ஆண்டளவில் பிரதான பெருந்தோட்ட உற்பத்திகளான தேயிலை, இறப்பர், தெங்கு ஆகிய மூன்று பயிர்களும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கூட்டப்பட்ட பெறுமதியில் 53 வீதமான பங்களிப்பை செய்தன (4). ஒரு காலனித்துவ பொருளாதார அமைப்பே இக்காலப் பகுதியில் காணப்பட்டது. பெருந்தோட்ட உற்பத்திகள் ஏற்றுமதி வர்த்தக்த்தில் பெருமளவான பங்கினைப் பெற்றிருந்ததோடு இலங்கைப் பொருளாதாரம் ஏற்றுமதியில் தங்கியிருக்கின்ற பொருளாதாரமாகவும் காணப்பட்டது. உலக நாடுகளில் காணப்பட்ட சாதகமான சூழ்நிலைகளும், ஏற்றுமதிப் பொருட்களின் உறுதியான விலைகளும் பெருமளவான அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தந்தமையால் அரசின் சமூகநலச் செலவுகளையும், உணவு கைத்தொழில் பொருட்கள் என்பவற்றின் இறக்குமதிச் செலவுகளையும் ஈடு செய்யப் போதுமானதாக ஏற்றுமதி வருமானம் அமைந்தது.

சுதந்திரத்திற்குப் பின்புள்ள ஒரு தசாப்த காலப் பகுதியில் இலங்கைப் பொருளாதாரக் கட்டுமானத்தில் குறிப்பிடக் கூடியளவு மாற்றம் எதுவும் ஏற்படவில்லை; திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு இசைவான ஒரு நிலையான அந்நியச் செலாவணி மாற்று வீதம் கடைப்பிடிக்கப்பட்டது. அரசிறைக் கொள்கையானது தனியே அரச வருமானத்தைப் பெறும் ஒரு வழியாகவே பயன்படுத்தப்பட்டது. நாணய நடைமுறைக் கொள்கையின் பயன்பாடு மிகக் குறைவாகவே காணப்பட்டது. எனினும் பொருளாதாரத்தில் ஒப்பீட்டு ரீதியில் பொருளாதார நெருக்கடிகள் குறைந்தளவிலேயே காணப்பட்டது. 1950 களில் அனேகமான அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகள் இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழிலை மேற்கொண்ட போதும் இக்காலங்களில் இலங்கையில் கைத்தொழில் முயற்சிகளுக்கான ஊக்குவிப்புக்கள் குறைவாகவே காணப்பட்டன. ஏனெனில் பெருந்தோட்டத் துறையினால் ஏற்றுமதியின் செழிப்பான தன்மையும் குறைந்தளவான அரச தலையீடும் கைத்தொழிலுக்கான முயற்சியைப் பின்தள்ளி வைத்தது. இந்நிலையில் ஹெக்சர் – ஒகிலின் – சாமுவல்சன் ஆகியோரின் சர்வதேச வர்த்தகக் கோட்பாட்டில் எதிர்வு கூறப்பட்டதிற்கு ஏற்ப வர்த்தக மாதிரியே இக்காலத்தில் இலங்கை பின்பற்றியது எனக் கூறுதல் பொருத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார அபிவிருத்தி உபாயங்கள் அவ்வக் காலங்களில் பதவிக்கு வந்த அரசாங்கங்களின் கருத்து நிலையினைப் பிரதிபலிப்பதாகவே இருந்து வந்திருக்கின்றது. அபிவிருத்தி உபாயத்தின் ஒரு பிரதான அம்சமாக வர்த்தக உபாயம் விளங்குவதினால் அரசாங்கங்களின் கருத்து நிலையினைப் பிரதிபலிப்பது தவிர்க்க முடியாததாகும். 1948 – 1956 காலப் பகுதியில் பதவியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பொருளாதார உற்பத்தி முயற்சி நடவடிக்கைகளில் குறைவான தலையீட்டினைக் கொண்டிருந்ததோடு ஒரு நடுநிலை வாய்ந்த வர்த்தகக் கொள்கைக்கு அழுத்தம் கொடுத்து ஒப்பீட்டு நயத்தைப் பூரணமாக பயன்படுத்தக் கூடிய வர்த்தக அமைப்பினையே விரும்பியது. இக்காலப்பகுதியில் அரசாங்கம் உற்பத்தி வழியிலான பொருளாதார நடவடிக்கைகளைக் குறைத்துக் கொண்ட போதும் சமூக நலச் செலவீடுகளான கல்வி, சுகாதாரம் போன்ற நடவடிக்கைகளில் பெருமளவான முதலீடுகளைச் செய்திருந்தது. இதனாலேயே சமூக நலக் குறிகாட்டிகளின் அபிவிருத்தி முன்னேற்றம் பெருமளவாகக் காணப்பட்டது.

1950 களின் நடுப்பகுதி வரை தேயிலை விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினாலும் சாதகமான சர்வதேச சந்தை வாய்ப்புக்களினாலும் ஒரு செழிப்பான நிலைமையினை இலங்கைப் பொருளாதாரம் அனுபவித்து வந்தது. ஆனால் 1956க்குப் பின்பு சர்வதேச சூழ்நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களினால் குறிப்பாக தேயிலை, இறப்பர் தெங்கு என்பனவற்றிக்கான ஏற்றுமதிக் கேள்வி குறைவடைகின்ற நிலமையும், விலை குறைவடைந்து சென்றமையும், இறக்குமதிப் பொருட்களுக்கான விலை அதிகரித்தமையும், தொடர்ச்சியாக அதிகரித்து வந்த அரசாங்கத்தின் சமூக நலச் செலவீடுகளும் சென்மதி நிலுவையில் தொடர்ச்சியான பற்றாக்குறையினை ஏற்படுத்தின. சுருக்கமாக கூறின் 1948 – 1960 காலப்பகுதியில் உள்நாட்டு உற்பத்தியானது வருடமொன்றிற்குச் சராசரியாக 5 வீதமாகக் காணப்பட்டது. 1960 ஆம் ஆண்டில் இலங்கையின் தலா வருமானம் 152 அமெரிக்க டொலராக அப்போதைய தென்கொரியாவின் தலா வருமானத்துக்குச் (154 அமெரிக்க டொலர்) சமமாகக் காணப்பட்டது. 1953ல் இலங்கையின் வேலையின்மை மொத்த வேலைப்படையில் 0.8 வீதமாக இருந்து 1959 – 60இல் 11.6 வீதமாக உயர்வடைந்திருந்தது (5). இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியானது 1948 – 1960 காலப் பகுதியில் தாரளமாகக் கிடைக்கப் பெற்ற நிலம் போதுமான உள்கட்டுமானங்கள், வெளிநாட்டு முயற்சியாளர்கள் – முதலீடுகள், குறைந்த செலவில் தென் இந்தியாவில் இருந்து கிடைத்த ஊழியம் ஆகிய காரணிகளின் சேர்ந்த பங்களிப்பினாலேயே ஏற்படுத்தப்பட்டது. ஒரு சில தொகை ரீதியான இறக்குமதிக் கட்டுப்பாடுகளையும், குறைவான ஏற்றுமதி – இறக்குமதி வரிகளையும் கொண்ட சர்வதேச வர்த்தகக் கொள்கை இக்காலப் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவித்தது.

111

## மூடப்பட்ட பொருளாதாரம் (1960 – 1977)

1956ல் புதிதாகப் பதவிக்கு வந்த அரசாங்கம் முன்னைய கால அரசாங்கத்தின் கருத்து நிலையினின்றும் வேறுபட்டதோடு அக்காலத்திற் காணப்பட்ட பொருளாதார நெருக்கடிகளைக் குறிப்பாகச் சென்மதி நிலுவைப் பிரச்சினையைக் கவனத்தில் கொண்டு கைத்தொழிற்துறை அபிவிருத்தியில் கவனம் செலுத்தியது. இப்புதிய அரசாங்கம் இடதுசாரிப் போக்குடையதாக விளங்கியதால் காலணித்துவப் பொருளாதார அமைப்பு முறையை மாற்றுவதற்கான புதிய உபாயம் ஒன்றினையும் மேற்கொள்ள முன்வந்துள்ளது. இப்புதிய பொருளாதார அபிவிருத்தி அணுகு முறை லத்தீன் அமெரிக்க கட்டமைப்பாளர்களது அணுகு முறையை ஒத்ததாகவே இருந்தது. அதாவது கைத்தொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்கான இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையே பின்பற்றப்பட்டது.

இதன் முதற்கட்டமாக 1962 இல் இறுக்கமான இறக்குமதிக் கொள்கை அமுல் படுத்தப்பட்டது. உணவு வகைகள், பெற்றோலியம், பசளை, எரிபொருள்கள், மருந்து வகைகள் தவிர்ந்த எல்லா இறக்குமதிகளும் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. எனினும் பொதுத்துறை கட்டுப்பாட்டிலுள்ள பொருட்களையும் இறக்குமதி செய்ய வசதியளிக்கப்பட்டது. இறக்குமதிக்கான இறுப்புக்கள் மீது பிரதான மாற்றம் கொண்டு வரப்பட்டதோடு இறுப்பு வீதமானது 10 விருந்து 500 வரை வேறுபட்ட அளவில் பொருட்களின் தன்மையைப் பொறுத்து அமைந்திருந்தது. பொதுவாக இறுப்புக் கொள்கையானது உள்நாட்டு உற்பத்திகளைப் பாதுகாக்கும் நோக்குடனும் அத்தியாவசியமற்ற இறக்குமதிகளை குறைப்பதற்காகவும் அமைந்தது. அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையை சமாளிப்பதற்காக அந்நியச் செலாவணியை ஒதுக்கீடு செய்வதில் பல கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன (6).

இலங்கை 1957–1976 வரையுள்ள இருபது வருடங்களில் தொடர்ச்சியாக வர்த்தக நிலுவையில் குறைநிலையினை அனுபவித்து வந்தன. அரசாங்கத்தின் குறை நிலை வரவு செலவுத்திட்ட நிதிப்படுத்தலினால் ஏற்பட்ட நாணய விரிவாக்கம் இதன் வழியாக நுகர்வோரின் இறக்குமதிக்கான கேள்வி அதிகரிப்பு இதனால் அந்நிய செலாவணி ஒதுக்குகள் குறைவடைதல் என்பவற்றினால் நாட்டின் சென்மதி நிலுவைப் பிரச்சினை 1960 களின் ஆரம்பத்திலிருந்து தீவிரமடையத் தொடங்கியது. 1965 – 1969 காலப் பகுதியில் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் ஒரு பகுதியான தாராள மயமாக்கல் நடவடிக்கையை அப்போது பதவியிலிருந்த அரசாங்கம் அறிமுகப்படுத்தியது. தாராளமயமாக்கலின் ஊக்குவிப்பு நடவடிக்கைகளாகவே 1967ல் இலங்கை ரூபாவின் நாணய மதிப்பிறக்கம், 1968ல் கொண்டு வரப்பட்ட அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம் (FEECS) திறந்த பொது அனுமதி முறையை (OGL) மீளமைத்தல் போன்றன அமைந்தன. எனினும் ஏற்றுமதித் துறையின் வளர்ச்சி வேகம் குறைவானதாகவும் நாட்டின் விலை மட்டங்களின் அதிகரிப்பு அதிகமாகவும் காணப்பட்டதால் சென்மதி நிலுவைப் பிரச்சனை தொடர்ந்தும் நிலவியது. இத்துடன் தாராள மயமாக்கல் என்பதில் இருந்த நம்பிக்கையும் குறைவடையத் தொடங்கியது. இவ்விரு செயற்பாடுகளின் விளைவாக இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையும் இறுதியாக தோல்வியடைய வேண்டிய நிலைக்குள்ளாயிற்று.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக் காலகட்டங்களில் 1970 – 1977 காலப்பகுதி மிகக் கடுமையான வர்த்தகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்ட காலப்பகுதியாகும். 1967 -69 காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பகுதியான தாராள மயமாக்கல் நடவடிக்கை முயற்சிகள் ஒரு வீண்விரயமான பரிசோதனை என புதிதாகப் பதவிக்கு வந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் விமர்சித்ததோடு பற்றாக் குறையாகக் காணப்பட்ட அந்நியச் செலாவணி அத்தியாவசியமற்ற பொருட்களின் மீதான இறக்குமதிக்கு செலவிடப்பட்டதாகவும் குற்றம் சாட்டியது. தொகை ரீதியான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டதோடு அதிகரித்து வருகின்ற சமூகநலச் செலவுகளை ஈடு செய்யக் கூடிய வகையில் வர்த்தகத்தின் மூலமான வருவாய்களை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. தேசிய மயப்படுத்தல் நடவடிக்கைகளாலும் கைத்தொழில் முயற்சிகளாலும் பொருளாதார உற்பத்தி நடவடிக்கைகளில் அரசாங்கத்தின் பங்கு அதிகரிக்க தொடங்கியது. சர்வதேச வர்த்தகம், முதலீடுகள், உழைப்புச் சந்தை, பணச் சந்தை ஆகியவற்றில் நடைமுறைப்படுத்திய கட்டுப்பாடுகளினால் பொருளாதாரம் திரிபுபடுத்தப்பட்டதாகக் காணப்பட்டது. இதனால் விவசாயத்துறை குறிப்பாக ஏற்றுமதி விவசாயம் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியது.

இறுக்கமான உள்நோக்கிய பொருளாதார அபிவிருத்திக் கொள்கையானது கைத்தொழில் துறையில் மட்டுமல்லாது விவசாயத்துறையிலும் பிரயோகிக்கப்பட்டது. பசுமைப் புரட்சியின் விளைவாக விவசாய உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக விவசாய உற்பத்திகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தலை கட்டுப்படுத்தியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும் (7). இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையானது உள்நாட்டுச் சந்தையை அடிப்படையாகக் கொண்டதனாலும் வெளிநாட்டு மூலப் பொருட்களைப் பயன்படுத்தியமையாலும், மூலதன செறிவு வாய்ந்தவையாகக் காணப்பட்டமையாலும் இக்கொள்கை சென்மதி நிலுவைப் பிரச்சினையைத் தீர்க்கவோ அல்லது வேலையின்மையினை நீக்கவோ பெருமளவுக்குப் பயன்படவில்லை எனலாம். ஏறக்குறைய இருபது வருட இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழிலானது பொதுத்துறை கைத்தொழில் வளர்ச்சியில் ஒரு பிரதான வளர்ச்சியினையே ஏற்படுத்தி இருந்தது. உதாரணமாக 1960 இல் கைத்தொழில் (1970 ம் ஆண்டு நிலையான விலையில்) மொத்த உள்நாட்டு உற்பத்தி வெளியீட்டில் 8.1 வீதத்தையும் 1965 களின் 9.2 வீதத்தையும் 1970 களின் நடுப்பகுதியில் 13.8 வீதத்தையும் பங்களிப்புச் செய்தது. அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையால் உள்ளீடுகள், இயந்திரங்கள், மூலப்பொருட்கள் என்பவை இறக்குமதி செய்யப்பட்டமையால் ஆலைக் கைத்தொழில்கள் எப்பொழுதும் இயலளவுக்குக் குறைவாகவே உற்பத்தி செய்து வந்துள்ளதோடு கைத்தொழில் துறையின் வளர்ச்சியும் மெதுவானதாகவே காணப்பட்டது. கைத்தொழில் மெய்ரீதியான வளர்ச்சியானது 1960 – 1965 காலப்பகுதியில் 5.2 வீதமாகவும் 1965 – 1970 காலப்பகுதியில் 7.2 வீதமாகவும் காணப்பட்டது(8). 1965 – 1970 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பகுதியான தாராள மயமாக்கல் நடவடிக்கையின் விளைவாகவே கைத்தொழில் துறையின் வளர்ச்சி வீதம் உயர்வானதாகக் காணப்படுகின்றது. அந்நியச் செலாவணி ஒப்பீட்டளவில் இக்காலப் பகுதியில் அதிகளவாகக் கிடைத்தமையால் கைத்தொழிலின் வளர்ச்சியும் ஓரளவு உயர்வாக அமைவதற்கு காரணமாக அமைந்தது எனலாம். ஆனால் மாறாக 1970 – 1977 காலப்பகுதியில் கைத்தொழில் துறையின் வளர்ச்சியானது கூட்டப்படும் பெறுமதியின் 3.0 வீதமாகக் காணப்பட்டது.

சர்வதேச வர்த்தகக் கொள்கையை மதிப்பீடு செய்கின்ற ஒரு சுட்டெண்ணாகவே "வர்த்தகக் கோடல் சுட்டெண்" (Trade Biased Index) பயன்படுத்தப்படுகின்றது. இச்சுட்டெண்ணானது தயாரிப்புத்துறையின் ஏற்றுமதிக்கான செயற்திறனுள்ள அந்நியச் செலாவணி விகிதத்தினை இறக்குமதிகளுக்கான செயற்திறனுள்ள அந்நியச் செலாவணி விகிதத்தால் பிரித்துப் பெறப்படுவதாகும். (EERX/EERM). நடு நிலையான சர்வதேச வர்த்தகக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்ற போது இச்சுட்டெண்ணின் பெறுமானம் ஒன்றுக்கு சமமாகக் காணப்படும் (9). கீழேயுள்ள அட்டவணையானது 1965 – 1987 காலப்பகுதிக்கான சுட்டெண்ணைக் காட்டுகின்றது.

**அட்டவணை 2.**

**இலங்கையின் வர்த்தகக் கோடல் சுட்டெண் (1965 – 87)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1965 | 1966 | 1967 | 1968 | 1969 | 1970 | 1971 | 1972 |
| 0.80 | 0.84 | 0.85 | 0.98 | 1.19 | 1.24 | 1.28 | 1.36 |
| 1973 | 1974 | 1975 | 1976 | 1977 | 1978 | 1979 | 1980 |
| 1.44 | 1.51 | 1.69 | 1.50 | 1.50 | 1.59 | 1.11 | 1.20 |
| 1981 | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | |
| 1.22 | 1.19 | 1.16 | 1.20 | 1.14 | 1.29 | 1.28 | |

**ஆதாரம்;** 1965 – 74 வரைக்குமுள்ள சுட்டெண் World Development. October 1988 Vol. 16. No10, P.1145. 1978 - 1987 வரைக்குமான சுட்டெண் Marga, Vol 11. No.4, P. 51

வர்த்தகக் கோடல் சுட்டெண்ணானது ஒன்றுக்குக் குறைந்த பெறுமதியுடையதாக காணப்படின் தயாரிப்புத் தொழிலானது ஏற்றுமதிக்கு எதிராக கோடலான வர்த்தகக் கொள்கை எனவும் ஒன்றுக்குக் கூடவாக காணப்படின் ஏற்றுமதிக்குச் சார்பான கோடல் தன்மை உள்ள கொள்கை எனவும் கொள்ளப்படும். மேலேயுள்ள அட்டவணையில் 1969 – 1987 வரையுமுள்ள காலப்பகுதியில் அமைந்த வர்த்தக நடவடிக்கைகள் ஏற்றுமதிக்குச் சார்பான கோடல் தன்மையுள்ளதாகக் காணப்படுவதை உணர்த்துகின்றது.

பொதுவாகக் கூறின் கட்டுப்பாடுகள் நிறைந்த 1960 – 1977 காலப்பகுதியில் இலங்கையின் ஏற்றுமதித்துறையில் செயலாற்றம் குறைந்து வந்துள்ளமையை உணர முடிகின்றது. அதாவது இலங்கையின் உலக ஏற்றுமதியின் பங்கு 1960ல் 0.36 வீதத்திலிருந்து 1977ல் 0.07 வீதமாகக் குறைவடைந்துள்ளது(10). அத்தோடு இவ்விரு தசாப்தங்களிலும் கடைப்பிடித்த கட்டுப்பாடுகள் இலங்கைப் பொருளாதாரத்தில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. சுருக்கமாகக் கூறின் அளவுக்கதிகமான தொழிற் பாதுகாப்புக்களும் அரச தலையீடும் சந்தையும் பொருட் சந்தையும் ஒரு திரிபு நிலையிலேயே வைத்திருந்தது. காரணி ஒதுக்கீடு செயற்திறன் அற்றதாகவே காணப்பட்டது. 1970 – 1977 காலப்பகுதியில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது (1970 காரணி விலைகளில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

3.22 வீதமாகவும், கைத்தொழில் துறையின் வளர்ச்சி 3.9 வீதமாகவும் காணப்பட்டது. தயாரிப்புத் தொழில்களின் இயலளவுப் பயன்பாடு வீதம் (1970-1977) 53 வீதமாகவும் இருந்தது. இவற்றினை விட நாட்டின் பணவீக்கமானது 1977ல் 15-20 சதவீதமாகவும் மொத்தத் தொழில் படையில் 24 வீதமானோர் வேலையற்றும் காணப்பட்டனர். மேலும் 1960 களில் உள்ள நிலைமைகளோடு ஒப்பிடுகின்ற போது சமூக நலக் குறிகாட்டிகளின் முன்னேற்றம் ஒரு சுமாரான அளவிலேயே அமைந்தது. முழு வறுமை நிலை 1960 களின் பின்பு அதிகரித்தே வந்துள்ளது(11).

IV

## திறந்த பொருளாதார கொள்கை (1977 - 90)

1977ல் பதவிக்கு வந்த அரசாங்கம் இலங்கைப் பொருளாதாரத்தில் இருந்த நெருக்கடி நிலைமைகளுக்குத் தீர்வு காணும் முகமாக திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகம் செய்கிறது. இக்கொள்கை வெளிநோக்கியதும், உலக பொருளாதாரத்துடன் இலங்கைப் பொருளாதாரத்தை இணைக்கின்ற நடவடிக்கையாகவுமே காணப்படுகின்றது. 1977இல் மேற்கொள்ளப்பட்ட வர்த்தக தாராள மயமாக்கல் என்பது இலங்கையின் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட ஒரு தசாப்த காலத்தில் நடைமுறையிலிருந்த பொருளாதார செயற்பாடுகளுக்கு ஏற்றதாக அமுல்படுத்தப்பட்டது எனக் கூறலாம். அதாவது அரசாங்கத்தின் உற்பத்தி முயற்சிகளைக் குறைப்பதன் மூலமாக தனியார் உற்பத்தி முயற்சிகளை ஊக்குவித்து சந்தைச் சக்திகளின் வழியாக காரணி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளல் என்ற பொருளாதாரத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இவ்வாறான ஒரு புதிய பொருளாதார அபிவிருத்தி அணுகுமுறையானது அரசாட்சியில் ஏற்பட்ட மாற்றத்தினூடாக நடைமுறைப்படுத்தப்படுவதை நாம் இங்கு கவனத்தில் கொள்ளுதல் முக்கியமானதாகும். திறந்த பொருளாதார அபிவிருத்தி அணுகுமுறை திறமையாக இயங்கக்கூடிய வகையிலே பல சீர்திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. இவற்றுள் வர்த்தகத்துடன் தொடர்புடைய வகையில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நீக்கம், இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் சீராக்கம், இரட்டை நிலையான நாணயமாற்று வீத நீக்கம் மிதக்க விடப்பட்ட நாணயமாற்று வீத அறிமுகம், விலைக்கட்டுப்பாட்டு நீக்கம், வெளிநாட்டு வங்கிகளின் திறப்பு அதிகரிப்பு என்பவற்றைக் கூறிக்கொள்ளலாம்.

தாராளமயமாக்கல் கொள்கையானது படிப்படியாக அமுல் செய்யப்படுவதால் பூர்த்தி செய்யப்படாத நிகழ்ச்சி நிரலாகவே இன்றும் காணப்படுகின்றது. உதாரணமாக உற்பத்தி நடவடிக்கைகளுக்கான பயன்படு பாதுகாப்பு விகிதம் என்பது தொடர்ந்தும் சில தொழில்களுக்கு அதிகரித்து வருகிறது. இவ்விகிதத்தினைக் குறைப்பதன் மூலமும், தொழில்களுக்கிடையிலான வேறுபாடுகளை நீக்குவதன் மூலமும் ஒரு நடுநிலையான வர்த்தகக் கொள்கையை மேற்கொள்ள முடியும்.

இலங்கையின் தாராளமயமாக்கல் என்பது கட்டம் கட்டமாகவே செய்யப்படுவதாகக் கூறப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் நடைமுறையில் அதற்கான சீராக்கற் செலவுகள் அதிகமாகவே காணப்படுகின்றன. வர்த்தக தாராளமயமாக்கல் கொள்கை பொருளாதார வளர்ச்சி, வருமானப் பங்கீடு என்பனவற்றில் ஏற்படுத்துகின்ற சாதகமான விளைவு அதிகமாக இருப்பின் சரிப்படுத்தல் செலவு என்பது மிகச் சிறியனவாகவே காணப்படும்(12). உலக வங்கியின் கணிப்பீட்டின்படி இலங்கையின் வர்த்தக தாராளமயமாக்கல் கொள்கையின் வழியாக ஏற்படுகின்ற சரிப்படுத்தல் செலவு மிகக்குறைவாகவே காணப்படுகின்றது(13). நிரம்பல் தூண்டற்பேறு (Supply Response) அதிகமானதாகக் காணப்பட்டால் சரிப்படுத்தல் செலவினை ஈடுசெய்ய முடியும். இலங்கையில் நிரம்பல் தூண்டற்பேறு நடைபெறுவதற்கு ஏதுவான வகையில் தொழில் நுட்ப அறிவுள்ள, முகாமைத்துவ இயல்புள்ள, தொழிலாளர்கள், முயற்சியாளர்கள் குறைவாகக் காணப்படுவதாலும், சந்தைத் தோல்வியை நெறிப்படுத்தக்கூடிய நிறுவன அமைப்புக்கள் காணப்படாமையாலும் நிரம்பல் தூண்டற்பேறு குறைவாகவே இருக்கின்றன.

தாராளமயமாக்கல் கொள்கை மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் (1977 - 90) வருடாந்தம் சராசரியாக மொத்த மெய்ரீதியான உள்நாட்டு உற்பத்தி 4.8 வீதமாகக் காணப்பட்டது. இவ்வளர்ச்சியானது முன்னைய 1970 - 1977 காலப் பகுதியோடு ஒப்பிடுகின்றபோது திருப்தியானதாக உள்ளது. ஆனால் இவ்வளர்ச்சியானது புதிய கைத்தொழில் நாடுகளின் தாராளமயமாக்கல் கொள்கை கடைப்பிடித்த காலப்பகுதியில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி என்பதனைவிடக் குறைவாகவே உள்ளது, (6% - 9%). தாராளமயமாக்கலினால் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி என்பது கைத்தொழில் துறையிலிருந்தும் சேவைத்துறையிலிருந்தும் எழுந்ததாகவே காணப்படுகின்றது. 1978 - 1990 காலப்பகுதியில் ஏற்பட்ட துறைசார்ந்த வளர்ச்சியானது பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 3**

| துறைகள் | 1978 – 1990 சராசரி வளர்ச்சி வீதம் |
|---|---|
| விவசாயம் காட்டுத்தொழில் | 3.6% |
| மீன்பிடி விவசாயம் | 3.8% |
| பெருந்தோட்ட விவசாயம் | 1.3% |
| பெருந்தோட்டமல்லா விவசாயம் | 5.2% |
| தயாரிப்புத் தொழில் | 5.3% |
| சேவைத்துறைகள் | 5.4% |
| பண்ட உற்பத்திகள் | 4.3% |

ஆதாரம் ; மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் (வெவ்வேறுபட்ட ஆண்டுகள்)

பெருந்தோட்டத் துறையின் வளர்ச்சி மந்தமாகக் காணப்பட்ட போதும் பெருந்தோட்டமல்லா விவசாயத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி பெருந்தோட்டத் துறையின் வீழ்ச்சியை ஈடுசெய்வதாக அமைகின்றது. இலங்கைப் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்திய பிரதான காரணிகளாகக் காணப்படுவது உள்நாட்டு மூலதன ஆக்கமும் தொழிலாளரின் எல்லை உற்பத்தி அதிகரிப்புமாகும்.

1977 - 1990 காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கமானது 25.5 வீதமாகக் காணப்பட்டது. இது 1970 - 1977 காலப்பகுதியிலிருந்த 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதவீதத்தை விட அதிகமானதாகும். உள்நாட்டு மூலதன அதிகரிப்புக்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் ஏற்பட்ட நேரடி முதலீடுகளே பிரதான காரணமாகும். தாராள மயப்படுத்திய வர்த்தகக் கொள்கை என்பது அமுல் செய்யப்பட்டபோதே அரசாங்கம் உள்நாட்டு கிராமிய துறைகளை விருத்தி செய்வதற்காக துரித மகாவலி அபிவிருத்தி திட்டம், வீடமைப்புத் திட்டம், நகரமயமாக்கல் திட்டம் போன்றவற்றையும் அமுல்படுத்தியதால் தாராளமயமாக்கலின் வெற்றியைப் பூரணமாக அனுபவிக்க முடியவில்லை. மாறாக வர்த்தகத்திலீடுபடாத துறைகளான கட்டிட நிர்மாணத்துறை சேவைத்துறை போன்ற துறைகளே வளர்ச்சி பெற்றன.

தாராளமயமாக்கலின் விளைவாக 1977– 1990 காலப்பகுதியில் நாட்டின் விலை அதிகரிப்புச் சராசரியாக 14 வீதமாகப் பதிவு செய்யப்பட்டது. இவ்விலை வீக்கம் உயர்வாகக் காணப்படுவதற்கு பல்வேறு காரணிகள் துணைபுரிந்துள்ளன. இலங்கைப் பொருளாதாரம் உலகப் பொருளாதாரத்தோடு இணைக்கப்பட்டமையால் உலக சந்தையிலுள்ள வீக்க நிலமைகள் இலங்கையிலும் தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கலாம். இதனைவிட அதிகரித்து வருகின்ற குறை நிலை வரவு – செலவுத் திட்டத்தினை நிதிப்படுத்தல் மூலமாகவும் இலங்கையின் வீக்கம் காணப்படுகின்றது. விலைக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமையும் வீக்கம் உயர்வானதாகக் காணப்படுவதற்கு ஒரு காரணமாகக் கூறமுடியும். இலங்கையில் காணப்படுகின்ற வீக்க அளவானது சாதாரணமாக ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவிற்கு மேலாகக் காணப்படுகின்றது எனக் கூறப்படுகின்ற போதும் பாரிய முதலீட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றபோது விலை வீக்கம் ஏற்படுவது தவிர்க்க முடியாததொன்றாகும். எனினும் ஏற்ற பேரினப் பொருளியல் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் ஓர் உறுதியான விலைமட்டத்தினை வைத்திருக்க முடியும்.

இக்காலப் பகுதியில் வேலையின்மை பற்றிய தரவுகள் போதுமானதாக இல்லாத போதும், 1981 – 1982 நுகர்வோர் நிதி ஆய்வு மதிப்பீடுகளின் படி 11.9 வீதமானோர் வேலையற்றுக் காணப்படுகின்றனர். அதிகரித்து வருகின்ற தொழிலாளர் படைக்கு வேலை வாய்ப்பினை வழங்கக்கூடிய முதலீட்டுத் திட்டங்களின்மையாலும், கைத்தொழில் துறையானது எதிர்பார்த்த அளவு உழைப்பாளர் படையை உள்ளிழுத்துக் கொள்ளாமையாலும் வேலையில்லாப் பிரச்சினையைக் குறைக்க முடியாதுள்ளது. இக்காலப் பகுதியில் ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில்களினால் உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்பினைவிட இறக்குமதிக் கொள்கையினூடாக பாதிக்கப்பட்ட சிறியஅளவிலான கைத்தொழில்களினதும் குடிசைக் கைத்தொழில்களினதும் சீர்குலைவினால் வேலையிழந்தவர்களையும் கவனத்தில் கொள்ளுகின்ற போது இலங்கையின் கைத்தொழில் வழியாக ஏற்பட்ட வேலைவாய்ப்புக் குறைவாகவேயுள்ளது.

பொருளாதார அபிவிருத்திக் குறிக்கோள்களில் முக்கிய அம்சங்களாகக் கருதப்படும் வருமானப் பங்கீடு, வறுமை என்பவற்றிலும் படிப்படியான ஒரு வீழ்ச்சி நிலையை அவதானிக்க முடிகின்றது. தாராளமயமாக்கல் கொள்கையில் ஒரு அம்சமாக உணவு மானியம் குறைக்கப்பட்டமை வறியோரில் உள்ள ஒரு பகுதியினரின் கலோரி நுகர்வினைக் குறைத்துள்ளது. 1970 களின் நடுப்பகுதியில் மொத்த தேசிய வருமானத்தில் 5 வீதமாகக் காணப்பட்ட உணவு மானியச் செலவு 1984ல் 1 வீதமாகக் காணப்பட்டது. இக்குறைப்பினால் வறிய நிலையிலுள்ளவர்கள் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். 1980 – 1988 காலப் பகுதியில் அதி உயர் மட்ட வருமான வகுப்பிலுள்ள இருபது வீதமானவர்களினது வருமானமானது மிகக் கீழ் மட்டத்திலுள்ள இருபது வீதமானவர்களின் வருமானத்தை விட 11.7 சதவீதம் அதிகமாகக் காணப்பட்டது(14). இதனை நிரூபிக்கும் விதமாக கினிக் குணகத்தின் பெறுமானமும் 1986 இல் 0.58 ஆக உயர்ந்துள்ளது. இக்குணகமானது 1953, 1963, 1973, 1978/1979 இனும் முறையே 0.50, 0.49, 0.41, 0.49 ஆகக் காணப்பட்டது. வருமானப் பங்கீட்டுக்கான தரவுகளைத் தொகுத்துப் பார்க்கின்ற போது தாராளமயமாக்கல் கொள்கை நடைமுறைப்படுத்திய காலத்தில் அரசாங்கம் துரித மகாவலி அபிவிருத்தி திட்டம், சேவைகள் கைத்தொழிலுக்கான உட்கட்டுமானம் என்பவற்றின் மீது பெருமளவான பணத்தினைச் செலவு செய்துள்ள போதும் அதன் மூலம் பயன் அடைந்தவர்கள் உயர் மட்ட வகுப்பிலுள்ளவர்களே என்ற முடிவினைக் கூற முடிகின்றது. புள்ளி விபரக் கணிப்பீடுகளின் படி இலங்கையில் ஏறக்குறைய 25 வீதமான மக்கள் தமது போதுமான கலோரியை உட்கொள்ளுவதற்கான வருமான மட்டத்தின் கீழேயே வாழ்ந்து வருகின்றனர்(15).

V

## முடிவுரை

தென்கொரியா, தாய்வான் ஆகிய நாடுகளின் அனுபவங்களை இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி அணுகுமுறைக்குப் பிரயோகிக்க கருதப்படுகின்றது. ஒரு நாடு விவசாயத் துறையின் முதன்மை நிலையிலிருந்து கைத்தொழில் நாடாக மாறுவதற்கு பொருளாதார ரீதியான, பொருளாதார ரீதியற்ற முன் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். ஆனால் இந்நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தல் இலகுவானதல்ல. இதனை அடைவதற்கான காலப் பகுதியும் நீண்டதாகும். இலங்கை அரசியல் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலப் பகுதியில் ஏறக்குறைய ஒரு தசாப்த காலத்திற்கு காலனித்துவ பொருளாதார அமைப்பு முறையையே தொடர்ந்தும் பின்பற்றியமையும், அக்காலப் பகுதி தனியே வெளிநாட்டு வர்த்தகத்தை நம்பியிருந்தமையும், கைத்தொழில் அபிவிருத்தி முயற்சிகளைக் காலம் தாழ்த்தித் தொடங்கியமையும் அபிவிருத்தி அணுகு முறையின் குறைபாட்டையே வெளிப்படுத்துகின்றது.

இறுக்கமான பொருளாதார அமைப்பினை மேற்கொண்ட காலத்தில் பொருளாதாரம் தன்னிறைவு என்ற நிலைமையை அடைவதற்கு மாறாக பொருளாதாரப் பிரச்சினைகள் மேலும் தீவிரமடைந்து ஒரு நெருக்கடியான பொருளாதார நிலையை எதிர்நோக்கியது. நாடு நுகர்வுப் பொருட்களுக்காக இறக்குமதியில் தங்கியிருந்த நிலைமாறி இடைத்தர முதலீட்டுப் பொருட்களுக்காகவும், மூலப் பொருட்களுக்காகவும் தங்கியிருக்க வேண்டிய நிலை உருவாக்கப்பட்டது.

காரணி ஒதுக்கீடு, காரணிப் பயன்பாடு என்பன செயற்றிறன் வாய்ந்ததாகக் காணப்படவில்லை. அந்நியச் செலாவணி கிடைப்பு நிலை பொருளாதார வளர்ச்சியுடன் நேரடியாகத் தொடர்புபடுவதைக் காண முடிகின்றது. ஏற்றுமதி பல்லினப்படுத்தலின் ஒரு அம்சமாக பாரம்பரியமற்ற ஏற்றுமதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்குவிக்கப்பட்ட போதும் இது பெரியளவாக வெற்றியளிக்கவில்லை. இக்காலப் பகுதியை கைத்தொழில் துறைக்கான அடித்தளம் அமைக்கப்பட்ட காலப் பகுதியாகவே அடையாளம் காண முடிகின்றது.

தாராளமயமாக்கல் நடவடிக்கைகளினால் பொருளாதார அபிவிருத்தியில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதெனினும் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. உற்பத்தியில் கைத்தொழில் துறையின் பங்கு அதிகரித்துள்ள போதும் கைத்தொழில் துறையின் கூட்டப்பட்ட பெறுமதி அதிகரிப்பானது பெரியளவாக ஏற்படவில்லை. அத்துடன் கைத்தொழிலின் வழியாக ஏற்றுமதியைப் பல்லினப் படுத்தல், வேலை வாய்ப்பினை வழங்குதல் என்பவற்றைப் பொறுத்தும் ஆற்றல் வாய்ந்ததாக இல்லை. மேலும் இத்துறையானது நுகர்வுப் பொருட்களைக் குறிப்பாக உணவு, குடிபானம், உடைகள், அணியும் ஆடைகள் என்பனவற்றிலே கவனத்தைச் செலுத்தியது. இடைத்தர, முதலீட்டுப் பொருட்களின் உற்பத்தியில் பெருமளவான கவனம் செலுத்தப்படவில்லை.

நேரடி வெளிநாட்டு முதலீடுகள் தென் கிழக்காசிய புதிய கைத்தொழில் நாடுகளின் துரித பொருளாதார அபிவிருத்திக்கு பிரதான காரணியாக அமைந்தது. ஆனால் இலங்கையில் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலங்களில் முதல் வெளியேற்றம் என்பது பெருந்தோட்டங்களில் இருந்து அதிகளவாகக் காணப்பட்டது. 1960 களிலும், 1970 களின் நடுப்பகுதி வரையுமான காலங்களில் பெரியளவான நேரடி முதலீடுகள் ஏற்படவில்லை. அக்கால கட்டங்களில் தேசிய மயமாக்கல் கொள்கைகளின் தாக்கங்கள், அரசாங்கக் கொள்கைகளின் ஸ்திரமற்ற நிலைமைகள் நேரடி வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கவில்லை. தற்போதைய அரசாங்கத்தின் தாராளமயமாக்கல் கொள்கையின் ஒரு அம்சமாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஊக்குவிக்கப்பட்டமையால் 1979 – 1990 காலங்களில் வருடமொன்றிற்குச் சராசரியாக 1000 மில்லியன் ரூபா வெளிநாட்டு நேரடி முதலீடு இலங்கையில் ஏற்படுத்தப்பட்டது.

கைத்தொழில் முயற்சியாளர்கள் வர்க்கம் ஒன்று உருவாக்கப்படாமை இலங்கையின் கைத்தொழில் துறைக்கான பிரதான குறைபாடுகளில் ஒன்றாகக் குறிப்பிட முடிகின்றது. அதாவது அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட நிலச் சீர்திருத்தங்களினால் விவசாயத் துறையிலிருந்த சுதேச முதலீட்டாளர்கள் கைத்தொழில் துறையில் முதலீடுகளை மேற்கொள்ளக் கூடியதாக மாற்றியமைக்கப்படவில்லை. மாறாக தென் கொரியாவில் நிலச் சீர்திருத்தங்களின் வழியாக விவசாய முதலீட்டாளர்கள் கைத்தொழில் முதலீட்டாளர்களாக மாற்றப்பட்டனர்.

இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தாராளமயமாக்கல் கொள்கையில் ஒரு இசைவற்ற தன்மையை அவதானிக்க முடிகின்றது. உதாரணமாக வர்த்தக நடவடிக்கைகள் தாராள மயமாக்கப்பட்டு மானியங்கள் குறைக்கப்பட்டு உற்பத்தி முயற்சிகள் ஊக்குவிக்கப்படுகின்ற அதே நேரம் துரித மகாவலி திட்டம், வீடமைப்புத் திட்டம், வறுமை ஒழிப்புத் திட்டம் என்ற பாரிய முதலீட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டமையால் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடாத கட்டிட நிர்மாணத்துறை, சேவைத்துறை என்பனவற்றின் வளர்ச்சி அதிகமாகக் காணப்படுகின்றது. இது பொருளாதாரக் காரணி ஒதுக்கீட்டின் சமமற்ற தன்மையையும், வர்த்தகத்தில் ஈடுபடுகின்ற துறைகளின் குறைவான வளர்ச்சியையும் பிரதிபலிக்கின்றது. பேணிப்பாதுகாக்கக் கூடிய பொருளாதார வளர்ச்சியானது வர்த்தகத்தில் ஈடுபடக் கூடிய துறைகளிலே ஏற்பட வேண்டும். இதனைப் பின் தொடர்ந்து வர்த்தகத்தில் ஈடுபடாத துறைகளின் வளர்ச்சி அமைவது சிறந்ததாகும். பொது முதலீடுகள் வெளிநாட்டு உதவிகள் மூலமாகப் பெறப்பட்டதால் பெருமளவான வெளிநாட்டு பண உதவிகள் இலங்கைக்கு கிடைத்தமையும் இலங்கையின் மெய் நாணய மாற்று வீதப் பெறுமதி அதிகரிப்புக்கு காரணமாகும். வேலையின்மை அதிகரித்தமை, தொடர்ச்சியான சென்மதி நிலுவையின் குறைநிலை, போதுமான அரச வருமானம் திரட்ட முடியாமை, நாட்டில் தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்ற பணவீக்க நிலைமைகள் என்பன தாராளமயமாக்கலினால் ஏற்படவிருந்த நன்மைகளைக் குறைத்ததோடு தாராளமயமாக்கல் நடவடிக்கைகளைத் தாமதப் படுத்தவும் தூண்டுகோலாக அமைந்தது.

இலங்கை சுதந்திரத்திற்குப் பின்புள்ள ஒரு தசாப்த காலப் பகுதியில் சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளூடாக குறிப்பாக முதல் விளைவுப் பொருட்கள் ஏற்றுமதியால் நன்மையடைந்துள்ள போதும் 1960க்குப் பின்பு இறுக்கமான வர்த்தகக் கட்டுப்பாடுகள் கடைப்பிடிக்கப்பட்டதினால் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி பெருமளவாக தடைப்பட்டிருந்ததையும் அவதானிக்க முடிகின்றது. 1977க்குப் பின்பு திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிப்பதன் மூலம் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முயன்ற போதும் பெருமளவான அபிவிருத்தியைச் சர்வதேச வர்த்தகத்தின் மூலம் ஏற்படுத்த முடியவில்லை. சமீப காலங்களில் அபிவிருத்தியடைந்த நாடுகளில் மேற்கொள்ளப்படுகின்ற இறுப்புக்களல்லா தடைகள் மூலமாக இலங்கை போன்ற அபிவிருத்தியடைகின்ற நாடுகளின் ஏற்றுமதிப் பொருட்களைச் சுமுகமாக அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் தடைகள் காணப்படுவதால் பூரணமாக கட்டுப்பாடற்ற வர்த்தகத்தை காண முடிவதில்லை. நாடுகள் சில சேர்ந்து தங்களை ஒரு சமூக நாடுகளாக அமைத்து தமக்குள்ளே கட்டுப்பாடற்ற வர்த்தக நடவடிக்கைகளை ஏற்படுத்துவதை அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தியடைகின்ற நாடுகளில் நாம் காணக் கூடியதாகவுள்ளது.

## NOTES


1. Helleiner. G.K, (1990): Trade Strategy in Medium term adjustment, World Bank, World Development ,Vol 18, No 6 p.880.
2. World Bank, World Development Report (1987).
3. Statistical Department, Central Bank of Sri Lanka, Growth and Progress in Sri Lanka. 1991, p.57.
4. Godfrey Gunatilleka et. al, (1992): Rural Poverty in Sri Lanka. Priority issues and Policy measures Asian Development Bank, Asian Development Review p. 1165.
5. Department of census and Statistics census of ceylon 1953- International Labour Office Survey of Employment and underemployment in Ceylon. Geneva, 1962.
6. Wimal Wickramasinghe,(1985): The Theory of Multiples




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Exchange Rates and Exchange Rate Management in Sri Lanka, Chapter 5. Central Bank of Ceylon p.222

7. Satchi Ponnambalam, Dependent Capitalism in crisis. The Sri Lankan Economy 1948/1980. Fed Press, London, Chapter 4, p.62.
8. Sarath Rajapatirana, (1988): Foreign Trade and Economic Development : Sri Lanka's Experience, world Development Vol 16, No. 10. p.1147.
9. Bhagwati, J.N (1988): Export-promoting Trade Strategy: Issues and Evidence, The World Bank Research Observer, Vol 3, No.1
10. Sarath Rajapatiran, op.cit. p. 1147
11. Godfrey Gunatillekaet. al, op. cit.
12. Saman Kelegama (1989): The Spead and Stages of a Trade liberalization Strategy: The case of Sri Lanka ,Marga Quarterly Journal Vol.10, No.1,
13. Ibid.
14. United Nation Development Programme Human Development Report (1992) (New York Oxford University Press) p.160
15. Ibid.

## இலங்கையில் நிலைநிற்கும்............

மிகவும் முக்கியமானது. அதிகாரப்பரவலாக்கலின் முதலாவது பாதிப்பு, பொறுப்புகள் மேலும் மேலும் அதாவது தேசிய, மாகாண, பிரிவுகள் மட்டங்களில் தூண்டுவதாகும். எனவே சில வகையைப் பொறுத்தவரையில், தேசியக் கொள்கை என்னும் கட்டுக் கோப்பினுள் மாகாணத் திட்டங்களைப் பொருத்தமாக ஒருங்கிணைப்பது நிலைநிற்கும் அபிவிருத்திக்குத் தேவையான ஒரு மூலகமாக அமையும். இச்செயன்முறை தேசிய – மாகாண மட்டங்களுக்கிடையே தொடர்ச்சியான இடைத்தாக்கங்களைக் கொண்டமையும். இங்கு இவைதவிர்ந்த மாகாணங்களுக் கிடையிலான இடைத் தாக்கமும் ஏற்படக்கூடும். இச்சூழ்நிலையில் வளஅலகு தொடர்பான முகாமைத்துவம் குறிப்பிடக் கூடிய பங்களிப்பை வழங்கும்.

மறுதலையாக அதிகாரப்பரவலாக்கலில் உள்ள பொறுப்புக்களின் பங்கீடு மிகவும் நன்மைதரக்கூடிய விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடும். இவைகள் உச்சப்படுத்துப்படல் வேண்டும். பரவலாக்கலில் கணிசமான அதிகாரங்கள் மாகாண, பெரும்பாக மட்டங்களுக்கு வழங்கப்படுகின்றன. இது ஜனநாயக செயன்முறைகளை ஊக்குவிக்கின்றது. இது அரசியல் நிர்வாகி மற்றும் அரச அமைப்புக்களை உள்ளூர் குழுக்களுக்கு வகை சொல்லும் நிலைக்கு ஆளாக்குகின்றன. இந்நிலைமைகள் இக்குழுக்களுக்கு அபிவிருத்திக்கான பொறுபேற்க, குறிப்பாக இவற்றின் பொறுப்பிலுள்ள வளங்கள் வாழ்விடங்களைப் பொறுப்பேற்கக் கூடிய சந்தர்ப்பங்களை வழங்குகின்றது. இதைச் செய்யக் கூடிய நிறுவனங்களை விருத்தி செய்வது அவசியமானது. இவ்விடயம் பற்றித் தொடர்ந்து ஆராயவேண்டும்.

தொடரும்........

**தமிழாக்கம் – ரி. தனராஜ், ஆசிரியர்,**
**பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி.**

## மக்களால், மக்களின், மக்களுக்கான அபிவிருத்தி
## (Development of, by and for the people)

ஐக்கிய நாடுகளுக்கான அபிவிருத்தித்திட்ட பிரிவினால் விளக்கிக் கூறப்பட்ட மானிட விருத்தி பற்றிய எண்ணக் கரு (Concept of Human Development) வானது அபிவிருத்தியை மேலும் ஜனநாயக ரீதியாகவும் சகல மக்களும் பங்கு கொள்ளத்தக்க வகையில் அவர்களின் தெரிவுகள் பற்றிய வீச்சை அகலிப்பதற்கான அழைப்பை விடுத்துள்ளது. வருமானம் தரும் வழிகளை உருவாக்கல், கல்வி, சுகாதார சேவைகள் மூலம் நன்மைகளைப் பெறல், சமூகம் பற்றிய தீர்மானங்களில் பங்கு பெறல், சுதந்திரத்தை அனுபவித்தல் ஆகியவற்றுக்கான சந்தர்ப்பங்களை மக்களுக்கு வழங்குமாறு வலியுறுத்துகின்றது. ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித்திட்ட அறிக்கையில் (UNDP Report,1991) பின்வருமாறு கூறப்படுகின்றது. **மக்கள் தமது உள்ளார்ந்த தகுதிக்கேற்ப சுகாதாரம், கல்விமற்றும் பயிற்சிகள் தொடர்பான அபிவிருத்தியில் முதலிடுவதற்கான சந்தர்ப்பங்களைக் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் அவற்றைப் பயன்படுத்துவதற்கான அவர்களின் உள்ளார்ந்த தகுதியைக் காட்டுவதற்கான சந்தர்ப்பங்களையும் அவர்கள் கொண்டிருக்க வேண்டும்.**

இன்று மனித இனத்தின் பெரும்பாலானவர்களுக்கு இத்தகைய சந்தர்ப்பங்கள் மறுக்கப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகளுக்கான அபிவிருத்தித் திட்டப் பிரிவின் அறிக்கையின்படி ஏறக்குறைய 1000 மில்லியன் மக்கள் முழுமையான வறுமையில் வாழ்வதாகக் குறிப்பிடப்படுகின்றது. ஒவ்வொரு மூன்று குழந்தைகளுக்கு ஒரு குழந்தை மிகக்கடுமையான போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளது. 1500 மில்லியன் மக்கள் ஆரம்ப சுகாதார சேவைகளின்றிக் காணப்படுகின்றனர். 1000 மில்லியன் வயது வந்தோர் எழுத்தறிவற்றவர்களாக உள்ளனர். ஏறக்குறைய 100 மில்லியனுக்கு மேலான சிறுவர்கள் ஆரம்ப பாடசாலைக் கல்வியைப் பெறாதவர்களாக உள்ளனர். இருந்தாலும் கடந்த 30 வருடங்களாக வளர்முக நாடுகள் இவை தொடர்பான சில முன்னேற்றங்களை அடைந்துள்ளன. கல்வியறிவு உலக ரீதியாக 40 வீதமாக அதிகரித்துள்ளது. வாழ்வு எதிர்பார்ப்புக்காலம் 16 வருடங்களாக அதிகரித்துள்ளது.

மானிட விருத்தியை மேலும் அடைவதற்குப் பொருளாதார வளர்ச்சி மிக அவசியமாகும். உலக வங்கி தனது 1990 ஆம் ஆண்டுக்கான "உலக அபிவிருத்தி அறிக்கை"யில் வறுமையைத் தணிப்பதற்குச் சில நாடுகள் அடைந்துள்ள விரைவான, அரசியல் ரீதியான நீடித்த முன்னேற்றத்துக்கு. அந்நாடுகளினால் பின்பற்றப்பட்ட இரு திறமுறைகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

(1) உற்பத்திப் பயன்பாடு கொண்ட வறுமையான மக்களின் பாரிய சொத்தான உழைப்பு (Labour) தரமுயர்ந்தமை. இது சந்தைக்கான தூண்டுதல்கள், சமூக, அரசியல் நிறுவனங்கள், கட்டுமான அமைப்பு மற்றும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கான கொள்கையின் அவசியத்தை வேண்டி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

(2) வறிய நிலையிலுள்ள மக்களுக்கு அடிப்படை சமுக சேவை வசதிகளை வழங்கல். ஆனால் பொருளியலாளர்களின் கொள்கைரீதியான பரிந்துரைகள் இந்த இரண்டாவது அபிவிருத்தி அம்சத்தைக் கவனிக்கத் தவறிவிட்டன.

பாரிய அளவிலான பொதுத்துறை நிறுவனங்கள், அதிகார ஆட்சியினின்றும் மீள் ஆற்றுப்படுத்தப்பட்ட அரசு, கட்டுமான உருவாக்கம், நிறுவன ரீதியான சூழ்நிலைகள், தரமுயர்வு கொண்ட தொழிற்துறைகள் என்பன சந்தைப் பொருளாதாரம் செயற்படுவதற்கு மிக அவசியமாகும். அத்துடன் உண்மையாகத் தேவைப்படுவோருக்கான சமூக ஒதுக்கீடானது பயன்படு இலக்காக இருப்பதும் அவசியமானது. அத்தியாவசிய சமூக சேவைகளை அளிப்பதற்கான பிரதான பொறுப்புக்களைக் கொண்டிருக்கும் பொதுத்துறையானது ஒப்புரவை வளர்ப்பதாகவும் இருக்க வேண்டும்.

## மனித விருத்திச் சுட்டெண்

மானிட விருத்தியை அல்லது மனிதவளவிருத்தியினை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்ட பொதுச் செலவீட்டை ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட அணுகுமுறையானது 4 குறிகாட்டி விகிதங்களைக் கொண்டிருக்கிறது.

(1) தேசிய வருமானத்தில் பொதுச் செலவீட்டின் விகிதம்

(2) மொத்தப் பொதுச் செலவீட்டில் சமுக சேவைச் செலவீட்டின் விகிதம்

(3) எல்லா வகையான மொத்தச் சமுகச் செலவீட்டில் முன்னுரிமை கொடுக்கப் படுவனவற்றுக்கான செலவீட்டின் விகிதம்.

(4) முதல் மூன்றும் (1,2,3) சேர்ந்த மனித செலவீட்டு விகிதம் (Human expenditure ratio)

கருத்தியல் ரீதியாக மனித செலவீட்டு விகிதம் 5 க்கு மேல் இருக்க வேண்டும். அத்துடன் பொதுச் செலவீட்டு விகிதம் குறைந்ததாகவும், சமூக சேவை செலவீட்டு விகிதமும், அதிக முன்னுரிமை செலவீட்டு விகிதமும் உயர்வாக இருக்கவேண்டும். ஆனால் அநேக நாடுகள் குறைந்தளவான மானிட அபிவிருத்தி விகிதங்களையே கொண்டிருக்கின்றன. உதாரணமாகப் பிறேசில் தேசிய வருமானத்தில் 35 வீதத்துக்கு மேல் பொதுத் துறையில் செலவிடும் அதே வேளை முன்னுரிமை பெறும் (ஆரம்ப சுகாதார நலன், பாடசாலை, கிராம - நகர சேவைகள்) சமூக சேவைகளுக்கு 2 சதவீதத்தையே செலவிடுவது குறிப்பிடத்தக்கது.



மக்களின் கல்வி,சுகாதார தேவைகளுக்கு செலவிடுவதிலும் பார்க்க இருமடங்குக்கு மேலான தொகை இராணுவச் செலவுகளுக்குப் பயன்படுத்தப் படுவதினால் அநேக நாடுகளில் மனித அபிவிருத்தி பின்னடைந்துள்ளன

மனித அக்கறையின்மையே பொதுத்துறை அழிவிற்கான (Public failure) காரணமாகும். அதாவது, நிதிவளங்களல்ல, அரசியல் பொறுப்பின்மையே. அரசியலே, மூலவளங்ள் குறைவாகப் பகிரப்பட்டிருப்பதற்கான பிரதான காரணமாகும். பாதுகாக்கப்பட்ட நலன்களும், அரசியல் வலுவும், இராணுவ நிறுவனங்களும், கிராம - நகர உயர்ந்தோர் குழாமும், ஊழல் மலிந்த நிர்வாக அமைப்பும் ஒப்புரவற்ற பகிர்வுக்குப் பிரதான காரணங்களாகும். பாகிஸ்தான், பேரு, சிரியா, சயர் ஆகிய நாடுகள் சுகாதார, கல்வித்துறைகளில் செலவிடுவதிலும் பார்க்க இருமடங்கு இராணுவத்துக்குச் செலவிடுகின்றன. அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் பண இழப்பின் மூலம் நோயாளிகளாகி விட்டன. அநேக நாடுகளில் மனித விருத்தி பின் தங்கி விட்டன. அரசியல்வாதிகள், பிரஜைகள், அதிகாரவர்க்கம் சுய இலாபத்தையே மையமாகக் கொண்டிருக்கின்றமை தெளிவாகிறது.

**If resources are poorly distributed, the cause generally is political. Protected interests and power structures - military establishments, Urban and rural elites, corrupt bureaucracies - all can cause maldistribution.**

இத்தகைய பொதுத்துறையில் ஏற்படும் குறைபாடுகளுக்குப் பரிகாரமாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்திச் செயற்றிட்ட கொள்கை வகுப்பாளர்கள் உள்ளூர் மட்டத்தில் சுய ஆட்சியைப் பரிந்துரை செய்கின்றனர். பன்முகப்படுத்தல் இது போன்ற எல்லா நோய்களுக்கும் பரிகாரமாக அமைந்துவிடாது. உதாரணமாக, 1982 இல் நேபாளம் சுய ஆட்சி கொண்ட பஞ்சாயத்து முறையை அறிமுகப்படுத்தியது.ஆனால் நேபாளத்தில் நிலவிய தனிக்கட்சி அரசாங்கத்தின் விளைவாக ஊழல் மலிந்த அரசியலே நிலவியது குறிப்பிடத்தக்கது. எனவே பன்முகப்படுத்தலானது கல்வி, மற்றும் அரசுப் பொறுப்பிலுள்ளதாக இருக்க வேண்டும்.

**The lack of political commitments, not of financial resources, is often the real cause of human neglect.**

பொருள்முதல் சாரா முன்னேற்றத்தினை அளவீடு செய்வது மிகவும் கஸ்டமானது. மானிட விருத்தியை நாடுகள் எவ்வாறு அடைந்துள்ளன என்பதை அளவீடு செய்வதற்கு UNDP மனித விருத்திக் குறிகாட்டியை (Human Development Index) த் தயாரித்துள்ளது. இக் குறிகாட்டியானது சரி செய்யப்பட்ட தலா ஒருவருக்கான உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியை (GDP) இரு பிரதான சமூகக் குறிகாட்டியுடன் இணைவு

தொடர்ச்சி 40 பக்கத்தில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA

# இலங்கையின் வரி அமைப்பு முறை - 11

பா. சிவாஜி

**மார்க்கம் இதழ் 1, மலர் 2,3 இல் பிரசுரிக்கப்பட்ட கட்டுரையின் இரண்டாம் பகுதி**

## 3.2 சொத்துக்கள் மீதான வரிகள்

சொத்துக்கள் மீதானவரியானது உள்ளூராட்சி சபைகளால் அறிவிடப்படுகின்ற இறைகள் (Rates), ஏக்கருக்கான வரிகள் ஆகியவற்றையும், தேசிய மட்டத்தில் அறவிடப்படுகின்ற கீழே குறிப்பிடப்படும் வரிகளையும் உள்ளடக்கும். சொத்துக்கள் மீதானவரி என்பது இலங்கையில் மிகவும் பழமைவாய்ந்த வரியாகவும் பல்வேறு வழிகளில் மாற்றமடைந்து வந்துள்ளதாகவும் விளங்குகின்றன. அண்மை ஆண்டுகளில் இலங்கையில் அமுலில் இருந்த சொத்துக்கள் மீதான வரியானது பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகும்.

1. மரணச்சொத்துவரி ( Estate Duty)
2. நன்கொடைவரி (Gift Tax)
3. செல்வவரி (Wealth Tax)
4. முத்திரைத்தீர்வை (Stamp duty)

இவற்றைவிட 1960 - 1962 காலப்பகுதியில் அசைவற்ற ஆதனங்கள் மீதான காணிவரி (Land Tax) அறவிடப்பட்டதுடன் இவ்வரியில் பின்பு 1971 இல் மூலதன அறவீடு (Capital Levy) என்ற வரியும் சேர்க்கப்பட்டிருந்தது.

### 1. மரணச்சொத்துவரி

மரணச்சொத்துவரி 1912 இல் அறிமுகம் செய்யப்பட்டு 1985 வரையில் நீண்டகாலமாக அமுலில் இருந்த வரியாகும். 1980 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க மரணச்சொத்து வரிச் சட்டத்திற்கமைய 1978 ஆம் ஆண்டு நவம்பர் 15ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் மரணமெய்தியவரின் ஒவ்வோர் ஆளினதும் கைமாறும் ஆதனம் மீது (மரணச்சொத்தின் மீது) விதிக்கப்படுவதாக இவ்வரி அமைகின்றது. இத்தகைய வரியானது மரண மெய்தியவரின் மரணச்சொத்தின் நிறைவேற்றுநர் ஒருவரால் செலுத்த வேண்டிய பொறுப்புடையதாகும். இத்தகைய வரி அறவிடத்தக்க மரணச்சொத்துக்கள் மீது ஒரு இலட்சம் ரூபா வரையில் வரியின்றி ஏனைய ஒவ்வொரு இலட்சமான அதிகரிப்புக்கள் மீது விருத்திமுறையில் 5 சதவீதம் 10 சதவீதம் என்றவகையில் எல்லைவீதம் 70 சதவீதம் ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மரணங்கள் 1984 நவம்பரின் பின்னர் நிகழுமாயின் எல்லைவீதம் 50 சதவீதம் ஆகக் குறைக்கப்பட்டிருந்தது.

### 2. நன்கொடைவரி

இலங்கையில் நன்கொடை வரி 1959 இல் மரணச் சொத்துவரியினைக் குறைநிரப்பு செய்வதற்காக அறிமுகம் செய்யப்பட்டதாகும். 1979 இன் 28ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 52ஆம் பிரிவுக்கமைய ஒருவருக்கு உடமையாக உள்ள அசைவுள்ள அல்லது அசைவற்ற சொத்தை பணத்தின் பிரதிபலனின்றி கைமாற்றல் செய்யப்படும்போது சொத்துக்கள் மீது விதிக்கப்படுவதே நன்கொடை வரியாகும். பொதுவாக நன்கொடையாளரே வரிப்பொறுப்புக்கு உள்ளாகின்றர் எனினும் சில சந்தர்ப்பங்களில் நன்கொடையாளர் இறக்க நேர்ந்தால் நன்கொடை பெறுபவர் வரிப்பொறுப்புக் குள்ளாகின்றார். வரி அறிவிடத்தக்க நன்கொடையில் 250,000 ரூபாவுக்கு மேற்பட்ட தொகைக்கு 10 சதவீதம், 15 சதவீதம், 20 சதவீதம் என்ற விருத்தி முறையில் உயர்எல்லை வீதம் 50 ஆக 1985/ 86 வரை அமுல் செய்யப்பட்டிருந்தது.1985 இல் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் மரணச்சொத்துவரி, நன்கொடைவரி என்பவை நீக்கப்பட்டுள்ளன. இவ்வகை வரிகளின் சேகரிப்புக்கள் குறைவாக இருப்பதுடன், அறவிடுவதற்கான நிர்வாகச் செலவுகள் உயர்வாக இருந்தமை போன்றவை இவ்வரிகள் இல்லாதொழிக்கப்பட்டதற்கு ஏதுவான காரணிகளாக அமைந்தன. மரணச்சொத்துவரி, நன்கொடைவரி ஆகியவற்றின் சார்புரீதியான பங்கு குறைவாக இருப்பதை பின்வரும் அட்டவணை 7 இல் இருந்து அவதானிக்கலாம்.

**அட்டவணை 7: சொத்துக்கள் மீதான வரிகள 1986-1990 (மில்லியன் ரூபாக்களில்)**

| வகைகள் | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 |
|---|---|---|---|---|---|
| செல்வவரி | 80(0.2) | 60(0.29) | 74(0.2) | 94(0.2) | 138(0.2) |
| நன்கொடைவரி | 9(0.02) | 12(0.03) | 4(0.01) | 3(0.01) | 4(0.01) |
| மரணச்சொத்துவரி | 34(0.1) | 25(0.07) | 19(0.05) | 11(0.02) | 17(0.03) |
| முத்திரைத்தீர்வை | 492(1.6) | 1,455(4.1) | 1,663(4.7) | 2,351(5.0) | 2,942(4.8) |
| மொத்தவரி அரசிறை | 31,272 (100.0) | 35,127 (100.0) | 35,691 (100.0) | 47,419 (100.0) | 61,206 (100.0) |

×அடைப்புக்குள் இருப்பவை மொத்தவரி அரசிறையின் சதவீதத்தில் கணிக்கப்பட்டவை

Source : (i) Administration of Report of the Commissioner General of Inland Revenue. Dept. of Inland Revenue.

(ii) Report of the Taxation Commission, 1991.

பா. சிவாஜி
B.A(Hons) Cey; MAAT; M.A (Sri Lanka)
வரி மதிப்பாளர்
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
கொழும்பு 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. செல்வவரி

இலங்கையில் செல்வவரியானது 1959 இல் பேராசிரியர் நிக்கலஸ் கல்டோரின் வரிச்சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாக அறிமுகம் செய்யப்பட்டது. சமூகநீதியினையும், பொருளாதார சமத்துவத்தையும் ஏற்படுத்த வருமானவரி போதுமான கருவியாக அமையாமையினால் இவற்றை அடையும் குறிக்கோளுடன் செல்வவரி விதிக்கப்பட வேண்டும் என்பது கல்டோர் அறிக்கையின் சிபார்சாக இருந்தது. இலங்கையின் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின்படி இலங்கையில் வதிகின்ற ஒருவர் விடயத்தில் இலங்கையிலுள்ள அவருடைய அசைவுள்ள, அசைவற்ற ஆதனம் இலங்கைக்கு வெளியேயுள்ள அசைவுள்ள ஆதனம் மீதும், வதிவற்றவரின் விடயத்தில் அவருக்கு இலங்கையிலுள்ள சகல ஆதனங்கள் மீதும் விதிக்கப்படுவதே செல்வவரியாகும்.

ஒருவரின் செல்வவரிப் பொறுப்பிலிருந்து வீட்டுப் பாவனைப் பொருட்களும், தளபாடங்களும் 50,000 ரூபா பெறுமதியான தங்க நகைகள், சொந்தப்பாவனைக்கான ஒரு வீடு, ஒரு மோட்டார்கார், விஞ்ஞான ஆய்வு கூட உபகரணங்கள், புத்தகங்கள், அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதி, ஓய்வூதியமும் பிற ஆண்டுத்தொகையும் போன்றவை விலக்களிக்கப்படுகின்றன. இவ்வாறு கணிக்கப்பட்ட தேறிய செல்வத்திலிருந்து (மொத்த செல்வம் – கடன்களும் பொறுப்புக்களும்) 500,000 ரூபா வரிவிடுதொகையை நீக்கியபின் எஞ்சுகின்ற வரிவிதிசெல்வம் கணிக்கப்பட்டு அதன்பின் பின்வருமாறு விருத்தி முறையில் செல்வவரி விதிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| வரிவிதி செல்வத்தின் முதல் 500,000 மீது | – 1/2 | சதவீதம் |
| வரிவிதி செல்வத்தின் அடுத்த 1,000,000 மீது | – 3/4 | சதவீதம் |
| வரிவிதி செல்வத்தின் அடுத்த 1,500,000 மீது | – 1 | சதவீதம் |
| எஞ்சிய வரிவிதி செல்வம் மீது | – 2 | சதவீதம் |

அங்கீகரிக்கப்பட்ட அறநிலையங்களாயின் 1/2 சதவீதம் என்ற நிலையான வீதப்படியும், வதிவற்ற கம்பனியாயின் 1 சதவீதம் என்ற நிலையான வீதப்படியும் அறவிடப்பட வேண்டும். மேலும் வருமானவரி, செல்வவரி, இரண்டினதும் மொத்தவரித்தொகையானது ஒருவரின் வரி அறவிடத் தக்கவருமானத்தில் 50 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். மிகுதி செல்வவரியிலிருந்து தள்ளுபடி செய்யப்படும்.

## 4. முத்திரைத்தீர்வை

1909 இல் அறிமுகம் செய்யப்பட்ட மிகப்பழமை வாய்ந்த முத்திரைத்தீர்வையானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் நிர்வாகம் செய்யப்படும் பிரதான வரிகளில் ஒன்றாக விளங்குகின்றது. 1982ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க முத்திரைத்தீர்வைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது முத்திரைத்தீர்வை விதித்தல் தொடர்பாக பின்வருமாறு விதந்துரைக்கின்றது.

- × இலங்கையில் எழுதி நிறைவேற்றப்படும், வரையப்படும் அல்லது சமர்ப்பிக்கப்படும் சாதனம் ஒவ்வொன்றின் மீதும்,
- × நீதிமன்றங்களில் கொடுக்கப்படும் வழக்கு நடவடிக்கைகளில் சமர்ப்பிக்கப்படுகின்ற அல்லது கோப்பிடப்படும் ஆவணம் ஒவ்வொன்றின் மீதும்,
- × கைமாற்றம் செய்யப்படுகின்ற மாற்றுண்டியல்கள், காசோலை, வாக்குறுதிப்பத்திரம் ஒவ்வொன்றின் மீதும்,
- × இலங்கைக்கு வெளியே எழுதி நிறைவேற்றப்படுவதும் அத்துடன் இலங்கையில், பெறப்படுவதுமான ஏதேனும் ஆதனம் மீதும் விதந்துரைக்கப்பட்ட வீதத்தில் விதிக்கப்படுவதாக முத்திரை தீர்வை அமைகின்றது. முத்திரைத்தீர்வையிலிருந்து அரசதுறை அலுவலர்களின் வேண்டுதலுக்கிணங்க நிறைவேற்றப்படும் சத்தியக்கடதாசி, சொத்துடன்படிக்கையற்ற திருமணம் செய்வதற்கான உடன்படிக்கை, குற்றவியல் நடவடிக்கைகளுக்கான பிணைமுறி, உத்தியோக பூர்வமட்டத்தில் வரையப்படும் காசோலைகள், உரித்துமாற்றங்கள், 100 ரூபாவிற்கு குறைவான கைமாற்றங்கள், வங்கியில் வைப்பிலிடப்படும் பணம், போன்றவற்றிற்கு விலக்களிக்கப்பட்டுள்ளன. முத்திரைதீர்வையானது பல்வேறு வீதங்களில் அறவிடப்படுகின்றன.
- × ஆதனம் ஒன்றைக் கைமாற்றம் செய்யும்போது அதன் சந்தைப் பெறுமதியில் முதல் 100,000 ரூபாவிற்கு 3 சதவீதம் ஆகவும், மீதித் தொகைக்கு 4 வீதமாகவும் பெறுபவன் முத்திரைத்தீர்வை செலுத்த வேண்டும். நன்கொடை ஆயின் முதல் 50,000 ரூபாவிற்கு 3 சதவீதம் ஆகவும் அடுத்த ஒவ்வொரு 50,000 ரூபாவிற்கும் 2 சதவீதம் ஆகவும் அறவிடப்படும்.
- × நாணயக்கடிதங்களைப் பொறுத்தவரையில் 1991 வரையில் 2.5 சதவீதம் ஆகவும் 1992 இலிருந்து 2 சதவீதம் ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் ஏற்றுமதிகள் நோக்கிய இறக்குமதிகளின் பொருட்டு 1000 ரூபாவிற்கு 50 சதசதம் என்ற அடிப்படையில் சலுகை முறையில் விதிக்கப்படுகின்றது.
- × வைப்புச்சான்றிதழ்கள் மீது ஆண்டுக்கு 3 சதவீதம் முத்திரைத் தீர்வை வைப்பாளர்கள் செலுத்த வேண்டும்.
- × பங்கு வழங்கல் நிகழ்முறையில் முதல் வழங்கலின்போது அதன் முகப்பெறுமதியின் 0.5 சதவீதம் ஆகவும், பங்குக் கைமாற்றம் செய்யும்போது சந்தைப்பெறுமதியில் 1 சதவீதம் முத்திரைத் தீர்வை செலுத்துதல் வேண்டும்.
- × ஈட்டு உறுதி மீது 1 சதவீதம் முத்திரைத்தீர்வை அறவிடப்படும்
- × மாற்றுண்டியல்கள், வாக்குறுதிப்பத்திரங்கள் மீதும் மிகக்குறைந்த வீதத்தில் முத்திரைத்தீர்வை அறவிடப்படுகின்றன.

இலங்கையின் வரி அரசிறையில் சொத்துக்கள் மீதானவரி பங்களிப்பு 1976 இல் 1.7 சதவீதத்திலிருந்து தற்பொழுது (1990) ஏறத்தாழ 5 சதவீதமாக உயர்ந்துள்ளது. 1983 இல் 327 மில்லியன் ரூபாவாக இருந்த முத்திரைத்தீர்வை சேகரிப்புக்கள் 1990 இல் 2943 மில்லியன் ரூபாவாக ஒன்பது மடங்குகொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. இத்தகைய அதிகரிப்புக்கு நாணயக்கடிதங்கள், வைப்புச்சான்றிதழ்கள் மீதான முத்திரைத் தீர்வைகள் பிரதான பங்கு வகிப்பதே காரணியாக உள்ளன என்பதை அட்டவணை 8 காட்டுகின்றது. முத்திரைத்தீர்வையில் மூன்றிலொரு பங்கு நாணயக்கடிதம் மீதானமுத்திரைத் தீர்வையே உள்ளடக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இத்தகைய அதிகரிப்பு தாராள இறக்குமதிமூலம் இறக்குமதி அளவு, பெறுமதி என்பவை அதிகரித்தமையே காரணமாக உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 8: முத்திரைத்தீர்வையின் அமைப்பு

| | 1988 | | 1990 | |
|---|---|---|---|---|
| | மில். ரூபா | வீதம் | மில். ரூபா | வீதம் |
| 1. அழுத்திய முத்திரைகள் (பங்குக் கைமாற்றங்கள், உறுதிகள், ஏனைய ஆவணங்கள்) | 153. 8 | 9.2 | 280.5 | 9.5 |
| 2. கூட்டமைவு தீர்வை (காசோலைகள், நாணயக்கடிதம், பங்குகள், சம்பளங்கள் காப்புறுதிப் பூட்கைகள், நீதிமன்ற ஆவணங்கள்) | 1228.6 | 73.9 | 2,397.5 | 81.5 |
| 3. சாதனங்களின் மீதான முத்திரைக் குறைவின் மீதான சேகரிப்புக்கள் | 7.4 | 0.4 | 9.7 | 0.3 |
| 4. முத்திரைகளின் மீது திறைசேரி யினூடான வருவாய் | 273.6 | 16.5 | 255.1 | 8.7 |
| மொத்தம் | 1663.4 | 100.0 | 2,942.8 | 100.0 |

Source : (i) Administration of Report of the Commissioner General of Inland Revenue. Dept. of Inland Reveneue.

இலங்கையின் சொத்துக்கள் மீதான வரிகளில் நன்கொடைவரி, மரணச்சொத்துவரி என்பவை 1985ஆம் ஆண்டுடன் நீக்கப்பட்டுவிட்டது. செல்வவரி கூட, மொத்த சொத்துக்கள் மீதானவரியில் மிகக் குறைந்த பங்களிப்பான 0.2 சதவீதத்தை அண்மையாண்டுகளில் கொண்டிருந்தன. 1989 இன் கணிப்பீட்டில் 16.8 மில்லியன் கொண்ட இலங்கையின் மொத்த சனத்தொகையில் 20,000 இலும் குறைந்த எண்ணிக்கை கொண்டவர்களே செல்வவரி செலுத்தியிருந்த வேளையில் 31.3.90 இல் முடிவடைந்த வரி மதிப்பாண்டில் வருமான, செல்வவரித் திரட்டில் 4489 பேர் மட்டுமே செல்வவரிக்காக பதிவு செய்யப்பட்டிருந்தனர். உள்நாட்டு இறைவரித்திணைக்களம் செல்வவரியை அமுல் செய்வதிலும், சேகரிப்பதிலும் பல சிக்கல்களை எதிர்நோக்கியிருந்த பின்னணியில் வரி ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கமைய 1992 - 93 வரிமதிப்பாண்டிலிருந்து செல்வவரி இல்லா தொழிக்கப்பட்டுள்ளது. இந்தப்போக்கில் எதிர்காலத்தில் சொத்துக்கள் மீதானவரியில் முத்திரைத்தீர்வை மட்டுமே நம்பிக்கையூட்டுவனவாக உள்ளன.

### 3.3 உள்நாட்டுப்பொருட்கள், பணிகள் மீதான வரிகள்

பொருட்கள் சேவைகளின் கொள்வனவு, விற்பனவின்மீது, உற்பத்தி அல்லது செலவுகள் மீது உள்நாட்டில் விதிக்கப்படுகின்ற வரியாக உள்நாட்டுப் பொருட்கள், பணிகள் மீதான வரிகள் அமைகின்றன. இலங்கையில் மொத்த விற்பனை வரி, கலால்தீர்வை என்பவை இந்த பகுதிக்குள் அடங்குகின்றன. வரி அரசிறையில் 45 சதவீதத்திற்கு மேலான பங்களிப்பை வழங்குவதன் மூலம் உள்நாட்டுப் பொருட்கள், பணிகள் மீதான வரிகள் அதன் முக்கியத்துவத்தை ஈர்த்துள்ளன.

#### 1. மொத்த விற்பனை வரி (Turn over Tax)

1963 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் மூலம் வியாபார மொத்த விற்பனை வரி (BTT) என்ற வகையில் அறிமுகம் செய்யப்பட்டு1964 முதல் அமுல்செய்யப்பட்ட இவ்வரி, 1981 ஆண்டில் மொத்த விற்பனைச் சட்டத்தின் மூலம் அமுல் செய்யப்பட்டு வருகின்றது. 1960களில் சென்மதிநிலுவைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும்முகமாக இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தீவிரமாக்கப்பட்டதன் காரணமாக ஆரம்பத்தில் இறக்குமதித் தீர்வையின் வீழ்ச்சியை நிவர்த்தி செய்வதை உத்தேச நோக்கமாகக் கொண்டு அமுல் செய்யப்பட்டது. இவ்வரி அறிமுகம் செய்யப்பட்ட காலங்களில் உற்பத்தியாளர்களுக்கு 3 சதவீதம் ஏனைய வியாபாரங்கள் மீது 1.5 சதவீதம் ஆகவும் நிர்ணயிக்கப்பட்டு பல அத்தியாவசியப் பொருட்களுக்கு விலக்களிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்பொழுது பல்வேறு கட்டங்களில் பரந்த பொருளாதார நடவடிக்கைகளையும் உள்ளடக்கி, தயாரிப்புத் தொழில், மொத்த சில்லறை வர்த்தகம், சேவைகள், இறக்குமதிகள் என்பவற்றிற்கும் விரிவாக்கப்பட்டுள்ளன.

1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க மொத்த விற்பனைவரிச் சட்டமானது ஒவ்வொரு காலாண்டிற்காகவும் இலங்கையில் தொழில் எதனையும் கொண்டு நடாத்துகின்றவர் அல்லது இலங்கைக்கு வெளியே வழங்கிய சேவைகளுக்காக இலங்கையிலிருந்து வழங்கப்படும் கொடுப்பனவுகள் தொடர்பாக மொத்த விற்பனை வருமானம் தொடர்பில் மொத்த விற்பனை வரிக்கு உட்படுவோர் என விதந்துரைக்கின்றது. இங்கு காலாண்டுக்கு 25,000 ரூபா அல்லது ஆண்டுக்கு 100,000 ரூபா மொத்த விற்பனை வருமானத்தைத் தாண்டும் போது ஒருவர் இவ் வரி விதிப்புக்குள்ளாகின்றார்.

மொத்த விற்பனைவரி தொடர்பாக இரு புதிய எண்ணக்கருக்கள் 1981 ஆம் ஆண்டின் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. இறக்குமதியாளர் விடயத்தில் இறக்குமதி நடைபெறும் வேளையில்
   - (i) சுங்கத்தீர்வைக்காக தீர்மானிக்கப்பட்ட பெறுமதி
   - (ii) சுங்கத்தீர்வை
   - (iii) (1) + (11) இன் 10 சதவீதம்

(2) உற்பத்தியாளர் விடயத்தில் வரையறுக்கப்பட்ட வடிவத்தில் கையாளப்படும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT)

- (i) வேறு ஒரு உற்பத்தியாளருக்கு விற்கப்படின் மொத்த விற்பனை வரிக்குரிய தொகையை சேர்க்கு முன் பெறப்பட்ட அல்லது பெறக்கூடியதான தொகை
- (ii) வேறு எவருக்காவது விற்பனை செய்யப்படின் பெறப்பட்ட அல்லது பெறக்கூடியதான தொகை

மொத்த விற்பனை வரிவீதமானது தொழிலின் தன்மையைப் பொறுத்து தீர்மானிக்கப்படுவதுடன், வெவ்வேறு வீதங்கள் காலத்திற்குக் காலம் நிதி அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்படும். இலங்கையில் மொத்த விற்பனை வரி மூன்று வகையான சேர்க்கைகளைக் கொண்டவை. முதலாவது உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள் மீது அறவிடப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபட்டவரி, இரண்டாவதாக குறித்த உயர்தொழில்கள், சேவைகள் மீதான வரி, மூன்றாவதாக மொத்த சில்லறை வியாபாரம் மீதான 1 சதவீத வரி என்பவற்றைக் கொண்டவை. பொருட்களின் தன்மைகளைப் பொறுத்து நடைமுறையில் 1%, 3%, 5%, 10%, 15%, 20% என்ற வேறுபட்ட வீதங்களில் அறவிடப்பட்ட வரிவீதங்கள் 1992-93 இலிருந்து 5%, 10%, 15%, 20% என்ற நாலு அடிப்படை வரிவிதிப்புமுறை (Four band Tax system) பின்பற்றப்பட்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக 1989 ஏப்ரல் 01 இலிருந்து உற்பத்தியாளர், இறக்குமதியாளர் ஆகியோர் விலக்களிக்கப்பட்ட பொருட்கள் தவிர ஏனையவற்றின் விற்பனைமீது பெறப்பட்ட தொகையில் 1 சதவீதத்தை நிறுத்தி வைத்தல் மொத்தவிற்பனை வரியாகவும் செலுத்துதல் வேண்டும். அத்தகைய இறக்குமதியாளர்கள் மொத்தவிற்பனை வரியின் பாகமாக அமையுமிடத்து அதைக் கழிக்க முடியும். மொத்த விற்பனை வரியிலிருந்து விலக்களிப்புக்கள் இரண்டு வகையாக அமுல்படுத்தப்படுகின்றன.

**வகை** 1. உற்பத்தி சார்ந்தவை: தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்திப்பொருட்கள், நெல், மிளகாய், புகையிலை, ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட ஏதாவது தயாரிப்புப் பொருட்கள், உற்பத்தி செய்யப்படும் இறக்குமதி செய்யப்படும் சீமெந்து, குழந்தைகளுக்கான பால்மாவகை, மருந்துப் பொருட்கள் போன்றவை இவ்வகையில் அடங்கும்.

**வகை** 11. வியாபாரம் சார்ந்தவை: பாண், புத்தகம், மருந்துப்பொருட்கள், கறுவா, கராம்பு, பப்பாசி, நீர்விநியோகம், விமான எரிபொருள், போன்றவை இப்பிரிவினுள் அடங்கும்.

இலங்கையின் மொத்த விற்பனைவரியானது இரட்டைத் தொழிற்பாட்டைக் கொண்டுள்ளது. அவை வருமானத் தொழிற்பாடு (Revenue Function), பொருளாதாரத் தொழிற்பாடு (Economic Function) ஆகியவையாகும். இவையிரண்டும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்துள்ளதால் வேறுபடுத்துவது சிக்கல் வாய்ந்தது. பொதுவாக வரியிடல் கொள்கைகளில் சிக்கனத்தன்மையாக இருக்கவேண்டும் என்பதுடன், ஒப்புரவுத்தன்மை வாய்ந்ததாகவும் இருக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. மொத்த விற்பனைவரியானது குறைந்த உத்தியோகத்தர்களுடன் செயற்திறனுள்ளவகையில் செயற்படுத்தப்படுவதுடன், வேறுபட்ட வரிவீதங்களை வெவ்வேறு பொருட்களிடையே பின்பற்றுவதன்மூலம் இக்குறிக்கோள்களை எய்துவதில் எத்தனித்து வந்துள்ளது.

கடந்த 30 ஆண்டுகளில் இலங்கையின் மொத்த விற்பனைவரி பாரியதொரு வளர்ச்சியினைப் பதிவு செய்துள்ளதைக் காணலாம். மொத்தவரி அரசிறையில் 1960 களில் ஏறத்தாழ 6 சதவீதமாக இருந்த இதன்பங்கு அண்மை ஆண்டுகளில் ஏறத்தாழ 32 சதவீதமாக உயர்ந்தமை மட்டுமன்றி வரி வருமானத்தில் முதலாவது வகுதியாகவும் விளங்குகின்றது. மொத்த விற்பனை வரி மூலமான சேகரிப்புக்கள் 1980 இல் 1640 மில்லியன் ரூபாவாகவும் 1990 இல் 20,291 மில்லியன் ரூபாவாகவும் 12 மடங்கு கொண்ட அதிகரிப்பைக் கொண்டிருக்கின்றன. மொத்த உள்நாட்டு உற்பத்தி ரீதியாக அவதானிக்கும்போது 3.3 சதவீதத்திலிருந்து 6.3 சதவீதமாக இக்காலப் பகுதியில் அதிகரித்திருந்தது. உயர்ந்த பணவீக்க நிலைமைகளால் மொத்தவரி சேகரிப்புக்கள் அதிகரித்தன.

மேலும் பரந்த பொருளாதார நடவடிக்கைகளும் இவ்வரிவிதிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இறக்குமதிகள், சேவைகள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். ஒரு புறம் தாராள இறக்குமதி காரணமாக இறக்குமதிகள் அதிகரித்த வேளையில் இறக்குமதி செய்யும் சந்தர்ப்பத்திலும் மொத்த விற்பனைவரி விதிப்பிற்குட்பட்டதனால் இதன் மீதானவரி சேகரிப்புக்கள் அதிகரித்து வந்ததை அட்டவணை 9 தெரிவிக்கின்றது. இறக்குமதிகளின் போது மொத்த விற்பனைவரியாக 722 மில்லியன் ரூபாவாக மட்டுமே பெறப்பட்டிருந்த அதன் சேகரிப்புக்கள் 1990 இல் 9767 மில்லியன் ரூபாவாக அதிகரித்ததிலிருந்து இதை அவதானிக்க முடியும். இவை தவிர மொத்த விற்பனை வரியானது பொருட்கள், சேவைகளினூடாக அறவிடப்படுவதனால் இதிலிருந்து தப்பிக்கொள்ளுதல் வருமானவரியுடன் ஒப்பிடுகையில் இலகுவானதன்று. ஏனெனில் நிறுவனங்களிடமிருந்து அறவிடுவதால் வரி நிர்வாகமும் இலகுவானதாக உள்ளன.

**அட்டவணை 9 இலங்கையின் மொத்த விற்பனைவரியின் அமைப்பு**

| விடயம் | 1980 | | 1982 | | 1986 | | 1990 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மில்.ரூபா | % | மில்.ரூபா | % | மில்.ரூபா | % | மில்.ரூபா | % |
| உற்பத்தி | 1052 | 64.2 | 1806 | 44.6 | 3270 | 32.4 | 6798 | 37.0 |
| உற்பத்தி சாராதது (வியாபாரம்,சேவைகள் உயர்தொழில்) | 588 | 35.8 | 1524 | 37.6 | 2415 | 23.9 | 3726 | 13.9 |
| இறக்குமதிகள் | - | - | 722 | 17.8 | 4403 | 43.7 | 9767 | 49.1 |
| மொத்தம் | 1640 | 100.0 | 4052 | 100.0 | 10,088 | 100.0 | 20,291 | 100.0 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக | | 2.5 | 4.1 | | 5.6 | | 6.0 | |

இறக்குமதிகளின் பங்களிப்பில் ஏற்பட்ட சார்புரீதியான அபிவிருத்திகளுக்கேற்ப உற்பத்தி, சேவைகள் மூலமான மொத்த விற்பனை வரி சேகரிப்புக்கள் அமையவில்லை. இத்தகைய சார்புரீதியான வீழ்ச்சிக்குக் குறிப்பாக உற்பத்தி சாராத சேவைகளுக்கான வரிவீதங்கள் குறைக்கப்பட்டு வந்தமையினைக் குறிப்பிடலாம். எடுத்துக்காட்டாக வங்கிகள் மீதான மொத்த விற்பனை வரி முன்பு 5 சதவீதமாக இருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டு 1992-93 இலிருந்து 3 சதவீதமாகக் குறைக்கப்பட்டு வந்துள்ளமையினைக் குறிப்பிடலாம். மொத்த சில்லறை வியாபாரம் மீதான மொத்த விற்பனை வரியின் நிர்வாகம் 1990 இலிருந்து மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டமையினால் எதிர்காலத்தில் உற்பத்தியல்லாத சேவைகள் மீதான வரி சேகரிப்புக்களின் பங்கும் குறைவடையக்கூடும். மொத்த விற்பனை வரியானது 1994/95 இலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட வரியாக மாற்றியமைக்கப்பட உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ( Value Added Tax)

ஒரு பொருளின் அல்லது சேவையின் உற்பத்திக்காக ஒரு வியாபார நிறுவனத்தால் ஏனைய நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் சேவையின் பெறுமதியுடன் சேர்க்கப்பட்ட பெறுமதி மீது விதிக்கப்படுவதே பெறுமதி சேர்க்கப்பட்ட வரியாகும். அலன். ஏ. ரயிட். (A lan, A.Tait) என்பவர் சேர்க்கப்பட்ட பெறுமதி என்பதை " ஒரு உற்பத்தியாளர் பொருட்கள், சேவைகளின் உற்பத்திக்காக, தனது சொந்த அல்லது ஏனைய நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஊழியமல்லாத உள்ளீடுகளுடன் விற்பனைக்கு முன்பாக சேர்த்துக் கொள்ளப்பட்ட பெறுமதியைக் குறிக்கும்" என வரைவிலக்கணம் செய்திருந்தார். இங்கு உள்ளீடுகளாக மூலப்பொருட்கள், போக்குவரத்து, வாடகை, விளம்பரம் போன்றவற்றைக் குறிப்பதுடன், சேர்க்கப்பட்ட பெறுமதியானது மொத்த விற்பனைவரி நோக்கத்திற்காக கூலிகள், இலாபங்கள் என்பவற்றின் கூட்டுத்தொகைக்கு சமமாகவும் இருக்கும். வேறுவகையில் தெரிவிப்பதாயின் ஒரு நிறுவனத்தின் வெளியீட்டுப் பெறுமதியிலிருந்து உள்ளீடுகளுக்கான செலவைக் கழிப்பதன் மூலம் இதனைக் கணிக்கலாம். (சேர்க்கப்பட்ட பெறுமதி = கூலிகள் + இலாபங்கள் = வெளியீடு - உள்ளீடு). பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கணிப்பீடு மூன்று வழிமுறைகளில் இடம்பெறலாம்.

### (1) கழித்தல் முறை (Substraction Method)

இம்முறையின் கீழ் வெளியீட்டின் விலையிலிருந்து (பெறுமதி) உள்ளீட்டின் விலை (பெறுமதி) கழிக்கப்பட்டு பொருத்தமான வரிவீதத்தில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி கணிக்கப்படும். இதற்கு பின்வரும் சமன்பாடு கையாளப்படும்.

**வரி** $(Tax) = (P_2 - P_1) \times T.R$

இங்கு $P_1$ = உள்ளீட்டின் பெறுமதி, $P_2$ = வெளியீட்டின் பெறுமதி, T.R = வரிவீதம்

இம்முறை எளிமையாக இருப்பினும் வியாபாரிகள் வேறுபட்ட வரிவீதங்களைப் பின்பற்றும்போது பிரச்சினைகள் தோன்றும். மேலும் வரி விலக்குப் பெற்றவர்கள், ஏற்றுமதியாளர் விடயத்தில் சரியான மீளளிப்பைக் கணிப்பதிலும், கடன் நிலுவைகள் உள்ள சந்தர்ப்பத்தில் இவ்வரிமுறை பிரச்சினைகளை எதிர்நோக்கக் கூடும்.

### (11) கூட்டுதல் முறை ( addition Method)

இந்த முறையின்படி, ஒரு நிறுவனத்தால் வழங்கப்பட்ட வெவ்வேறு உற்பத்திக் காரணிகளின் கொடுப்பனவுகளான வாடகை, கூலி, வட்டி, இலாபம் என்பவற்றின் கூட்டுத்தொகை மீது பொருத்தமான வரி வீதத்தை விதிப்பதாகும். இம்முறையில் மாதாந்த அல்லது காலாண்டு அடிப்படையில் வரிவிதிக்கப்படும்போது ஒவ்வொரு காலப் பகுதிக்குமான இலாபத்தைக் கணிப்பது பிரச்சினையாக இருக்கும்.

### (111)செலவு(பட்டியல்) முறை (Credit (Invoice) Method)

இந்த முறையின்படி ஒரு நிறுவனம் தனது விற்பனை மீது (வெளியீடு) வரியினைச் செலுத்துவதுடன், கொள்வனவுகள் மீது (உள்ளீடு) வரிக்கழிவை (Tax Credit ) பெற்றுக் கொள்ளும் முறையாகும். இதற்கு பின்வரும் சமன்பாட்டை உபயோகிக்கலாம்.

**வரி** $(Tax) = P2 \times T R2) - (P 1 \times TR1)$

இங்கு P1 = உள்ளீட்டுப் பெறுமதி, P2 = வெளியீட்டின் பெறுமதி TR 1 = உள்ளீடு மீதான வரிவீதம், TR 2 = வெளியீடு மீதான வரிவீதம்

ஒரு நிறுவனத்தின் இறுதிக்கணக்குகள் தயாரிக்கும் முன்பே குறுங்காலக் கொடுக்கல் வாங்கல்கள் மீது மூன்றாவது முறை இலகுவாகப் பிரயோகிக்கக் கூடியதாக இருப்பதனால் அநேக நாடுகளில் இந்த முறையே பின்பற்றப்படுகின்றது. இருப்பினும் கொடுக்கல், வாங்கல் தொடர்பான பட்டியல்களின் நம்பகத்தன்மையே இம்முறையின் வரிசேகரிப்புக்களை நிர்ணயிக்கும்.

இலங்கையில் மொத்த விற்பனைவரி, 1994-95 வரிமதிப்பாண்டிலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்டவரியாக மாற்றப்பட உள்ளது. இம் மாற்றத்திற்கு ஆதரவாக உயர்ந்த வரிசேகரிப்புக்கள், ஒப்புரவு, பொருளாதாரத் தாக்கம், நிர்வாகம் ஆகியவற்றில் சிறந்த பெறுபேற்றை அடைய முடியும் எனத்தெரிவிக்கப்படுகின்றன. இவ்வரி முறை 1960 களில் பிரபல்யமாகி அறிமுகம் செய்யப்பட்டு அநேக நாடுகளில் பல்வேறு வடிவங்களில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. சில நாடுகளில் பொருட்கள், சேவைகள் வரி (Goods and services Tax - GST) என்ற பெயரில் விதிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக 1991 இல் கனடாவில் கொண்டுவரப்பட்ட இவ்வரி பல விமர்சனங்களுக்கும் உள்ளாகியது.

பெறுமதி சேர்க்கப்பட்ட வரியானது, பல்வேறு கட்டங்களிலும் விதிக்கப்படுவதனால் ஏனையவற்றை விடச் சிறந்தது என்பதை மறுப்பதற்கில்லை. மக்களின் நுகர்வு அடிப்படையில் நோக்குகையில் இலங்கை போன்ற வளர்முகநாடுகளுக்கு மிகப் பொருத்தமானதாக அமையும். தற்போது நடைமுறையிலுள்ள வரியானது மூலப்பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், முடிவுப் பொருட்கள், வியாபாரம் போன்ற கட்டங்களில் மொத்த விற்பனை வரிக்குட்படுவதால் திரும்பத் திரும்ப ஒரு பொருள் வரி விதிப்புக்குள்ளாகின்றது. இதனால் மக்களின் வரிச்சுமை அதிகரிப்பதுடன், வரி ஏய்ப்புக்கும் இடமளிக்கின்றது. ஆனால் புதிய முறையில் வரி விதிப்பு முறை நியாய பூர்வமானதாக இருப்பதுடன் வரி ஏய்ப்பும் தவிர்க்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்காக நிதி அமைச்சில் தனிப்பிரிவொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் நிர்வாக ரீதியில் இலகுவானதாக இருப்பதுடன் நுகர்வு அடிப்படையாகக் கொண்ட வரி ஆகையால் வறியமக்களுக்கு நிவாரணமளிக்கக்கூடிய வகையில் நெகிழ்வுத்தன்மையாக இருக்கும். இவ்வரி விதிப்பில் பெரும்பான்மை மக்கள் பங்கெடுப்பதுடன், மொத்த வரி வருமானத்தில் இவ்வரியின் பங்கு குறைவாக இருப்பது ஒரு பழுவாக இருக்காது. எடுத்துக்காட்டாக மெக்சிக்கோவின் மொத்த வரியிறுப்பாளர்களில் 90 சதவீதத்தினர் பெறுமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்க்கப்பட்டவரியிறுப்பாளராக இருப்பினும் மொத்த வரி வருமானத்தில் இவ்வரியின் பங்கு 10 சதவீதமாக உள்ளதைக் குறிப்பிடலாம். ஆனால் இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகளில் பொருளாதார நடவடிக்கைகள் முழுமையாக நாணயமயப்படுத்தாமை, சுயதொழில் நடவடிக்கைகள், பூரணப்படுத்தப்படாத பதிவேடுகள், வரி ஏய்ப்புக்கள், கறுப்புப் பொருளாதார வளர்ச்சி போன்ற சூழ்நிலைகளில் இவ்வரியை நிர்வகிப்பது எதிர்காலத்தில் பிரச்சினையாக இருக்கும். மேலும் மொத்த விற்பனைவரியானது சுங்கத்திணைக்களம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஆகியவற்றால் விதிக்கப்படுவதுடன் மொத்த, சில்லறை வர்த்தகம் மீதான வரி நிர்வாகம் மாகாண சபைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் நிர்வாகரீதியில் பல சிக்கல்கள் எழக்கூடும்.

## 2. கலால் தீர்வை (Excise Duty)

இலங்கையின் மிகப்பழமைவாய்ந்த வரிகளில் ஒன்றாக விளங்கும் கலால் தீர்வையானது, 1912 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க கலால் சட்டத்தின் மூலம் அறிமுகம் செய்யப்பட்டதாகும். இதன்பொருட்டு 1913 இல் கலால் திணைக்களம் தாபிக்கப்பட்டு, ஆரம்பகாலங்களில் உள்நாட்டுப் பொருட்கள் குறிப்பாக மதுபானம் புகையிலை என்பவற்றின் மீதும், சில சந்தர்ப்பங்களில் தீப்பெட்டி, உப்பு ஆகியவற்றின் மீதும் கலால் தீர்வை விதிக்கப்பட்டிருந்தது. மொத்த விற்பனை வரியானது பொருட்கள் சேவைகள் மீதான வரியையும், பொது விற்பனைவரியையும் உள்ளடக்கியிருக்க, கலால் தீர்வையானது குறிப்பிட்ட பொருட்களை மட்டும் உள்ளடக்கியுள்ளது. மேலும் மொத்த விற்பனைவரி பிரதானமாக வருமானத் தொழிற்பாட்டைக் கொண்டிருக்க, கலால் தீர்வையானது சமூக நல மேம்பாட்டுடன் கூடிய வருமானத்தொழிற்பாட்டு நோக்கத்தைக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக, சமூகத்திற்குக் கேடு விளைவிக்கக்கூடிய பொருட்கள் மீது இவ்வரி அறவிடப்படுவதனால் இரட்டைத் தொழிற்பாட்டை மேற்கொள்ளக்கூடிய செயற்திறன் மிக்க கருவியாக இது அமைகின்றது.

மரபுரீதியாக மதுபானம், புகையிலை, சிகரெட் போன்ற உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டதும், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீதும் விதிக்கப்பட்டு, மோட்டார் வாகனங்கள், உடைகள், ஆபரணங்கள் என்பவையும் உள்ளடக்கப்பட்டன. மிக அண்மை ஆண்டுகளில் ஆடம்பர, உப ஆடம்பரப் பொருட்களையும் உள்ளடக்கியுள்ளமை அதன் அபிவிருத்திப் போக்கைக் காட்டுகின்றது. 1989ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க கலால் தீர்வை விசேட ஏற்பாடுகள் செய் சட்டத்தின்கீழ் மதுபானம் அல்லாத பிறபொருட்கள் மீதான தீர்வைகளின் சேகரிப்புகளுக்காகவும் கலால் திணைக்களத்திற்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மொத்த வரி சேகரிப்புக்களில் கலால் தீர்வையின் பங்கு 11 – 15 சதவீதத்திற்கிடையில் தளம்பலடைந்தாலும் கடந்த 10 ஆண்டுகளில் இதன் சார்புரீதியான பங்கு அதிகரித்து வந்துள்ளதை. குறிப்பாக 1991 இல் என்றும் இல்லாதவாறு 16 சதவீதமாக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதற்கு வரிவீதங்களில் அதிகரிப்பு, முன்னைய வரி சேகரித்தலில் காட்டப்பட்ட சிறந்த முயற்சிகள் என்பனவற்றைக் குறிப்பிடலாம். எடுத்துக்காட்டாக, விசேட சாராயம் லீற்றர் ஒன்றுக்கு 1980 இல் 28 ரூபாவாக அறவிடப்பட்ட கலால் தீர்வை 1989இல் 111 ரூபாவாக படிப்படியாக அதிகரித்து வந்ததைக் குறிப்பிடலாம்.

**அட்டவணை 10: கலால் தீர்வையின் அமைப்பு**

| விடயம் | 1985 | | 1990 | |
|---|---|---|---|---|
| | மில். ரூபா | % | மில். ரூபா | % |
| புகையிலை வரி | 1877.0 | 62.5 | 5042.6 | 64.5 |
| மதுபானம் மீதான கலால் தீர்வை | 1103..5 | 36.8 | 2754.3 | 35.2 |
| மதுபான உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 8:1 | 0.3 | 8.9 | 0.1 |
| மதுபான விற்பனைத் தவறணையின் வாடகைகள் | 12.2 | 0.4 | 9.4 | 0.2 |

Source : Report of the Taxation Commission - 1991.

கலால் தீர்வையின் சேர்க்கையினை அட்டவணை 10 இலிருந்து அவதானிக்கும் போது கலால் தீர்வை சேகரிப்புக்களில் புகையிலை தீர்வை, மதுபானத் தீர்வை இரண்டுமே 99 சதவீதத்திற்கும் கூடுதலாக உள்ளன. எஞ்சிய மதுபான உத்தரவுப் பத்திரக்கட்டணம், தவறணை வாடகை என்பவை 1 சதவீதத்திற்குக் குறைவாகவே உள்ளன. மேலும் மொத்த கலால் தீர்வை சேகரிப்புக்களில் ஏறத்தாழ 65 சதவீதம் புகையிலை மீதான வரியாகவே உள்ளது. உள்நாட்டு சிகரெட் உற்பத்தியைப் பொறுத்தவரையில் சிகரெட் உற்பத்திக்காக கலால்தீர்வை, மொத்த விற்பனைவரி என்பனவற்றை செலுத்துவதன் மூலம் சிகரெட் கொள்வனவின்போது நுகர்வோரின் செலவினத்தில் ஏறத்தாழ 72 சதவீதம் வரியாக அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும். பொதுவாக கலால்தீர்வை அவ்வப்போது அதிகரிப்பிற்கு எதிராக பொதுமக்களிடமிருந்து எதிர்ப்புகள் இல்லாமையினால் இதை அறவிடுதல் அரசாங்கத்திற்கு பிரச்சினைகள் இருப்பதில்லை.

## 3.4 சர்வதேச வர்த்தகம் மீதானவரிகள் (Taxes on International Trade)

சர்வதேச வர்த்தகம் மீதானவரிகள் இறக்குமதித் தீர்வை, ஏற்றுமதித் தீர்வை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இலங்கையில் இத்தீர்வைகளை அறவிடுவதன் பொருட்டு 1869 இல் இலங்கை சுங்கத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிரதான நோக்கமாக இலங்கையில் இறக்குமதியாகும், ஏற்றுமதியாகும் பண்டங்கள் மீது நிர்ணயமான தீர்வை அறவிடல், சட்டவிரோதக்கடத்தலைக் துப்பறிதலும், தடுத்தலும், சமுதாயப் பாதுகாப்புக்கருதி தடைகள், மட்டுப்பாடுகளை விதித்து நடைமுறைப்படுத்துதலும் ஆகும். அரசாங்க வருமானத்தில் ஏறத்தாழ 30 சதவீத சேகரிப்புக்கு சுங்கத்திணைக்களம் பொறுப்பு வகிப்பதுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்கள வருமானத்தில் சுமார் மூன்றிலொரு பங்கை மொத்த விற்பனை வரியாக இறக்குமதிகளின் போதும், கலால் திணைக்களத்திற்காக இறக்குமதிகளின் போது கலால் தீர்வையினை 1991 இலிருந்து சேகரித்து வழங்கும் பிரதான அரசிறை சேகரிப்பு நிறுவனமாகவும் விளங்குகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (1) இறக்குமதித் தீர்வை (Import Duty)

இலங்கையின் அரசியல் எல்லைக்கப்பால் இருந்து இறக்குமதியாகும் பொருட்கள் மீது விதிக்கப்படுவதாக இறக்குமதித்தீர்வை அமைகின்றது. இறக்குமதித் தீர்வையானது அரசாங்க வருமானத்தைப் பெற்றுக் கொள்ளுதல் உள்நாட்டுக் கைத்தொழில்களைப் பாதுகாத்தல், வெளிநாட்டு நாணயமாற்றைப் பாதுகாத்தல் போன்ற பிரதான குறிக்கோள்களுடன் விதிக்கப்படுகின்றது. இறக்குமதித் தீர்வை விதித்தல் மிகவும் சிக்கலான அமைப்பைக் கொண்டுள்ளது. இதற்கிணங்க 5019 வகுப்புக்களாகவும், பொருட்கள் பிரிக்கப்பட்டு மேலும், வகுப்புக்களாகவும் பிரிக்கப்பட்டு மொத்தமாக 7000 வகுப்புக்களாகத் தீர்வைகள் அறவிடப்படுகின்றன. சுங்கச்சட்டம் 19A பிரிவிற்கமைய கோதுமைத்தானியம், பால்மா, பருப்பு, மருந்துப் பொருட்கள் போன்ற அத்தியாவசிய பொருட்கள் சிலவற்றிற்கு விலக்களிக்கப்பட்டதுடன், மேலும் சில பொருட்களுக்கு சலுகைவீதத்திலும் தீர்வை அறிவிடப்படுகின்றது.

தீர்வை வீதமானது பாங்கொங் உடன்படிக்கையின் படி இருபக்க ஒப்பந்தத்திற்குள் அடங்காத பொருட்களுக்கு சாதாரண வீதத்தில் இறக்குமதித்தீர்வை விதிக்கப்படும். பொருட்களின் தன்மைகளைப் பொறுத்து 5 தொடக்கம் 250 வீதம் வரையில் தீர்வை அறவிடப்படுகின்றன. இருப்பினும் உள்நாட்டு உற்பத்தியாளரைப் பாதுகாப்பதற்கு இறக்குமதிகள் மேலும் குவிவதைத் தடுப்பதற்கு தெரிந்தெடுத்த சில பொருட்கள் (காசோலைப் புத்தகம், புகையிலை, மதுபானம், மோட்டார்வாகனம்) மீது 5 தொடக்கம் 25 வீதம் வரையிலான மேலதிகக் கட்டணமும் அறவிடப்படுகின்றன. 1992 இலிருந்து இறுப்பு ஆணைக்குழுவின் ஆலோசணைக்கமைய தீர்வை முறையை இலகுவாக்குவதற்கு 10, 20, 35, 50 சதவீதுங்கள் கொண்ட நான்கு மட்ட வரியிறுப்பு முறையொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இறக்குமதிப் பொருட்கள் மீதான சுங்கப்பெறுமானமானது 1988 ஆம் ஆண்டின் 83 ஆம் இலக்க சுங்கத்திருத்தச் சட்டத்தின் படி சாதாரண விலையாக வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இறக்குமதிக்காகக் கொண்டுவரப்பட்ட பொருள் திறந்த சந்தையில் கொள்வனவாளர், விற்பனையாளர் ஆகியோரால் சுதந்திரமாக ஒருவரிலிருந்து மற்றவருக்கு கைமாறும் விலையாகக் கொள்ளப்படும். ஆவணப்படுத்தல் முறையின் பெறுமதியானது சுங்க அதிகாரியால் மதிப்பீடு செய்யப்பட்ட விலையைவிட உயர்வாக இருக்க வேண்டும். மொத்தவரி அரசிறையில் இறக்குமதித் தீர்வையின் சார்புரீதியானபங்கு 1960 களில் ஏறத்தாழ 30 சதவீதமாக இருந்தமை, இக்காலப் பகுதியில் சென்மதி நிலுவைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொருட்டு தீவிர இறக்குமதிக்கட்டுப்பாட்டின் ஓர் கருவியாக உயர்ந்த இறக்குமதித்தீர்வை விதிக்கப்பட்டதை அது நிரூபணம் செய்கின்றது. தொடர்ந்து வந்தகாலப்பகுதியில் இறக்குமதிகளை வேறுவழிகளில் மேலும் கட்டுப்படுத்தியதால் 1975 வரையில் ஓர் வீழ்ச்சியினைப் பதிவு செய்திருந்தது. இருப்பினும் மீண்டும் 1975 இலிருந்து படிப்படியாக அதிகரித்து அண்மை ஆண்டுகளில் சராசரியாக 27 – 30 சதவீதமாக உயர்ந்துள்ளது.

1977 இன் பின்னர் திறந்த பொருளாதாரக் கொள்கையின்கீழ் இறக்குமதி தாராளமயப்படுத்தப் பட்டமையினால் இறக்குமதியின் துரித அதிகரிப்பு, இறக்குமதித்தீர்வை வீதுங்கள் உயர்த்தப்பட்டமை, மசகு எண்ணெய், கோதுமை தானியம் போன்ற சில பொருட்களும் இறக்குமதித் தீர்வைக்கு உட்படுத்தியமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். எடுத்துக்காட்டாக, சராசரி தீர்வைவீதம் 1981 இல் ஏறத்தாழ 9 சதவீதம் ஆகவும், 1989 இல் 18 சதவீதம் ஆகவும் இருந்ததைக் குறிப்பிடலாம். ஆனாலும் 1989 இலிருந்து சராசரித் தீர்வைவீதம் குறைவடைந்து வருகின்றது. 1990 இல் 15.6 சதவீதத்திலிருந்து 1991 இல் 14.7 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்திருந்தது. 1990 நவம்பரில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பொருட்கள் தவிர ஏனையவற்றிற்கான பெயரளவுத் தீர்வை ஆகக் கூடியதாக 50 வீதம்வரையில் குறைக்கப்பட்டமையும், நான்கு அமைப்புக்களைக் கொண்ட தீர்வை அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டமையும் இறக்குமதித் தீர்வை சேகரிப்புக்கள் தொடர்பான மிதமான செயலாற்றத்திற்கு பங்களிப்புச் செய்த காரணிகளாக விளங்கின.

## (11) ஏற்றுமதித் தீர்வை (Export Duty)

இலங்கையின் ஏற்றுமதித் தீர்வையானது 1915 இல் அறிமுகம் செய்யப்பட்டதாகும். ஆரம்பகாலங்களில் சகலவிதமான ஏற்றுமதிகள் மீதும் விதிக்கப்பட்ட இத்தீர்வையானது தற்பொழுது ஏற்றுமதியை ஊக்குவிக்கும் நோக்குடன் தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள், சில சிறு வேளாண்மை உற்பத்திகள் என்பவற்றின் மீது மட்டும் விதிக்கப்படுகின்றன. தேயிலையைப் பொறுத்தவரையில் குறித்துரைக்கப்பட்ட வரியாக நிறை அடிப்படையில் விதிக்கப்படுவதுடன், தற்பொழுது தேயிலை ஏலங்களில் ஒரு கிலோ கிராம் தேயிலையின் குறித்த இழிவளவான விலையை விட (ரூ.40.00) உயர்ந்த விலையைப் பெறும் தேயிலை மீது 40 வீதம் என்ற அடிப்படையில் பெறுமானவிகிதவரி அறவிடப்படுகின்றன. இறப்பர் மீதான ஏற்றுமதித் தீர்வையும் குறித்துரைக்கப்பட்ட அடிப்படையில் விதிக்கப்பட்டாலும் குறித்த பெறுமதிக்கு உயர்வாக உள்ளவற்றின் மீதே விதிக்கப்படுகின்றன. தெங்குப் பொருட்களுக்கான ஏற்றுமதித்தீர்வை, கொப்பரா, உடன்தேங்காய், தேங்காய் துருவல், என்ற வகையில் குறித்துரைக்கப்பட்ட அடிப்படையிலும், தேங்காய் எண்ணெய்க்கு 25,000 ரூபா வரை விலக்களிக்கப்பட்டு எஞ்சிய பெறுமதி மீது 40 சதவீதமாக பெறுமான அடிப்படையில் தீர்வை அறவிடப்படுகின்றன.

ஏற்றமதித் தீர்வையை விதிப்பதற்கான நோக்கங்களை அவதானித்தால், அரச வருமானத்தை திரட்டுதல், ஏற்றுமதியாளர்களின் தனியுரிமை இலாபங்களைக் கட்டுப்படுத்தல், உள்நாட்டில் பொருட்களின் விலைகளின் உறுதியைப் பேணுதல், மக்களின் நுகர்வை ஊக்குவித்தல் போன்ற தத்துவங்களில் விதிக்கப்படுவதாகும். கடந்த 15 ஆண்டுகளில் இலங்கையின் ஏற்றுமதித் தீர்வையின் சார்பு ரீதியான பங்களிப்பு பாரியதொரு வீழ்ச்சியை அடைந்துள்ளதை அவதானிக்கமுடிகின்றது. 1970 களின் இறுதியில் இதன்பங்கு மொத்த அரசிறையில் சராசரியாக ஆண்டுக்கு 31 சதவீதமாக இருந்து படிப்படியாகக் குறைவடைந்து தற்பொழுது ஏறத்தாழ 3 சதவீதமாக மிகக்குறைந்த மட்டத்தினை அடைந்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தி அடிப்படையில் தெரிவிப்பதாயின் 1980 இல் ஏற்றுமதித்தீர்வை 5.6 சதவீதத்திலிருந்து 1985 இல் 1.8 சதவீதமாகவும், 1991 இல் 0.3 சதவீதமாகவும் குறைவடைந்ததையும் குறிப்பிடலாம். இலங்கையின் பிரதான ஏற்றுமதிகளின் அரசிறை சேகரிப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியை பின்வரும் அட்டவணை தெளிவாகக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அட்டவணை II: பிரதான ஏற்றுமதிகளின் அரசிறைப்போக்குகள்

| வகை | 1980 | | 1985 | | 1991 | |
|---|---|---|---|---|---|---|
| | மில். ரூபா | % | மில். ரூபா | % | மில். ரூபா | % |
| தேயிலை | 2022 | 54.1 | 2214 | 76.2 | 492 | 43.3 |
| குறித்துரைக்கப்பட்ட வரி | 1920 | | 1182 | | 194 | |
| பெறுமான விகிதவரி | 102 | | 1032 | | 298 | |
| இறப்பர் | 1387 | 37.1 | 254 | 8.7 | 475 | 41.8 |
| தெங்குப் பொருட்கள் | 218 | 5.8 | 342 | 11.8 | 125 | 11.0 |
| ஏனைய ஏற்றுமதிகள் | 113 | 3.0 | 95 | 3.3 | 44 | 3.9 |
| மொத்தம் | 3740 | 100.0 | 2905 | 100.0 | 1136 | 100.0 |

இத்தகைய பாரிய வீழ்ச்சிக்குப் பிரதான ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி வீழ்ச்சி, சர்வதேச சந்தைகளில் இவற்றின் விலைகளில் ஏற்பட்ட மந்தமான போக்கு, போட்டி நாடுகளின் நடவடிக்கைகள், செயற்கைப் பொருட்களின் பாவனை போன்றவற்றைக் குறிப்பிடலாம். எடுத்துக்காட்டாக தேயிலை உற்பத்தியைப் பொறுத்தவரையில் 1965 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்பொழுது இலங்கையின் மொத்தத் தேயிலை உற்பத்தி வீழ்ச்சியைக்காட்ட கென்யாவின் உற்பத்தி பத்து மடங்காகவும், இந்தியாவின் உற்பத்தி இரு மடங்காகவும் அதிகரித்திருந்தன. சராசரி விளைச்சலில் கூட அந்நாடுகளுக்கு வெகு தூரமாகவே இலங்கை உள்ளது. இதே போன்றதொரு இடைவெளி இறப்பர் உற்பத்தியிலும் மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படுகின்றன. மேலும் உற்பத்திச் செலவு அதிகரிப்புக் காரணமாக உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக ஏற்றுமதித்தீர்வைகள் 1977 இன் பின்னர் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வந்துள்ளன. சுருக்கமாகக் கூறினால் பண்டவிலைகளில் ஏற்பட்ட பொதுவான வீழ்ச்சியும், உற்பத்தியாளர் இலாப எல்லைகளைப் பாதுகாக்கும் பொருட்டுத் தீர்வை அமைப்புக்களின் மீழ் நோக்கிய திருத்தங்களின் நியதிகளுக்கிசைவான கொள்கையும் ஏற்றுமதித்தீர்வையின் சார்புரீதியான முக்கியத்துவத்தை குறைத்து விட்டன. இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையும் ஏற்றுமதி நோக்கிய உபாயமாகவே உள்ளதனால் ஏற்றுமதியை ஊக்குவிக்க இத்தகைய தீர்வைத்திருத்தங்கள் தவிர்க்க முடியாததாகவே உள்ளன. எமது பிரதான ஏற்றுமதிப் பயிர்களை உற்பத்தி செய்யும் வேறு நாடுகளுடன் ஒப்பிடுகையில் இத்தகைய தீர்வைக் குறைப்பு சரியானதாகவே உள்ளன. இலங்கையின் பிரதான தேயிலை ஏற்றுமதிப் போட்டி நாடான இந்தியா, தேயிலை ஏற்றுமதி மீது தீர்வையினை விதிப்பதில்லை. அத்துடன் இறப்பரை ஏற்றுமதி செய்யும் பிரதான நாடாகிய மலேசியா மிகக் குறைந்த தீர்வையினையே அறவிடுகின்றது.

### மாகாண சபைகளால் நிர்வகிக்கப்படும் வரிகள்

மாகாண சபைகளின் 13 வது திருத்தத்தின்படி நாட்டின் நிர்வாகத்தைப் பன்முகப்படுத்தி அவற்றின் நிர்வாகத்திற்குத் தேவையான வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கு பின்வரும் வரிகளைச் சேகரிப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளன.

- மொத்த சில்லறை வர்த்தகம் மீதான மொத்தவிற்பனை வரி நிர்வாகம்
- பந்தயம், லொத்தர்கள் என்பவற்றின் வரிகள்
- மதுபான விற்பனை நிலையங்கள் மீதான அனுமதி உத்தரவுப் பத்திரக் கட்டணம்
- சொத்துக்கள் மாற்றல்கள் மூலமான முத்திரைவரி
- மோட்டார் வாகன உத்தரவுப்பத்திரக் கட்டணம்
- ஏனைய விதிப்பனவுகளும், கட்டணங்களும்

### 4. முடிவுரை

தனியார் துறையில் தங்கியிருக்கும் பொருளாதாரமொன்றில் அரசாங்கத்தின் பொருளாதாரரீதியான முதலீடுகளின் முக்கியத்துவம் குறைவடைந்து செல்லுமாயினும், சமூக உள்ளமைப்புக்களை வலுப்படுத்துவதற்கு வரிஅரசிறை இன்றியமையாததாக உள்ளன. அரசாங்கத்தின் மொத்த செலவானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 30 சதவீதமாக இருக்க மொத்த அரசிறை 20 சதவீதமாக மட்டுமே உள்ளது. அதிகரித்த பாதுகாப்புச் செலவினம், வறுமை ஒழிப்பு, உணவு மானியம், கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள், இலவசக்கல்வி, சுகாதார சமூகநல சேவைகள், போசாக்குத் திட்டம் போன்ற சமூகநலச் செலவீடுகளுக்குத் தேவையான வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வரிவிதிப்பு இன்றியமையாத கருவியாகவே உள்ளது.

அரசாங்கத்தின் இறைக்கொள்கையின் ஒரு கருவியான வரிக்கொள்கையைப் பொறுத்தவரையில் 1977 வரையில் பொருளாதார வளர்ச்சிக்கான உரிய ஊக்குவிப்புக்களை வழங்குவதை விட வரியின் மூலம் மூலவளங்களைத் திரட்டுகின்ற முயற்சி வெற்றிபெற்றிருந்ததை குறிப்பிடலாம். எனினும் இக்காலப் பகுதியில் மிதமான பொருளாதார வளர்ச்சி, உயர்ந்த வேலையின்மை வீதம் (25 % ) சென்மதிநிலுவைப் பிரச்சினை, மக்களின் வாழ்க்கைத்தர பாதிப்பு போன்ற பிரச்சினைகள் கட்டுப்படுத்திய பொருளாதார சூழலில் தலைதூக்கியிருந்தன. ஆனால் 1977 இன்பின்னர் திறந்த பொருளாதாரக் கொள்கை, நடைமுறையில் உயர் பொருளாதார வளர்ச்சியை எய்த, தனியார் முதலீடுகளுக்கு ஊக்கமளிக்க நாணய, இறை, நாணயமாற்றுவீதக் கொள்கைகளைப் பயன்படுத்தியது. இதன்பயனாக தனியார் துறைக்கு விரிவான சலுகைகளையும், நிவாரணங்களை அளிக்கவும், சாதகமான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கவும் வரிமூலமான பல்வேறு நிவாரணங்கள் அளிக்கப்பட்டு வந்துள்ளன.

தனியார் துறையினருக்கான வரி நிவாரணங்கள் பொருளாதார அபிவிருத்திக்கு இட்டுச்செல்லும் என்ற மேற்கு நாடுகளின் கொள்கையையே இலங்கை கடைப்பிடித்து வருகின்றது. எடுத்துக்காட்டாக பொதுக்கம்பனிகளில் முதலீடு செய்வோருக்கு வரி நிவாரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், இக்கம்பனிகளின் செயற்பாடுகள் நம்பிக்கையளிக்கக் கூடியனவாக இருக்கவில்லை. பதிலாக அரசுக்குக் கிடைக்கவேண்டிய கணிசமான அறவீடுகளே அநாவசியமான சந்தர்ப்பச் செலவாகிக் கொண்டன. வரிச்சலுகைகள், வரி நிவாரணங்கள் மூலம் நீண்டகால பொருளாதார அபிவிருத்தி ஏற்படும் என்ற கோட்பாடு மிகைப்படுத்தப்பட்ட வாதமே தவிர எந்தவொரு நாட்டிலும் காரண காரிய ரீதியில் நிரூபிக்கப்படவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரில் வரிகளில் தங்கியிருத்தல் இலங்கையின் வரி அறவிடல் முறையின் ஓர் பிரதான அம்சமாக உள்ளது. அண்மைக்காலங்களில் இலங்கையின் மொத்த வரி வருமானத்தில் நேரில் வரியின் பங்கு 80 சதவீதமாக இருக்க, மொத்த வரிவருமானம், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 18 சதவீதமாக இருந்து வருகின்றது. இவ்விகிதாசாரம் ஏனைய குறைவிருத்தி நாடுகளுடன் ஒப்பிடுகையில் உயர்ந்தளவான பங்களிப்பு எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. மொத்த சனத்தொகையில் 50 சதவீதத்தினருக்கு மேற்பட்டவர்கள் உணவு முத்திரை பெறும் வறியவர்கள் வாழ்கின்ற இந்த நாட்டில் இது உயர்வானதாகவே உள்ள தென்பதை மறுப்பதற்கில்லை. பொருளாதார அபிவிருத்தி, முதலீடுகளுக்கான ஊக்குவிப்பு போன்ற சாட்டுகளை வைத்துக்கொண்டு வரிச்சலுகைகள், வரிவிலக்களிப்புக்களை அனுமதிக்கின்ற வேளையில் வறிய மட்டத்திலுள்ள மக்களையும் பாதிக்கக் கூடிய பொருட்கள் சேவைகள் மீதானவரிகள் படிப்படியாக அத்தியாவசியப் பொருட்கள் மீதும் விதிக்கப்பட்டு வருகின்றமை பொருளாதார சமமின்மை விரிவடைவதையே புலப்படுத்துகின்றது.

இலங்கையில் வருமானவரிக்கு எதிரான விளைவுகளையே பொருட்கள் சேவைகள் மீதான வரிகள் கொண்டிருக்கின்றன. வருமானவரி விருத்திமுறையில் விதிக்கப்படுவதனால் வருமான வேறுபாட்டுக்கேற்ப வரிச்சுமையும் அமையும். ஆனால் குறித்த பொருட்கள், சேவைகளைக் கொள்வனவு செய்வதனூடாக செல்வந்தர்கள், வறியவர்கள் ஒரேவரித்தொகையைச் செலுத்துவதன் மூலம் வரிவிதிப்புக் கொள்கைக்கு முரணான தேய்வீதமான விளைவையே இவ்வரிமுறை கொண்டுள்ளமை ஓர் பிரதான குறைபாடாக உள்ளது. இதைத் தவிர்க்க செல்வந்தர்கள் நுகருகின்ற ஆடம்பரப் பொருட்கள் மீது உயர்ந்த வீதமாகவும், அத்தியாவசிய நுகர்வுப் பொருட்கள் மீது குறைந்த வரிவீதமும் பின்பற்றப்பட்டாலும் இவ்வரிவிதிப்பு பொதுவாக வறிய மக்களையே மிக மோசமாகப் பாதிக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை.

சில நாடுகளின் அண்மைக்கால அனுபவங்களின் படி வரிவீதங்களைக் குறைத்து, வரி அறவிடும் அடிப்படை முறைகளை எளிமையாக்குவதால் வரி வருமானம் அதிகரிக்கும் என்ற கோட்பாட்டையே இலங்கை கடந்த சில ஆண்டுகளாக பின்பற்றிவரும் உபாயமாக உள்ளது. வரிவிகிதங்களைக் குறைப்பதுடன் வரிச்சலுகைகளை ஒழிப்பதும் முன்னாள் நிதியமைச்சரின் குறிக்கோளாக இருந்தது. இந்த வழிமுறைகளில் தமது குறிக்கோளை ஓரளவுக்கு எய்தியுள்ளதாகவே தெரிவிக்கப்படுகின்றன. இதற்கிணங்க வருமானவரி அடிப்படைகள் இலகுவாக்கப்பட்டமை தற்பொழுது சுங்கத்தீர்வை, மொத்தவிற்பனைவரி ஆகியவை நான்கு மட்ட வரிவிதிப்பு முறையாகக் கொண்டு வரப்பட்டமை வரவேற்கக் கூடியனவாகவும் உள்ளன.

வரி விதிப்பு ஆணைக்குழுவின் விதந்துரைப்புகளுக்கமைய வருமானவரி விடுதொகை அதிகரித்தமை, வருமானவரி எல்லை வீதம் குறைக்கப்பட்டமை, செல்வவரி இல்லாதொழிக்கப்பட்டமை, தகமைக் கொடுப்பனவுகள் சில நீக்கப்பட்டமை, நான்கு மட்ட வரிவிதிப்புமுறை கொண்டுவரப்பட்டமை 1994-95 இலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட வரிமுறையின் நடைமுறைப்படுத்துதல் போன்ற சீர் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டிய ஒப்புரவுத்தன்மை (Equity) பேணப்படவில்லை. எடுத்துக்காட்டாக வரிச்சலுகை, அரசஊழியர்கள் உட்பட பல அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களுக்கான வருமானவரியிலிருந்து விலக்களிப்புக்கள் போன்றவற்றை இல்லாதொழித்து வரிசெலுத்த தகுதியுடையோர் அனைவரும் வரி செலுத்த வேண்டும் என்பதாகும். அவ்வாறு செய்வதன் மூலம் நாட்டின் பொருளாதார சமமின்மையை ஓரளவுக்கு குறைக்க முடிவதுடன், உளவியல் ரீதியில் தனியார்துறை வரி ஏய்ப்புக்கள் செய்வோரின் அளவும் குறைவடையும். செல்வந்தர்களின் பொருளாதார நிலைகளைத் தாக்கி பொருளாதார சமமின்மைகளைக் குறைக்கக் கூடிய வரிகள் இல்லாது மறைந்து கொண்டு செல்கின்ற வேளையில் வறியவர்களை அதிகளவுக்கு பாதிக்கின்ற வரிகளின் பங்கே அதிகரித்து வருகின்றமை ஓர் துரதிஷ்டவசமானதாகும். இத்தகைய சூழ்நிலையில் இக்குறிக்கோள்களை அடைவதற்கு எஞ்சியிருக்கின்ற ஒரேயொரு கருவியான வருமானவரியை செயற்றிறனுள்ள வகையில் பயன்படுத்துவதுடன், வறிய மக்களைப் பாதிக்காத வகையில் பொருட்கள் சேவைகள் மீதான வரிகளையும் ஒருங்கே அமுல் செய்வதன் மூலமே சமூக பொருளாதார ரீதியில் ஒப்புரவுத் தன்மையை எய்தமுடியும் என்பது மிகைப்படுத்தப்பட்ட கூற்றாக அமையமாட்டாது எனலாம்.

## உசாத்துணைகள்


1. Central Bank of Sri Lanka - Annual Report. various issues.
2. Department of census and statistic (1992); Census of Public sector and corporation sector employment - 1990.
3. Department of census and statistics (1987); Labour force and socio Economic Survey 1985 - 86.
4. Department of Inland revenue; Admnistration Report of the Commissioner General of Inland Revenue various issues.
5. Department of Inland Revenue (1990): Manual of Income Tax and Wealth Tax 1990 - 91.
6. Department of Inland Revenue (1991):Taxation 1991 - 92.
7. Department of Inland Revenue (1990): Manual of Turn over Tax Law.
8. Government of Sri Lanka (1990): Inland Revenue Act no 28. of 1979 and Amendments.
9. Government of Sri Lanka (1991): Report of the Taxation commission 1990. sessional paper No 1. 1990.
10. Karalasigham. P (1986): A Guide to Taxation,National Tax Payers Society of Sri Lanka.
11. Ministry of Policy Planing and Implementation (1991) : Public Investment 1991 - 1995
12. Karunatilleke, H.N.S (1987): The Economy of Sri Lanka, Centre for Demographic and socio Economic Studies, Colombo.
13. சிவாஜி . பி (1990) ; இலங்கையின் ஊழியப்படை பண்புகள்: ஓர் கண்ணோட்டம், பொருளியலாளன், மலர் 3, 4 இதழ் 3,4,1
14. World Bank (1992) : World Development Report, 1992
15. யசபால கருணாசிங்க (1989) வரியோசனைகள் தொடர்பான ஒரு குறிப்பு, பொருளியல் நோக்கு, மலர் 15, இதழ் 7-9.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No

## ஆசிய நாடுகளில் சுதந்திர........

வலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆசியாவிலேயே முதலாவது சுதந்திர வர்த்தக வலயம் 1965 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தினால் கன்ட்லா (Kandla) என்னுமிடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு மிகவும் கட்டுப்பாடான சூழ்நிலைகளின் கீழ் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் செயற்பட வேண்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

தாய்வானில் 1966 இல் காயோசியுங் (Kaohsiung) கிலும் 1970 இல் நான்சியிலும் (Nantze), 1971 இல் தைசுங்கிலும் (Taichung) மூன்று வலயங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தென் கொரியாவில் மாசன் (Masan), இரி (Iri) ஆகிய இரு சுதந்திர ஏற்றுமதி வலயங்கள் முறையே 1971 இலும் 1975 இலும் தொடங்கப்பட்டன. மாசன் சுதந்திர ஏற்றுமதி வலயம் ஆரம்பிக்கப்பட்ட நான்கு வருடங்களில் ஏறக்குறைய 88. 5 மில்லியன் டொலர் வெளிநாட்டு முதலீடு உட்புகுந்தது. இதில் 77. 7 மில்லியன் டொலர்கள் அயல் நாடான யப்பானில் இருந்து முதலீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 1971 இன் நடுப்பகுதியிலிருந்து இங்கிருந்து ஏற்றுமதி செய்த 105 நிறுவனங்களில் 95 யப்பான் நாட்டைச் சேர்ந்தவை.

இவை போன்ற வலயங்கள் 1966 இல் சிங்கப்பூரிலும், 1970 – 80 காலத்தில் மலேசியாவிலும் ஆரம்பிக்கப்பட்டன. மலேசியாவில் சேலாங்கூர் (3), பெனாங் (4), மலாக்கா (2), ஜோகூர் (2), கெலான்ரன் (1), பாகாங் (1) ஆகிய இடங்களில் 13 வலயங்கள் தொடங்கப்பட்டன. 1969 இல் பிலிப்பைன்சில் பாரான் (Bataan), என்னுமிடத்திலும் இலங்கையில் 1978 இல் கட்டுநாயக்காவிலும் ஏற்றுமதி செய்முறை வலயங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1992 இல் இலங்கையில் 211 நிறுவனங்கள் வர்த்தக உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன. இவற்றுள் 79 கட்டுநாயக்காவிலும், (Kipz),38 பியகமவிலும் (Bipz),8 கொக்கலவிலும் (Kg IPZ),ஏனைய 86 நிறுவனங்களும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடபட்டிருந்தன. சீனாவில் திறக்கப்பட்ட "விசேட பொருளாதார வலயங்களில் (SEZ), மிகப் பெரிய வலயம் சென்ஸ்சென் (Shenzhen) என்னுமிடத்தில் அமைந்தது. 1985 இல் மொத்தமாக முதலீடு செய்யப்பட்ட 840 மில்லியன் டொலரில் ஏறக்குறைய மூன்றிலிரண்டு பகுதியினை இவ்வலயம் கொண்டிருந்தது. 1983 இல் மொத்த ஏற்றுமதி பெறுமதி 230 மி. டொலர்களாகும். 1980 இல் உலகரீதியாக முழுமையாக இயங்கிய 53 வலயங்களில் ஆசியாவில் இருபதும். கரீபியன், லத்தின் அமெரிக்க நாடுகளில் இருபதும், ஆபிரிக்காவில் ஆறும், மத்திய கிழக்கில் ஆறும், பசிபிக்கில் ஒன்றும் அமைந்திருந்தன. 1986 இல் இது 175 ஆக அதிகரித்ததுடன் 1.3மி . மக்கள் இவ்வலயங்களில் வேலைவாய்ப்புப் பெற்றிருந்தனர். நாடுகளினடிப்படையில் 1981 இல் வருடாந்த ஏற்றுமதிப் பெறுமதியானது டொலர்களில் தாய்வானில் 1205 மி. ஆகவும் மலேசியாவில் 876 மில். ஆகவும், கொரியாவில் 643 மி. ஆகவும் இருந்தது. வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில் தாய்வானில் 80,166 பேரும் மலேசியாவில் 73,110 பேரும், தென் கொரியாவில் 33,972 பேரும், பிலிப்பைன்ஸ்சில் 22,771 பேரும், இலங்கையில் 14,740 பேரும் வேலைவாய்ப்புப் பெற்றிருந்தனர். 1992 இல் இலங்கையில் முதலீட்டுச் சபை (Board of Investment) நிறுவனங்களில் வேலை வாய்ப்புப் பெற்றிருந்தோரின் மொத்த எண்ணிக்கை 104,220 ஆக இருந்தது. இதில் 65465 பேர் அல்லது 63 சதவீதமானோர் பிடைவை, ஆடை அணிகள், தோற்பொருட்கள் சார்ந்த துறையில் வேலை வாய்ப்புப் பெற்றிருந்தனர். ஆடைகள் சாராத துறையில் சார்பு ரீதியான வேலை வாய்ப்பின் பங்கானது 1991 இல் 37 சதவீதத்திலிருந்து 1992 இல் 40 சதவீதமாக அதிகரித்தது.

கைத்தொழிற் பிரிவுகளில் குறிப்பாக இரசாயனப் பொருட்கள், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாஸ்ரிக் பொருட்கள், கடதாசி மற்றும் கடதாசிப் பொருட்கள், உணவு, குடிபான வகைகள், புகையிலை உற்பத்திகள் என்பன உயர்வான வீதத்தில் வேலைவாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்களை அளிப்பதில் முன்னின்ற கைத்தொழிற் பிரிவுகளாக அமைந்திருந்தன. 1992 இல் அனுமதிக்கப்பட்ட மொத்த முதலீட்டுச் செயற்றிட்டங்களின் (Projects) பெறுமதி 17, 610 மில்லியன் ரூபாவாக இருந்தது. யப்பான், கொரியா, சிங்கப்பூர், ஹொங்கொங், இத்தாலி, தாய்வான், மலேசியா, ஜேர்மனி, பாகிஸ்தான், பேர்மூடா, நெதர்லாந்து, துபாய் ஆகிய நாடுகளிலிருந்து முதலீட்டாளர்கள் வந்துள்ளனர். முதலீட்டுச் சபை நிறுவனங்களின் மொத்த ஏற்றுமதி வருமானம் 1992 இல் 43, 264 மில்லியன் (SDR 701 மில்லியன்) ஆக இருந்ததுடன் 1991 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 96 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஏற்றுமதி செய்முறை வலயங்கள், அவை அமையப் பெற்ற நாடுகளில் கைத்தொழில் விருத்தியை ஊக்குவிப்பதாக அமைந்தாலும் அதனை விடப் பல நன்மைகளை இந் நாடுகள் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. அவையாவன;

1. ஏற்றுமதிக்கான கைத்தொழில்களின் விருத்தியை ஊக்குவித்தல்
2. வெளிநாட்டு முதலீடு, உயர் தொழில்நுட்ப அறிவினைப் பெற்றுக் கொள்ளல்.
3. உற்பத்தியை அதிகரிப்பதுடன் சர்வதேச சந்தைப்படுத்தலை விருத்தி செய்தல்.
4. ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதன் மூலம் வெளிநாட்டு நாணய மாற்றினை உருவாக்குதல்.
5. புதிய வேலை வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல்.
6. உள்நாட்டு முகாமைத்துவ தொழில்நுட்பங்களைத் தரமுயர்த்துதல்.
7. உள்நாட்டு மூலப்பொருட்களின் பயன்பாட்டினை அதிகரித்தல்.

ஆகிய நன்மைகளை இந்நாடுகள் பெறக்கூடும் என எதிர் பார்க்கப்பட்டது. வளர்முக நாடுகளில் அண்மைக்காலங்களில் ஏற்பட்டு வரும் பொருளாதாரக் கொள்கை மாற்றங்களினால் இவை பல நன்மைகளை அளிப்பனவாகவும் அமைந்துள்ளன.

——— எஸ். அன்ரனி நோபேட்

மார்க்கம் இதழைப் பெற விரும்புபவர்கள் தொடர்பு கொள்க -
திரு.ரி. தம்பையா
விரிவுரையாளர், பொருளியல்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்
50, புதிய வீதி,
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய-பசுபிக் பிரதேச சமூக பொருளாதார ஆணைக்குழுவின் (ESCAP) அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புக்களும் அவற்றுடனான இலங்கையின் விசேடதொடர்புகளும்.

டக்ளஸ் ஜயசேகரா

## அறிமுகம்

1980 களில் வெளிப்பட்ட உலகப் பொருளாதாரத்தின் ஒன்றிணைந்த வளர்ச்சிக்குப் பெரும்பாலும் தொழில்நுட்ப வளர்ச்சியே காரணமாக இருந்தது. வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் பெருந்தொகையான பாச்சல்கள் வர்த்தகத்துக்கும் முதலீட்டுக்குமிடையில் புதிய தொடர்புகளை உருவாக்கக் காரணமாக இருந்தன. மரபுரீதியான வர்த்தகம் பற்றிய பொதுக் கருத்து வீழ்ச்சியடைய தற்போது காணப்படும் வெளிநாட்டு வர்த்தகம், தொழில்நுட்ப மற்றும் கூட்டு முயற்சிக்கான உடன்படிக்கைகள் போன்ற ஒப்பந்த அடிப்படையிலான தொடர்புகள் முன்னுரிமை பெறத் தொடங்கின. இதன் விளைவாக புதிய வர்த்தகத் தொடர்புகள், அமைப்புரீதியான மாற்றங்கள் விரைவாக ஏற்படத் தொடங்கின. கடந்த இரண்டு, மூன்று தசாப்தங்களாக உலகப் பொருளாதாரத்தில் குறிப்பாக விருத்தியடைந்த தனிப்பட்ட நாடுகள் கொண்டிருக்கும் சார்புரீதியான முக்கியத்துவத்தில் குறிப்பிடத்தக்க நகர்வு காணப்படுகின்றது. வடஅமெரிக்கா, ஐரோப்பிய சமூகம், வடக்கு மற்றும் கிழக்கு ஆசியா ஆகிய மூன்று வர்த்தகப் பிரதேசங்கள் உலகில் முதன் நிலையில் உள்ளன. பசிபிக் வட்ட நாடுகளுக்கிடையிலான வர்த்தகமானது அத்திலாந்திக்கைக் கடந்து செல்லும் அளவுக்கு வர்த்தகத்தில் வளர்ச்சி பெற்றுள்ளது. இத்தகைய மாற்றங்களினால் ஏற்பட்ட புதிய சந்தர்ப்பங்கள், புதிய சவால்கள் ஆசிய-பசிபிக் பிரதேசத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

1993 இல் காணப்பட்ட ஒன்றிணைந்த வர்த்தக ஒழுங்குகளும் பிரதேச ரீதியான வர்த்தக எழுச்சியும் ஐரோப்பிய சமூகத்துக்கான தனியான சந்தையையும் (European Economic Area) ஐரோப்பிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தையும் (EFTA- European Free Trade Agreement) வலியுறுத்தி நின்றன. அத்துடன் 1994 ஆம் ஆண்டு செய்யப்படவிருக்கும் வடஅமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (NAFTA - North American Free Trade Agreement) என்பதும் ஆசிய பசுபிக் பிரதேசத்தினைப் பாதிக்கக் கூடிய முக்கிய அம்சமாகும். உலகின் மிக செல்வமிக்க 700 மில்லியன் மக்களையும் உலக வெளியீட்டில் மூன்றில் இரண்டு பகுதியையும் கொண்டிருக்கும் இச்சந்தையில் மேற் கூறப்பட்ட இரு பிரதேசரீதியான வர்த்தகக் கூட்டுக்களின் நுழைவானது வளர்முக நாடுகளில் பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு நெருக்கடியாகவே அமையும். இந்தப் பிரதேசரீதியான கூட்டுக்கள் மூலம் அவை தமக்கிடையே பல்பக்க ஒத்துழைப்பை அதிகரித்துச் செல்வதாக இருந்தாலும் சரி அல்லது பாரிய அளவில் மேற்கொள்ளப்படும் பல்பக்க முயற்சிக்கான ஒரு தடையாகச் செயற்பட்டாலும் சரி அவை வளர்முக நாடுகளைப் பாதிக்கவே செய்யும்.

உலக வர்த்தக ஒழுங்கில் ஏற்பட்டுவரும் மூன்றாவது பிரதான மாற்றமானது மீளமைக்கப்பட்ட பல்பக்க வர்த்தகப் பிரிவினுக்கான நிறுவனங்கள் மற்றும் உருகுவே வட்டத்தினை (Uruguay Round) நிறைவு செய்வதன் மூலம் அடையப்பட இருக்கின்றது. சர்வதேச வர்த்தகத்தின் மரபுரீதியான, மரபு ரீதியற்ற பகுதிகளில் புதிய பல்பக்க கட்டளைச் சட்டங்களை (Norms) கலந்து பேசுவதில் ஆசிய - பசுபிக் பிரதேசத்தில் உள்ள வளர்முக நாடுகளினால் குறிப்பிடத்தக்க முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. 1980 களிலும் 1990 இன் ஆரம்பகாலங்களிலும் பலம் வாய்ந்த வர்த்தக நாடுகள் இருபக்க (Bilateralism) மற்றும் ஏகபோக வர்த்தகத்துக்குள் (Unilateralism) மீண்டும் இழுக்கப்படுவதைக் காணமுடிகின்றது.

## ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் அமைப்புரீதியான மாற்றங்கள்.

ஆசிய - பசுபிக் பிராந்திய நாடுகளில் அமைப்பு ரீதியான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதுடன் அவற்றின் சர்வதேச வர்த்தகத்திலும் இதன் பாதிப்புக்களைக் காணமுடிகின்றது. (1) பூகோளரீதியாகவும் பிரதேசரீதியாகவும் ஏற்பட்ட முதலாவது பிரதான பொருளாதார, வர்த்தக மேலாண்மை யப்பானினாலேயே மேற்கொள்ளப்பட்டது. இப்பிரதேசத்தின் பெரும்பாலான பொருளாதாரங்கள் யப்பானிய பொருளாதாரத்துடன் பரந்தளவில் ஒன்றுடனொன்று தங்கியிருக்கும் பொருளாதார, வர்த்தகத் தொடர்புகளினை விருத்திசெய்து கொண்டுள்ளன. (2) ஆசியாவின் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலுள்ள சில நாடுகள் குறிப்பிடத்தக்க அளவில் தயாரிப்புக் கைத்தொழில் மற்றும் தொழில் நுட்பத்தில் இயலளவைக் கொண்டிருந்தாலும் தமது முதலீட்டு நடவடிக்கைகளை ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கத் தயக்கம் காட்டுகின்றன. தயாரிப்புத் துறையைப் பிரதானமாகக் கொண்ட ஏற்றுமதியாளர்கள் என அழைக்கப்படும் 15 வளர்முக நாடுகளில் 10 நாடுகள் ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் காணப்படுகின்றன. (3) சீனா, இந்தியாவை உள்ளடக்கிய பிரிதொரு பிரிவைச் சேர்ந்த நாடுகள் தமது பொருளாதார நடவடிக்கைகளில் குறிப்பாக வர்த்தகத்தை அதிகரிக்கும் நோக்குடன் கொள்கைகளை ஆவலுடன்

டக்ளஸ் ஜயசேகரா
பணிப்பாளர்
சர்வதேச ஆய்வுப் பிரிவு
மார்கா நிறுவகம்
கொழும்பு - 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைக்கின்றன. இத்தகைய பல்வகைத் தன்மையின் வளர்ச்சியின் காரணமாக புதிய வர்த்தக வாய்ப்புக்கள் உருவாக்கப்படுகின்றன.

ஆசிய பொருளாதார வட்டத்தில் "பறக்கும் வாத்துக்கள் மாதிரி" (Fly geese model) நன்கு பிரபல்யமானது. பல்வேறு படிநிலைகளைக் கொண்ட ஆசிய நாடுகளின் அபிவிருத்தியில் எழுச்சியடைந்து வரும் சர்வதேச தொழிற்பிரிவு (Division of Labour) பற்றிய ஒரு விளக்கமாக இது உள்ளது. இந்த மாதிரியானது வளர்முக நாடுகளில் ஒப்பீட்டு ரீதியான அனுகூலங்களின் தொடர்ச்சியான மாற்றத்தினை உயர்நிலையில் வற்புறுத்துகின்றதுடன் குறைநிரப்புத்தன்மையை அதிகரிப்பதன் மூலம் இதனை அடைய முடியும் எனவும் விளக்குகின்றது. இப்பிராந்தியத்தின் பொருளாதார பல்வகைத் தன்மையின் வளர்ச்சி எவ்வாறு பிரதேசங்களுக்கிடையிலான வர்த்தகப் பாய்ச்சலை, முதலீடு மற்றும் தொழில்நுட்பத்தை அதிகரிக்கின்றது என்பதையும் இம் மாதிரி காட்டுகின்றது. இம் மாதிரியின் அடிப்படையில் வரையறை செய்யும் போது 3 வகையான பிரிவுகளைக் கொண்ட நாடுகளை அடையாளம் செய்யலாம்.

(1) ஹொங்கொங், கொரியக் குடியரசு, சிங்கப்பூர், தாய்வான் ஆகிய நாடுகள் மாதிரியின் தொடக்ககாலப் பிரிவில் உள்ளடக்கப்படுகின்றன. இந்நாடுகள் மூன்று தசாப்தத்துக்கு முன் ஏற்றுமதி மூலமான வளர்ச்சியை ஆரம்பித்துவிட்டன. இந்நாடுகள் இன்று சர்வதேச வர்த்தகத்தின் கட்டுமான அமைப்பிலும், சேவையிலும் மிகச் சிறந்த அனுகூலங்களைக் கொண்டிருக்கின்றன.

(2) இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், புறூணி, நேபாளமும், பங்களாதேஷும் தவிர்ந்த தென்னாசிய நாடுகள், சீனா என்பன இப்பிரிவில் உள்ளடக்கப்படுகின்றன. ஆசியான் நாடுகள் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட வர்த்தகத்தைக் கொண்டவை. தென் ஆசிய நாடுகளும், சீனாவும் வெளிநாட்டுவர்த்தகத்தின் கட்டுமான அமைப்புகளில் பல பொதுவான பண்புகளைக் கொண்டுள்ளன. இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் சர்வதேச வாத்தகத்தை அடிப்படையாகக் கொண்ட தனியார்துறைகளை ஆசியாவின் சில நாடுகளுடன் ஒப்பிடக் கூடியளவுக்குக் கொண்டிருக்கின்றன.

(3) இந்தோ – சீன அரசுகளையும், பசுபிக் நாடுகளையும் உள்ளடக்கிய முறையில் மூன்றாவது பிரிவு காணப்படுகின்றது. ஏற்றுமதி மற்றும் கட்டுமான சேவைகளிலும் பின்தங்கியுள்ளதுடன் மிகக்குறைந்த வருமான நாடுகளாகவும் உள்ளன. எவ்வாறு இருப்பினும் வியட்னாம் ஒரு உள்ளார்ந்த தன்மைகளைக் கொண்ட ஒரு வளர்ச்சி மையமாகத் தோற்றம் பெற்றுவருகிறது.

ஆசிய – பசுபிக் பிராந்தியத்திலுள்ள வளர்முக நாடுகள் கடந்த தசாப்த காலமாகப் படிப்படியாக வர்த்தகத் தாராளமயமாக்கல் மற்றும் சந்தைச் சக்திகளின் நடைமுறைகள், தத்துவங்கள் என்பவற்றினால் கவரப்பட்டு வந்துள்ளன. பல்பக்க நிதிநிறுவனங்களினால் அமைப்பு ரீதியான மறுசீரமைப்புக் கொள்கைகளுக்கு அளிக்கப்பட்ட ஆதரவு, அநேக வளர்முக நாடுகளைத் திறந்த பொருளாதாரங்கள், அதிகளவிலான வர்த்தகத் தாராளமயமாக்கல், தனியார் துறை ஈடுபாடு நோக்கித் தள்ளியது. வளர்முக நாடுகளின் நன்மைக்காக மேற்கொள்ளப்படும் இந்த வர்த்தகத் தாராளமயமாக்கலானது வெளிநாடுகளிலிருந்து முதல், தொழில்நுட்பங்களைக் கவர்ந்து கொள்வதன் மூலம் வர்த்தகத்தில் விரிவான விரிவாக்கத்தை ஏற்படுத்த முடியும். சர்வதேச முதலீட்டுச் சக்திகள் எவ்வாறு கிழக்காசியாவிலும், ஆசியான் நாடுகளிலும் அவற்றின் சொந்த பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்துவதற்குக் காரணமாக இருந்தன என்பதை இப்பிரதேச நாடுகள் அறிந்து கொண்டுள்ளன.

## "எஸ்காப்" வளர்முக நாடுகளின் வர்த்தகம்

உலக நாடுகளுடன் எஸ்காப் பிரதேச வளர்முக நாடுகளின் வர்த்தகமானது அண்மைக் காலங்களில் விரைவான வளர்ச்சியைக் கொண்டுள்ள. 1980 – 90 காலத்தில் உலக ஏற்றுமதி 78 வீதமாகவும் இறக்குமதி 79 வீதமாகவும் அதிகரித்துள்ளது. எஸ்காப் வளர்முக நாடுகளின் உலக நாடுகளுடனான ஏற்றுமதி 198 வீதமாகவும் இறக்குமதி 183 வீதமாகவும் அதிகரித்தன. சர்வதேச வர்த்தகத்தில் இந்நாடுகளின் பங்கு 1980 இல் 8 வீதமாகவும் 1985 இல் 12 வீதமாகவும் 1990 இல் 14 வீதமாகவும் அதிகரித்துச் சென்றுள்ளது. சர்வதேச வர்த்தகத்திலான எஸ்காப் வளர்முக நாடுகளின் பங்கு அதிகரித்துக் காணப்பட சர்வதேசரீதியாக எல்லா வளர்முக நாடுகளின் பங்கு வீழ்ச்சிப் போக்கையே காட்டுகின்றது. வளர்முக நாடுகளில் எஸ்காப் வளர்முக நாடுகளே சர்வதேச வர்த்தகத்தில் அதிக பங்கினைக் கொண்டிருக்கின்றன. உலக வர்த்தகத்தின் குறிப்பிடத்தக்க தாக்கமானது இந்நாடுகளிலேயே, குறிப்பாக கொரியக்குடியரசு, ஹொங்கொங், தாய்வான், சிங்கப்பூர், சீனா, தாய்லாந்து, மலேசியா ஆகிய ஏழு நாடுகளிலேயே ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பிராந்தியத்தின் ஏற்றுமதியானது உலக ஏற்றுமதியில் 23 வீதத்தை வகிக்கின்றது. விருத்தியடைந்த நாடுகளான யப்பான், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய மூன்று நாடுகளும் இப்பிராந்திய ஏற்றுமதியில் 43 வீதத்தையும் வளர்முக நாடுகள் 57 வீதத்தையும் வகிக்கின்றன. இப்பிராந்திய நாடுகளை வர்த்தக ரீதியாக நோக்கினால் வட அமெரிக்கா, ஐரோப்பிய, பிரதேசங்களுக்கு அடுத்ததாக உலக வர்த்தகத்தில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஆசிய– பசுபிக் பிரதேச நாடுகள் முழுவதும் ஒரு வர்த்தக இயக்கப் பகுதியாக இருந்தாலும், வர்த்தக அனுபவங்களின் பல்வகைத் தன்மைகளைக் கூட்டுமொத்தமாகப் பிரதிபலிக்கவில்லையென்றே கூற வேண்டும். சீனா, ஹொங்கொங், கொரியக் குடியரசு, தாய்வான் ஆகிய நான்கு கிழக்காசியப் பொருளாதாரங்கள் இப் பிரதேச வளர்முக நாடுகளின் ஏற்றுமதியில் 60 வீதத்தை வகிக்கின்றன. ஐந்து ஆசியான் நாடுகள் 34 வீதத்தையும் ஏனைய நாடுகள் 6 வீதத்தையும் கொண்டுள்ளன. தென்னாசியாவின் ஏற்றுமதி 3 வீதத்துக்கு சற்று அதிகமாகக் காணப்படுகிறது.

## "எஸ்காப்" வளர்முக நாடுகளின் பிரதேச வர்த்தகம்

எஸ்காப் வளர்முக நாடுகளுக்கிடையிலான 1980 –90 கால வர்த்தகத்தில் சில பிரதான அம்சங்கள் தெளிவானவை. உலக நாடுகளுடனான வர்த்தகத்திலும் பார்க்க இப்பிரதேச நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் விரைவாக அதிகரித்துள்ளது. இந்நாடுகளுக்கிடையிலான வர்த்த (Intra -regional) கத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுமதியானது 1980 இல் 23.7 வீதமாகவும் 1985 இல் 27.6 வீதமாகவும் 1990 இல் 30.1 வீதமாகவும் அதிகரித்தது. இறக்குமதியானது 1980 இல் 19.1 வீதமாகவும் 1985 இல் 24.7 வீதமாகவும் 1990 இல் 27.7 வீதமாகவும் அதிகரித்தது. ஆசியாவே இன்று ஒரு பாரிய வாடிக்கையாளனாக விளங்குவதுடன் அதன் நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் 40 வீதத்தைக் கொண்டிருக்கிறது. மத்திய தரவகுப்பைச் சேர்ந்த நுகர்வோர் யப்பானுக்கு வெளியிலேயே அதிகம் உள்ளனர். சீனா போன்ற பாரிய பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளில் விரைவான தாராளமயமாக்கலும் ஆசிய நாடுகளுக்கிடையிலான முதலீட்டு ஊக்குவிப்புக்களும் குறிப்பிடத்தக்கன. சீனாவுக்கும் புதியகைத்தொழில் பொருளாதார நாடுகளுக்குமிடையில் (NIES) வர்த்தக வளர்ச்சியானது பலமாக உள்ளது. அதே போன்ற பலமான வளர்ச்சி புதிய கைத்தொழில் நாடுகளுக்கும் ஆசியான் நாடுகளுக்கிடையிலும் காணப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட இரு பிரிவுக்குமிடையிலான பல்பக்க வர்த்தகமானது வருடாந்தம் 30 சத வீத வளர்ச்சி வேகத்தில் விரிவடைந்து வருகின்றது. புதிய கைத்தொழில் பொருளாதார நாடுகளுக்கிடையிலான வர்த்தகமானது 1987 இல் இருந்து 40 சத வீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது. பிரதேச வர்த்தகத்தில் சீனாவின் பங்கு அதிகரித்து வருகின்றது. சீனாவில் இடம்பெற்றுவரும் தொடர்ச்சியான சீர்திருத்தங்கள் ஆசிய முதலீட்டாளர்களைக் கவருவதாக இருக்கின்றன. குளிரூட்டும் சாதனங்களிலிருந்து இயந்திரக் கருவிகள் வரையிலான பொருட்களுக்கு சாதகமான சந்தை நிலைமைகள் காணப்படுகின்றன. 1985-90 காலத்தில் இப்பிரதேச நாடுகளுக்கிடையிலான வர்த்தக விரிவாக்கமானது அதற்கு முன்னைய ஐந்து வருடங்களிலும் பார்க்க அதிகமாக இருக்கின்றது.

இப்பிரதேசங்களுக்கிடையிலான வர்த்தகத்தின் குறிப்பிடத்தக்க விரிவாக்கமானது ஆசியான் பாங்கொக் மற்றும் உடன்படிக்கை நாடுகள் (இந்தியா, கொரியக் குடியரசு, இலங்கை, பங்களாதேஷ் லாவோ மக்கள் ஜனநாயக குடியரசு) ஆகிய இரு முன்னுரிமை வர்த்தகப் பகுதிகளில் (Preferential trading areas) இருந்து ஏற்பட்டது எனக் கூறுவதிலும் பார்க்க எஸ்காப் வளர்முக நாடுகளின் வர்த்தகத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க எழுச்சியின் விளைவென்றே குறிப்பிடல் வேண்டும். 1990 இல் வர்த்தகத்தில் அதிகளவு பங்கினையும் கொண்டிருந்தன. பிரதேசங்களுக்கிடையிலான வர்த்தக அதிகரிப்பு முக்கியத்துவமுடையதாக இருப்பதுடன் 50 சத வீதமான ஏற்றுமதிகளையும் உறிஞ்சிக் கொள்கின்றது. ஆனால் ஐரோப்பா, வடஅமெரிக்காவுடனான வர்த்தகமும் குறிப்பிடும் படியாக ஏற்றுமதியில் ஏறக்குறைய 50 சத வீதத்தைக் கொண்டுள்ளன. ஐரோப்பா, அமெரிக்காவுடன் குறிப்பிடத்தக்க வர்த்தகத்தைக் கொண்டிருக்கும் தென்னாசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது இப்பங்கு அதிகளவாகவே உள்ளது.

## பிரதேசங்களுக்கிடையிலான வர்த்தகத்தில் பண்டப் பொருட்களின் கூட்டு அமைப்பு

பிரதேசங்களுக்கிடையிலான வர்த்தகத்தில் பண்டப் பொருட்களின் கூட்டு அமைப்பானது (Commodity Composition) கடந்த இருபது வருடங்களில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை அடைந்துள்ளது. இவற்றுக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவையாவன (1) உணவு, குடிவகைகள், மூலப்பொருட்களின் விலைகள் தேக்கமடைந்திருந்தன (2) எரிபொருட்களின் விலைகள் உயர்வாகக் காணப்பட்டன. (3) பெரும்பாலான நாடுகளில் புடவை மற்றும் தயாரிக்கப்பட்ட ஆடைகளின் உற்பத்தியில் ஏற்பட்ட விரிவாக்கம் (4) ஹொங்கொங், கொரியக்குடியரசு, சிங்கப்பூர், தாய்வான் ஆகிய புதிய கைத்தொழில் வளர்ச்சிப் பொருளாதாரங்களைத் (NIES - Newly Industrialised Economies) கொண்ட நாடுகளில் இயந்திர, போக்குவரத்துக் கருவிகளின் தயாரிப்புக்களில் அடிநிலையில் இருந்து உயர்மட்டம் வரை ஏற்பட்ட தொழில்நுட்ப மாற்றங்கள் என்பன. இத்தகைய காரணங்களினால் ஏற்பட்ட கைத்தொழில் மறுசீரமைப்பின் விளைவுகள் தான் பண்டப் பொருள் கூட்டின் மாற்றத்துக்குக் காரணமானது. தயாரிப்புத் துறையைப் பொறுத்தவரை தென், தென்கிழக்கு ஆசிய பிரதேச நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தின் மூன்றில் இரண்டு பங்கானது இருபது வருடங்களுக்கு முன்பு மூன்றிலொரு பங்காகவே இருந்தது. அடுத்துவரும் வருடங்களிலும் இத்தயாரிப்புத்துறையே நாடுகளுக் கிடையிலான வர்த்தக விரிவாக்கத்திற்கான பாரிய உள்ளார்ந்த தன்மையைக் கொண்டிருக்கும் என்பது இதிலிருந்து ஊகிக்க முடிகிறது. பொதுவாகத் தயாரிப்பு வகைகளைக் கொண்ட பிரிவுகளில் இயந்திர மற்றும் போக்குவரத்துக் கருவிகளின் பங்கே அதிகமாக இருப்பதுடன் புதிய கைத்தொழில் பொருளாதாரங்களில் ஏற்பட்ட மறுசீரமைப்பையே இது பிரதிபலிப்பதாகவும் உள்ளது. ஆனால் தென் ஆசிய நாடுகள் பொதுவாக ஆசியான் மற்றும் புதியகைத்தொழில் பொருளாதார நாடுகளிலும் பார்க்க பண்டப் பொருட்களில் உயர்ந்த வர்த்தக விகிதாசாரத்தைக் கொண்டுள்ளன. இயந்திர, போக்குவரத்து கருவிகளின் தயாரிப்புப் பங்கானது தென் ஆசியாவின் நான்கு நாடுகளில் ஏறக்குறைய 9 சத வீதமாக உள்ளது. ஆசியான் அமைப்பைச் சேர்ந்த நான்கு நாடுகளில் இது 18 வீதமாகவும் சிங்கப்பூரில் 36 சத வீதமாகவும் கொரியக்குடியரசில் 38 சத வீதமாகவும் உயர்வாகக் காணப்படுகின்றது.

எஸ்காப் வளர்முக நாடுகளின் பண்டப் பொருட்களின் இறக்குமதி அமைப்பு பிரதான சில அம்சங்களைக் கொண்டுள்ளது.

(1) தென் ஆசியா, ஆசியான், புதியகைத்தொழில் பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகள் ஆகியவற்றின் இறக்குமதியில் பிரதான பங்கினை எரிபொருட்கள் வகிக்கின்றன.

(2) உணவுப் பொருட்களின் (குடிவகைகள், தாவர எண்ணெய் உட்பட) பங்கு இறக்குமதியில் தென் ஆசியாவில் அதிகமாகவும் ஏனைய பிரதேசங்களில் குறைவாகவும் இருக்கின்றன.

(3) இறக்குமதியில் மூலப் பொருட்களின் பங்கு கொரிய குடியரசில் மிக அதிகமாகவும் ஆசியான் அமைப்பு நாடுகளுடன் ஒப்பிடும்போது தென் ஆசியாவில் குறைவாகவும் இருக்கிறது.

(4) இறக்குமதியில் தயாரிப்புத்துறையின் பங்கு கொரியாவில் குறைவாகவும் ஆசியான் நாடுகளில் மிக அதிகமாகவும் இருந்தன. இயந்திர மற்றும் கருவிகளின் இறக்குமதியைப் பொறுத்தும் இந்நிலையே காணப்படுகின்றது. கொரியக்குடியரசின் இயந்திர மற்றும் கருவிகளின் இறக்குமதியானது ஆசியான அமைப்பு நாடுகளுடன் ஒப்பிடும் போது உயர்வாக இல்லாவிட்டாலும் தென் ஆசிய நாடுகளிலும் அதிகமாக இருக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய மரபுரீதியான வர்த்தக நிரப்புத் தன்மையானது அந்நாடுகளின் பொருளாதார விருத்தி நிலையில் காணப்படும் வேறுபாடுகளினால் எழுந்த தாக்கங்களின் விளைவென்றே கூறலாம். புதிய கைத்தொழில் வளர்ச்சிப் பொருளாதார நாடுகள் இயந்திர மற்றும் போக்குவரத்துக் கருவிகளையும் ஏனைய தயாரிப்புப் பொருட்களையும் ஆசியான் மற்றும் தென் ஆசியாவுக்கு ஏற்றுமதி செய்யும் பிரதான ஏற்றுமதியாளர்களாக மாறியுள்ளன. அதேவேளை அந்நாடுகளிலிருந்து உணவு, மூலப்பொருட்கள், குறை -தயாரிப்புப் பொருட்கள், பெற்றோலியம் என்பவற்றைப் புதிய கைத்தொழில் நாடுகள் பெற்றுக் கொள்கின்றன. இந்நாடுகள் தயாரிப்புத்துறையில் போதுமான புதிய நிரப்புத்தன்மையைக் கொண்டவையாகவும் விளங்குகின்றன. ஆசிய - பசுபிக் பிராந்தியத்திலுள்ள உப பிரதேசங்களில் வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்படும் பிரதான பண்டப் பொருட்களும் உற்பத்திகளும் பின்வருமாறு:-

**தென்ஆசியா** - இப்பிரதேச நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தில் அரிசி, தேயிலை, பருத்திப் புடவைகள், நூலிழைகள் இயந்திரங்களும் அவற்றின் பாகங்களும் பிரதான பங்கினை வகிக்கின்றன. பருத்தி, பெறுமதிமிக்க கற்கள், பருத்திப் புடவை, என்பன ஆசியான் அமைப்பு நாடுகளுக்கான ஏற்றுமதியில் பிரதானமானவை. பருத்தி நூலிழை தேயிலை, பெறுமதிமிக்க கற்கள் பருத்தி, இரும்புத்தாது, தோற்பொருட்கள் என்பன ஏனைய நாடுகளுக்கான ஏற்றுமதியாக விளங்குகின்றன.

***ஆசியான் நாடுகள்*** - சிங்கப்பூர் தவிர்ந்த ஆசியான் நாடுகளின் தென் ஆசியாவுக்கான பிரதான ஏற்றுமதியானது உணவு, குடிவகைகள், தாவர எண்ணெய் என்பவற்றைக் கொண்டுள்ளன. மொத்த ஏற்றுமதியில் தாவர எண்ணெய் 40 சத வீதத்தை வகிக்கின்றது. அரிசி, மரம், பெற்றோலியம், சீனி, இறப்பர், சீமெந்து, பதனிடப்பட்ட தாவர எண்ணெய் என்பன ஏற்றுமதி செய்யப்படும் ஏனைய பொருட்களுள் பிரதானமானவை. ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் தென் ஆசியா தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கு அரிசி, சீனி, மரம், நிலநெய், உரவகைகள், வாயு, சாயம், தாவர எண்ணெய் என்பவற்றை ஆசியான் அமைப்பு நாடுகள் ஏற்றுமதி செய்கின்றன. இயந்திர வகைகள் ஆசியான் நாடுகளின் பிரதான ஏற்றுமதியாக இருப்பதுடன் ஏற்றுமதி அமைப்பில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தையும் கொண்டுள்ளது.

ஆசிய நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்திலும், அவற்றின் உலக வர்த்தகத்திலும் பிரதான தயாரிப்பாகக் காணப்படுவது மின்னியக்கப் பொருட்களே. எஸ்காப் பிரதேசங்களுக்கிடையிலான வர்த்தகத்தை விரிவு படுத்துவதற்கு இப்பொருட்களே (electronic Microcircuits, adapter periphera; units. accounting and adding machinery parts. printed circuits. electronic components parts ,switch gear) பின்னணியில் இருந்தன. Electronic microciruits and adapter pheri pheral units சிங்கப்பூரின் பிரதான ஏற்றுமதியாகக் காணப்படுவதுடன் அவை இந்தியா, கொரியக் குடியரசு, ஹொங்கொங், மலேசியா, தாய்லாந்து பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. Electronic micro circuits பிலிப்பைன்ஸ் நாட்டின் பிரதான ஏற்றுமதியாக இருப்பதுடன் சிங்கப்பூர் மலேசியா, ஹொங்கொங் நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றது. தாய்லாந்து பாரிய அளவில் மின்னியக்கப் பொருட்களைச் சிங்கப்பூருக்கும், அடுத்து மலேசியாவுக்கும் ஏற்றுமதி செய்கின்றது. சிங்கப்பூரின் பிரதான ஏற்றுமதியாக மின்னியக்கப் பொருட்கள் காணப்பட்டாலும் கொரியக் குடியரசு ஹொங்கொங், இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து ஆகிய நாடுகளில் இருந்தும் அவற்றை இறக்குமதி செய்கின்றது. இந்நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் பெரும்பாலும் பூச்சிய இறுப்புக்களைக் கொண்ட முன்னுரிமை வர்த்தக அடிப்படையிலேயே இடம்பெறுகின்றன.

தென் ஆசியா, ஆசியான் பிரதேசங்களுக்கிடையிலான வர்த்தக குறைநிரப்புத் தன்மை மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றதுடன் அவற்றின் வர்த்தக உள்ளார்ந்த தன்மைக்கான போதுமான சந்தர்ப்பங்கள் அளிக்கப்படவில்லை என்றே கூறமுடியும். பண்டப் பொருட்களைப் பொறுத்தவரை தென் ஆசியாவுக்கு வெளியிலுள்ள நாடுகளுக்கான பிரதேச ஏற்றுமதி தென் ஆசியாவிலும் பார்க்க அதிகரித்துள்ளது. இலங்கையின் பத்து பிரதான பிரதேச ஏற்றுமதிகளில் குறிப்பாக ஒன்பது (தேயிலை, தயாரிக்கப்பட்ட ஆடைகள், இறப்பர், பெற்றோலியப் பொருட்கள் ஆகியவை உட்பட) பொருட்களுக்கான பாரிய சந்தைகள் இவ் உபபிரதேசத்துக்கு வெளியிலேயே காணப்படுகின்றன. ஆனால் தேங்காய் எண்ணெய் மட்டும் தென்னாசிய உபபிராந்தியத்தில் குறிப்பாகப் பங்களாதேஷில் குறிப்பிடத்தக்க சந்தை வாய்ப்புக்களைக் கொண்டுள்ளது.

## வர்த்தகத்துக்கான பிரதேச ஒத்துழைப்பு

வெளிவாரியான பொருளாதாரச்சூழல், பின்னடைவு, அதிகரித்துவரும் பாதுகாப்புத் தன்மை (Protectionism), அபிவிருத்தியடைந்த சந்தைப் பொருளாதார நாடுகளுக்கிடையிலான புதிய சுதந்திர வர்த்தக (கட்டுப்பாடற்ற) உடன் படிக்கைகளின் காரணமாக வளர்முக நாடுகளுக்கான முன்னுரிமை வரிச்சலுகைகளில் ஏற்பட்ட பயனற்ற தன்மை ஆகிய பாதகமான தாக்கங்களை எஸ்காப் வளர்முக நாடுகளுக்கிடையில் வர்த்தக மற்றும் முதலீடுகளில் பரஸ்பர ஒத்துழைப்பை ஏற்படுத்துவதன் மூலம் ஓரளவு தணித்துக் கொள்ளலாம். இந்நாடுகளின் பொருளாதார அமைப்பும் மூலவளங்கள் அபிவிருத்தி மட்டங்களில் காணப்படும் பல்வகைத்தன்மையும் சேர்ந்து பல்வகைத்தன்மை, குறைநிரப்புத்தன்மை ஆகியவற்றுக்கான சூழலை அளிக்கின்றது. நிரம்பல், கேள்வி மூலமாக பிரதேசரீதியான பரஸ்பர ஒத்துழைப்பு ஏற்பட வழியுண்டு. வழங்கல் பக்கத்தை எடுத்து நோக்கின் பிரதானமாக தொழில்நுட்பத்தை விருத்தி செய்யவும், விலைகளைக் குறைக்கவும், பொருட்களின் தரத்தை உயர்த்தவும் முதலீடு மற்றும் தொழில்நுட்பக் கூட்டுறவு அவசியமானது. கேள்விப் பக்கத்தை நோக்கினால் அதன் பிரதான அம்சமாகப் பிரதேச ரீதியான சந்தையின் விரைவான அபிவிருத்தியினால் அவற்றுக்கிடையிலான வர்த்தக விரிவாக்கம் முக்கியமாக உள்ளது.

எஸ்காப் வளர்முக நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் குறிப்பிடத்தக்க அளவு காணப்பட்டாலும் அவ் வர்த்தகத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கான சூழல் இருக்கின்றது. அதற்கு சந்தைகள் கட்டுப்பாடற்ற வர்த்தகத்தினால் ஊக்குவிக்கப் படவேண்டும். கட்டுப்பாடற்ற வர்த்தகம் கிழக்கு ஆசியா, தென்ஆசிய நாடுகளில் பல நன்மைகளைப் பெற்றுள்ளது. தென் ஆசியா இத்துறையில் பின்னணியில் இருந்தாலும் கடந்த சில வருடங்களாகப் பல முயற்சிகளைச் செய்து வருகின்றது. எஸ்காப் வளர்முக நாடுகள் தமக்கிடையிலான வர்த்தக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவாக்கத்தின் பாரிய உள்ளார்ந்த தன்மையை மரபுரீதியான ஏற்றுமதி வர்த்தகத்தில் கொண்டிருப்பதற்கு மாறாகத் தயாரிப்புத் துறையிலேயே கொண்டிருக்கின்றன. புதிய கைத்தொழில் பொருளாதார நாடுகள், ஆசியான் நாடுகளின் விரைவான பொருளாதார வளர்ச்சியானது ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புத்துறையில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவேயாகும். அத்துடன் அந்நாடுகளின் பொருளாதாரத்தில் ஒரு வலுவான துறையாகவும் மாறியுள்ளது. கட்டுப்பாடற்ற வர்த்தக விரிவாக்கத்தின் விளைவினால் ஏற்றுமதியாளர்களும், இறக்குமதியாளர்களும் நன்மையடைந்துள்ளதைக் கொரியக் குடியரசின் அனுபவத்தில் இருந்து அறியமுடியும். அந்நாடு சுங்கத்தீர்வைகளைப் (Tariff) பெருமளவில் குறைத்துள்ளது. ஆசியான் நாடுகள் மென் தயாரிப்புப் பொருட்களைக் குறிப்பாக மின்னியல், வீட்டுப்பாவனைப் பொருட்கள், என்பவற்றைக் கொண்ட சந்தையை மிதக்கவிட்டதே கட்டுப்பாடற்ற வர்த்தகத்தின் பிரதான நன்மையாகும். ஆனால் எஸ்காப் அமைப்பின் ஏனைய வளர்முக நாடுகள் கொரியாவின் இத்தகைய கட்டுப் பாடற்ற சந்தை வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டன. கொரிய சந்தையில் சந்தைப் படுத்தக்கூடிய பல வகையான தயாரிப்புப் பொருட்களை அந்நாடுகள் உற்பத்தி செய்யாதிருந்தமையே இதற்குக் காரணமாக அமைந்தது.

தீர்வை மற்றும் தீர்வைகளற்ற தடைகளில் (Tariff and non tariff barriers) ஏற்பட்ட தளர்வுகள் இப்பிரதேச நாடுகளுக்கிடையிலான வர்த்தக விரிவாக்கத்துக்குப் பாரியளவில் தூண்டுகோலாக அமைந்திருந்தது. இத்தகைய தாராளமயமாக்கல் பிரதேச அடிப்படையிலான பொருட்களை உற்பத்தி செய்யும் நாடுகளுக்கே பாரிய நன்மைகளை அளிக்கக் கூடியதாக இருந்ததுடன் ஏற்றுமதிக்கான நல்ல சந்தை வசதிகளையும் கொண்டிருந்தது. எனவே உபபிரதேச மட்டங்களிலும் பார்க்க பிரதேசமட்டங்களில் அதிக குறை நிரப்புத்தன்மை காணப்படுவதினால் அந்நிலையில் முதலீடுகளில் பரஸ்பர ஒத்துழைப்பு இருக்கக் கூடியதாக வர்த்தகத்தில் கட்டுப்பாடற்ற தன்மையையும் பரஸ்பர ஒத்துழைப்பையும் முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

## முதலீட்டு குறை நிரப்புத்தன்மை
( Investment Complimentarities)

வெளிநாட்டு முதல் மூலதனமானது பற்றாக்குறையாக உள்ள உள்நாட்டு முதல் தேவைக்கு உதவுவதுடன் வெளிநாட்டு நாணயமாற்று மூலவளங்களை அதிகரிப்பதுடன் உயர் தொழில் நுட்பங்களையும் நவீன முகாமைத்துவ திறன்களையும் கொண்டு வருகின்றது. பொதுவாக எஸ்காப் வளர்முக நாடுகளும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் (FDI -Foreign Direct Investment) குறிப்பிடத்தக்க அளவில் கவர்ந்துள்ளதுடன் அவற்றினூடாகத் தமது தயாரிப்புத்துறையினையும் விருத்தி செய்துள்ளன. சிறப்பான பொருளாதார நன்மைகளையும் அவை அடைந்துள்ளன. எஸ்காப் வளர்முக நாடுகளின் வெளிநாட்டு நேரடி முதலீட்டில், கடந்த சில வருடங்களாகச் சில குறிப்பிடத்தக்க அம்சங்களை அவதானிக்க முடிகின்றது. அவையாவன;

(1) புதிய முதலீடுகளின் பெரும்பகுதி இப்பிரதேசங்களுக்கிடையிலிருந்தே ஏற்படுகின்றது. முதலீடுகளில் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கம் குறைவடைய யப்பானிய முதலீடுகள் அதிகரிக்கின்றன.

(2) பிரதேசரீதியான முதலீட்டைப் பொறுத்தவரை புதிய கைத்தொழில் நாடுகளின் முக்கியத்துவம் வளர்ச்சியடைகின்றது.

(3) பெரும்பாலான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் தயாரிப்புத்துறையிலேயே இடப்படுகின்றன.

(4) வெளிநாட்டு முதல் பிரதானமாக ஏற்றுமதி வர்த்தகத்திலேயே முதலீடு செய்யப்படுகின்றதுடன் அதன் காரணமாக ஏற்படும் கூட்டு முயற்சிகளினால் வர்த்தகம் அதிகரிக்கின்றது.

எஸ்காப் வளர்முக நாடுகளில் வெளிநாட்டு நேரடி மூலதன திரட்சியானது பெரும்பாலும் யப்பானினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. புதிய கைத்தொழில் நாடுகளிலும், ஆசியான் அமைப்பிலுள்ள நான்கு நாடுகளிலும் ஏற்பட்ட விரைவான பொருளாதார வளர்ச்சியானது யப்பானின் பொருளாதார ஒத்துழைப்புக்கும் அதன் தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் முகாமைத்துவ நுணுக்கங்களின் தரமுயர்த்துதல் என்பவற்றுக்கும் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. யப்பானும் ஏனைய சில பல்தேசியக் கம்பனிகளும் வளர்முக நாடுகளுக்கான புதிய ஏற்றுமதிகளை உருவாக்கியுள்ளதுடன் எஸ்காப் வளர்முக நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தையும் விரிவு படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கையைப் பொறுத்தவரையில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் கடந்த சில வருடங்களாக அதிகரித்து வருகின்றது. ஆனால் ஒப்பீட்டு ரீதியாக இது மிகவும் குறைவு. கொரியக் குடியரசு பாரிய அளவில் இலங்கையில் முதலீடு செய்துள்ளது. அடுத்து ஹொங்கொங், சிங்கப்பூர், என்பன விளங்குகின்றன. யப்பான் ஒரு குறிப்பிடத்தக்க முதலீட்டாளனாகக் காணப்படவில்லை. புதிய கைத்தொழில் நாடுகளின் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் காரணமாக இலங்கையிலும், பங்காளாதேஷிலும் தயாரிக்கப்பட்ட ஆடைகள் முன்னணி ஏற்றுமதியாக மாறியுள்ளது.

மலேசியா, தாய்லாந்து, ஆகிய நாடுகளை யப்பான், புதிய கைத்தொழில் பொருளாதார நாடுகளுடன் ஒப்பிடும் போது விரைவாக அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களை அந்நாடுகள் கொண்டிருப்பதுடன் எதிர்காலத்தில் புதிய கைத்தொழில் நாடாக மாறக் கூடிய சாத்தியங்களும் உள்ளன. ஏலவே அவை இப்பிரதேசத்தில் குறிப்பிடத்தக்க கூட்டு முயற்சிகளில் பங்கு கொண்டுள்ளன. தாய்லாந்து இலங்கையில் ஏறக்குறைய 4.7 மில்லியன் டொலரை முதலீடு செய்துள்ளது. எஸ்காப் பிரதேச நாடுகளில் யப்பான், புதிய கைத்தொழில் பொருளாதார நாடுகள் தவிர குறிப்பிடத்தக்க பாரிய வளர்முக நாட்டு முதலீட்டாளனாக இந்தியா விளங்குகிறது. எஸ்காப் வளர்முக நாடுகளில் இந்தியா 103 கூட்டு முயற்சிகளைக் கொண்டுள்ளது. ஆசியான் அமைப்பு நாடுகளில் 68 ஆகவும் (மலேசியாவில் மாத்திரம் 19) தென் ஆசியாவில் 32 ஆகவும் உள்ளது. 1979 – 1986 இடைப்பட்ட காலத்தில் இந்தியா 100 மில்லியன் அமெரிக்க டொலருக்கு மேலாக இலங்கையில் முதலீடு செய்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தகம், முதலீடு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான பிரதேசரீதியான ஒத்துழைப்பிற்கான வரைவமைப்பு

யப்பான், புதிய கைத்தொழில் பொருளாதார நாடுகளிலிருந்து ஏற்படும் வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சலில் காணப்படும் தடைகள் வளர்முக நாடுகளில் ஏற்படுவதற்குக் காரணம் முதலீட்டுப் பங்காளர்களுக்கிடையிலான தொடர்பின்மையேயாகும். முதலீட்டுச் சாத்தியங்கள் பற்றிய தகவல் போதியளவு இல்லாமையும் ஒரு காரணமாகும். இருப்பினும் குறிப்பிட்ட சில நாடுகள் முதலீட்டுச் சபைகளை (Boards of Investment) அல்லது அதனை ஒத்த பிரிவுகளை முதலீட்டை ஊக்குவிப்பதனை நோக்கமாகக் கொண்டு ஏற்படுத்தியுள்ளன. கடந்த காலங்களில் இவற்றுள் சில நாடுகளில் வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிக்காத கொள்கைகளே காணப்பட்டன. இன்று இத்தகைய சூழ்நிலைகள் மாற்றமடைந்துள்ளதுடன் வர்த்தகம், முதலீடுகளில் கட்டுப்பாடற்ற தன்மை இடம் பெறுவதைக் காண முடிகின்றது. ஆனால் முதலீடுகளைக் கவர்ந்திழுப்பதற்கு இவை மட்டும் போதுமானதல்ல. அதற்கு மேலாக பொருத்தமான நுணுக்கங்கள், கட்டுமான அமைப்பு என்பன அவசியமாகும். இப்பிரதேச வளர்முக நாடுகளில் தனியார் துறையின் உயிர்த்துடிப்பான பங்களிப்பானது முதலீடுகளை மேலும் கருத்துள்ளதாக்கும் வகையில் உயர்த்துவதற்கு அவசியமானது. வளர்முக நாடுகளின் அரசாங்கங்கள் வெளிநாட்டு முதலீடுகளுக்கான முன்னுரிமைகளை அடையாளம் செய்துள்ளன. ஆனால் தனியார் துறையினர் மாத்திரமே எது பொருத்தமானது என்பதைத் தீர்மானிக்க முடியும்.

வளர்முக நாடுகளில் கூட்டு முயற்சிகளுக்கான சாத்தியங்கள் அதிகளவில் காணப்படுகின்றதுடன் அநேகமான ஆய்வுகள் மூலம் அவை அடையாளம் செய்யப்பட்டுள்ளன. இதனால் பிரதேச ரீதியான வர்த்தக முதலீட்டுக் கட்டமைப்பின் ஒன்றிணைந்த பகுதியாக ஆசிய கைத்தொழில் – வணிக கூட்டமைப்பின் பிரதேச அமைப்பை (Regional Association of Asian Chambers of Commerce and Industry) ஸ்தாபிப்பதற்கான உறுதியான எண்ணம் காணப்படுகின்றது.

உப பிராந்திய மட்டத்தில் ஆசியான், சார்க் அமைப்புக்கான "கைத்தொழில் வணிக கூட்டமைப்பும்" ஏலவே இருக்கின்றன. இத்தகைய நிறுவன ரீதியான அமைப்பு பிரதேச ரீதியில் இருப்பது அவசியமாகும். பிரேரிக்கப்பட்டுள்ள இத்தகைய பிரதேச அமைப்பானது பிரதேச ரீதியான துறைப்பிரிவுகளை உருவாக்கி வர்த்தக, தயாரிப்புக் கம்பனிகளையும், அவற்றின் நிறுவனங்களையும் ஒன்றிணைத்து அவற்றின் வளங்கள், இயலளவு, தேவைகள் தொடர்பாக தகவல் பரிமாற்றங்களையும், நெருங்கிய தொடர்புகளையும் விருத்தி செய்யமுடியும். இத்தகைய ஒத்துழைப்பைப் பரஸ்பரம் விருத்தி செய்யும் போது அந்நாடுகள் பிரதேச முன்னுரிமை வர்த்தக அமைப்பில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளதா என நோக்குவது அவசியமில்லை. உண்மையில் ஆசியான் அமைப்பு நாடுகளின் பெரும்பாலான கூட்டுமுயற்சிகளும், எஸ்காப் வளர்முக நாடுகளில் காணப்படும் எல்லா கூட்டுமுயற்சிகளும் முன்னுரிமைத்தீர்வைகளற்ற முறையிலேயே பிரதேச, உபபிரதேச வரைவமைப்பு உதவியின்றியே ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நாடுகளும் வெளிநாட்டு முதலீடுகளைக் கவருவதற்கான நல்ல பல ஊக்குவிப்புக்களைக் கொடுக்க முயற்சிக்கின்ற போது நாடுகளுக்கிடையே ஏற்படும் தேவையற்ற போட்டிகளைத் தவிர்ப்பதற்கு இத்தகைய பிரதேச ரீதியான வரைவமைப்பு அவசியமாகும். மூலதன அமைவிடத்தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்துவதில் மூலதன ஊக்குவிப்புக்கள் செயல்திறனற்றவையாக இருக்கிறது என நம்பப்பட்டு வருவதினால் ஓர் ஒழுங்கமைப்பு மிக அவசியமானதாகும். எஸ்காப் வளர்முக நாடுகளில் பெரும்பாலானவை அளவில் சிறியன. பற்றாக்குறையான கட்டுமான அமைப்பையும் கொள்வனவுச் சக்தியையும் கொண்டவை. சொந்தமாக வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவரக்கூடிய சக்தியற்றவை. பிரதேச அளவில் பிரிவுகளாகச் சேர்ந்து ஒத்துழைப்பதன் மூலம் இப்பிரச்சினைகளை வெற்றி கொள்ள முடியும்.

பரஸ்பர பரிமாற்றத்தினடிப்படையில் கட்டுப்பாடற்ற வர்த்தக அல்லது முன்னுரிமைத் தீர்வைகளின் கீழ் (தாராள மயமாக்கப்பட்ட தீர்வையற்ற கட்டுப்பாடுகளுடன் இணைந்து) வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பல்வேறு நிலைகளைக் கொண்ட தயாரிப்புக்களை ஸ்தாபிப்பதற்கு இது உதவும். தனிப்பட்ட ஒரு நாட்டின் சந்தையைவிட பாரிய அளவிலான பிரதேச ரீதியான சந்தை வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவருவதற்கு வாய்ப்பாக இருக்கும். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வெவ்வேறு அம்சங்களைக் கொண்ட பொருட்களை உற்பத்தி செய்கின்ற பல நாடுகளை உள்ளடக்கிய ஒரு பிரிவில் முதலீடு செய்வதற்கு மிகவும் விரும்புவார்கள். ஆசியான் அமைப்பு நாடுகளின் மின்னியல் கைத்தொழில் இதற்குச் சிறந்த உதாரணமாகும். அக்கைத்தொழிலுக்குப் பிரதேச ரீதியாகவே கேள்வி உள்ளது.

பிரதேச ரீதியான ஒழுங்குகள் தொழில்நுட்பப் பங்கீட்டுக்கும் மனிதசக்தி ஆராய்ச்சி மற்றும் தொழில் நுணுக்கங்களுக்கும் வசதியளிக்கின்றது. புதிய கைத்தொழில் நாடுகளில் சில இந்த முறையில் தமது தொழில்நுட்பங்களை விருத்தி செய்துள்ளதுடன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க முதலீடுகளையும் மேற்கொண்டுள்ளன. இப்பிரதேசத்திலுள்ள குறைந்த தொழில் வளர்ச்சி கொண்ட நாடுகள் இத்தொழில்நுட்ப மற்றும் ஆராச்சி போன்றவற்றைப் பரஸ்பர ஒத்துழைப்புகளினூடாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதிகள் இருக்கின்றன.

பிரதேச ரீதியான வர்த்தக மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பிற்கான வரைவமைப்பு (frame work) இரண்டு நிறுவனங்களிடமிருந்து எதிர்காலத்தில் உதவிகளைப் பெறக் கூடியதாக உள்ளது.

1. ஆசிய-பசுபிக் நாடுகளுக்கான பிரதேச முதலீட்டுத் தகவல்கள் மற்றும் தரமுயர்த்தும் சேவைகள் (RIIPS - Regional Investment Information and Promotion Services) என்னும் நிறுவனம் "அங்டாட்" நிறுவனத்தின் உதவியுடன் கொரிய ஏற்றுமதி இறக்குமதி வங்கியினால் கொரியக் குடியரசில் ஸ்தாபிக்கப்படவுள்ளது. வர்த்தக நிறுவனங்கள், சட்டங்கள் ஒழுங்குவிதிகள், வெளிநாட்டு முதலீடு தொடர்பான ஊக்குவிப்புக்கள், கொள்கைகள் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல், அவைபற்றிய தகவல்களைப் பரப்புதல், திட்ட வரைபுகள், மதிப்பீடுகளை மேற்கொள்ளல், வர்த்தகக் கூட்டங்களையும், ஆய்வுகளையும் நடத்துதல் போன்ற ஆசிய-பசுபிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளுக்கான தரவுகளினடிப்படையை (Data Base) ஸ்தாபித்தலே இதன் பிரதான நோக்கமாக இருக்கும்.

(2) தென்பகுதி நாடுகளுக்கான முதலீடு, வர்த்தக மாற்றம் தொழில்நுட்ப தரவுப் பரிமாற்ற நிலையமானது (SITTDEC-South Investment, Trade and Technology Data Exchange Centre) தென்பகுதியிலுள்ள 15 வளர்முக நாடுகளின் சிறிய அமைப்பாக இருக்கும். இந்நாடுகளின் தீர்மானத்துக்கமைய மலேசியாவில் ஸ்தாபிக்கப்படும் முதலீடு, வர்த்தகம், தொழில்நுட்ப பரிமாற்றங்களை எல்லா வளர்முக நாடுகளுக்குமிடையிலும் மேன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு முதலீடு, வர்த்தகம் தொழில்நுடபம் தொடர்பான தகவல்களை அளிக்கும் சுதந்திரமான மத்திய நிலையமாக இது விளங்கும்.

### பாங்கொக் உடன்படிக்கையின் அடிப்படையில் பிரதேச ஒழுங்குகளை ஸ்தாபித்தல்

பிரதேச ரீதியான வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பிற்கான ஒரு வரைவமைப்பின் தேவையானது எஸ்காப் நாடுகளில் முதலீடு மற்றும் பரஸ்பர வர்த்தகத்தை மேலும் விஸ்தரிப்பதற்கான சாத்தியங்களை இலகுவாக்கும் பாங்கொக் உடன்படிக்கையில் ஏற்கனவே ஒரு பிரதேச வரைவமைப்பு 1976 ஆம் ஆண்டு தொடக்கம் இருந்து வருகின்றதுடன் மட்டுப்படுத்தப்பட்ட அங்கத்துவத்தையே கொண்டிருக்கிறது. இதில் இந்தியா, கொரியக் குடியரசு, இலங்கை, பங்களாதேஷ், லாவோ மக்கள் குடியரசு ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இதன் அங்கத்துவத்தை விரிவுபடுத்துப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டபோது பப்புவா நியூகினியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளே இதில் இணைய ஆர்வம் காட்டின. பாங்கொக் உடன்படிக்கையானது உண்மையில் அடிப்படையில் ஒரு முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையாகும். கடந்த 16 வருடங்களாக இந்த பாங்கொக் உடன்படிக்கையில் இணைவதற்கு எந்த நாடுகளும் முயற்சிக்கவில்லையாயினும் இனிமேலும் அதற்கான சாத்தியம் இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. இச்சந்தர்ப்பத்தில் வித்தியாசமான பாதையைச் சிந்திப்பது புத்திசாலித்தனமானது. சந்தேகங்கள் பெரும்பாலும் வர்த்தக விரிவாக்கத்தை மேன்மைப் படுத்துவதற்கான முன்னுரிமை தீர்வைகளின் காத்திரமான தாக்கங்கள் தொடர்பானதாகவே வெளிப்படுத்தப்படுகின்றன.

முன்னுரிமைத் தீர்வைகளைக் குறைப்பதன் ஊடாக வர்த்தக விரிவாக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஆசியான் போன்ற உபபிரதேச ஒழுங்குகளோ, பாங்கொக் உடன்படிக்கை போன்ற பிரதேச ஒழுங்குகளோ, முன்னுரிமைத் தீர்வைகளின் பொதுவான ஒழுங்குமுறை (GSTP - General System of Tariff Preferences) போன்ற பிரதேசங்களுக்கிடையிலான ஒழுங்குகளோ அதிகளவில் பங்களிக்கவில்லை என்றே குறிப்பிடலாம். இப்போது தீர்வைத் தடைகளை விட தீர்வைகள் சாராத தடைகளே (Non Tariff Barriers) மிக முக்கியமானது. மேலே கூறப்பட்ட எந்த ஒழுங்குகளும் இவை சம்பந்தமாக பேச்சுவார்த்தை மூலம் ஒரு முடிவுக்கு வரவில்லை. அநேக நாடுகள் பல வருடகாலம் எடுக்கக் கூடிய பாதுகாக்கப்பட்ட தீர்வை இணக்கங்களை விரும்பவில்லை. சார்க் நாடுகளுக்கிடையில் காணப்படும் தென் ஆசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை பற்றிய பேச்சுவார்த்தைகள் கூட ஆகக் குறைந்தது மூன்று வருடங்களுக்குக் கலந்து பேசப்படும்.

எஸ்காப் பிரதேசத்திலுள்ள பெரும்பாலான நாடுகள் முன்னுரிமை வர்த்தக ஒழுங்குகளிலும் பார்க்கக் கூடுதலாகப் பிரதேச ரீதியான பொருளாதார ஒத்துழைப்பிற்கான உடன்படிக்கையில் இணைந்து ஒத்துழைப்பதையே விரும்புகின்றன. இந்நாடுகள் முதலீடு மற்றும் கைத்தொழில் துறையில் ஒத்துழைப்பு, உற்பத்தி முறைகளை மீள்அமைத்தல், வர்த்தகத்துக்குரிய புதிய பொருட்களை உருவாக்கல் போன்ற விடயங்களில் முன்னுரிமை கொடுப்பதையே தமது பிரதான தெரிவாகக் கருதுகின்றனர். இத்தகைய கைத்தொழில் துறையிலான பரஸ்பர ஒத்துழைப்பானது துறைசார்ந்த முன்னுரிமை, வர்த்தகத்தின் மூலம் நிறுவனங்களுக்கிடையிலான கூட்டு முயற்சியை (Collaboration) அடிப்படையாகக் கொண்டமைந்த வகையில் முன்னெடுக்கப்படும். இந்நாடுகள் கைத்தொழில் முதலீட்டைப் பிரதானமாகக் கொண்ட பொருளாதார ஒத்துழைப்பில் பங்கு கொள்ளவே விரும்புகின்றன. ஆனால் புதிய ஆசிய பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கையின் கீழ் உள்ளடக்கப்படக்கூடிய பொதுவான முன்னுரிமை வர்த்தகத்தில் பங்கு கொள்ள விரும்பவில்லை. ஏனெனில் இதில் முன்னுரிமை வர்த்தகம் ஒரு அம்சமாகவே இருக்கிறது.

### சந்தர்ப்பங்களும் அச்சுறுத்தல்களும்

ஆசிய – பசுபிக் பிரதேச நாடுகளின் வர்த்தக விரிவாக்கத்தில் காணப்படும் சிக்கல்களைப் பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

(1) பற்றாக்குறையான சந்தை பற்றிய தகவல்கள்

(2) பற்றாக்குறையான வர்த்தக நிதிப் பொறிமுறைகள்

(3) நாணய மாற்று வீதங்களில் ஏற்படும் சடுதியான மாற்றங்கள்

(4) உயர்வான சுங்கத்தீர்வைகளும் இறக்குமதிக்கான மேலதிகக் கட்டணங்களும்

(5) சுங்கத்தீர்வை சாராத தடைகள்

(6) சுங்க நடைமுறைகள், தரப்படுத்தல் மற்றும் பதிவேடுகளை ஒருங்கிணைத்தல் என்பன.

ஆசிய – பசுபிக் நாடுகளின் உள்ளார்ந்த வர்த்தகத்தில் சந்தைபற்றிய தகவல்களில் காணப்படும் பற்றாக்குறையானது ஏற்றுமதி நடவடிக்கைகளைப் பாதிக்கின்ற பிரதான தடைகளில் ஒன்றாக இருப்பதுடன் பிரதேசரீதியான வர்த்தகத்தின் தேக்க நிலைக்கான பிரதான காரணிகளில் ஒன்றாகவும் விளங்குகின்றது. கொள்கை மட்டத்தில் உதவிகளுக்கான ஒழுங்குகளை விருத்தி செய்வது மிக அவசியமானதாக இருப்பதுடன் சந்தை பற்றிய தகவல்களுக்கான வலைப் பின்னல் ஒழுங்குகளை விருத்தி செய்வதும், தரமுயர்த்துவதும் மிக அவசியமான உடனடித் தேவையாக உள்ளது. பிரதேசரீதியான வர்த்தக தகவல் வலைப் பின்னல் (TISNET) அமைப்பை, வர்த்தக மற்றும் சந்தை பற்றிய தகவல்களைப் பரிவர்த்தனை செய்து கொள்ளவதற்குச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளமுடியும். பருவகால ரீதியாக ஒவ்வொரு அங்கத்துவ நாடுகளிலும் இடம் பெற்று வரும் ஆசிய வர்த்தக சந்தையை (Asian Trade Fair) இப்பிரதேசத்திற் காணப்படும் சிறிய வளர்முக நாடுகளின் ஏற்றுமதி உற்பத்திகளைப் பிரபல்யப்படுத்தவும், அறிமுகப்படுத்தவும் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தக நிதிப்படுத்தலைப் பொறுத்தவரையில் விருத்தியடைந்த நாடுகள் தமது இறக்குமதிப் பங்காளர்களுக்குப் பொருத்தமான கடன் வசதிகளைக் குறிப்பாக கேள்வியைத் தூண்டவும், பயன்படுத்தப்படாமல் வீணாகும் இயளலவுப் பயன்பாட்டைத் தரமுயர்த்துவதற்கும் வழங்கமுடியும். இதன்மூலம் பிரதேசரீதியான வர்த்தக விரிவாக்கத்தை ஏற்படுத்த முடியும். தற்பொழுது செயற்பட்டு வரும் வர்த்தக, நிதி, நிறுவனங்களிடையே குறிப்பாக ஏற்றுமதி– இறக்குமதி வங்கிகள், வர்த்தக வங்கிகள், ஏற்றுமதி கடன் காப்புறுதிப் பிரிவுகள் போன்றவற்றுக்கிடையே பரஸ்பர ஒத்துழைப்பை அதிகரிப்பதன் மூலம் ஆசிய நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தை அதிகரிக்கலாம். ஏற்றுமதியாளர்களுக்குச் சாதகமான முறையில் சந்தையில் நுழைவதற்கான சந்தர்ப்பத்தை அளிக்கக் கூடியதாக தீர்வைகள் மற்றும் தீர்வை சாராத தடைகளை இலகுவாக்குவதற்கு விருப்பம் காட்டுவது அவசியம்.

பாரிய முதலீட்டுப் பாய்ச்சல்களுக்குக் காரணமாக இருக்கும் தூண்டுதல்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

(1) குறைந்த வேதனத்தில் தொழில்கள்

(2) ஆதரிக்கும் நாட்டில் சந்தையில் நுழையக் கூடுமான தன்மை

(3) வரி அனுகூலம்

(4) நன்கு விருத்தி பெற்ற கட்டுமான அமைப்பு

(5) முன்னுரிமை அனுகூலங்கள்

(6) கிடைக்கக் கூடிய திறன்கள்

எங்காப் பிரதேசத்திலுள்ள வளர்ச்சியடைந்த நாடுகள் அப்பிரதேசத்திலுள்ள ஏனைய நாடுகளுக்கிடையில் காணப்படும் பிரதான பிரச்சினைகளை, முதலீட்டு வசதிகளை ஏற்படுத்துவதற்காக தீர்த்துக் கொள்ள முன்வரவேண்டும். அத்துடன் நெருக்கமான பொருளாதாரக் கொள்கைகளையும், பொருளாதார ஸ்திரத்தன்மையையும் வலியுறுத்த முன்வரவேண்டும். ஆசியான் அமைப்பைப் பொறுத்தவரை சீனாவும் ஏனைய நாடுகளும் அப்பிரதேசத்தில் பிரதான தடைகளாகக் காணப்பட்ட கட்டுமான அமைப்பை விருத்தி செய்யவும், நிர்வாக செயற்படு முறைகளை இலகுபடுத்தவும், தொழில்நுட்ப உதவிகளைப் பேணுவதற்கும் பலமுயற்சிகளை எடுத்துவருகின்றன.

தொழில் வகைகளில் காணப்படும் பிரதான தடைகள் பின்வருமாறு சுட்டிக்காட்டப்படுகின்றன. அவையாவன;

(1) மின்சார, மின்னியக்க உற்பத்திகளுக்குப் பற்றாக்குறையான கட்டுமான அமைப்புக்கள் காணப்படுவதுடன் அது தொடர்பான கைத்தொழில்கள் பின்தங்கியிருக்கின்றன.

(2) சிக்கல் வாய்ந்த நிர்வாக செயல்படுதிறன்கள், கலாச்சாரம், மொழி, பழக்க வழக்கங்களில் வேறுபாடுகள்

(3) இயந்திரங்களைப் பொறுத்தவரையில் பிரதான பிரச்சினைகளாக அளவுக்கதிகமான வேதன அதிகரிப்புக்கள், தொழில் திறன்கள் குறைந்த மட்டத்தில் காணப்படுதல், தொழில்நுட்பத்திறன் கொண்ட மனித சக்தி குறைவு, மூலப்பொருட்களைப் பெறுவதில் பிரச்சினைகள்.

(4) போக்குவரத்துக் கருவிகளைப் பொறுத்தவரையில் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் எதிர்கால வாய்ப்புக்கள் நிச்சயமின்மை, கொள்கைகளில் ஏற்படும் அடிக்கடியான மாற்றங்கள்.

(5) இறப்பர் மற்றும் இரசாயன உற்பத்திநிலையைப் பொறுத்தவரை சிக்கலான, நிர்வாக செயல்படுதிறன்களும் பற்றாக்குறையான நிதி ஒழுங்கமைப்பும்.

(6) கனிப்பொருட்களையும், அடிப்படை தேவைகளுக்குரிய பொருட்களையும் உற்பத்தி செய்யும் நிறுவனங்களை எதிர்நோக்கும் பிரதான தடைகளில் சிக்கலான நிர்வாக செயல்படுதிறன் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

## இலங்கையின் விஷேட தொடர்புகள்

கடந்த இருபது வருடங்களில் இலங்கையின் ஏற்றுமதி, இறக்குமதி அமைப்பின் பிரதான அம்சங்கள் பின்வருமாறு காணப்படுகின்றன.

(1) கைத்தொழில் ஏற்றுமதிகளின் பங்கு அதிகரித்துள்ளது.

(2) விவசாய ஏற்றுமதிகளின் பங்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

(3) நடுத்தரப் பொருட்களின் இறக்குமதியின் பங்கு வீழ்ச்சியடைந்துள்ளது மொத்த ஏற்றுமதியில் கைத்தொழில் ஏற்றுமதியின் பங்கு 1970 இல் 2 சதவீதமாக இருந்து 1980 இல் 31 சதவீதமாகவும் 1991 இல் 60 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது. இத்தகைய குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்குக் காரணம் புடவை தயாரிக்கப்பட்ட தைத்த ஆடைகளின் ஏற்றுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பேயாகும். 1991 இல் மொத்த ஏற்றுமதியில் இவற்றின் பங்கு 39 வீதமாகக் காணப்பட்டது. எனினும் 70 சதவீதமான கைத்தொழில் ஏற்றுமதிகள் தயாரிக்கப்பட்ட ஆடைகளையும், விமான எரிபொருட்களையும், பெற்றோலிய உப உற்பத்திகளையும் உள்ளடக்கியிருந்தன. தற்போது கைத்தொழில் ஏற்றுமதிகள் இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளிலேயே அதிகமாகத் தங்கியுள்ளன.

கடந்த இருபது வருட காலத்தில் இலங்கையின் ஏற்றுமதிக்கான சந்தைகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஐக்கிய இராச்சியம், சீனா, சோவியத்ருஷ்யா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள், கனடா, தென்ஆபிரிக்கா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் 1970 ஆம் ஆண்டுக் கால இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் முனைப்பான பங்கினைக் கொண்டிருந்தன. இச்சூழ்நிலையானது 1990 அளவில் குறிப்பிடத்தக்க மாற்றத்துக்குள்ளானது. ஐக்கிய அமெரிக்கா இலங்கையின் பிரதான ஏற்றுமதிச் சந்தையாக உருவாகியது. இதற்குக் காரணம் இலங்கையில் இருந்து பெருமளவில் தயாரிக்கப்பட்ட ஆடைகளை ஐக்கிய அமெரிக்கா கொள்வனவு செய்ததேயாகும். இரண்டாவது பாரிய ஏற்றுமதிச் சந்தையாக குறிப்பாக ஜேர்மனி, பிரித்தானியாவை உள்ளடக்கிய ஐரோப்பிய சமூகமும் மூன்றாவதாக யப்பானும் விளங்குகின்றது.

1980 ஆம் ஆண்டு ஏறக்குறைய 22 சதவீதமான இலங்கையின் ஏற்றுமதி ஆசியாவுக்கே சென்றடைந்தன. காரணம் இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளின் உயர்வான கொள்வனவேயாகும். ஆனால் அதன்பின் சீனா உட்பட தென்ஆசியாவின் பங்கு வீழ்ச்சியடைய கிழக்கு தென்கிழக்கு ஆசியா (ஆசியான் அமைப்பு, கொரியக்குடியரசு, ஹொங்கொங், தாய்வான்) நாடுகளின் பங்கு 1991 இல் அதிகரித்து. தென் ஆசியாவுடனான இலங்கையின் வர்த்தக குறைநிரப்புத் தன்மையானது வீழ்ச்சியடைய கிழக்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் அதிகரிப்பதை இது சுட்டிக் காட்டுவதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்குமதியை நோக்கின் 1991 ஆம் ஆண்டளவில் யப்பான் இலங்கையின் பிரதான வழங்கல் நாடாகத் திகழ்கின்றது. இந்தியா இரண்டாவதாகவும் அதனையடுத்து முறையே கொரியக் குடியரசு, ஹொங்கொங், தாய்வான் நாடுகளும் விளங்குகின்றன. இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் இலங்கையின் இறக்குமதிகளை வழங்கும் நாடுகளில் முதல் ஐந்து நாடுகளும் ஆசிய பிரதேசத்தைச் சார்ந்தவை. மேற்கு நாடுகள் தமது முக்கியத்துவத்தை இழந்து விட்டன. ஐக்கிய இராச்சியத்தைத் தவிர்த்துப் பார்த்தாலும் ஐரோப்பிய சமூக நாடுகளின் பங்கும் வீழ்ச்சியடைந்துள்ளது. 1980 – 91 இடைப்பட்ட காலத்தில் விருத்தியடைந்த நாடுகளினால் வழங்கப்பட்ட இறக்குமதிகளின் விகிதாசாரமானது வீழ்ச்சியடைந்துள்ள அதேவேளையில் ஆசியாவில் உள்ள வளர்முக நாடுகளினால் வழங்கப்பட்ட சதவீதம் உயர்வடைந்தது. இத்தகைய மாற்றங்கள் கோடிட்டுக் காட்டுவதென்னவெனின், ஆசியாவின் அநேக வளர்முக நாடுகள் விரைவாகக் கைத்தொழில் மயமாக்கப்பட்டதுடன் தமது பொருளாதாரங்களை பன்முகப்படுத்தலுக்குட்படுத்தியுள்ளதுடன் புடவை, செயற்கைப் பொருட்கள், மின்னியக்கப் பொருட்கள், சீமெந்து மற்றும் கட்டிடப் பொருட்கள் போன்ற தமது தயாரிப்புக்களுக்கான குறிப்பிடத்தக்க அளவில் இலங்கையின் சந்தையை விருத்தியடைந்த நாடுகளிடமிருந்து கைப்பற்றிக் கொண்டதில் வெற்றி கண்டன. ஆனால் இலங்கை ஆசியப் பகுதிகளில் அந்நாடுகளினால் வேண்டப்படுகின்ற தரத்தினைக் கொண்டதான தயாரிப்புப் பொருட்களின் மூலம் சந்தையைக் கைப்பற்ற முடியாமலிருந்தது. அதேவேளை சிங்கப்பூர், ஹொங்கொங், கொரியக் குடியரசு, தாய்வான், மலேசியா, சீனா, தாய்லாந்து ஆகியன ஆசியப் பகுதியிலுள்ள நாடுகளுக்குத் தயாரிப்புப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் அதிகரிப்புக் காட்டியுள்ளன.

இலங்கை தற்போது கடந்த காலங்களில் செய்தது போன்று விவசாய, மீன் மற்றும் கனிப்பொருள் உற்பத்திகளை ஏற்றுமதி செய்து வருகின்றது. ஆசிய – பசுபிக் பிரதேசங்களில் மின்னியக்கப் பொருட்களுக்கான மிகப் பெரிய கேள்வி காணப்படுகின்றது. இலங்கையினால் அதனைப் பயன்படுத்திக் கொள்ள முடியாதிருக்க ஆசியான் அமைப்பு நாடுகள் அதில் முதலிட்டு வருகின்றன. இலங்கையின் ஏற்றுமதி அமைப்பில் புடவை மற்றும் தயாரிக்கப்பட்ட ஆடைகளில் அதிகளவு ஒருமுகப்படுத்தப்பட்ட தன்மை காணப்படுகின்றதுடன் "புடவைகள் மூலமான வளர்ச்சி" (Textile led growth) எனவும் அழைக்கப்பட்டு வருகின்றது. ஆசிய – பசுபிக் பிரதேசத்திலுள்ள குறைநிரப்புத்தன்மையின் அனுகூலத்தைப் பயன்படுத்திப் பன்முகப்படுத்தலுக்கான யோசனைகளும் தெரிவிக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

**உசாத்துணைகள்**

(1) Kelegama J.B (1992) : Expansion of Trade and Investment among ESCAP developing countries within & regional frame work.

(2) Korea Trade Promotion Corporation (1992): Empirical study Trade and Investment within the Asia - Pacific region.

(3) Leelananda De Silva ( 1992 ): Trade and Technical Co-operation in Asia and the Pacific. An issues Paper.

❑

## மக்களால், மக்களின்........

படுத்துகின்றது. அவையாவன (1) வாழ்வு எதிர்பார்ப்புக்காலம் (2) கல்விசார் முன்னேற்றங்கள்.

உண்மையான தலா வருமான உள்நாட்டு உற்பத்தியானது வறுமை மட்டத்துடனும், வறுமைக் கோட்டு புள்ளி மட்டத்துக்கு மேலாகக் காணப்பட்ட வருமான அதிகரிப்புடனும் சரி செய்யப்படுகின்றது. கல்வி முன்னேற்றங்கள் குறித்த குறிகாட்டியானது பாடசாலை செல்லும் சராசரி வயது, வயது வந்தோர் கல்வி ஆகியவற்றுடன் இணைந்ததாகக் கணிப்பிடப்படுகின்றது. வாழ்வு எதிர்பார்ப்புக் காலமானது, சுகாதார நலனைப் பொறுத்தவரை தடுப்பாற்றலுள்ள, ஆளுமையுள்ளவர் என்ற ரீதியில்கணிக்கப்படுகின்றது. இம் மூன்று குறிகாட்டிகளில் ஒவ்வொன்றும் உலக நாடுகளிடையே குறைந்த, கூடிய நியமங்களுடன் (0 இல் இருந்து 1 வரை) தொடர்பாகக் கணிக்கப்பட்டது. இக் குறிகாட்டிகளின் அமைப்புப் பற்றிய சில குறைபாடுகள் பொருளியலாளர்களினால் சுட்டிக்காட்டப்பட்டாலும் மனித அபிவிருத்தி பற்றிய இத்தகைய தேடல் ஒரு புதிய கண்டு பிடிப்பென்றே கூறவேண்டும்.

மனித விருத்திக் குறிகாட்டியில் முன்னிலையில் நிற்கும் முதல் 25 நாடுகளுக்கான குறிகாட்டிப் பெறுமதி இங்கே தரப்படுகின்றது

| | | |
|---|---|---|
| 1. | யப்பான் | 0.993 |
| 2. | கனடா | 0.983 |
| 3. | ஐஸ்லாந்து | 0.983 |
| 4. | சுவீடன் | 0.982 |
| 5. | சுவிற்சலாந்து | 0.971 |
| 6. | நோர்வே | 0.978 |
| 7. | ஐக்கிய அமெரிக்கா | 0.976 |
| 8. | நெதர்லாந்து | 0.976 |
| 9. | அவுஸ்திரேலியா | 0.973 |
| 10. | பிரான்ஸ் | 0.971 |
| 11. | ஐக்கிய இராச்சியம் | 0.967 |
| 12. | டென்மார்க் | 0.967 |
| 13. | பின்லாந்து | 0.963 |
| 14. | ஜேர்மனி | 0.959 |
| 15. | நியுசிலாந்து | 0.959 |
| 16. | பெல்ஜியம் | 0.958 |
| 17. | ஒஸ்திரியா | 0.957 |
| 18. | இத்தாலி | 0.955 |
| 19. | லக்சம்போர்க் | 0.954 |
| 20. | ஸ்பெயின் | 0.951 |
| 21. | இஸ்ரவேல் | 0.950 |
| 22. | பார்படோஸ் | 0.945 |
| 23. | அயர்லாந்து | 0.945 |
| 24. | கிறீஸ் | 0.934 |
| 25. | ஹொங்கொங் | 0.934 |

Source: Human Development Report, 1991. p.119

நன்றி : The News letter, ICEG, vol. vi, No. 3 , January 1993.

❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவனங்களிலான முரண்பாடுகளும் அவற்றின் தாக்கங்களும்

**செல்வி. நித்தியலட்சுமி சண்முகம்**

## 1.0 அறிமுகம்

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பகுதியினருக் கிடையிலான சம்மதமின்மைகள், எதிர்ப்புகள், விரோதமான செயற்பாடுகள் (disagreements, oppositions, hostile interaction) என்பன முரண்பாடுகள் எனப்படுகின்றன. இது நிறுவனங்களின் வழமையான செயற்பாடுகளின் போது காணப்படும் அம்சங்களாக உள்ளன. இத்தகைய முரண்பாடுகளுக்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. இவற்றை இரண்டு வகையாக நோக்கலாம். ஒன்று நிறுவனரீதியான காரணிகள் (Organizational) இரண்டாவது தனிநபர்களுக்கிடைப்பட்ட (Interpersonal) காரணிகள். இவ்வாறான முரண்பாடுகள் எத்தகைய தன்மைகளைக் கொண்டுள்ளன? முரண்பாடுகள் தோன்றுவதற்கான அடிப்படைக் காரணங்கள் யாவை? முரண்பாடுகள் நிறுவனத்திற்குத் தேவையானவையா? முரண்பாடுகளின் வகைகள் யாவை? இவை எவ்வாறு கையாளப்பட வேண்டும்? என்பன தொடர்பாக நோக்க வேண்டியது அவசியமாகும். மேற்கூறிய வினாக்களுக்கு விடைகாண்பதன் மூலமே முரண்பாடுகள் ஒரு நிறுவனத்தின் வினைத்திறனுக்கு வழிகாட்டுகின்றதா? இல்லையா என்பதனை அறிந்து கொள்ள முடியும்.

## 2.0 நிறுவனத்திற்குள்ளான முரண்பாடுகளின் தன்மைகள்.

முரண்பாடுகளைக் கொண்ட பகுதியினர் குழுக்களாகவோ அல்லது தனிநபர்களாகவோ இருக்கலாம். முரண்பாடுகள் இணைவுகளை வேண்டி நிற்கும் செயற்பாடுகளினை மேற்கொள்வதில் கஸ்டங்களை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக உற்பத்தியும், சந்தைப்படுத்தற்பகுதியும் அவற்றின் செயற்பாடுகளில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையாகும். முரண்பாடுகள் காரணமாக உற்பத்திப்பகுதியின் செயற்பாட்டில் தடைகள் ஏற்படும் போது அதன் காரணமாக சந்தைப்படுத்தற்பகுதியின் செயற்பாடுகளும் ஸ்தம்பிதமடைய வேண்டிய நிலை ஏற்படலாம். இவ்வாறாக நிறுவனத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்படும் முரண்பாடுகள் நிறுவனத்தில் இயல்பாக எழுகின்றவையாகவோ (functional) அல்லது திடீரென எழுகின்றவையாகவோ (dysfunctional) இருக்கலாம். இவற்றில் சில நேரான விளைவுகளையும் இன்னும் சில எதிரான விளைவுகளையும் கொண்டுள்ளன.

நித்தியலட்சுமி சண்முகம் B.B.A (Hons)
விரிவுரையாளர்
வணிக முகாமையியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

### இயல்பான முரண்பாடுகள் (Functional Conflicts)

நிறுவனத்தின் நாளாந்த செயற்பாடுகளின் போது ஏற்படும் வழமையான முரண்பாடுகளாக இவை காணப்படுகின்றன. இவற்றின் விளைவுகள் நிறுவனத்தின் செயற்றிறனுக்கு வழிகாட்டுகின்றன. மிகக் குறைந்தளவு முரண்பாடு ஒரு நிறுவனத்தில் காணப்படுமாயின் அங்கு வேறுபட்ட கருத்துக்கள், அபிப்பிராயங்கள் என்பன காணப்படமாட்டாது. புதிது புனையும் திறனுக்கான கருத்துக்களோ தொலைநோக்கு அறிவுடைய கருத்துக்களோ குறைந்த அளவிலேயே வெளிப்படுத்தப்படும். இந்நிலையில் நிறுவனத்தின் அல்லது குறித்த பிரிவின் விளைவும் சராசரியானதாகவே காணப்படும். முக்கியத்துவம் வாய்ந்த முன்னேற்றம் எதுவும் பெறப்படுவதில்லை. ஏனெனில் புதிய திறனுள்ள கருத்துக்கள், அணுகுமுறைகள் என்பன ஒருபோதும் முன்னெடுக்கப்படுவதில்லை. மிகக் குறைந்த முரண்பாடு பிழையான அல்லது தவறான தீர்மானங்களை மேற்கொள்ள வழிவகுக்கலாம். இதனால் திறனற்ற விளைவுகள் உருவாகும். இத்தகைய நிலைமை பொதுவாகக் குழுக்களில் காணப்படும். வேறுபட்ட அபிப்பிராயம் அல்லது கருத்தினைத் தெரிவிப்பதனை விட குழுவுடன் ஒத்துப்போவதனை விரும்புவதனால் இந்நிலை உருவாகின்றது. அதாவது குறிப்பிட்ட கருத்தினை விட வேறுபட்ட கருத்துக்கள் அபிப்பிராயங்கள் என்பவற்றினை அங்கத்தவர்கள் கொண்டுள்ள போதிலும் அவற்றை முன்வைக்காது ஏனையோரின் கருத்துடன் ஒத்து போவதனை இது கருதுகின்றது. இச்செயன்முறை "தொகுதியாகச் சிந்தித்தல்" (Groupthink) எனப்படும்.

கருத்து வேறுபாடுகளின் வடிவமான முரண்பாடு ஆனது, தீர்மானத்தின்போது மிகவும் திறனுள்ள தீர்மானம் ஒன்றுக்கு இட்டுச் செல்லுமாயின் அது இயல்பானதாக அமைகின்றது. தொகுதியாகச் சிந்தித்தல் என்பது இயல்பான முரண்பாட்டை அனுமதிப்பதில்லை. தரமற்ற குழுத்தீர்மானங்களுக்கு இது வழிகாட்ட முடியும். நிறுவனங்களில் தனிநபர்கள் வேறுபட்ட கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் கூறாதபோது பல தாக்கங்கள் காணப்படலாம். இந்நிலமை புத்தாக்கத்தில் பின்னடைவு நிலையினையும் தரமற்ற தீர்மானமெடுக்கும் நிலையினையும் உள்ளடக்கும். இயல்பான முரண்பாடுகள் எதுவுமற்ற ஒரு நிறுவனத்தில் பரபரப்பற்ற (no excitement) நிலைமை காணப்படும்.

### இயல்பற்ற முரண்பாடுகள் (Dysfunctional Conflicts)

ஒரு நிறுவனமானது முரண்பாடொன்றின் காரணமாக நீண்டகாலத்தில் குறைந்த வினைத்திறன் உடையதாக மாறுமாயின் அத்தகைய முரண்பாடு இயல்பற்றதெனக் கருதப்படலாம். இதற்குக் காரணம் அது நிறுவன இலக்குகளை அடைவதனைத் தடைசெய்கின்றது. அநேகமான சந்தர்ப்பங்களில் நிறுவன இலக்குகளை வெற்றிகரமாக அடைந்து கொள்வதில் தனிநபர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுக்கள் என்பவற்றுக்கிடையிலான ஒத்துழைப்பும் பரஸ்பர செயற்பாடுகளும் அவசியமாகின்றன. ஆனால் இரண்டு பகுதிகளுக்கிடைப்பட்ட முரண்பாடானது ஒத்துழைப்பைக் குறைவடையச் செய்வதுடன் மற்றைய பகுதியினர் தமது வேலையைத் திறம்படச் செய்தலைத் தடுக்கும் செயற்பாடுகளுக்கும் வழிநடத்தலாம். அத்துடன் முரண்பாடானது ஊழியர்கள் தமது வேலையைச் செய்வதற்குப் பதிலாகத் தமது நேரத்தினை சண்டையிடுவதிலும், விவாதிப்பதிலும் சதிசெய்வதிலும் செலவிடக் காரணமாகலாம். முரண்பாடானது எப்பொழுது இயல்பானதாகவுள்ளது? எப்பொழுது இயல்பற்றதாகவுள்ளது என்பதனை வரையறை செய்தல் இலகுவானதன்று. ஆனால் அது ஒரு முகாமையாளருடைய கடமையாகும். முகாமையாளர்கள் முரண்பாடுகளைச் சரியான முறையில் கையாளல் வேண்டும். முரண்பாடுகள் இயல்பற்றவையாக இருக்கலாம்.




## 3.0 இயல்பான, இயல்பற்ற முரண்பாடுகளின் நிறுவனரீதியான பிரயோகங்கள்

முரண்பாடுகள் இயல்பானவையாகவோ அல்லது இயல்பற்றவையாகவோ இருக்கலாம். ஒரு முகாமையாளர் எல்லா முரண்பாடுகளையும் நீக்க விரும்புவதில்லை. எவை நிறுவனத்தின் சிறந்த வினைத்திறனுள்ள செயற்பாட்டுக்குத் தடையாக அமைகின்றனவோ அவற்றை மட்டுமே நீக்க முற்படுவர். ஆகவே முகாமையாளர் ஒருவர் முரண்பாடு தொடர்பாகப் பின்வரும் அம்சங்களைக் கருத்திற் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

(1)எது இயல்பான முரண்பாடு? எது இயல்பற்ற முரண்பாடு? எனத்தீர்மானித்தல் வேண்டும். நிறுவன இலக்கினை அடைவதில் முரண்பாடுகளின் தாக்கத்தினை அடிப்படை யாகக் கொண்டு ஒரு முகாமையாளர் இயல்பான இயல்பற்ற முரண்பாடெனத் தீர்மானிக்கலாம்.

முரண்பாடானது அதிகளவு புதுமையான கருத்துக்கள், சிறந்த தீர்மானங்கள் என்பவற்றுக்கு வழிகாட்டி இலக்குகளை அடைய உதவுமாயின் அது இயல்பான முரண்பாடு ஆகும். மாறாக ஊழியரது உற்பத்தித் திறனற்ற நடத்தை, குறைந்தளவான ஒத்துழைப்பு இலக்குகளை அடைவதில் தடைகள் என்பவற்றுக்கு வழிகாட்டுமாயின் அது இயல்பற்ற முரண்பாடு ஆகும்.

(2)பொருத்தமான தீர்வு நுட்பத்தைப் பயன்படுத்தி இயல்பற்ற முரண்பாடுகளை நீக்குதல்.

(3)தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் போது அதிக மாற்றுவழிகளைக் கருத்திற்கொள்ள வேண்டிய தேவையும், அதிகளவு புதுத்தன்மைக்கான தேவையும் அதேவேளை மிகக் குறைந்த முரண்பாடும் காணப்படுமாயின், முரண்பாட்டைத் தூண்டுதல்.

## 4.0 முரண்பாடுகளுக்கான காரணங்கள்

நிறுவனங்களுக்குள்ளான முரண்பாடுகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட பல்வேறு காரணிகளினால் ஏற்படுகின்றன. முகாமையாளர்கள் இக்காரணங்களை விளங்கி அவற்றைக் கண்டுபிடிக்கக் கூடியதாயிருத்தல் அவசியமாகும். இதனால் முரண்பாடுகள் திறனுள்ள முறையில் கையாளப்பட முடியும். பின் வருவன முரண்பாடுகளுக்கான பொதுவான காரணங்களாகும்.

### (1) தனிப்பட்ட காரணங்கள்

அநேகமான, முரண்பாடானது ஆளுமை அல்லது தனிப்பண்பு வேறுபாட்டின் காரணமாக எழுகின்றது. இவற்றில் தனிப்பட்ட காரணிகள், பெறுமதிகள், அடிப்படை மனோபாவங்கள் என்பன காரணமாக அமையலாம். முரண்பாடானது தனிப்பட்ட காரணிகளால் ஏற்பட்டதென அடையாளம் காணப்பட்டால் தீர்வு நுட்பத்தினை தெரிவு செய்வது சாத்தியமாகும். அநேகமான தனிப்பட்ட காரணிகள் மாற்றப்பட முடியாதவை. இவ்விதமான முரண்பாட்டின் தீர்வானது சம்பந்தப்பட்டோரை பௌதீகரீதியாகவோ, அமைப்புரீதியாகவோ பிரிக்கப்படவேண்டிய தேவையை வேண்டிநிற்கின்றது. பகுதியினருக்கிடையிலான இடைத்தொடர்புகள் குறைக்கப்பட வேண்டும்.

### (2) அமைப்புரீதியான காரணிகள்

அமைப்புரீதியான பல காரணிகளும் முரண்பாட்டுக் காரணமாகின்றன. இவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

(i) அதிகரித்த விஷேட தன்மையதாக்கல்
(ii) இலக்குகளிலான வேறுபாடுகள்
(iii) மையப்படுத்தல் Vs பரவலாக்கல்
(iv) சார்ந்திருக்கும் தன்மை

### (i) அதிகரித்த விஷேட தன்மையதாக்கல்

நிறுவனங்கள் பெரியதாகவும், பல்வகைப்படுத்தலை மேற்கொள்வதாகவும் பல்வேறுபட்ட பொதுமக்களுக்கு சேவையாற்றுவதாகவும் அதிகளவான வெளியக தேவைகளை அதாவது அரசமுகவர்கள், நுகர்வோர் குழுக்கள் (Consumer Groups) ஆகியோரது தேவைகளைச் சந்திப்பவையாகவும் இருக்கும்போது வினைத்திறனுள்ள செயற்பாட்டிற்கு அதிகளவு விசேட தன்மையதாக்கல் தேவைப்படுகின்றது. சிறிய நிறுவனங்கள் ஆளணிதொடர்பான அநேகமான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஓர் ஆளணி முகாமையாளரைக் கொண்டிருக்கலாம். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

பெரிய நிறுவனங்கள் தொழில், தொழிலாளர், தொடர்புகள், பயிற்சியும் விருத்தியும், நஷ்டஈடு, உறுதிப்படுத்தும் செயற்பாடுகள் (Affirmative Action) போன்ற பல்வேறு தொழிற்பாடுகளின் பொருட்டும் நிபுணர்களைக் கொண்டுள்ளன. இந்நிலமையானது ஒரு தொழிற்பாட்டுக்குள்ளான விஷேடதன்மையதாக்கலைப் (Specialisation within one function ) பிரதிபலிக்கின்றது. நிறுவனமானது பல்வகைப்பட்ட பொதுமக்களுக்கு சேவை புரிவதனால் புதிய தொழிற்பாட்டுப் பகுதிகளைச் சேர்த்துக் கொள்ளலாம். இவ்வாறு வேலையைப் பிரித்தல், வேறுபடுத்தல் (differentiation) எனப்படுகின்றது. அதிகளவு வினைத்திறனுள்ள நிறுவனங்கள் அதிகளவு வேறுபடுத்தலை மேற்கொள்கின்றன. அதிகரித்த விஷேட தன்மையதாக்கல் கூடியளவு நேரான நன்மைகளை கொண்டுள்ளன. அனால் இவை முரண்பாட்டுக்கான அதிக சாத்தியங்களையும் கொண்டு இருக்கின்றன. விசேடப்படுத்துப்பட்ட அம்சங்களைக் கொண்டுள்ளன. இங்கு இலக்கு வேறுபாடுகள், தொழிற்பாட்டு நேர வேறுபாடுகள் என்பன காணப்படலாம். உதாரணமாக, ஓர் ஆராய்ச்சி அபிவிருத்தி பிரிவானது குறைந்த நேர செயற்பாட்டைக் கொண்டுள்ளது. இதன்செயற்பாடுகள் உற்பத்திப்பிரிவின் செயற்பாடுகளுக்கேற்ப சுமையைக் கொண்டிருக்கும். இங்கு ஆராய்ச்சி அபிவிருத்திப் பிரிவானது உற்பத்திப் பொருட்களை விருத்தி செய்வதிலும், புதிய உற்பத்திகளைப் பரிசோதிப்பதிலும் தாமதம் ஏற்படுமாயின் உற்பத்தி,ஆராய்ச்சிப் பிரிவுகளுக்கிடையில் முரண்பாடு தோன்றலாம்.

### (ii) இலக்குகளிலான வேறுபாடுகள்

இலக்குகளிலான வேறுபாடுகளும் முரண்பாடுக்குக் காரணமாகலாம். இரண்டு அலகுகளுக்கு இடையிலான வேறுபட்ட இலக்குகள் இத்தகைய நிலையை உருவாக்கலாம். நிறுவனங்களைப் பொறுத்து பொதுவான ஒரு இலக்கு காணப்படுகின்ற போது அந்நிறுவனத்தின் பல்வேறு அலகுகளும் தமக்கென தனித்தனி இலக்குகளைக் கொண்டிருக்கின்றன. இவ்விலக்குகள் ஒன்றுக்கொன்று பொருந்தாதவையாக அமைகின்ற போது முரண்பாடுகள் தோன்றலாம். உதாரணமாக உற்பத்திப்பிரிவு உற்பத்தியின் பொருட்டு சிறந்த வினைத்திறனை அடைவதனை நோக்காகக் கொண்டிருக்கும். அதேவேளை நிறுவனத்தின் நிதிப்பிரிவானது கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதிவளத்தினை சிக்கனமாகவும், சிறந்த முறையிலும் பயன்படுத்துவதனையே விரும்பும். இந்நிலையில் நிதிப்பிரிவினால், தரமான மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்யப் போதுமானதாக இல்லாதிருப்பின் இவ்விரு பகுதியினருக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றலாம்.

### (iii) மையப்படுத்தல் Vs பரவலாக்கல்

அதிகாரத்துடன் தொடர்புடைய மையப்படுத்தல், பரவலாக்கல் ஆகிய ஒவ்வொன்றும் வேறுபட்ட முரண்பாட்டு வடிவங்களுக்குக் காரணமாகலாம். மையப்படுத்தலில் ஒரு தனிநபர் ஏனைய எல்லா அலகுகளுக்குமான தீர்மானங்களை மேற்கொள்கின்றார். இது பிரிவுகளுக்கிடையிலான முரண்பாட்டைக் குறைவடையச் செய்யலாம். ஏனெனில் இலக்குகள், நோக்கங்கள் என்பவை வேறுபடுத்தப்பட்ட நிலையில் இங்கு தீர்மானம் மேற் கொள்ளப்படுகின்றது. எவ்வாறெனினும் மேலதிகாரிகளுக்கும், கீழ் ஊழியர்களுக்கும் இடையிலான முரண்பாடுகளை அதிகரிக்கலாம். ஏனெனில் ஊழியர்கள் தமது வேலைச் சூழலின் மீது குறைந்த கட்டுப்பாட்டையே கொண்டுள்ளார்கள்.

பரவலாக்கல் ஆனது அதிகளவு விசேடத்தன்மையதாக்கப்பட்ட அலகுகளைக் கொண்ட பெரிய, பல்வகைப்படுத்தப்பட்ட நிறுவனங்களில் காணப்படுகின்றது. பரவலாக்கப்பட்ட அதிகாரமானது ஒவ்வொரு பிரிவின் முகாமையாளரும் முக்கிய தீர்மானங்களை எடுப்பதற்கான அதிகாரத்தினைக் கொண்டிருப்பதனைக் கருதுகின்றது. பரவலாக்கலானது ஒரு அலகிற்குள் மேல் அதிகாரி, கீழ் ஊழியருக்கிடைப்பட்ட முரண்பாட்டை குறைவடையச் செய்யக்கூடும். ஏனெனில் அவர்கள் தமது வேலைச் சூழலின் மீது அதிகளவு கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளார்கள். அதேவேளை இது அலகுகளுக்கிடையிலான அதிக முரண்பாட்டுக்கும் வழி வகுக்கலாம். ஏனெனில் பரவலாக்கலின் போது சுதந்திரமான தீர்மானங்கள் மேற் கொள்ளப்படுவதனால் அலகுகளுக்கிடையில் முரண்பாடான தீர்மானங்கள வெளிப்படுத்தப்படலாம்.

### (iv) சார்ந்திருக்கும் தன்மை (Interdependence)

நிறுவனங்களில் குழுக்களினதும், பிரிவுகளினதும் வேலைகள் இணைக்கப்பட வேண்டும். அதிகளவு சார்புத்தன்மையுள்ள இரண்டு பிரிவு அல்லது குழுக்களுக்கிடையில் முரண்பாடுகள் எழுவதற்கான அதிக சாத்தியங்கள் காணப்படுகின்றன. சார்புத்தன்மையானது வரையறுக்கப்பட்ட வளங்கள் காரணமாகவோ அல்லது நேரம், செயற்பாடுகளை ஒழுங்குப்படுத்தல் என்பவற்றில் வேண்டப்படும் இணைவு காரணமாகவோ ஏற்படலாம். எல்லா நிறுவனங்களும் வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டுள்ளன. இவற்றிலிருந்து தமது இலக்கை அடைவதற்குச் சிறந்த வழியினைக் கண்டு கொள்வதற்கு முயற்சிசெய்கின்றன. கிடைக்கத்தக்கதாகவுள்ள எல்லா ஆளணியினையும், உபகரணங்களையும், அனைத்து வளங்களையும் கணிப்பீடு செய்து பயன்படுத்தவிரும்புகின்றன. உதாரணம் கணணிகளின் பயன்பாடு அதிகளவான செயற்பாடுகளைக் கொண்ட பெரிய நிறுவனங்களைப் பொறுத்து முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அதே வேளையில் இவை விலை உயர்ந்தவையாகவும் காணப்படுகின்றன. நிறுவனம் ஒரு கணணியினைக் கொள்வனவு செய்யும் போது ஒவ்வொரு பிரிவும் தனித்தனி ஒவ்வொன்றைக் கொள்வனவு செய்வதனை விட எல்லாப் பிரிவுகளும் ஒரே கணணியைப் பயன்படுத்துவதனை விரும்பலாம்.

கணணியானது எல்லா அலகுகளினாலும் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்குக் கையாளப்படக்கூடியதாக இருப்பினும், இங்கு முன்னுரிமைகள் வேலையை ஒழுங்கு படுத்தல் என்பவற்றுக்கான தேவை உருவாகலாம். ஒவ்வொரு அலகும் தனது வேலையை கூடிய முக்கியத்துவம் கொண்டதென உணரலாம். இதனால் ஒரு அலகு பிரிவின் வேலைக்குக் குறைந்த முன்னுரிமை வழங்கப்படும் போது முரண்பாடுகள் எழலாம். முரண்பாடு தொடர்பான ஆய்வொன்றில் வரையறுக்கப்பட்ட வளங்களுக்கான போட்டியானது இயல்பற்ற முரண்பாடுகளுக்கு இட்டுச்செல்லுமெனக் கண்டு கொள்ளப்பட்டது (Dennis M and Michael A.H.1981). நேரக்கணிப்பு, ஒழுங்குபடுத்தல் வேறுபாடுகளும் முரண்பாட்டுக்கு இட்டுச்செல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். உதாரணமாக ஆராய்ச்சி அபிவிருத்திப் பிரிவானது பொருள் ஒன்று உற்பத்தி செய்யப்படமுன் அதனை வடிவமைத்து மாதிரியைப் பரிசோதனை செய்ய வேண்டியிருக்கின்றது. இது எதிர்பார்க்கப்படும் நேரத்தினை விடக் கூடுதலான நேரம் எடுக்குமாயின் உற்பத்தி பிரிவானது அட்டவணைப்படுத்தலில் பிரச்சினையை எதிர்நோக்கலாம்.

### (3) செய்தித் தொடர்பு

முரண்பாட்டுக்கான ஒரு பொதுவான காரணியாக தவறான விளக்கங்களுக்கும், தடைகளுக்கும் இட்டுச் செல்லும் தரமற்ற செய்தித் தொடர்பு காணப்படுகின்றது. முரண்பாட்டைத் தடுப்பதற்கான இலகுவான வழி செய்தித்தொடர்பின் சிறந்ததன்மையினை உறுதிப்படுத்தலாகும்.

தரமற்ற செய்தித் தொடர்பானது முரண்பாட்டை மோசமடையச் செய்யவும் காரணமாகின்றது. உதாரணமாக ஒருவழிச் செய்தித் தொடர்பை மேற்கொள்ளும் நிறுவனமொன்றில் தவறாக விளங்கிக் கொள்ளல் காரணமாக அடிக்கடி பிரச்சினைகள் தோன்றுகின்றது. முரண்பாடுகள் மோசமடைகின்றன. இதனால் செயற்பாடுகளில் தடையும், திறனின்மையும் ஊழியர் நிறுவனத்தை விட்டு விலகல் போன்ற தடைகளையும் ஏற்படுத்துகின்றன. திறனுள்ள செய்தித்தொடர்பானது முரண்பாட்டை நீக்குவதில் முக்கியமான உள்ளடக்கமாகக் காணப்படுகின்றது.

**முரண்பாட்டின் காரணங்களும் வகைகளும்**




SOURCE: DENNIS M.R. and Michael A.R.(1981)

## 5.0 முரண்பாடுகளின் வகைகள்

முரண்பாடுகள் அவற்றின் தன்மைகளுக்கேற்ப பல்வேறு வகைகளாகக் காணப்படுகின்றன. இவற்றில் நிறுவனங்களுக் கிடையிலான முரண்பாடுகள், குழுக்களுக்கிடையிலான முரண்பாடுகள், தனிநபருக்கிடையிலான முரண்பாடுகள், பங்கு முரண்பாடு என்பன உள்ளடங்குகின்றன.

### (1) நிறுவனங்களுக்கிடையிலான முரண்பாடு (Inter Organizational Conflict)

நிறுவனங்களுக்குள்ளான முரண்பாடுகளுக்கு மேலதிகமாக, நிறுவனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் எழுவதும் குறிப்பிடத்தக்கதாகும். இது நிறுவனங்களுக்கிடைலான முரண்பாடு எனப்படுகின்றது. ஒரே தொழிலில் போட்டியிடுகின்ற அல்லது வரையறுக்கப்பட்ட இயற்கை வளங்களுக்காகப் போட்டியிடுகின்ற நிறுவனங்கள் இத்தகைய முரண்பாட்டை எதிர்கொள்கின்றன. நிறுவனங்களுக்கிடையிலான முரண்பாட்டுக்கு முக்கியமான பொதுவான ஒரு காரணம் சார்புத்தன்மையேயாகும்.

### (2) திணைக்களங்களுக்கிடையிலான முரண்பாடுகள் (Inter - Departmental Conflict)

ஒரு நிறுவனமானது அதன் செயற்பாடுகளை இலகுவாக்குவதன் பொருட்டுப் பல்வேறு அலகுகளாகப் பிரிக்கப்படுகின்றது. இவ்வாறு பிரிக்கப்பட்ட அலகாகவே திணைக்களம் என்பது அமைகின்றது. இத்திணைக்களங்களுக்கிடையிலான முரண்பாடுகள் வேறுபட்ட பல காரணிகளினால் எழலாம். இவற்றுள் சார்புத்தன்மை, வரையறையுள்ள வளங்களுக்கான போட்டி, அமைப்பு, புலனுணர்வு அறிவுணர்விலான வேறுபாடுகள், தனிநபர் முரண்பாடுகளின் விளைவுகள் என்பன உள்ளடங்குகின்றன.

### (3) வரிசைஉத்தியோக முரண்பாடு (Line - Staff Conflict)

அநேகமான நிறுவனங்களில் வரிசை ஆளணியினருக்கும், உத்தியோக ஆளணியினருக்கும் இடையிலான முரண்பாடுகள் அடிக்கடி இடம் பெறும் ஒரு நிகழ்வாகக் காணப்படுகின்றன. வரிசை ஆளணியினர் (line personnel) நிறுவனத்தின் அடிப்படை நோக்கத்தை நிறைவேற்றும் நேரடியான அதிகாரத்தினையும் பொறுப்பினையும் கொண்டுள்ளார்கள் ,உத்தியோக ஆளணியினர் (staff personnel) வரிசை ஆளணிக்கு உதவிச்சேவை வழங்குபவராகவே காணப்படுகின்றார்கள் (உதாரணம் தனிப்பட்ட உதவியாளர்). இவ்வமைப்பானது வேறுபட்ட உத்தியோகப் பரப்புகளில் நிபுணத்துவத்தின் உதவியினை வரிசை ஆளணிக்கு வழங்குவதன் பொருட்டு வடிவமைக்கப்பட்டதாகும். ஆனால் உத்தியோக ஆலோசனையை ஆட்சேபிக்கும் போது இது வரிசைத்திணைக்களங்களில் முரண்பாட்டையும் உருவாக்க முடியும்.

வரிசை முகாமையாளர்கள் உத்தியோக ஆளணியின் ஆலோசனைகள் சரியாக இயங்காத போது அதற்குரிய குற்றச்சாட்டுக்களைத் தாம் பொறுப்பேற்க வேண்டியிருப்பதாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதுகின்றார்கள். இதனால் சில சந்தர்ப்பங்களில் உத்தியோக நிபுணர்களின் ஆலோசனைகளை இவர்கள் பயன்படுத்தாது விடலாம். இம்முரண்பாடுகள் வடிவமைக்கப்பட்ட அமைப்பின் வினைத்திறனற்ற பண்பாட்டுக்கு இட்டுச்செல்லலாம். இவற்றில் பெரும்பாலானவை இயல்பற்ற முரண்பாடுகளே. இவை நீக்கப்பட வேண்டியவையாகும். உண்மையில் வரிசை - உத்தியோக முரண்பாடு முழுமையாக அடையாளம் காணப்பட்டு சாத்தியமான அளவிற்கு முகாமையாளர்களால் தடுக்கப்பட வேண்டும்.

## (4) தனி நபருக்கிடையிலான முரண்பாடுகள் (Inter personnal Conflict)

தனிநபர்களுக்கிடையிலான முரண்பாடென்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையிலான முரண்பாட்டினைக் கருதுகின்றது. அத்துடன் இலகுவாக அடையாளம் காணப்படக்கூடியதுமாகும். நாம் எமது அனுபவத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் தனிநபர்களுடன் முரண்பட்டுக் கொள்கிறோம். இவை மனதிற்குப் பிடித்த சம்பவங்களாக அமைவதில்லை. ஆனால் சில தனிநபர் முரண்பாடுகள் நிறுவனத்திற்கு இயல்பானவையாக இருக்கலாம். தனிநபர் முரண்பாடானது அதிகமான புதுமையான கருத்துக்கள், வேறுபட்ட தீர்மான மாற்றுவழிகள் என்பவற்றை உருவாக்கி ஏற்றுக் கொள்ளக்கூடிய எல்லைகளுக்குள் நிர்வகிக்கப்படுமாயின் அது இயல்பான முரண்பாடெனக் கருதப்படலாம். தனிநபர் முரண்பாடுகளுக்குப் பின்வருவன காரணங்களாக அமையலாம்.

(i) ஆளுமை வேறுபாடுகள் (Personality Differences)
(ii) அமைப்பு ரீதியான வேறுபாடுகள் (Structural Differences)
(iii) பங்கு வேறுபாடுகள் (Role Differences)
(iv) புலனுணர்வு அறிவுணர்ச்சியிலான வேறுபாடுகள் (Perceptual Differences)

தனிநபர் முரண்பாடுகள், வெகுமதிகள் வழங்கும் முறைகளில் உணரப்படும் நியாயமற்ற தன்மைகளின் (Inequities) விளைவாகவும் காணப்படுகின்றன. இந்நியாயமற்ற தன்மைகள் மேல் அதிகாரி - கீழ் ஊழியர் முரண்பாடு அல்லது சக ஊழியர்களுக்கிடையிலான முரண்பாட்டுக்கும் இட்டுச் செல்லலாம். இத்தகைய முரண்பாடுகள் சம்பந்தப்பட்ட பகுதியினர் வேறுபட்ட அதிகாரமட்டங்களில் இருக்கும்போது கடுமையானவையாக இருக்கின்றன.

## 5. பங்கு முரண்பாடு (Role Conflict)

ஒரு பங்கு (ROLE) என்பது நிறுவன அமைப்பொன்றுக்குள் குறிப்பிட்ட ஒரு நிலையில் செயற்படும் அங்கத்துவத்துடன் இணைந்த எதிர்பார்க்கப்படும் நடத்தை வடிவமாகும். (Laurie J.M,1981) பங்கு பற்றிய கோட்பாடானது ஒரு தனிநபரின் ஆளுமையுடன் சுதந்திரமாக எழுகின்ற நடத்தை நிலைகளின் மீது கவனத்தைச் செலுத்துகின்றது. நடத்தை வடிவமானது குறிப்பிட்ட பங்கு, ஆளுமை அல்லது தனிப்பண்பு என்பவற்றின் விளைவாகும். நடைமுறையில் ஒருவர் தன்னை உண்மையாக நடத்தும் விதமானது அவரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் நடத்தை வடிவங்களுடன் இசைவற்று இருக்கலாம். இத்தகைய இசைவற்ற தன்மையானது பங்கு முரண்பாட்டுக்குக் காரணமாகலாம். பங்கு முரண்பாடானது பின்வருவனவற்றை உள்ளடக்க முடியும்.

1. பங்கின் ஒவ்வாததன்மை (Role Incompatibility)
2. பங்கின் நிச்சயமற்ற தன்மை (Role Ambiquity)
3. பங்குச் சுமை (Role Overload)
4. பங்குச் சுமையின்மை ( Role Underload)

### (i) பங்கின் ஒவ்வாதன்மை

முரண்பாட்டை உருவாக்குகின்ற வேறுபட்ட எதிர்பார்ப்புக்களை ஒரேநேரத்தில் ஒரு நபர் எதிர்கொள்ளும் போது பங்கு ஒவ்வாததன்மை என்பது எழுகின்றது. குறிப்பிட்ட ஒரு தொகுதி எதிர்பார்க்கைகளுடன் இணங்குதல் என்பது இன்னொரு தொகுதி எதிர்பார்க்கைகளுடன இணங்குவதனைச் சாத்தியமற்றதாக்குகின்றது. இதனால் பங்கு எதிர்பார்க்கைகளும் முரண்பட்டதாக அமைகின்றன. உதாரணம்; எதிரான எதிர்பார்க்கைகளுக்கிடையில் அதாவது வேறுபட்ட எதிர்பார்க்கைகளைக் கொண்ட முகாமை, கீழ்ஊழியர் ஆகியோருக்கிடையில் பணிபுரியும் ஒரு பிரிவுத்தலைவர் அல்லது மேற்பார்வையாளர்.

### (ii) பங்கு நிச்சயமற்ற தன்மை

இது ஒரு நபர் என்ன செய்ய வேண்டும் என்பதனை நிச்சயப்படுத்த முடியாதுள்ள நிலையிலும், பங்கின் எதிர்பார்ப்புக்கள் தொடர்பான தெளிவு அற்ற நிலையிலும் எழுகின்றது. ஒரு நபரது, தனது பங்கு பற்றிய அறிவுணர்வானது ஏனையவர்களீது எதிர்பார்க்கைகளுடன் வேறுபடலாம். இது பங்கின் அடிப்படையிலான விளைவுக்குத் தேவையான தகவல்களின் பற்றாக்குறையினைச் சுட்டிக்காட்டுகின்றது. இதன் மூலமும் பங்கு முரண்பாடு உருவாகலாம்.

### (iii) பங்குச் சுமை

இது ஒரு நபர் அதிகளவான வேறுபட்ட பங்குகளுக்கு அல்லது மிகவும் வேறுபட்ட எதிர்பார்க்கைகளுக்கு முகம் கொடுக்கும் போது எழுகின்றது. நபர் எல்லா எதிர்பார்க்கைகளையும் திருப்திகரமாக நிறைவேற்ற முடியாதுள்ளது. அத்துடன் சில எதிர்பார்க்கைகள் ஏனையவற்றைத் திருப்திப்படுத்தும் பொருட்டு அலட்சியப்படுத்தப்பட வேண்டியவையாகவுமுள்ளன. இது தெரிவு/முன்னுரிமை அடிப்படையிலான முரண்பாடு ஒன்றுக்கு இட்டுச் செல்கின்றது.

### (iv) பங்குச் சுமையின்மை

இது ஒரு புதிய உத்தியோக அங்கத்தவர் முதன்முதலில் நியமிக்கப்படும் போதோ அல்லது அதிகாரக் கையளிப்பின் ஆரம்ப விளைவுகளில் இருந்தோ எழலாம். இங்கு உருவாக்கப்பட்ட எதிர்பார்க்கைகள், நபர்கள் தமது பங்குபற்றி உணர்ந்து கொள்ளும் சொந்த அறிவுணர்வினை விட குறைவானவையாகக் காணப்படுகின்றன. குறித்த நபர் தனக்கு வழங்கப்பட்ட பங்கு தனது இயலளவுக்குப் போதுமானதல்ல என உணர்கின்றார். இதனால் செயற்பாடுகளின் போது முரண்பாடு உருவாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.0 நிறுவன முரண்பாடுகளை முகாமை செய்தல் (Managing Organizational Conflicts)

மேற்கூறிய முரண்பாடுகளுக்கான காரணங்கள், அவை ஏற்படும் சூழ்நிலைகள் என்பவற்றை நோக்கும் போது நிறுவனங்களில் முரண்பாடுகள் தவிர்க்கப்பட முடியாதவை என நாம் முடிவு செய்யலாம். எனினும் முகாமையாளர்கள் இவற்றை அலட்சியப்படுத்தவோ அல்லது ஏனைய பிரச்சினைகளின் மீது மட்டும் கவனத்தைச் செலுத்தவோ முடியாது. நிறுவனங்கள் வினைத்திறனுள்ளவையாக இருப்பதற்கு அவற்றுக்குள்ளான முரண்பாடுகள் முகாமை செய்யப்பட வேண்டும். சில சந்தர்ப்பங்களில் அவை நீக்கப்பட வேண்டும். சில சந்தர்ப்பங்களில் அவை தூண்டப்பட வேண்டும். இன்னும் சில சந்தர்ப்பங்களில் இவை தற்போது இருக்கும் மட்டத்திலேயே தொடர்ந்து நிர்வகிக்கப்பட வேண்டும்.

முரண்பாடுகளை முகாமை செய்தலின் முதலாவது படிமுறை முரண்பாட்டின் தன்மைகளைக் கண்டுபிடித்தலாகும் (Diagnosis). ஒரு முகாமையாளர் அலகின் முரண்பாட்டை அவதானித்து, அதன் தற்போதுள்ள தன்மைகளைக் கண்டு அறிந்து, முரண்பாடானது இயல்பானதா? இயல்பற்றதா என்பதனைத் தீர்மானித்தல் வேண்டும். முரண்பாட்டின் மட்டமானது அதிகளவாகக் காணப்படும் போது அது இயல்பற்ற முரண்பாடாகும். இந்நிலையில் முரண்பாட்டை நீக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதன் பொருட்டு ஒரு முகாமையாளர் பல்வேறுபட்ட நுட்பங்களைப் பிரயோகிக்க முடியும்.

### 1. தீர்வு நுட்பங்கள்

முரண்பாடுகளை நீக்கும் பொருட்டு பல்வேறுபட்ட தீர்வு நுட்பங்கள் முகாமையாளருக்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ளன. இவற்றில் பொருத்தமான ஒன்றைத் தெரிவு செய்தலானது சூழ்நிலையின் குணாதிசயங்களிலும், முரண்பாட்டுக்கான காரணங்களிலும் தங்கியுள்ளது. தீர்வு நுட்பங்களில் பின்வருவன உள்ளடங்குகின்றன.

### (i) பிரச்சினை தீர்த்தல்

பரஸ்பர அடிப்படையில்பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளல் பிரிவு திணைக்களங்களுக்கிடையிலான முரண்பாட்டை நீக்குவதற்கான சிறந்த வழியாகும். இதன்கீழ் முரண்பாடுடைய இருபகுதியினரும் அவர்களது வேறுபாடுகளைக் கலந்துரையாடும் பொருட்டு ஒன்றாகக் கொண்டு வரப்படுகின்றார்கள். முதலாவதாக பிரச்சினை தொடர்பாக ஒற்றுமைத்தன்மை காணப்பட்டு அதன் தீர்வுடன் அடையப்படவேண்டிய இலக்கு ஒன்றை உருவாக்க வேண்டும். பிரச்சினையும், இலக்குகளும் இரண்டு பகுதியினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன் அவர்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் இலக்குகளை அடைவதற்குமான வழிகளைக் கண்டு கொள்வதற்காக இணைந்து உழைக்கின்றார்கள். இந்நுட்பத்தின் முக்கியத்துவம் யாதெனில் இரு பகுதியினருக்கும் இடையிலான வேறுபாடுகளுக்குப் பதிலாக ஒற்றுமைத்தன்மை ஒன்றைக் கொண்டிருப்பதாகும். எனினும் இது இலகுவான செயற்பாடன்று. முரண்பாடுகளைக் கொண்ட இருபகுதியினரும் ஒன்றாகி, பரஸ்பர தீர்மானங்களை மேற்கொள்வது கடினமானதாகும். பிரச்சினை தீர்வுச் செய்முறையானது முரண்பட்டுள்ள இருபகுதியினருடனும் தொடர்புகளற்ற மூன்றாவது பகுதி ஒன்றின் உதவியை வேண்டிநிற்கின்றது. இவர் ஒரு மேலதிகாரியாகவோ அல்லது வெளிநபராகவோ இருக்கலாம். மூன்றாவது பகுதியானது ஒவ்வொரு பகுதியினருடனும் குறிப்பிட்ட நோக்குடன் இயங்கி, அவர்கள் ஒன்றாக இயங்கவும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நேரான முன்னுணர்வு ஒன்றை மேற்கொள்ளவும் உதவ முடியும். பிரச்சினை தீர்த்தல் நுட்பமானது செய்தித் தொடர்புப் பிரச்சினைகளின் அடிப்படையிலான தனிநபருக்கிடையிலான முரண்பாடுகள் பங்குகளுக்கிடையிலான முரண்பாடுகள் என்பவற்றுக்கான பயனுள்ள தீர்வு வழியாக இருக்கலாம். அத்துடன் விஷேடதன்மையதாக்கல், சார்புத்தன்மை என்பவற்றின் காரணமாக எழுந்த திணைக்களங்களுக்கிடையிலான முரண்பாடுகளுக்கும் இது பயனுள்ளதாக இருக்கலாம்.

இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயம் யாதெனில் இந்நுட்பம் தோல்வியடைவதற்கு காரணம் சம்பந்தப்படுவோர் முரண்பாட்டை நீக்குவதில் ஊக்கம் கொண்டிருப்பதில்லை என்பதாகும். அநேகமான சந்தர்ப்பங்களில் முரண்பாடு தீர்க்கப்படமுடியும் என்பதில் இவர்கள் நம்பிக்கையற்றவர்களாகக் காணப்படுவதனால் தீர்வுச் செய்முறைக்கு எதிராகவே அணுகுகின்றனர். பிரச்சினை தீர்க்கும் செய்முறையானது பேரம்பேசல் உடன்படிக்கை (Compromise) என்பவற்றை விளைவாகக் கொண்டுள்ளது. இரண்டு பகுதியினரும் ஏனையவர்களின் நிலையை ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இந்த உடன்பாட்டைப் பெறுவதற்கு இரு பகுதியினரும் தமது உண்மையான நிலைமையை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கிறார்கள். முரண்பாடானது அதிகளவுக்கு இல்லாதிருப்பின் பேரம் பேசல், உடன்படிக்கை ஆகிய இரு அம்சங்களும் பயன்படுத்தப்படலாம்.

### (ii) மிக முக்கியத்துவமான இலக்குகள் (Superordinate Goals)

இது ஒவ்வொரு குழுவினதும் சுதந்திரமான சொந்த இலக்குகளை விட முக்கியத்துவம் வாய்ந்த, பரஸ்பர தங்கியிருத்தல் அல்லது சார்புத்தன்மையைக் கொண்ட இலக்கொன்றைக் கருதுகின்றது. ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இலக்கானது அதில் தொடர்புபட்ட ஒவ்வொரு பகுதியினரதும் உதவியும், ஒத்துழைப்பும் இன்றி அடையப்பட முடியாது. இவ்விதமான முகாமையாளர் ஒருவர் முக்கியத்துவமான இலக்கொன்றினை உருவாக்கலாம். அப்பொழுது முரண்பட்ட பகுதியினர் தமது வேறுபாடுகளை ஒருபுறமாக வைத்துவிட்டு இலக்கை நோக்கித் தொழிற்படுகின்றார்கள். இலக்கானது முரண்பாட்டை நீக்குவதற்கான ஓர் ஊக்கத்தினை அளிக்கின்றது. உதாரணமாக; தனிபட்ட காரணங்களினால் இரண்டு குழுவினருக்கிடையில் முரண்பாடு தோன்றியுள்ள நிலையில் நிறுவனமொன்றுடன் ஏற்பட்ட போட்டியை நீக்கும் நோக்குடனான முக்கியத்துவம் வாய்ந்த இலக்கொன்றை முகாமையாளர் உருவாக்குவரானால் முரண்பாடுகளைக் கொண்ட குழுவினர் தமக்கிடையிலான வேறுபாடுகளை மறந்து இவ்விலக்கினை நோக்கிய செயற்பாடுகளின் பொருட்டு ஒத்துழைப்பினை வழங்குவார்கள். ஆகவே பிரச்சனை தீர்த்தல் நுட்பத்தில் தவறிவிடப்பட்ட ஒரு நுட்பமாக இது அமைகின்றது. ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இலக்கானது அமைப்பு ரீதியான காரணிகளினால் உருவான





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களங்களுக்கிடையிலான முரண்பாட்டுக்குப் பயனுள்ளதாகும்.

### (iii) ஆளணியினை மாற்றல் (Changing Personnel)

முரண்பாடானது இயல்பற்றதாகவும் ஏனைய தீர்வு நுட்பங்கள் தோல்வி அடைந்த நிலையிலும் ஒரு மேலதிகாரி, முரண்பாட்டுச் சூழ்நிலையில் ஒரு பகுதி அல்லது இருபகுதியினரதும் நடத்தையினை மாற்றவோ அல்லது ஆளணியினை மாற்றவோ முயற்சிசெய்யலாம். இவ்வணுகுமுறையானது கடுமையானதாகவும் இருக்கலாம். ஆளணியில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதென்பது ஒரு பகுதியினரை அல்லது இரண்டு பகுதியினரையும் வேறுவேலைக்கு நியமிப்பதனையோ அல்லது ஒருபகுதி அல்லது இரண்டு பகுதியினரையும் வேலையைவிட்டு நீக்குவதனையோ வேண்டிநிற்கின்றது. இது ஏனைய எல்லா அம்சங்களும் தோல்வியடையாத நிலையில் கருத்திற்கொள்ளப்படக்கூடாது.

இன்னொரு அணுகுமுறை ஒருபகுதி அல்லது இரண்டு பகுதியினரதும் நடத்தையினை மாற்றுவதற்கு முயற்சி செய்தலாகும். ஒரு தனிநபரின் நடத்தையை மாற்றுவதென்பது கடினமானால், நேரத்தை நுகர்கின்ற, செலவு கூடிய ஒரு செயற்பாடாக இருக்கலாம். ஆனால் இது செய்யப்படக்கூடியது. நடத்தை வடிவங்களை மாற்றுவதற்குப் பல்வேறு முறைகள் காணப்படுகின்றன. இதில் பெரும்பாலான அளவு பயன்படுத்தப்படும் ஒரு முறையாக கல்வித்திட்டத்தின் சில வடிவங்கள் காணப்படுகின்றன. உ- ம்; மேற்பார்வையாளர் கீழ்ஊழியர் முரண்பாடு காணப்படின் பயிற்சித்திட்டங்கள் ஒரு மேற்பார்வையாளரது நடத்தையினை மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படலாம்.

### (iv) அமைப்பினை மாற்றல்

முரண்பாட்டை நீக்கும் பொருட்டு நிறுவனத்தின் முறைசார்ந்த அமைப்பானது மாற்றப்படலாம். முறைசார்ந்த அமைப்பானது நிறுவனமொன்றில் வேலைகளுக்கிடையிலான தொடர்புகளை விபரிக்கின்றது. வேலைகள் அவற்றின் நேரடிப் பொறுப்புகளுக்கேற்ப, அலகுகள், குழுக்கள் திணைக்களங்கள் என்றவகையில் குழுவாக்கப்படுகின்றன. இந்த வேலைத் தொடர்புகளிலான ஒரு மாற்றமானது முரண்பாட்டை நீக்குவதில் பயனுள்ளதாக இருக்கலாம். உதாரணமாக; வேறுபட்ட மேற்பார்வையாளர்களின் நேரடிப் பொறுப்பின் கீழுள்ள இரண்டு முரண்பட்ட குழுக்கள் அல்லது அலகுகள் ஒரே மேற்பார்வையாளரின் கீழ் அமர்த்தப்படலாம். இதன் அடிப்படையில் இங்கு ஒத்துழைப்பிற்கான அதிக ஊக்கம் இருக்கும். வேலையை மீளவடிவமைத்தல், இணைவு அல்லது இயைபாக்கல் நிலமைகளை உருவாக்கல் போன்ற ஏனைய மாற்றங்களும் முரண்பாட்டை நீக்குவதற்குச் சாத்தியமானவையாகும்.

### (v) ஏனைய நுட்பங்கள்

மேற்கூறிய பிரதானமான நுட்பங்களை விட வேறு பல நுட்பங்கள் முரண்பாடுகளைக் கையாளுவதில் பயன்படுத்தப்படலாம். இவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

### அதிகாரத்தின் பயன்பாடு (Use of Authority)

ஒரு முகாமையாளர் முரண்பாட்டை நீக்குவதற்குச் சாதாரணமாக தனது அதிகாரத்தினைப் பயன்படுத்தலாம். இச்சூழ்நிலையில் மேற்பார்வையாளர் கீழ்ஊழியர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதனை உத்தரவிடுவார். இது அடிக்கடி பயன்படுத்தப்படும் ஒரு அணுகுமுறையாகும். எனினும் இது ஒரு குறுங்காலத் தீர்வாகும். ஏனெனில் இது முரண்பாட்டுக்கான காரணங்களைக் கருத்திற் கொள்ளவில்லை.

### தவிர்த்தல் (Avoidance)

சம்பந்தப்பட்ட பகுதியினரே முரண்பாட்டைத் தவிர்ப்பதற்கு முயற்சி செய்யலாம்.

### அமுத்தமாக்கல் (Smoothing)

அமுத்தமாக்கல் என்பது இரு முரண்படும் பகுதியினரதும் பொதுவான அக்கறைகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதனைக் கருதுகின்றது. இவர்கள் வேறுபட்டுக்கொள்ளும் அம்சங்கள் அலட்சியப்படுத்தப்படுகின்றன. இவ்விதமான வேறுபாடுகள் அமுத்தமாக்கப்படுகின்றன.

### வளங்களை விஸ்தரித்தல் (Expansion of Resources)

சில வகையான முரண்பாட்டை நீக்கும் பொருட்டு வளங்கள் விஸ்தரிக்கப்படலாம். இது வரையறையுள்ள வளங்களினால் உருவாகும் முரண்பாடுகளுக்கே பயன்படுத்தப்படலாம். எனினும் வளங்கள் விஸ்தரிக்கப்பட முடியும் என்பது வழமைக்கு மாறானதாகும். எனவே இவ்வாறான தீர்வுமுறை குறைவாகவே பயன்படுத்தப்படுகின்றது.

### வலுவினைப் பயன்படுத்தல் (Use of Power)

தீர்வு நுட்பங்கள் தோல்வியடைகின்ற போது முரண்பாடானது முரண்படும் குழுக்களினாலேயே நீக்கப்படலாம். இத்தகைய நீக்கலானது நிறுவன ராஜதந்திரம் ஊடாக அதாவது ராஜதந்திரவலுப் (Political Power) பயன்பாட்டினூடாக மேற்கொள்ளப் படுகின்றது. நிறுவன ராஜதந்திரம் என்பது செல்வாக்கின் அடிப்படையிலான முகாமையாகக் காணப்படுகின்றது. இங்கு செல்வாக்குச் செலுத்துவதற்கான ஆற்றலாக வலு காணப்படுகின்றது. முரண்பாடு அதிகரிக்கும் போது ஒரு பகுதியினர் தமது வலுமூலம் வெற்றியினைப் பெறுகின்றார்கள். இந்நிலையில் வெற்றி பெறுபவரும் தோல்வியடைபவரும் காணப்படுகின்றனர். தோல்வியடைந்தவர் நிறுவனத்தை விட்டு விலகுகின்றார். இத்தகைய தீர்வானது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அனுமதிக்கப்படக்கூடாது. முரண்பாடு இந்நிலையினை அடைவதற்கு முன்னரே தடுத்துக் கொள்வதே நியாயமான வழியாகும்.

மேற்கூறப்பட்ட நுட்பங்களுக்கமைய முரண்பாட்டை நீக்கும் செயற்பாடானது பின்வரும் படி முறைகளைக் கொண்டுள்ளது.

**(அ)** முரண்பாட்டின் தன்மையைக் கண்டறிதல். **(ஆ)** பொருத்தமான தீர்வுநுட்பமொன்றைக் கண்டறிதல் அதாவது நுட்பமானது பிரச்சினையின் தன்மைக்கேற்ப பொருத்தமானதாக இருக்க வேண்டும். **(இ)** நுட்பத்தை அமுல் படுத்தல். மிகக் கவனமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுல்படுத்தலானது வேண்டப்படுகின்றது. முரண்படும் சூழ்நிலைகள் மிகவும் உணர்ச்சி மயமானவை. அதனால் தீர்வின் பொருட்டு நிபுணர்களின் பயன்பாடு அவசியமாகின்றது. முரண்பாட்டுக்கான தீர்வினை அமுல்படுத்தும் பொருட்டு மிகவும் அனுபவம் வாய்ந்த, வெளியாரான மூன்றாவது நபர் ஒருவர் பயன்படுத்தப்படலாம். (ஈ) தொடர்தல். எல்லாப் பிரச்சினைத் தீர்வு நிலைகளிலும், முகாமையாளர்கள் உண்மையில் பிரச்சினை தீர்க்கப்பட்டது என்பதனை உறுதிப்படுத்துவதற்குத் தொடர்ந்து செயற்பட வேண்டும்.

## 2. முரண்பாட்டைத் தூண்டுதல்

எல்லா நிறுவனங்களுக்கும் ஓரளவு முரண்பாடு தேவையானதெனக் கூறப்படுகின்றது. முரண்பாடு அற்ற நிறுவனங்களில் போட்டித்தன்மை, புதுமையான கருத்துக்கள், முன்னேற்றமான நடவடிக்கைகள் என்பவற்றுக்கான வேகம் போன்ற அம்சங்கள் காணப்படமாட்டாது. இதனால் முகாமையாளர்கள் சில சந்தர்ப்பங்களில் முரண்பாட்டைத் தூண்ட வேண்டியிருக்கலாம். எவ்வாறெனினும் முரண்பாட்டை நீக்குவதிலும் பார்க்க, முரண்பாட்டைத் தூண்டுதல் கூடியளவு உணர்ச்சிமிக்க நிலையினை வேண்டி நிற்கின்றது.

அதிகளவு முரண்பாடானது மிகக் குறைந்த முரண்பாட்டை விட இலகுவாகக் கண்டுபிடிக்கப்பட முடியும். எனினும் மிகக் குறைந்த முரண்பாடு காணப்படுகின்றதெனக் கண்டு கொள்ளப்பட்டால் இயல்பான முரண்பாடு தூண்டப்பட வேண்டும். முரண்பாடானது அது இயற்கையாக எழுவதைப் போன்று பல்வேறு வழிகளில் தூண்டப்படலாம். முரண்பாடுகளுக்கான காரணங்களைச் சரியாக விளங்கிக் கொள்வதன் மூலம் முகாமையாளர் அதனை இலகுவாகத் தூண்ட முடியும்.

பல்வேறு வழிகளில் முரண்பாடு தூண்டப்படலாமெனின் சில ஏனையவற்றை விடக் கூடிய பயனுள்ளவை. முதலாவதாக, முகாமையாளர் முரண்பாட்டைத் தூண்டுவதற்குச் செய்தித் தொடர்பு முறைமையினைப் பயன்படுத்தலாம். அதிகளவான அல்லது மிகக் குறைந்த தகவல்களை அளிப்பதன் மூலம் இதனைச் செய்ய முடியும். இரண்டாவதாக, தனிநபர்கள், குழுக்களுக்கிடையில் குறிப்பாக அவர்களது இலக்குகள் ஒவ்வாதவையாக இருக்கும் போது சார்பு அல்லது துங்கியிருத்தற்தன்மையை உருவாக்குவதன் மூலம் முரண்பாட்டைத் தூண்ட முடியும். மூன்றாவதாக, முகாமையாளரின் தலைமைத்துவ வடிவம் முரண்பாட்டைத் தூண்டலாம். அதிகளவான அல்லது மிகக் குறைந்த வழிகாட்டல்கள் முரண்பாட்டுக்குக் காரணமாகலாம்.

முகாமையாளர்கள் வேறுபட்ட கருத்துக்களைப் பெறும் பொருட்டு குழுக்கூட்டங்களில் முரண்பாடுகளைத் தூண்ட விரும்பலாம். வேறுபட்ட கருத்துக்களும், அபிப்பிராயங்களும் குழுவானது சிறந்த தீர்மானங்களை எடுப்பதற்கு உதவ முடியும். இவ்வகையான முரண்பாட்டைத் தூண்டுவதற்கு, முகாமையாளர்கள் வேறுபட்ட நோக்குகளுக்கு ஊக்கம் கொடுப்பதுடன், அவற்றை வழங்குபவர்களைப் புகழ வேண்டும். முகாமையாளர்கள் கூட்டங்களில் கீழ் ஊழியர்களிடம் கருத்துக்களைக் கேட்டு வேறுபட்ட நோக்குடைய விடயங்களுக்கு ஆதரவளிக்கலாம். இயல்பான முரண்பாடானது இவ்வழியில் தூண்டப்பட முடியும். இங்கு முக்கியமான விடயம், முரண்பாடானது முகாமை செய்யப்பட வேண்டும் என்பதாகும். இயல்பான முரண்பாடானது கடுமையான நிலையை அடையுமானால் அது இயல்பற்றதாகலாம்.

## முடிவுரை

முரண்பாடுகளின் தன்மைகள், அவற்றுக்கான காரணங்கள், அவற்றினால் ஏற்படும் விளைவுகள் என்பவற்றை எடுத்து நோக்கும் போது முரண்பாடு என்பது தவிர்க்கப்பட முடியாதது. அதேவேளை முகாமை செய்யப்பட வேண்டியது என்னும் உண்மை புலனாகின்றது. முரண்பாடு அற்ற ஒரு நிறுவனத்தின் செயற்பாட்டு விளைவு சராசரியானதாக இருக்கின்றவேளை, அதிக முரண்பாட்டைக் கொண்ட நிறுவனங்களின் விளைவுகள் வினைத்திறன் அற்றநிலைக்கு இட்டுச் செல்லப்படுகின்றன. எனவே நிறுவனங்களைப் பொறுத்து முரண்பாடுகள் தேவையானவை. ஆனால் மிகக் குறைந்த முரண்பாடுகளும், அதிகளவான முரண்பாடுகளும் நிறுவனத்தின் வினைத்திறனின்மையை எடுத்துக் காட்டும். உத்தமமட்டம் ஒன்றில் பேணப்படும் முரண்பாடு நிறுவனத்தின் திறனுள்ள செயற்பாட்டுக்கு உதவமுடியும். இதிலிருந்து தீர்மானிக்கப்படக்கூடியது யாதெனில், முரண்பாடுகள் செயற்பாடுகளிலான கஷ்டங்களை ஏற்படுத்துவனவாக இருக்கின்றன எனக் கூறப்பட்டாலும் அவற்றினைச் சிறப்பாக முகாமை செய்வதன் மூலம் நிறுவனங்கள் வினைத்திறன் உள்ளவையாக செயற்பட முடியும் என்பதே.

## உசாத்துணைகள்


1. MICHAEL A . HITT, DENNIS M.R, ROBERT L.M (1986);Management Concepts and Effective practice, 2nd edition, west publishing Company, St. Paul.
2. DENNIS M.R, and MICHAEL A.H (1981): Organizational Behaviour, Applied Concepts. - Oklahoma state University. Science Research Associates, U.S.A.
3. LAURIE. J.M (1989) : Management and Organigational Behaviour. A.H. Wheeler & Co Ltd, Allahabad. India.
5. Hellriegel and Slocum (1978) : Management : Contingency Approaches, wesley Publishing Company. Inc. Philippines.


**தென்னாசிய நாடுகளுக்கான மனித அபிவிருத்திச் சுட்டெண் (HDI)**

| | |
|---|---|
| இலங்கை | 0.663 |
| இந்தியா | 0.309 |
| மாலைதீவு | 0.497 |
| பாகிஸ்தான் | 0.311 |
| பங்களாதேஷ் | 0.189 |
| நேபாளம் | 0.170 |
| பூட்டான் | 0.150 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலைப் பிரதேச வறட்சி நிகழ்வு பற்றிய ஒரு காலநிலை ஆய்வு

க. இராஜேந்திரம்

## அறிமுகம்

இலங்கையின் வறண்ட வலயத்தில் அமைந்துள்ள திருகோணமலை மாவட்டம் முக்கிய விவசாயப்பிரதேசமாக விளங்குகின்றது. இங்கு ஆண்டு தோறும் 45,000 ஹெக்டேயர் நிலம் பெரும்போக நெற்செய்கையின் கீழும், 20,000 ஹெக்டேயர் நிலம் சிறுபோக நெற்செய்கைக்கும் உட்படுத்தப்பட்டு வருகின்றமையைக் காணலாம். இப்பிரதேச காலநிலையில் ஏற்படும் நிச்சயமற்ற தன்மைகள் இங்கு மேற்கொள்ளப்படும் விவசாய நடவடிக்கைகளைப் பெரிதும் பாதித்து வந்திருப்பதனை அரச அறிக்கைகளிலிருந்து அறியக்கூடியதாகவுள்ளது. எடுத்துக்காட்டாக 1974–75 இல் பெரும் போகத்தின் 17,554 ஹெக்டேயர் நிலம் நெற்செய்கைக்கு உட்படுத்தப்பட்டது. இதில் 7,157 ஹெக்டேயர் நெற்பயிர் நிலம் வறட்சியினால் அழிவுக்குட்பட்டது. அதே போல் 1971 – 72 ஆம் ஆண்டு பெரும்போகத்தில் 44,807 ஹெக்டேயர் நிலம் செய்கைக்குட்படுத்தப்பட இதில் 5,574 ஹெக்டேயர் வறட்சியினாலும், 1,698 ஹெக்டேயர் நெற்பயிர் நிலம் வெள்ளத்தினாலும் அழிவுக்குட்பட்டது. இவ்வாறு ஒவ்வொரு ஆண்டிலும் வறட்சியினாலோ அல்லது வெள்ளத்தினாலோ பயிரழிவுகள் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது. இத்தரவுகளை அவதானிக்கும் போது பொதுவாக வெள்ளத்தினால் ஏற்படும் பயிரழிவுகளைவிட வறட்சியினால் ஏற்படும் பாதிப்புக்கள் மிகக் கூடுதலாக இருப்பதை அறியலாம். எனவே இப்பிரதேசத்தில் இடம்பெறும் மழை வீழ்ச்சியுடன் தொடர்புபட்ட வறட்சி பற்றிய ஆய்வுகளில் விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். இதன்மூலம் எதிர்காலத்தில் விவசாயத்தில் வறட்சியினால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க அல்லது குறைப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிய வாய்ப்பு ஏற்படுவதுடன் காலநிலையில் ஏற்படும் பிறழ்வுகளையும் அறிந்து அதற்கேற்ற வகையில் விவசாய, நீர்முகாமைத்திட்டங்களை வகுத்துக் கொள்ளலாம்.

## தரவும் ஆய்வுமுறையும் ( Data and Methodology )

இலங்கையில் வறட்சி பற்றிய ஆய்வுகள் ஒரு சில ஆய்வாளர்களினாலேயே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவ்வாய்வுகள் வெவ்வேறுபட்ட நுட்பமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஜேம்சன் (Jameson, 1931) குக் (Cook, 1950), பாமர் (Farmer , 1951, 1956) , விக்கிரமதிலக (Wikkramatileke, 1956), டொம்றொஸ் (Domros, 1974), சிறிநந்தா (Srinantha, 1974), பாலச்சந்திரன் ( Balachandran ,1975 ), அல்லெஸ் ( Alles, 1968,69 ) போன்ற பல ஆய்வாளர்கள் வறட்சியை அடையாளம் காண்பதற்கும், பகுப்பாய்வு செய்வதற்கும், மழைவீழ்ச்சியையே முக்கிய காட்டியாகக் ( Indicator ) கொண்டு ஆய்வினை மேற்கொண்டுள்ளனர். சிலர் இவற்றுடன் தொடர்புபட்ட ஆவியாக்க ஆவியுயிர்ப்பு என்பவற்றினைக் குறிகாட்டியாகக் கொண்டு வறட்சிபற்றிய ஆய்வினை மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சராசரி மழைவீழ்ச்சியினை விடக் குறிப்பிட்ட காலத்துக்குரிய மழைவீழ்ச்சி குறைவுபடும் போது அதன் எதிர்விலகல் தன்மையை கணிப்பிட்டு ஆய்வு செய்வது வறட்சிபற்றிய ஆய்வு முறையியலாக உள்ளது. இந்தியாவில் – ராம்தாஸ் (Ramdas, 1950), மிஸ்ரா ( Mishra, 1983 ), இலங்கையில் பாலச்சந்திரன் (1975) போன்றவர்களும் இவ் ஆய்வு முறையைப் பின்பற்றி மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. நீரின் வரவு செலவினை அடிப்படையாகக் கொண்டு ( Water budget approach ) வறட்சியினை ஆய்வு செய்வது மற்றொரு முறையியலாகும். இது புகழ் பெற்ற காலநிலை அறிஞரான தோன்வெயிற் அவர்களால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட ஒரு முறையியலாகும். ( Thornthwaite,1948; Thornthwaite and Mather,1955 ). இந் நுட்பமுறையினைப் பின்பற்றி இந்தியாவில் பல ஆய்வுகள் இடம்பெற்றிருக்கின்றன. ( e.g. Subramaniam,1958,1967; Shear 1969; Subramaniam and Sastri,1971; Subramaniam and Sarma, 1973 ). இலங்கையில் சிறிநந்தா அவர்கள் (Srinantha, 1975, 1982) இம் முறையியலைப் பின்பற்றி ஆய்வொன்றினை மேற்கொண்டுள்ளார். இம்முறையியல் மிகப் பிந்திய ஒரு அணுகு முறையாக இருப்பது குறிப்பிடத்தக்கது. தற்போதைய ஆய்வும் இம்முறையியலைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நீர் வரவு செலவினடிப்படையில் வறட்சி பற்றிய ஆய்வினை மேற்கொள்வதிலுள்ள சிறப்பம்சம் என்னவெனில் மழைவீழ்ச்சி மட்டுமன்றி ஆவியாக்க ஆவியுயிர்ப்பு, மண்ணீரம் போன்ற மாறிகள் பற்றி இங்கு கவனம் செலுத்தப்படுவதாகும். இதன் படி ஒரு பிரதேசம் பெறுகின்ற படிவு வீழ்ச்சி அல்லது நீர் விநியோகம் அப்பிரதேசத்தினுடைய நீர்த்தேவை (Water need) என்பவற்றினடிப்படையில் நீர்ச்சமனிலை அட்டவணைகள் கணிக்கப்பட்டு, நீர்பற்றாக்குறை நிலைமைகள் சிறப்பாக அடையாளம் காணப்படுகின்றன. இவ்வாய்வுக்கு நீண்டகால மழைவீழ்ச்சித் தரவுகள், கிடைக்கக் கூடிய எல்லா

க.இராஜேந்திரம் B.A.(Hons) Cey.
விரிவுரையாளர்
புவியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையங்களிலிருந்தும் பெறப்பட்டுள்ளன. இதன் படி திருகோணமலை வானிலை அவதான நிலையமும் ஏனைய 6 மழைவீழ்ச்சி நிலையங்களும் இவ் ஆய்வுப்பிரதேசத்தினை நன்கு பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய வகையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்நிலையங்களுக்குரிய காலநிலைத் தரவுகள் கொழும்பு வளிமண்டலத் திணைக்களத்திலிருந்து நேரடியாகவும், வளிமண்டலத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட பதிவறிக்கையிலிருந்தும் (1974) பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி 30 வருடங்களுக்குரிய மாதாந்த சராசரி மழைவீழ்ச்சித் தரவுகள் (1951 – 80, 1931 – 60), வெப்பநிலைத் தரவுகள் (1951 - 80) என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிலையமும் அமைந்துள்ள பகுதியிலுள்ள மண் வகைகளுக்குரிய மண்ணீரம் பற்றிய தரவுகள் பானபொக்கே அவர்களின் ( Panabokke , 1967 ) தகவல்களினடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. உள்ளார்ந்த ஆவியாக்க ஆவியுயிர்ப்பு, வெப்பநிலைத் தரவுகளினடிப்படையில் கணிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி தரவுகள் தோன்வெயிற்றினால் நீரின் வரவு செலவினைக் கணித்தறிய வெளியிடப்பட்ட கணக்குப்பதிவீட்டு முறை ( Book keeping procedure ) யைப் பின்பற்றிக் கணிக்கப்பட்டுள்ளன. இக்கணிப்பீடுகளிலிருந்து ஆண்டு ரீதியான, பருவ ரீதியான, மாதாந்த நீர்ப்பற்றாக்குறை ( Water deficiency) தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன.

## மழைவீழ்ச்சியும், ஆவியாக்க ஆவியுயிர்ப்பும்
( Rainfall and evapotranspiration.)

திருகோணமலைப் பிரதேச மழைவீழ்ச்சியினை அவதானிக்கும் போது இடஞ்சார்பு வேறுபாடுகள் இருப்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆண்டு மழைவீழ்ச்சிப் பரம்பல் கோடுகளின் போக்கு இதனைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. இப்பிரதேசத்தின் மத்திய பாகம் மிக உயர்வான ஆண்டு சராசரி மழைவீழ்ச்சியினைப் பெற்றுள்ளது. எடுத்துக்காட்டாக ஆண்டான்குளம் 1701 மி.மீ யும் ஹோமரங்கடவெல 1689 மி.மீ, யும் கந்தளாய் 1561 மி.மீ யும் பெற்றிருப்பதனை இங்கு குறிப்பிடலாம். மாறாக ஹோமரங்கடவெலவிலிருந்து வடக்கே திரியாய், அமரிவயல், சிறிபுர மற்றும் வடகிழக்கே குச்சவெளி நோக்கிச் செல்கின்ற போதும், கந்தளாயிலிருந்து தென்கிழக்கே சேருவாவிலை, அல்லை பகுதிகளை நோக்கிச் செல்லும் போதும் படிப்படியாக மழைவீழ்ச்சியினளவு குறைவடைந்து போவதனையும் அவதானிக்க முடிகின்றது. **(படம் - 1).**

நீரின் வரவு செலவினைக் கணித்தறிய ஆவியாக்க ஆவியுயிர்ப்பு பற்றிய கணிப்பீடுகள் அவசியமாகின்றன. மழைவீழ்ச்சியினால் பெறப்படும் நீரில் ஒரு பகுதி ஆவியாக்க ஆவியுயிர்ப்பின் மூலம் இழக்கப்படுகின்றது. எனவே நீர்வள அளவீடுகள் பற்றிய ஆய்வுகள் வெறுமனே மழைவீழ்ச்சியை மட்டும் கொண்டு ஆய்வுசெய்யப்படுவது திருப்திகரமானதாக இருக்காது. இந்த அடிப்படையில் வெப்பநிலைத்தரவுகளைப் பின்பற்றி தோண்வெயிற்றின் முறையினைப் பயன்படுத்தி ஆவியாக்க, ஆவியுயிர்ப்பு பெறுமானங்கள் கணிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1 : ஆண்டு சராசரி மழைவீழ்ச்சியும், ஆவியாக்க ஆவியுயிர்ப்பும் (மி.மீ)**

| நிலையம் | மழைவீழ்ச்சி | ஆவியாக்க ஆவியுயிர்ப்பு | | உள்ளார். உண்மை. |
|---|---|---|---|---|
| | | (உள்ளார்ந்த) | (உண்மையான) | (நீர்ப்பற்றாக்குறை) |
| 1.அல்லைக்குளம் $DL_2$ | 1274.8 | 1829 | 1227 | 602 |
| 2.அண்டான்குளம் $DL_1$ | 1701.0 | 1814 | 1333 | 481 |
| 3.ஹோமரங்கடவெல $DL_1$ | 1689.1 | 1814 | 1374 | 440 |
| 4.கந்தளாய் $DL_1$ | 1560.8 | 1829 | 1189 | 640 |
| 5.பெரியங்குளம் $DL_1$ | 1653.5 | 1814 | 1306 | 508 |
| 6.திரியாய் $DL_1$ | 1016.0 | 1814 | 1031 | 783 |
| 7.திருகோணமலை $DL_1$ | 1617.5 | 1829 | 1298 | 531 |

மூலம் :-மழைவீழ்ச்சி நீங்கலானவை கணிக்கப்பட்ட பெறுமானங்கள் $DL_1$, $DL_2$ - உயிர்ச்சூழல் வலயம்.

ஆண்டு ரீதியிலான உள்ளார்ந்த ஆவியாக்க ஆவியுயிர்ப்பினை அவதானிக்கும் போது பாரிய வேறுபாடுகள் காணப்படாதபோதிலும் மாதாந்த ரீதியில் வேறுபாடுகள் இருப்பது தெளிவாகத் தெரிகின்றன. அட்டவணை - 2 இதனை எடுத்துக் காட்டுகின்றது.

**அட்டவணை 2: தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையங் களுக்குரிய மாத சராசரி உள்ளார்ந்த ஆவியாக்க, ஆவியுயிர்ப்பு (மி.மீ).**

| மாதம் | திருகோணமலை | ஹோமரங்கடவெல |
|---|---|---|
| ஜனவரி | 130.8 | 114.3 |
| பெப்ரவரி | 126.2 | 119.4 |
| மார்ச் | 149.1 | 149.9 |
| ஏப்ரல் | 163.1 | 157.5 |
| மே | 167.9 | 165.1 |
| யுன் | 176.0 | 175.3 |
| யுலை | 171.2 | 180.3 |
| ஆகஸ்ட் | 169.7 | 177.8 |
| செப்ரம்பர் | 163.3 | 154.9 |
| ஒக்டோபர் | 147.6 | 154.9 |
| நவம்பர் | 134.4 | 134.6 |
| டிசம்பர் | 129.5 | 129.5 |
| **வருட மொத்தம்** | **1828.8** | **1813.6** |

மூலம்: கணிக்கப்பட்ட பெறுமானங்களிலிருந்து பெறப்பட்டவை

## வறட்சி நிலை ( Drought conditions )

### 1. ஆண்டு ரீதியான இடஞ்சார்பு வறட்சி நிலை

மழை வீழ்ச்சியினை விட ஆவியாக்க ஆவியுயிர்ப்பு உயர்வடையும் போது நீர் பற்றாக்குறை ஏற்படுகின்றது. இவ்வாறு நீர் விநியோகம் கிடைக்காத காலங்களில் தாவரங்கள், பயிர்கள் மண்ணீரத்தைப் பயன்படுத்துகின்றன. மண்ணீரமும் முற்றாகப்பயன் படுத்தப்பட்ட பின்பு வறட்சி நாசம் ஏற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.......

இந்த வறட்சி நாசத்தைத் தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்கு வறட்சி பற்றிய விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் அவசியமாகின்றன.

திருகோணமலைப் பிரதேசம் சராசரியாக 1502 மி.மீ வரை ஆண்டு மழை வீழ்ச்சியினைப் பெறுகின்ற போதிலும் இங்கு காணப்படும் உயர் வெப்ப நிலையின் காரணமாக (25.2–31.5°C) ஆவியாக்க, ஆவியுயிர்ப்பு உயரளவில் ஏற்படுவதனைக் காண்கின்றோம். இதனால் நீர்ப்பற்றாக்குறையே இங்கு பொதுவான இயல்பாகவுள்ளது. ஆயினும் இந் நீர்பற்றாக்குறையின் அளவுகளில் இட ரீதியான வேறுபாடுகள் இருப்பது தெளிவாக அறியக்கூடியதாகவுள்ளது. ஆண்டான்குளம், ஹோறமரங்கடவெல, பன்குளம் போன்ற பகுதிகளையுள்ளடக்கிய திருகோணமலைப் பிரதேசத்தின் மத்திய பாகத்தில் ஆண்டுச் சராசரி நீர்ப் பற்றாக்குறையினளவு ஏனைய பாகங்களுடன் ஒப்பிடுகையில் குறைவாக இருப்பதனை (500 மி. மீ. கீழ்) அறியக் கூடியதாவுள்ளது. மாறாக மத்தியபாகத்திலிருந்து வடக்கே திரியாய், புல்மோட்டை, அமரிவயல், சிறிபுர, கிழக்கே குச்சவெளி நோக்கிச் செல்கின்ற போதிலும் மத்தியபாகத்திலிருந்து தெற்கே கந்தளாய், அல்லை நோக்கிச் செல்கின்ற போதிலும் நீர்ப் பற்றாக்குறையினளவு படிப்படியாக அதிகரித்துச் செல்லும் போக்கினைக் கொண்டிருப்பதனைக் காணமுடிகின்றது. **(படம் – 2).** எடுத்துக்காட்டாக ஹோறமரங்கடவெலவின் ஆண்டுச் சராசரி நீர்ப்பற்றாக்குறை 439 மி.மீ ஆகக் காணப்பட திரியாயின் நீர்ப் பற்றாக்குறையினளவு 782 மி.மீ. ஆகவும், அல்லை குளத்தில் 610 மி.மீ. ஆகவும் உயர்வடைந்திருப்பதனைக் காணலாம். **(அட்டவணை–3).**

**அட்டவணை – 3 ; சராசரி வருடாந்த/ மாதாந்த நீர் பற்றாக்குறை (மி. மீ)**

| நிலையம் | ஆண்டு (அ) | ஆண்டு (ஆ) | ஜன | பெ | மா | ஏப் | மே | யூன் | யூலை | ஆகஸ் | செப் | ஒக் | ந | டி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அல்லைக்குளம் | 610.5 | 314.9 | 0 | 4.3 | 37.6 | 65.0 | 89.4 | 133.6 | 92.4 | 97.5 | 90.7 | 0 | 0 | 0 |
| ஆண்டான் குளம் | 480.2 | 0.0 | 0 | 4.1 | 28.9 | 37.6 | 46.7 | 120.6 | 118.4 | 55.1 | 68.8 | 0 | 0 | 0 |
| ஹோறமரன்கடவெல | 439.3 | 86.3 | 0 | 4.1 | 31.2 | 28.2 | 56.9 | 125.7 | 122.4 | 34.0 | 36.8 | 0 | 0 | 0 |
| கந்தளாய் | 494.3 | 67.4 | 0 | 4.8 | 30.2 | 28.7 | 75.2 | 119.9 | 96.6 | 61.7 | 74.2 | 0 | 0 | 0 |
| பெரியகுளம் | 507.4 | 0.0 | 0 | 4.6 | 29.2 | 33.0 | 61.2 | 114.8 | 120.1 | 67.0 | 77.5 | 0 | 0 | 0 |
| திரியாய் | 782.0 | 584.1 | 0 | 11.9 | 54.1 | 65.0 | 96.8 | 127.8 | 134.1 | 138.4 | 112.0 | 41.9 | 0 | 0 |
| திருகோணமலை | 548.6 | 31.5 | 0 | 3.5 | 27.7 | 53.8 | 80.5 | 123.2 | 96.8 | 78.0 | 85.1 | 0 | 0 | 0 |

0. நீர் மேலதிகம் அல்லது நீர்ச்சமநிலை (அ) மொத்த நீர் பற்றாக்குறை (ஆ) தேறிய நீர் பற்றாக்குறை

மூலம் : ஆய்வுக்காகக் கணிக்கப்பட்ட பெறுமானங்கள்

இவ்வாறு ஆண்டுக்கான மொத்த நீர்ப்பற்றாக்குறையினளவு கூடிக்காணப்படுகின்ற போதிலும் தேறிய நீர்ப்பற்றாக்குறையினளவு ( Net deficit = seasonal deficit -seasonal surplus ) சற்றுக் குறைவாக இருப்பதனை அவதானிக்க முடிகின்றது. 0–584 மி.மீ. வரை இத் தேறிய நீர்ப்பற்றாக்குறையின் வீச்சு அமைந்திருக்கின்றது. ஆண்டான்குளம், பெரிய குளம் ஆகிய நிலையங்களில் தேறிய நீர்ப்பற்றாக்குறை 0 ஆக உள்ளது. ஆயினும் திரியாயில் இது 584 மி. மீ. ஆகவும் அல்லைக்குளத்தில் 315மி.மீ ஆகவும் உயர்வடைந்திருப்பது இங்கு அவதானிக்கத் தக்கதாகும்.

## (2) பருவரீதியான இடஞ்சார்பு வறட்சிநிலை.

ஆய்வுப் பிரதேச வானிலையில் நன்கு தெளிவான நான்கு மழைவீழ்ச்சிப் பருவங்கள் தோன்றுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் வறட்சியின் இடஞ்சார்பு போக்கினை பருவகால அடிப்படையில் நோக்குவது கூடிய பொருத்தமுடையதாக இருக்கும். ஏனெனில் ஆய்வுப்பிரதேச மழைவீழ்ச்சி, வெப்பநிலை, ஆவியாக்க ஆவியுயிர்ப்பு போன்ற காலநிலை மூலக்கூறுகளில் பருவகால வேறுபாடே (Temporal variations) முனைப்பான பண்பாக இருக்கின்றது.

மே தொடக்கம், செப்ரம்பர் வரையுள்ள தென்மேல் "மொன்சூன் பருவமே" ஆய்வுப்பிரதேசத்துக்கு நீர் பற்றாக்குறையுடன் கூடிய வறண்ட பருவமாகவுள்ளது. 75 – 87% வரையிலான நீர் பற்றாக்குறை இப்பருவத்திலேயே இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும். தென்மேல் மொன்சூன் காற்று இலங்கையின் தென் மேல் தாழ் நிலத்திற்கு கூடிய மழை வீழ்ச்சியைக் கொடுக்கின்ற போதிலும் , ஆய்வுப்பிரதேசத்தைப் பொறுத்த வரை மத்திய மலை நாட்டுக்குக் கிழக்கே மலை ஒதுக்கில் அமைந்திருப்பதனால் இப்பிரதேசத்தில் வறண்ட காற்றுக்களின் செல்வாக்கும் மிகுந்திருப்பதைக் காணலாம். எனவே இந்த ஐந்துமாத காலப் பகுதியே ஆய்வுப் பிரதேசத்திற்கு வறட்சிப் பருவமாக இருக்கும். அட்டவணை 4 ஐ அவதானிக்கும் போது ஏறக்குறைய 17 – 21 வீதமான மழை வீழ்ச்சியே இப்பருவத்தில் கிடைத்திருப்பதனைக் காணலாம்.

அட்டவணை 4 ஐ அவதானிக்கும் போது தென்மேல் மொன்சூன் பருவத்தில் மிகக்குறைந்த மழைவீழ்ச்சியைப் பெறும் நிலையமாக திரியாய் உள்ளது. அதேபோல் மிகக்கூடிய தேறிய நீர் பற்றாக்குறையும் இங்குதான் (584 மி.மீ) ஏற்படுகின்றது. ஆண்டு சராசரி வறட்சிமாதம் கூட ஏனைய நிலையங்களில் 8 ஆகக் காணப்பட திரியாயில் 10 ஆக உயர்வடைந்திருப்பதைக் காணலாம். தென்மேல் மொன்சூன் பருவ வறட்சியின் இடஞ்சார்புப் போக்கினைப் **படம் – 3** காட்டுகிறது.

இடை மொன்சூன் பருவம் இரண்டினை அவதானிக்கும் போது திரியாய் தவிர்ந்த எந்தவொரு நிலையத்திலும் நீர்ப் பற்றாக்குறை காணப்படவில்லை. எனவே இப்பருவத்தினை ஈரப்பருவமாகக் கருதலாம். அதேபோல வடகீழ் மொன்சூன் பருவத்திலும் நீர்ப் பற்றாக்குறை காணப்படாத போதிலும் இப்பருவத்தின் இறுதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை 4: வறட்சிப் பருவ மழைவீழ்ச்சி ( மே - செப்) நீர் பற்றாக்குறை ஆண்டு சராசரி வறட்சி மாதங்கள்**

| நிலையம் | மழைவீழ்ச்சி ( மி. மீ.) | நீர்ப்பற்றாக்குறை ( மி. மீ) | ஆண்டு சராசரி வறட்சி மாதம் |
|---|---|---|---|
| அல்லைக்குளம் | 20.2 | 503.6 | 8 |
| ஆண்டான் குளம் | 18.5 | 409.6 | 8 |
| ஹோமரங்கடவெல | 21.5 | 375.8 | 8 |
| கந்தளாய் | 19.4 | 430.6 | 8 |
| பெரிய குளம் | 17.8 | 440.6 | 8 |
| திரியாய் | 16.6 | 609.1 | 10 |
| திருகோணமலை | 20.2 | 463.6 | 8 |

**மூலம்: ஆய்வுக்காகக் கணிக்கப்பட்டது.**

மாதமாகிய பெப்ரவரியில் எல்லா நிலையங்களிலும் சிறிதளவு நீர்ப் பற்றாக்குறை காணப்படுகின்றது. இந்நீர்ப் பற்றாக்குறையின் வீச்சு 3 - 12 மி. மீ வரை காணப்படுகிறது. (அட்டவணை 3) வடகீழ் மொன்சூன் பருவத்தினைத் தொடர்ந்து வரும் இடைமொன்சூன் பருவம் - 1 இல் எல்லா நிலையங்களிலும் நீர்பற்றாக்குறையே பொதுவான பண்பாக உள்ளன. ஆயினும் தென்மேல் மொன்சூன் பருவநீர்ப்பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் இடைமொன்சூன் பருவம் - 1 இன் நீர்ப்பற்றாக்குறையினளவு குறைவாக உள்ளது. இப்பருவத்தில் ஏற்படும் நீர்பற்றாக்குறையின் வீச்சு 58 - 119 மி. மீ. வரை வேறுபடுகின்றது. இதன்படி திரியாயில் 119 மி. மீற்றரும்




படம் 2: வருடச்சராசரி நீர்ப்பற்றாக்குறை (மி. மீ)




படம் 1: வருடச்சராசரி மழைவீழ்ச்சி (மி. மீ) 1951 - 80




படம் 3: வரண்ட பருவத்தின் சராசரி நீர் பற்றாக்குறை. மே - செப்ரெம்பர் (மி. மீ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லையில் 102 . மி. மீ. நீர்ப்பற்றாக்குறையும் காணப்படுகின்றன. ஆண்டான்குளம், ஹோமரங்கடவெல, பெரியகுளம், கந்தளாய் ஆகிய நிலையங்களில் 66 மி.மீற்றருக்குக் குறைவான நீர்ப்பற்றாக்குறையே காணப்படுகின்றது. ஆனால் திருகோணமலையில் 81 மி. மீ. நீர்ப்பற்றாக்குறை காணப்படுவது அவதானிக்கத்தக்கது. எனவே பருவரீதியான நீர்ப்பற்றாக்குறையில் தென்மேல் மொன்சூன் பருவத்திலேயே நீர்ப்பற்றாக்குறையுடன் கூடிய வறட்சி அதிகமாக் காணப்படுகின்றது. அதிலும் யூன், யூலை மாதங்களில் வறட்சியின் உச்சநிலை ஏற்படுகின்றன. இதற்கடுத்தபடியாக இடைமொன்சூன் பருவம் ஒன்றிலும் கணிசமான நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதனைக் காணமுடிகின்றது. அட்டவணை – 3 வருட, மாதச் சராசரி நீர்ப்பற்றாக்குறையினை எடுத்து விளக்குகின்றது. மேலும் இந்த வறட்சிப்போக்கினை வறட்சித்தாயத்தின் மூலமும் ( Drought matrix ) தெளிவாக எடுத்துக் காட்டலாம். (படம் – 4).

## முடிவுரை

ஆய்வுப் பிரதேசம் கூடியளவு நீர்ப்பற்றாக்குறை ஏற்படும் பகுதியாக இருப்பது இவ் ஆய்வின் மூலம் தெளிவாகின்றது. ஆண்டுரீதியாக மட்டுமன்றி பருவரீதியாகவும் நீர்ப்பற்றாக்குறை நிலவுவது தெளிவாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவற்றின் போக்குகள் இடஞ்சார்பு ரீதியிலும் வேறுபட்டுள்ளன. எனவே முடிவாக பின்வரும் சில கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன.

(i) மே – செப்ரெம்பர் வரையுள்ள காலப்பகுதியிலேயே இப் பிரதேசம் மிகக் கூடிய நீர்ப்பற்றாக்குறையை (375 - 610 மி. மீ.) எதிர்நோக்குகின்றது.

(ii) வறட்சியின் உச்சநிலை யூன், யூலை மாதங்களில் ஏற்படு வதனை அவதானிக்க முடிகின்றது.

(iii) இடஞ்சார்பு நோக்கில் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும்போது திரியாய் அல்லை ஆகிய இடங்கள் கூடியளவு வறட்சிப் பாதிப்புக்குட்படும் பகுதியாக இருக்கின்றன.

(iv) எல்லா நிலையங்களிலும் ஆண்டு வறட்சி மாதம் 8 ஆகக் காணப்பட திரியாயில் 10 ஆக உயர்வடைந்திருப்பது இங்கு கவனிக்கத்தக்கது.

(v) ஆய்வுப்பகுதியின் மூன்றிலிரண்டு பங்கு பிரதேசம் வறண்ட உப ஈரப்பகுதியாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

ஆய்வுப் பிரதேசத்தில் வறட்சியினால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்க்க நீர்வள அபிவிருத்தியில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். இங்கு 22 இற்கு மேற்பட்ட பெரிய நீர்பாசனக் குளங்கள் இருந்தபோதிலும் இன்னும் வறட்சியினால் ஏற்படும் தாக்கங்களைக் கணிசமான அளவு குறைக்க முடியவில்லை. இந்நிலைமை நவீன விஞ்ஞான ரீதியான பாரிய நீர்வளத் திட்டமிடலில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை நன்கு வலியுறுத்துகிறது. ஈரப்பருவங்களில் கிடைக்கும் மிகையான நீர் கழுவு நீராக இழக்கப்படுவதை தடுத்துநிறுத்தி வறட்சிபருவத்தில் அவற்றை பயன்பாட்டிற்கு உட்படுத்துதல் வேண்டும். இவ்வம்சங்களைக் கருத்தில் கொண்டு சில ஆரம்ப ஆலோசனைகளை ( Preliminary suggestions ) இங்கு கொடுக்க முடியும்.

(i) யான் ஓயாவை அடிப்படையாகக் கொண்டு அடம்பன், திரியாய் ஆகியவற்றுக்குட்பட்ட பகுதியில் மிகப் பாரிய நீர்வளத்தேக்கங்களை அமைத்தல் வேண்டும்.

(ii) மா ஓயாவை ( Ma Oya ) சிறிபுர, அமரிவயலூடாகத் திசை திருப்புவதன் மூலமும் இப்பகுதியில் நீர்வள வாய்ப்பை ஏற்படுத்தல்.

படம் 4: மாதாந்த நீர் பற்றாக்குறை நிலைமைகளின் அடிப்படையில் 7 நிலையங்களின் வரட்சித்தாயம்




(iii) வெருகல் ஆற்றிலிருந்து சோமபுர, ஈச்சிளம்பத்தை, சுங்கான்கேணிப்பகுதிகளுக்கு கால்வாய் மூலம் நீர் கொண்டு செல்லக்கூடிய நிலையை ஏற்படுத்துவதுடன், வெருகலை அண்டி ஓர் நீர்வளத் திட்டத்தையும் ஏற்படுத்தலாம்.

(iv) மூதூர் பகுதியில் கலக்கும் மகாவலிகங்கையிலிருந்து கிளிவெட்டியூடாக அல்லை குளத்திற்கு நீர் கிடைப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதோடு அல்லைக்குளத்தின் நீர் கொள்ளளவையும் அதிகரித்தல்.

மேற்படி ஆலோசனைகள், திட்டம் செயற்படுத்தலுக்கமைய நன்கு பரிசீலிக்கப்பட்டு செயற் படுத்தப்படும்போது இப்பிர தேசத்தில் எற்படும் நீர்ப்பற்றாக் குறையைகணிசமான அளவு போக்க முடியும் எனலாம்.

தொடர்ச்சி 60 ஆம் பக்கம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துவைதத்திலும் சைவசித்தாந்தத்திலும் மாயைக் கோட்பாடு

ஏ. என். கிருஷ்ணவேணி

இந்திய தத்துவஞான உலகில் அறுவகைத் தரிசனங்களின் வரிசையில் ஒன்றாக இடம் பெறுவது வேதாந்தம். வேதாந்த தத்துவங்களில் சங்கராச்சாரியாரினால் நிறுவப்பட்ட வேதாந்தப் பிரிவு அத்துவைதம் என்ற பெயரினால் அழைக்கப்படுகிறது. தென்னாட்டு சமய மரபாகப் போற்றப்படுவது சைவசித்தாந்தம். இந்து தத்துவத்திற்கும், இந்துசமயத்திற்கும் அடிப்படை நூல்களாக அமைந்தவை உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை, ஆகிய மூன்று நூல்களுமாம். இவற்றை சிறப்பாகப் **பிரஸ்தானத்திரயம்** என்று அழைப்பர். உபநிடதங்கள் வேதங்களின் சாரமாகவும், முடிந்தமுடிபாகவும் அமைந்ததனால் அவற்றுக்கு வேதாந்தம் என்ற பெயரும் வழக்கிலுண்டு. வேத இலக்கிய வரிசையில் தத்துவ நூல்களாக விளங்கும் உபநிடதங்கள் எண்ணிக்கையிற் பலவாக இருந்தமையினால் அவற்றைத் தொகுத்து சுருங்கிய நடையில் சூத்திரவடிவில் நூலாகச் செய்தவர் பாதராயணர். அது வேதாந்தசூத்திரம் என்றும், பிரமசூத்திரம் என்றும் அழைக்கப்படலாயிற்று. உபநிடதங்களில் பிரமம் ஆகிய பரம் பொருள் உண்மையே பேசப்பட்டதனால் வேதாந்தசூத்திரம் பிரமசூத்திரம் என்ற பெயரினாலும் அழைக்கப்பட்டது. பிரமசூத்திரம் மிகவும் சுருங்கிய நடையில் அமைந்தமையினால், அது தெளிவற்று விளக்கமற்றுக் காணப்பட்டது. இதனால் மீண்டும் அதனை விரித்து உரை எழுத வேண்டிய நிலை ஏற்பட்டது. பிரமசூத்திரத்திற்கு உரை எழுதியவர்களில் சங்கரர் குறிப்பிடத்தக்கவர். சங்கரரினால் எழுதப்பட்ட **பிரமசூத்திரபாஷ்** யத்தை அடியொற்றித் தோற்றம் பெற்ற வேதாந்தக் கோட்பாடு **அத்துவைத வேதாந்தம்** என்று பெயர் பெறுகிறது. சங்கரர் மெய்ப்பொருளாகிய பிரமம் ஒன்றெனவும், பிரமம் தவிர்ந்த ஏனைய யாவும் தோற்றம் எனவும் தர்க்கரீதியாகவும், அறிவுபூர்வமாகவும் விளக்குகிறார்.

சைவசித்தாந்த மரபு வேத, உபநிடதங்களைப் பொதுநூலாகவும், சிவாகமங்களைச் சிறப்பு நூல்களாகவும் கொள்கிறது. அத்துவைதம் ஒருமைக்கோட்பாடாக விளங்கும் போது, சித்தாந்தம் பலபொருள் உண்மையை விளக்குகிறது. **உண்மைப்பொருள் ஒன்று ( ஏகம் சத் )**என்ற இருக்குவேதக் கருத்தை ஏற்றுக்கொண்ட சங்கரர், பிரமம் மட்டுமே உண்மை, பிரமத்திற்கு வேறாகக் காணப்படும் உலகமும், ஜீவன்களும் வெறுந்தோற்றமே எனக் கூறுவதுடன், அத்தோற்றத்தை விளக்க **மாயை** என்ற பதத்தைக் கையாளுகிறார். சைவசித்தாந்த தத்துவக்கருத்துக்களை விளக்கும் மெய்கண்ட சாஸ்த்திரங்கள், முப்பொருள் உண்மையைக் கூறுவதுடன், முப்பொருட்களிலும் **மேலானது ஒன்று** அதுவே பதியாகிய இறைவன் என்று விளக்குகின்றன. சித்தாந்தத்தில் மாயை தோற்றமல்ல, அது உலகத்தோற்றத்து மூலமாக உள்ள நித்தியமான பொருள். இவ்வாறு அத்துவைதத்திலும், சைவசித்தாந்தத்திலும் மாயைக் கோட்பாடு இடம்பெறுகிறது.

ஏ. என். கிருஷ்ணவேணி
B.A(Hons) ; M.A ; M.Phil (Madras)
விரிவுரையாளர், நுண்கலைத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வேத இலக்கியங்களில் மாயை

சாதாரணமாகப் பேச்சுவழக்கில் எல்லாம் மாயைதானா, உலகே மாயை என்று பேசப்படுவதைக் காணலாம். இங்கு மாயை என்பது பொய்த்தோற்றமாக, ஒரு பிரேமையாகக் கருதப்படுகிறது. ஆனால் தத்துவங்களில் அது பல்வேறு அர்த்தங்களிற் பயன்படுத்தப்படுவதுடன், மாயைக் கோட்பாடு முக்கியத்துவம் பெறுவதனையும் காணலாம்.

இருக்கு வேதத்தில் **ஜாலவித்தை** என்ற பொருளில், மாயையின் மூலம் இந்திரன் பல உருவங்களை எடுத்தான் என்ற குறிப்புக் காணப்படுகிறது. மேலும் உலக இரகசியத்தை அறியமுடியாமல் இருப்பதற்கும், இந்திரியங்களுக்கு விடயமாகும் பொருட்களிற் திருப்தியடைவதற்கும் காரணம் மாயை. மெய்ப்பொருளை ஏதோ ஒரு திரை மூடியிருத்தல் வேண்டும். அதுவே மாயை என்று பொருள் படும் கூற்றுக்கள் காணப்படுகின்றன.

உபநிடத தத்துவங்களில் உலகப்படைப்பு பற்றிய கோட்பாட்டுடன் மாயை தொடர்பு படுத்தப்படுகிறது. **உலகப்படைப்புக்கு முன்னால் ஆத்மன் மட்டுமே இருந்தது. அது இவ்வுலகைப் படைக்க விருப்பம் கொண்டது. எனவே தனது சக்தியின் மூலம் உலகைப்படைத்தது (1).** தைத்திரீய உபநிடதத்தில் **தான் தன்னைப் பெருகப்பண்ணுவேன் என எண்ணிய பிரமம் தவத்தினால் முழு உலகத்தையும் படைத்தது (2)** என்ற குறிப்புக் காணப்படுகிறது. **பிரகிருதி அல்லது இந்த இயற்கையே மாயை. மகேஸ்வரனே அதன் அதிபதி. மாயையே உலகின் நாம, ரூபங்களுக்குக் (Name and Form) காரணமாகிறது (3)** உபநிடதங்களில் பிரமம், ஆத்மன் என்ற இருபதங்களும் அடிக்கடி இடம்பெறுகின்றன. பிரபஞ்சத்தின் இயக்கத்திற்குக் காரணமான சக்தியாகப் பிரமம் கூறப்படுகிறது. ஆத்மன் உடலியக்கத்திற்குக் காரணமான ஒரு சக்தியாக வர்ணிக்கப்படுகிறது. ஆனால் சில இடங்களில் பிரமத்தின் மறுபெயராகவே ஆத்மன் கொள்ளப்படுகிறது.

சாந்தோக்கிய உபநிடதம் **படைப்புக்கு முன்னால் ஆத்மன் மட்டுமே இருந்தது. அதன் இயல்பு தூய்மையானது. அது தான் பலவாகப் பெருக எண்ணி வெப்பம், நீர், உணவு யாவற்றையும் படைத்தது (4)** எனக் கூறுகிறது. முண்டக உபநிடதத்தில் **நெருப்பில் இருந்து பொறிகள் தோன்றுவது போல, மாறுதலடையாத பிரமத்தில் இருந்து பல்வேறு சேதன, அசேதனப்பொருட்கள் தோன்றின (5)** என்ற குறிப்புக் காணப்படுகிறது. உபநிடதங்களில் பிரமம் என்றுமுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்பொருளாகவும், முடிவற்றதாகவும், மாறுதலடையாததாகவும், பகுதிகளற்றதாகவும், குறைபாடற்றதாகவும், சித்துப்பொருளாகவும் கூறப்பட்டுள்ளது. ஆத்மனும் இதே இயல்புடைய பொருளாகவே வர்ணிக்கப்படுகிறது. ஆனால் ஆத்மன் குடிகொண்டிருக்கும் உடல் அழிவுக்குரியது. **மாயையின் மயக்க அறிவினால் ஆன்மா தான் இயல்பில் பரம் பொருளாகிய பிரமத்தை ஒத்ததாக இருந்தும் தன்னை அசத்துப் பொருளாகிய உடலுடன் இனங்காணுகிறது. (6) பிரமம் சத்தியம் ஜகத்மித்யா** (illusion) என்பதே உபநிடதக் கொள்கை. **மித்தை** என்பது மாயையைக் குறித்து நிற்கிறது.

## அத்துவைதத்தில் மாயை

தத்துவங்களிற் பொதுவாக இறைவன், ஆன்மா பிரபஞ்சம் ஆகிய மூன்று விடயங்கள் பேசப்படுகிறது. அத்துவைதம் பொருள் ஒன்று அதுதான் பிரமம். ஏனைய யாவும் தோற்றம் என்று கூறினாலும், உலகத்தைமுற்றாக மறுக்கவில்லை. பிரமம் உயர்ந்த உள்பொருள் (Ultimate Reality) எனவும், உலகம் பிரமத்தைப் போல உள்பொருள் அல்ல எனவும் சங்கரர் கூறுகிறார். மேலும் **கயிறு பாம்பாகத் தோன்றுவது** போன்ற ஒரு தோற்றமே உலகம் என்பது அத்துவைதிகளின் கருத்து. இங்கு கயிறு எனும் பொருள் மாறாமல் இருந்தபடியே, அதுமாறிப் பாம்பாகி விட்டது போலத் தோற்றமளிக்கிறது. இதே போன்று பிரமத்தில் எத்தகைய மாற்றங்களும் நிகழவில்லை. ஆனால் அது உலகமாக மாறி விட்டது போலத் தோன்றுகிறது. இதனை அத்துவைதம் **விவர்த்தவாதம்** (Illusory transfiguration) என்று அழைக்கிறது.

உலகம் தோற்றம், அல்லது மாயை என்பதை விளக்க சங்கரர் மூன்று நிலைகள் பற்றிக் கூறுகிறார். அவை கனவுலகமும் திரிபுக்காட்சிகளும் **( பிராதிபாஷிகம்)** நனவுநிலை **(வியாவகாரிகம்)** கனவு, நனவு இரண்டுக்கும் அப்பாற்பட்ட உயர்ந்தநிலை (பாரமார்த்திகம்) எனப்படும். கனவு நிலையில் உள்ள ஒருவனுக்கு அவன் காணும் கனவுலகமும் அதிற்காணப்படும் பொருட்களும் உண்மை போலத் தெரிகிறது. பின்னர் கனவுலகம் மறைய நனவுலகம் தோன்றுகிறது. நனவுலகமும் அதில் காணப்படும் பொருட்களையும் அவன் உண்மை என்று எண்ணுகிறான், ஆனால் நனவுலகம் கனவுலகத்தாலும் கனவுலகம் நனவுலகத்தாலும் அழிக்கப்படுகிறது. கனவுலகம் குறுகியது. அது சித்தக்காலம் மட்டும் (One point time) உள்ளது. ஆனால் வியாவகாரிகம் துவயக்காலம் (More than one point time) நீண்டது. பாரமார்த்திகம் என்றுமுள்ளது. கனவு, நனவு உலகங்களினால் அது மறுக்கப்படுவதில்லை அத்துவைதக் கொள்கைப்படி பிரமம் **பாரமார்த்திக சத்த** எனவும், உலகம் **வியாவகாரிக சத்த** எனவும் அழைக்கப்படும். அதாவது உலகம் வியாவகாரிக நிலையில் மட்டுமே உள்ளபொருள். எனவே பிரமத்தைப் போல அது உள்பொருள் அல்ல.

கயிறுபாம்பாகத் தெரிகிறது எனின் பாம்பு அறவே இல்லாத பொருளும் அல்ல. குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட ஒருவனுக்கு பாம்பு தோன்றியது உண்மை. பாம்பின் உண்மைக்கு ஆதாரமாக இருப்பது அவனது அனுபவமே. பாம்பைக் கண்டதும் ஏற்பட்ட பய உணர்ச்சி, வியர்வை, பின்வாங்கி ஓடியமை உண்மையில் கணப்பொழுதில் நிகழ்ந்துவிட்ட நிகழ்ச்சிகளே. **எந்த ஒருபொருள் ஒருவனால் அனுபவிக்கப்படுகிறதோ அது இல்பொருள் அல்ல**, மாயை ஒருவனுக்கு அனுபவமாகிறது. எனவே அது இல்பொருள் அல்ல என்ற முடிவுக்கு அத்துவைதிகள் வருகிறார்கள். இவர்கள் இல்பொருளாகக் கூறுபவை மலடிமகன், முயற் கொம்பு, ஆகாயத்தாமரை, மாயை அல்லது உலகம் பிரமத்தைப் போல சத்துமல்ல மலடிமகன், முயற்கொம்பு போல அசத்துமல்ல. (Neither sat nor asat) அது **சதசத்விலக்ஷணம்** எனப்படும் மாயை தெளிவாக இன்ன இயல்புடைய பொருள் என்று வசனங்களினால் வர்ணிக்க முடியாதது. இதனால் அது **அநிர்வசனியம்** (indescribable) என்று அழைக்கப்படும்.

அத்துவைதத்தை விமர்சிப்பவர்கள் மாயை உள்பொருளுமல்ல இல்பொருளும் அல்ல என்ற கருத்தை ஏற்றுக்கொள்வதில்லை. ஒன்றில் அது உள்பொருளாக இருக்கவேண்டும். அல்லது இல்பொருளாக இருக்கவேண்டும் என்பதே அவர்களது வாதம். அத்துவைதிகள் இதற்குக் கொடுக்கும் விளக்கம் அவர்களது மாயை பற்றிய கருத்துக்களை மேலும் தெளிவுபடுத்துவதாக உள்ளது. மாயை உள்பொருள் அல்ல எனக் கூறும்போது அதனை வெறுமையாக, சூனியமாக ஒன்றுமில்லாத தன்மையாக அவர்கள் விளக்கவில்லை. ஏதோ ஒரு வகையில் உள்ளபொருள் போலத் (Bhavarupam) தெரிகிறது. அது சத்துப்பொருளாகிய பிரமத்துடன் சேர்ந்து அதன் இயல்புகளைத் தனக்குரிய இயல்புகளாகக் கொள்கிறது. (illucitly Transforming the nature of sat). இதனால் அது உள்பொருள் போலத் தோன்றுகிறது என்பதே அத்துவைதிகள் கருத்து. அது இல்பொருள் என்று கூறுவதற்குக் காரணம், அது பிரமத்தைப் போல என்றுமுள்ள உள்பொருள் அல்ல. அது நனவு நிலையில் மட்டும் உள்ளபொருள். பாரமார்த்திகப்பெருநிலையில் அது மறுக்கப்படுகிறது. (Anything that is sublated or Contradicted by Subsequent cognition is not real). கயிறு பாம்பாகத் தோன்றும் உதாரணத்தில், ஒருவன் அது பாம்பல்ல கயிறுதான் என்று அறியும் போது பாம்பின் உண்மை மறுக்கப்பட்டு விடுகிறது. இதே போன்று பிரமத்தை சத், சித் ஆனந்தமாக அறிந்தவன் எவனோ அவன் பிரமமே ஆகிவிடுகிறான். பிரமத்திற்கு அப்பால் வேறெதுவும் இல்லை என்பதை உணர்கிறான். **சத்தியம், ஞானம், ஆனந்தம், பிரமம்** என்கிறது பிருஹதாரண்யக உபநிடதம் .உலகம் உண்மையல்ல, பாம்பின் குணம் கயிற்றின் குணமாக முடியாது. உலகின் இயல்புகள் பிரமத்தின் இயல்புகளாகாது. உலகின் தோற்றத்துக்கு பிரமமோ, மாயையோ தனிப்பட்டமுறையில் காரணமாக முடியாது. பிரமமும், மாயையும் சேர்ந்தே உலகத்திற்கு உபாதான காரணமாகிறது. உலகிற் காணப்படும் நாம, ரூப பேதங்களுக்குக் காரணமாக இருப்பது மாயையே.

அத்துவைதக் கொள்கைப்படி மாயை பிரமத்தின் சக்தியாகக் கொள்ளப்படுகிறது. அத்துவைத ஆசிரியர்களில் ஒருவரான **பாரதிதீர்த்தவித்யாரண்யர்** பிரமமும் மாயையும் சேர்ந்தே உலகத் தோற்றத்துக்கு உபாதான காரணமாகிறது. பிரமம் மாயைக்கு அதிஷ்டானமாக (Locus) இருத்தல் வேண்டும் என்று தமது பஞ்சதசியில் கூறுகிறார். மாயை பிரமத்தின் சக்தி எனும் போது, மாயையும் பிரமமும் ஒன்று என்று கூறமுடியாவிட்டாலும், அது பிரமத்தினின்றும் வேறுபட்டதுமன்று. சக்திக்கும் அது தங்கியுள்ள பொருளுக்குமிடையேயுள்ள தொடர்பு எத்தகையது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என ஆராயின் அது ஒரு வகையில் திரவியத்துடன(substance) தொடர்புடையதாகவும், இன்னொருவகையில் வேறுபட்டதாகவும் காணப்படுகிறது. இச்சக்தியானது அதன் காரியத்தினால் அனுமானிக்கப்படுகிறது. (The cause can be infered by its effect). சக்தியானது தான் சார்ந்துநிற்கும் பொருளின் முழுப்பகுதியையும் இயக்குவதில்லை. நிலம் அல்லது மண்ணின் படைக்கும் சக்தி பானை தோன்றக் காரணமாகிறது. இவ்வாறு உதவுவது மண்ணின் ஒரு பகுதியேயன்றி முழுவதும் அல்ல. புருஷசூக்தக்கதைகளிலும் பிரமாண்டமான புருஷனுடைய கால் பங்கே உலகமாகத் தோன்றியது (7) என்ற குறிப்புண்டு. பகவத்கீதையில் கிருஷ்ணபகவான் **உலகம் எனது ஓர் அம்சத்தினால் பாதுகாக்கப்படுகிறது (8)** என்று கூறியமை குறிப்பிடத்தக்கது. வித்தியாரண்யர் இக்கருத்துக்களுக்கு வலுவூட்டும் வகையில் **பிரமத்தின் சக்தியாகிய மாயை அதன் ஒரு பகுதியிலேயே** (ekadesa) **உள்ளது. பிரமம் மாயையை விட உயர்ந்தது.** என்று கூறுகிறார். அத்துவைதிகளின் கருத்துப்படி பிரமம் சத் (Existence) சித் (Consciousness) ஆனந்தம் (Bliss nature) என்ற இயல்புடையதாயினும், அதன் ஆனந்த இயல்பே மாயையினால் கட்டுப்படுத்தப்படுகிறது. சத், சித் இயல்புகள் பாதிக்கப்படுவதில்லை. இங்கு நாம் கவனிக்க வேண்டிய பொதுவான தத்துவம் என்னவெனில் "காரணம் எப்பொழுதும் காரியத்தை விட உயர்ந்தது, காரியம் ஒருபொழுதும் காரணத்தை முழுமையாக எடுத்துக் கொள்வதில்லை." பிரமம் பகுதிகளற்றது(9) எனினும், ஒரு விவாதத்திற்காகப் பகுதிகள் அதன் மேல் ஏற்றிக் கூறப்படுவதும் இங்கு குறிப்பிடவேண்டிய ஒன்று.

உலகப் படைப்புக்குக் காரணமாக உள்ள மாயைக்கு இருசக்திகள் உண்டு. அவை **ஆவரணம்** (Power of Construction), **விசேஷம்** (Power of delusion) எனப்படும். ஆவரணசக்தியினால் மாயை உலகத்தைத் தோற்றுவிக்கிறது. விசேஷசக்தியினால் பிரமத்தை மறைக்கிறது. இவற்றை முறையே நிர்மாணசக்தி, மோஹசக்தி என்றும் அழைக்கலாம். மாயை பிரமத்தை உலகமாகத் தோற்றுவிப்பது போல, அதன் ஒருபிரிவு பிரமத்தைச் சீவர்களாக்குகிறது. அது **அவித்தை** என்ற பெயரினால் அழைக்கப்படுகிறது. அவித்தை என்றால் வித்தைக்கு எதிர் மாறானது. அறியாமை (Ignorance) என்று பொருள் படும். அறியாமை காரணமாகப் பிரமத்தில் இருந்து வேறுபடும் ஆன்மாக்கள், அறிவினால் மீண்டும் பிரமமே ஆகிவிடுகின்றன. மாயை பிரமத்தைப் பாதிப்பதில்லை. இதனால் அது உபாதிகளுக்கப்பாற் பட்டதாக (Nirupadhika Brahma) உள்ளது. ஆத்மன் அவித்தையினால் பாதிக்கப்பட்டு உபாதிகளுக்குட்படுகிறது. (Sopadhika Brahma). இவ்வாறு அத்துவைதத்தில் மிக முக்கியத்துவம் பெறும் மாயை எவ்வாறு தோன்றியது எனின், அதன் தோற்றத்திற்கு ஒரு மூலப் பொருள் இல்லை. மாயை தோற்றமுடையது எனக்கூறின், அதன் தோற்றமும் இன்னொரு காரணத்தை மூலமாகக் கொண்டிருத்தல் வேண்டும். இது முடிவற்றதாக இருக்கும். (Falacy of infinite regress) மாயை அனாதியானது என்பதே உபநிடதங்களினதும், அத்துவைதிகளினதும் கொள்கையாகும். "Maya ca avidya ca Svayameva Bhavati" (10).

மாயையும் அவித்தையும் தாமாகவே தோன்றியவை. ஆனால் அவற்றுக்கு இறுதி உண்டு அறிவுக்கு முன்னால் அவை அழிந்து விடும். கயிறு கயிறாகத் தெரியும் போது பாம்புக்கு இடமில்லை. **இதே போல ஆத்மன் உலகத்தை வெறும் நாம** ரூபங்களாகக் காணும் போது மாயைக்கு இடமில்லை. மாயையை அத்துவைதிகள் சத்துமற்ற அசத்துமற்ற சதசத்விக்ஷணமாகக் கூறுவதை ஏனையோர் ஏற்றுக் கொள்வதில்லை. மாயை உலகத் தோற்றத்துக்குக் காரணமாக இருப்பதனால் அதனை உள்பொருளாகக் கொள்ளவேண்டும் என வாதிப்பர். ஆனால் அத்துவைதிகள் மனிதனுக்கு ஆற்றல் உண்டு, மனிதனும், ஆற்றலும் இரண்டென்று கூறுவதில்லை. இதே போல பிரமத்தின் சக்தியாகிய மாயையைத் தனித்த ஒரு வஸ்து (Seperate entity) வாகக் கொள்வதில்லை. அது தனக்கென சுயமான இயல்புகள் கொண்ட பொருள் அல்ல. இதனால் அது **நிஷ்தத்துவம்** என்று அழைக்கப்படுகிறது. முடிவாகக் கூறுவதனால் சாதாரண மனிதன் மாயையை உண்மை (Vastavi) என எண்ணுகிறான். சுருதி இலக்கியங்களைக் கற்றறிந்தவன் அதனை இல்பொருள் (Tuccha) என்கிறான். உண்மையை உணர்ந்தவன் (Metaphysician) அது உள்பொருளுமல்ல, இல்பொருளுமல்ல, **அநிர்வசனியம்** என்கிறான்.

## சைவசித்தாந்தத்தில் மாயை

சைவசித்தாந்த தத்துவக்கருத்துக்களை முறைப்படி விளக்கும் நூல்கள் மெய்கண்ட சாத்திரங்கள். இவை பதியாகிய இறைவன், பசுவாகிய உயிர்கள், பாசங்களாகிய ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களின் உண்மையைத் தெளிவாகக் கூறுகின்றன. சைவசித்தாந்திகளது கொள்கைப்படி, உலகம் உள்ளபொருள், அது ஒருவனாற் படைக்கப்பட்ட உள்பொருள். சிவஞானபோதம் உலகத்தைத் **தோற்றிய திதி** (11) என்று கூறியுள்ளது. இத்தகைய உலகப்படைப்புக்கு முதற் காரணமாக விளங்குவது மாயை. **மாயை** என்ற பதம் **மா, யா** என்ற இருசொற்களினால் ஆனது. "மா" என்றால் **ஒடுக்கம்** எனவும் "யா" என்றால் **விரிவு** என்றும் பொருள்படும். எனவே உலகம் தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்கும் காரணமாக உள்ளபொருள் மாயை என்று அறியலாம். ஒரு பொருளின் தோற்றத்திற்கு முதற்காரணம், துணைக்காரணம், நிமித்த காரணம் ஆகிய மூன்று காரணங்கள் கூறப்படுகின்றன. சிவஞானசித்தியார்,

**"காரிய காரணங்கள் முதல் துணை நிமித்தம் கண்டாம்**
**பாரில் மண் திரிகை பண்ணுபவன் முதல் துணை**
**நிமித்தந்**
**தேரின் மண்மாயையாகத் திரிகை தன்சக்தியாக**
**ஆரியன் குலாலனாய் வந்து ஆக்குவனகிலமெல்லாம்"**

என்ற பாடலில் பானைக்கு மண் போல, உலகத்திற்கு மாயை முதற்காரணமாகவும், பானைக்கு திரிகை போன்று உலகிற்கு இறைவனது சக்தி துணைக்காரணமாகவும், பானைக்குக் குயவன் போல உலகிற்கு இறைவன் நிமித்தகாரணமாகவும் விளங்குவன் என்று கூறுகிறது. மாயை சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என்ற மூன்று பிரிவுகளை உடையது. இவற்றுள் சுத்தமாயை சிவசக்தியின் மூன்று இயல்புகளான **இச்சை** (Desire) **கிரியை** (Will), **ஞானம்** (knowledge) ஆகியவற்றின் துணையுடன் சிவனால் நேரடியாகவே இயக்கப்படுகிறது. இதிலிருந்து சுத்த தத்தவங்களான சிவம், சக்தி, சதாசிவம், ஈஸ்வரன், சுத்தவித்தை ஆகியன தோற்றம் பெறுகிறது. இந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தையும் ஒருங்கே **பிரேரக காண்டம்** (preraka Kandam) என்பர். அசுத்த மாயையில் இருந்து காலம், நியதி, கலை ஆகியனவும், பின்னர் கலையில் இருந்து வித்தை, அராகம் என்பனவும் தோன்றுகின்றன. இவை ஐந்தும் ஆன்மாக்களுக்கு கஞ்சுகங்களாகக் (Envelops) கொள்ளப்படுகின்றன. இவற்றுடன் தொடர்பு கொண்ட நிலையில் ஆன்மாக்கள் **புருஷன்** என்ற பெயரைப் பெறுகின்றன. புருஷனோடு தொடர்புடையதாக **பிரகிருதி** விளங்குகிறது. இப்பஞ்சகஞ்சுகங்களுடன் பிரகிருதி புருஷன் சேர்ந்து போஜயித்ரு காண்டம் (Bhojayitr Kandam) என்று அழைக்கப்படுகின்றது. இவை ஆன்மாக்களுக்கு அனுபவங்களைக் கொடுக்கின்றன. இவற்றை வித்தியா தத்துவங்கள் என்றும் அழைக்கலாம்.

பிரகிருதி மாயையில் இருந்து கர்மேந்திரியங்கள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, தன்மாத்திரைகள் ஐந்து, பஞ்சபூதங்கள், மனம், புத்தி, சித்தம் அகங்காரம் என்ற அந்தக் கரணங்கள் நான்குமாக ஆன்மதத்துவங்கள் 24 தோன்றுகின்றன. இவை சாங்கிய மதம் கூறும், பிரகிருதியில் இருந்து தோன்றும் 24 தத்துவங்களுடன் ஒப்பிடத்தக்கவை. சைவசித்தாந்திகளது கொள்கைப்படி **சுத்தமாயை** இறைவனது **பரிக்கிரகசக்தி** யாகக் (Assumptive Energy) கொள்ளப்படுகிறது. அதுவே உலகப்படைப்புக்கு ஆதாரமாக உள்ளது.

சைவசித்தாந்திகளது உலகப்படைப்பு, மாயைபற்றிய கருத்துக்கள் அத்துவைத வேதாந்திகளது விவர்த்தவாதக் கொள்கைக்கு முரண்பட்டதாக உள்ளது. சைவசித்தாந்திகளின் உலகப்படைப்பு பரிணாமவாதக் கொள்கைமூலம் (Theory of evolution) விளக்கப்படுகிறது. பால் மாறித் தயிராவது இதற்கு சிறந்த உதாரணமாகும். ஒரு பொருள் மாற்றத்துக்குட்பட்டு இன்னொரு வடிவத்தைப் பெறுதல் பரிணாமவாதம் எனப்படும். பரிணாமவாதத்தில் காரணமும், காரியமும் ஒத்த இயல்பினை உடையவை. சடப்பொருளாகிய உலகின் தோற்றத்துக்கு மூலமும் ஒரு சடப்பொருளாகவே இருத்தல் வேண்டும். எனவே மாயை எனும் சடப்பொருளில் இருந்து உலகந்தோன்றியது என சைவசித்தாந்திகள் கூறுவர். சைவசித்தாந்தம் சத்காரியவாதத்தை ஏற்றுக் கொள்கிறது. அதாவது காரியம் காரணத்தில் உள்ளது. அவ்வாறு இருந்ததனாலேயே படைப்பின் போது காரணத்தில் இருந்து காரியம் தோன்றமுடிகிறது. மாயையில் ஒடுங்கி இருக்கும் உலகம் ஆன்மாக்கள் ஈடேற்றம் பெறுதற் பொருட்டு மீண்டும் படைக்கப்படுகிறது.

அத்துவைதிகளும் விவர்த்தவாதத்தின் அடிப்படையில் சத்காரியவாதத்தை ஏற்றுக் கொள்கின்றனர். சங்கரரைப் பொறுத்த மட்டில் காரியம் காரணத்தில் இருந்து வேறுபட்டதல்ல, காரியமும் அதன்காரணமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. மட்பாத்திரம் மண்ணில் இருந்து வேறுபட்டதல்ல, ஆபரணங்கள் தங்கத்தில் இருந்து வேறுபட்டவையல்ல. காரணமின்றி காரியமில்லை. காரியம் காரணத்தில் இல்லாமல், புதிதாகத் தோன்றுவதல்ல, அவ்வாறு முன்னில்லாத ஒன்று காரிய நிலையில் புதிதாகத் தோன்றுவதாகக் கொள்வது மாயையே எனக் கூறுகிறார்.

அத்துவைதிகள் உலகம் மாயையான தோற்றம் என்று கூற, சைவசித்தாந்திகள் உலகம் உள்ள பொருள், அது படைக்கப்பட்ட பொருள், அதன் படைப்புக்கு முதற்காரணமாக உள்ள மாயையும் உள்ள பொருள் என்று கூறுவதனைக் காணலாம்.

**நித்தமாய் அருவாய் ஏகநிலையதாய் அகிலத்திற்கோர்**
**வித்துமாய் அசித்தாய் எங்கும் வியாபியாய் விமலனுக்கோர்**
**சக்தியாய், புவன போகந் தனுகரணமும் உயிர்க்காய்**
**வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யும் அன்றே.**

என்ற சித்தியார் பாடல் நித்தியமான, உருவமற்ற மாயை ஒன்றேயானது. அது உலகத்தோற்றத்திற்கு வித்துப்போன்றது. அறிவற்ற சடப்பொருள். எங்கும் வியாபித்த பொருள். இறைவனுக்கு சக்தி போன்றது. ஆன்மாக்களுக்கு உடல், கருவி, காரணங்களைக் கொடுத்து, அவை ஈடேற்றம் பெற உதவுகிறது. இவற்றுடன் ஆன்மாக்கள் தொடர்பு கொண்டு, பெறும் அறிவு சிற்றறிவேயன்றிப் பேரறிவல்ல. இதனால் அது மயக்க அறிவாகக் கொள்ளப்படுவதுடன் மாயையும் மலம் என்று அழைக்கப்படுகிறது. சைவசித்தாந்தம் மாயையைக்குக் கொடுக்கும் இலக்கணத்தில் இருந்து, அவர்கள் பல்வேறு மதப்பிரிவினரும் கூறும் உலகம் பற்றிய கருத்துக்களை மறுத்துக் கூறுவதனைக் காணலாம். மாத்யாமிகர் பேசும் சூனியத்தை மறுத்து மாயை உலகத்துக்கு வித்துப் போன்றது என்பர், சித்தாந்திகள். "ஒவ்வொரு பொருளும் ஒன்றில் இருந்து ஒன்றாகத் (Causal Chain) தோன்றும். அவை ஒவ்வொன்றும் தனக்கு முந்திய பொருளில் தங்கியிருக்கும். கணத்துக்கு கணம் ஒவ்வொரு பொருளும் மாற்றமடையும்" என்ற க்ஷணிகவாதிகளின் கருத்தை மறுத்து **மாயை நித்தியமானது** என சித்தாந்திகள் கூறுவர்.

பிரத்தியக்ஷப்பிரமாணத்தை மட்டும் ஏற்றுக்கொள்ளும் உலகாயதர் பஞ்சபூதங்களில் ஆகாயம் உருவமற்றதெனக் கூறி அதனுண்மையை மறுக்கும்போது, சைவ சித்தாந்திகள் உள்பொருளாகிய மாயை உருவமற்றது என உலகாயதர் கருத்தை மறுக்கின்றனர். நியாய வைசேஷிகர் உலகத்திற்குக் காரணமான முதல்நிலை அணுக்கள் ( Primal atoms) எங்கும் வியாபித்தவை அல்ல எனக்கூற, மாயை எங்கும் வியாபித்த பொருள் என்பதை சைவசித்தாந்திகள் எடுத்துக் கூறுவர். சாங்கியர் கூறும் பிரகிருதி முக்குணங் களினாலாயது, மாயை ஒன்றேயானது.

சைவசித்தாந்திகளது மாயை பௌத்தம், உலகாயதம், நியாயவைசேஷிகம், சாங்கிய மதக் கருத்துகளில் இருந்து வேறுபட்டது. வீடுபேற்றினைக் குறிக்கோளாகக் கொண்ட ஒருவனுக்கு, மாயை பேரறிவைப் பெறத் துணையாகிறது. ஆன்மாக்கள் தாம்செய்த கன்மப் பலன்களை அனுபவித்த நிலையிலேயே பாசங்களில் இருந்து விடுபடமுடியும். எனவே ஆன்மாக்கள் இவ்வுலகிற் பிறந்து தனு, கரணங்களுடன் கூடி அனுபவிக்கின்றது. இவற்றை ஆன்மாக்களுக்குக் கொடுத்துதவுவது மாயையே. இவ்வுலகிலேயே மோட்சசாதனங்களைப் பின்பற்றி, ஆன்மா பேரறிவைப் பெறுகிறது. எனவே மாயை விடிகின்றவரைக்கு இருளைப்போக்க உதவும் விளக்குப்போல, ஆன்மாக்கள் பேரறிவைப் பெறும்வரைக்கும், அவற்றுக்கு சிற்றறிவைக் கொடுத்து உதவுகிறது. இதனைத் திருவருட் பயன்;

**"விடிவாமளவும் விளக்கனைய மாயை**
**வடிவாதி கன்மத்துவந்து"**

என்ற பாடல் மூலம் விளக்குகிறது.

**தொடர்ச்சி 60 ஆம் பக்கம் ...**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழியின் விளிம்பில்

ஏறத்தாழ மூன்றில் நாலுபங்கு பிரதேசம் பங்களா தேஷில் நீரில் மூழ்கியுள்ளது. சுவ்வாசி மக்கள் வீடிழந்து நிலமிழந்து இருக்கிறார்கள். டகோட்டாவில் கோதுமை, சோயா, அவரைத் தோட்டங்கள் வாடி வதங்கி உலர்ந்து போய்கிடக்கின்றன. மிசிசிப்பி நதியில் செல்லமுடியாமல் ஓடங்கள் கரைதட்டிப் போய்க்கிடக்கின்றன. அல்பைன் மெக்சிக்கன் இடங்களில் குடியேறி வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் வெப்பம் தாங்க முடியாமல் இடம் பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். சீனாவில் அன்குய் மாகாணத்தில் 70,000 கிணறுகள் உலர்ந்து போய்க்கிடக்கின்றன. சீனாவில் தோட்டங்களை உழ ஆரம்பித்ததும் ஹாவாயில் வளிமண்டலத்தில் தூசிகள் தென்பட ஆரம்பிக்கின்றன. கரீபியன் நீரின் நீலநிறம் செந்நிறமாக மாறிக்கொண்டிருக்கிறது. நிக்கராகுவாவில் ஏற்பட்ட பெரும் புயல் நாட்டின் 15,000 சதுர கிலோ மீற்றர் பகுதியை செழிப்பிழக்கச் செய்துள்ளது. புளூபீல்ட் நகரம் அழிந்து போயுள்ளது. ஆறுகள் நீரின்றி வரண்டு போய் கிடக்கின்றன. நிலம் மண்ணிறச் சேறாக உள்ளது. ஆபிரிக்காவில் ஏற்பட்ட வரட்சி 10 மில்லியன் மக்களைப் பஞசத்தால் அகதிகளாக்கியுள்ளது. காபோன் (Gabon) 20 வருடங்களில் முதன்முதலாக பெரும்வெள்ளத்தைச் சந்தித்துள்ளது. செனீகல், மயூரற்ரானியா, காம்பியா, கினியா, பிசோ, நைகர், மாலி ஆகிய நாடுகளில் தத்தி (Locust) யின் அதிக விருத்தியை அவதானிக்க முடிகிறது. இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் அனர்த்தங்கள் எவ்வளவு, அடிக்கடி எங்கு பார்த்தாலும் புயல், வெள்ளம், பூகம்பம், இவற்றின் தாக்கங்களே தென்படுகின்றன. இவையெல்லாம் எவற்றின் அடையாளங்கள். எமது பூமி தனது ஊழியை அண்மித்து விட்டதா. நாம் எல்லாம் அதன் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறோமா என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

## பூமியின் உதயமும் உயிர்களின் தோற்றமும்

புவியின் தோற்றம் பற்றி பல கருத்துக்கள் உள்ளன. சூரியனில் இருந்து பிரிந்து வந்த ஒரு பகுதி என ஒரு சாரார் கருதுகின்றனர். இன்னொருசாரார் ஏற்கனவே விண்வெளியில் திரண்ட வாயுத் திரளின் தோற்றமே பூமியெனக் கூறுகின்றனர். எப்படியாயினும் ஆதியில் புவியில் எவ்வித உயிரினமும் இருக்கவில்லை என்பதை இரு சாராரும் ஏற்றுக் கொள்கின்றனர். ஆரம்பத்தில் அண்ட வெளியில் கதிர் வீச்சுக் காணப்பட்டது. புவியைச் சூழ்ந்திருந்த வாயுக் கூட்டத்தில் அமோனியா, மெதேன், நீராவி, ஐதரசன் போன்ற வாயுக்கள் இருந்தன. அண்டக் கதிர் வீச்சில் இவ்வாயுக்கலவைகள் இரசாயனத்தாக்கத்தை மேற்கொண்டன. இதன் விளைவாக இரசாயனச் சேர்வைகள் தோன்றின. பூமியின் மேற்பரப்பு அதன்மேல் ஊற்றப்பட்ட மழையெனும் திரவ நீரால் குளிர்ச்சியடையத் தொடங்கியது. இருந்தும் இடையிடையே ஏற்பட்ட எரிமலைத் தொழிற்பாட்டால் புவியின் மேற்பரப்பில் மலை, மேடு, பள்ளங்கள் நிறைந்தன. புவியின் மேற்பரப்பில் மழையாக விழுந்த நீர், மேற்பரப்பின் வழியே ஓடிச் சென்று பள்ளப் பிரதேசங்களில் தேங்கின. ஓடிச் செல்லும் போது புவியின் மேற்பரப்பில் இருந்த கனிப்பொருட்களையும் (இரசாயனப்பொருட்கள்) கரைத்துச் சென்றது. முதல் கடல் தோன்றிற்று. முதல் கடல் இராசாயனக் கரைசலாக இருந்தது. வளியிலுள்ள வாயுக்கள் கரைந்தன. கதிர்வீச்சு இரசாயனத்தாக்கத்துக்கு சக்தியும் வழங்கியது.

இரசாயனத் தாக்கத்தின் விளைவாக சேதனப்பொருட்கள் (காபன்கொண்ட) தோன்றின. அமினோவமிலம் போன்ற பொருட்கள் தோன்றின. இப்பொருட்களை சேர்த்து வைப்பதில் கடலின் அடியிலிருந்த களிமண் படுக்கை உதவியது. இக்கூழ்பொருள் இவற்றைப் புறத்துறிஞ்ச, சிறிய துணிக்கைகள் ஒருங்கிணையக் குவியலாயின. இவ்விதம் முதற் கலம் தோன்றிற்று. இக்கலம் புறத்திலிருந்து இரசாயனப் பொருட்ளை உணவாக உறிஞ்சியது. எனவே முதற் தோன்றிய உயிரினம் ஒரு இரசாயனப் பொருள் உண்ணியாக விளங்கிற்று. சூழலில் அதற்கு தேவையான பொருள் இல்லாத போது கிடைத்த பொருளைக் கொண்டு தனக்குத் தேவையான பொருளைப் பெறக்கூடிய விதத்தில் இரசாயனத் தாக்கத்தை நிகழ்த்தக் கூடிய ஒரு தொகுதியொன்றை முதற் கலங்கள் தமக்குள்ளே விருத்தியடையச் செய்தன. இதன் விளைவாக தற்போசனை முறை தோன்றிற்று. நீரையும், காபனீரொட்சைட்டையும், சூரிய ஒளியையும் உபயோகித்துத் தனக்குத் தேவையான சேதனப் பொருளைப் பெறக்கூடிய முறையை விருத்தியடையச் செய்த போது தற்போசனைமுறை தோன்றிற்று. இதனால் முதல் தாவரங்கள் தோன்றின. ஆரம்பத்தில் வளிமண்டலத்தில் ஒட்சிசன் இருக்கவில்லை. ஐதரசன் வாயு காணப்பட்டது. எனவே அது தாழ்த்தும் வளிமண்டலமாக இருந்தது.

ஒளித் தொகுப்புச் செயற்பாடு விருத்தியடைந்ததும் நீரில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஒட்சிசன் வளிமண்டலத்தில் சேரலாயிற்று. எனவே வளிமண்டலம் ஒளியேற்றும் வளிமண்டலமாக மாறத் தொடங்கிற்று. வளிமண்டலத்தில் சேர்ந்த ஒட்சிசன் கதிர்தாக்கத்தின் விளைவாக ஓசோன் வாயுவைத் தோற்றுவிக்கலாயிற்று இதன் விளைவாக ஓசோன் வாயு மேலெழுந்து ஒரு படையாக பூமியைச் சூழத் தொடங்கிற்று. சூரிய ஒளியில் இருந்து வரும் தீமை பயக்கும் கதிர்களை ஓசோன் படை புவிக்கு வரவிடாது தடுக்கலாயிற்று. இதனால் புவியில் மேற்கொண்டு இரசாயனத்தாக்கங்களின் முன்னெடுத்துச் செல்லுகை தடைப்பட்டது. புவியின் மேற்பரப்பை தனிக்கலத் தாவரங்களும் விலங்குகளும் நிறைத்தன. நீரிலே (ஆதிக்கடல்) முதலில் உயிரினங்கள் தோன்றலாயிற்று. தனிக் கலங்கள் பல்கலங்களாகின. ஓரிடப்படுத்தப்பட்டு இழைய ஒழுங்கைப் பெற்று பின் அங்கங்களாகின. தொடர்ந்து தொகுதிகளாக வியத்தலடைந்து இறுதியில் பல்கல அங்கிகளாயின. பல்வேறு அங்கிகள் பரிணாமமடைந்து புவியை நிறைத்தன. இயற்கையின் சமநிலை குழம்பாது இயற்கையுடன் தன்னை இணைத்து புவியை அழகு படுத்திக் கொண்டிருந்தது உயிரினங்களின் பன்மைத்துவம்.

கூர்ப்பின் (பரிணாமம்) உச்சநிலையில் மனிதன் தோன்றினான். ஒஸ்திராலேபித்தகஸ், ஹோமோ, றெக்டஸ் என்ற மூதாதைகளின் வரிசையில் அறிவுடைய இனமாக "ஹோமோ சப்பியன்" என்னும் தற்கால மனிதன் பரிணமித்தான். இயற்கையின் புதிர்களை விடுவிக்கத் தன் அறிவைப் பயன்படுத்தினான். இயற்கையின் சீற்றங்களுக்கு ஈடுகொடுக்கலானான். மனிதன் தன் அறிவினால் புவியில் எத்தனையோ சாதனைகளை நிலைநாட்டினான். நினைத்தவுடன் நெடும் பயணங்களை இலகுவாக மேற்கொள்ளக்கூடிய விமானங்கள், சைகைகள் மூலமும் பேச்சுக்கள் மூலமும் செயற்பாடுகளை செய்து முடிக்க கூடிய கணணிகள், இருந்த இடத்திலிருந்து கொண்டே உலகம் முழுவதையும், ஏன் வேறுகோள்களையும் அவதானிக்கக் கூடிய கருவிகள். இவை எல்லாம் மனிதனின் அறிவின் விருத்தியால் கிடைத்த பொக்கிஷங்கள். புவியைச் செலவங்கொழிக்க வைத்தான். இயற்கை புதைத்து வைத்த செல்வங்களை எடுத்து எல்லோருமே அனுபவிக்கத் தந்தான். அதே வேளையில் ஆபத்தான கருவிகளையும் படைத்து வைத்தான். எல்லாவற்றுக்கும் மேலாக இயற்கையுடன் இணைந்து வாழ வேண்டு மென்ற எண்ணத்தை மறந்து விட்டான். அவனது ஆக்கங்கள் தான் இன்று அவனை ஊழியின் விளிம்பிற்கு அழைத்துச் சென்றுள்ளன. இயற்கையை வென்று விட்டதாக நினைத்து இயற்கையின் சீற்றத்தைத் தூண்டி விட்டவனாகி விட்டான். அவனால் கூறப்பட்ட எதிர்வு கூறல்கள் எவ்வளவு தூரம் பொய்த்துப் போய் விட்டன. புயல், மழை, போன்றன பற்றிய எதிர்வு கூறல்களில் எவ்வளவு சரியாகியுள்ளன. சூழலை மறந்து எங்கோ சென்றவன் இன்று சூழலின் மாற்றமே அவனை, அவனது ஆக்கங்களை, பொக்கிஷங்களை, அரிய கண்டுபிடிப்புகளை அழிக்கப் போகிறது என்பதைப் புரிந்தும் புரியாதவனாகவே இருக்கிறான்.

## முழு உலக வெப்பமுறல் (Global Warming)

இன்று எங்கு பார்த்தாலும் இதே பேச்சாகத்தான் இருக்கிறது. வானொலி, ரெலிவிஷன், பத்திரிகை, பல தொடர்புகொள் சாதனங்கள் யாவும் முழு உலக வெப்பமுறலைத்தான் கூறிக்கொண்டிருக்கின்றன.

எம்.பி. செல்வவேல்
ஆசிரியர்
நுகேகொடை தமிழ் மகா வித்தியாலயம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் முழுவதிலும் சூழல் வெப்பநிலை சற்று உயர்ந்துள்ளதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். இது எவ்விதம் ஏற்பட்டுள்ளது என்பதைப் பார்ப்போம். புவியைச்சூழ்ந்துள்ள வளிமண்டலம் எங்கள் உடலைப் போர்த்தியுள்ள தோலைப் போன்றது. தோல் எவ்விதம் எங்களை வெப்ப அதிகரிப்பிலிருந்து பாதுகாக்கின்றதோ அதே போன்று வளிமண்டலமும் சூழல் வெப்பநிலை மாற்றங்களிலிருந்து எம்மைப் பாதுகாக்கின்றது. இவ்வளிமண்டலம் ஒரு வாயுக்கலவையிலான மூடியாகும். இதில் நைதரசன் (78%), ஒட்சிசன் (21%) காபனீரொட்சைட் (0.03%) மற்றும் ஐதரசன், நீராவி, அருவாயுக்கள் எனபன காணப்படுகின்றன. இது 1000 கி. மீ வரை புவியின் மேற்பரப்பிலிருந்து வியாபித்துள்ளது. புவியியல்ஆய்வாளர்கள் இவ்வளிமண்டலத்தை 4 வளையங்களாகப் பிரித்துள்ளனர். புவியின் மேற்பரப்பிலிருந்து மாறன் மண்டலம் அல்லது நிலைமாறும் மண்டலம்,(Troposphere) படைமண்டலம் (Stratosphere), இடைமண்டலம் (Mesosphere), வெப்பமண்டலம் (Thermosphere), என இவ்வளையங்கள் வகுக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ நாலில் மூன்று பங்கு வளிமண்டல வாயுக்கள் மாறன் மண்டலத்தில் தான் அடக்கப்பட்டுள்ளன. மாறன் மண்டலம் முனைவுகளில் 8. கி.மீற்றர் உயரத்திற்கும், மத்திய பகுதியில் 17 கி.மீற்றர் தூரத்திற்கும் வியாபித்துள்ளது. மாறன் மண்டலத்தில் அதிகளவு நீராவி காணப்படுகின்றது.
அதுவும் வெப்ப பிரதேசங்களில் இதன் அளவு அதிகமாக உள்ளது. இவ்வலையத்திலுள்ள நீராவியின் அளவு காலநிலையைத் தீர்மானிக்கும் ஒரு முக்கிய காரணியாக உள்ளது. நீராவி உயர்மறை வெப்பமுடையதாகையால் அதிகளவு வெப்பத்தை உறிஞ்சி வைத்திருக்கும்.

மாறன் மண்டலத்திலுள்ள தூசித்துணிக்கைகள் நீராவித் துளிகள் ஒடுங்க இடமளிப்பதால் முகிற்திரள்கள் தோன்றுகின்றன. மாறன் மண்டலத்தில் முனைவுக்கும் மத்திய பிரதேசத்துக்கும் இடையில் ஏற்படும் வெப்ப வேறுபாடுகள், வளி ஓட்டத்திற்கும், சமுத்திர நீரோட்டத்துக்கும் காரணமாகின்றன. மாறன் மண்டலத்துக்கு அடுத்து மேலேயுள்ள படைமண்டலத்தில் காணப்படும் ஓசோன் மண்டலம் மிக முக்கியமான பங்கை வகிக்கின்றது. ஓசோன் படை ஏற்கனவே கூறியுள்ளது போன்று உயிர்களைக் கொல்லுமியல்புள்ள UV கதிர்களை புவியின் மேற்பரப்புக்கு வரவிடாது தடுக்கின்றன. UV கதிர்கள் உயிர் அங்கிகளின் பிறப்புரிமைப் பொருளான DNA இல் பல மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியது. இதனால் உயிரங்கிகளிலும் பல பாரதூரமான விளைவுகள் தோன்றலாம். எனவே புவியைச் சூழவுள்ள வளிமண்டலம் மூன்று மிக முக்கியமான தொழிற் பாடுகளை ஆற்றுகின்றது. அவை;

(1.) பூமியின் மேற்பரப்பை சூடாக வைத்துள்ளது.
(2.) கடல், மண், புவியிலுள்ள உயிர்பொருட்கள், வளி என்பவற்றுக்கிடையில் இரசாயனப் பதார்த்தங்களின் மாறாத பரிமாறுகையைச் சீராக்கி வைக்கிறது.
(3.) புவியின் மேற்பரப்பில் காலநிலை மாற்றங்களை ஏற்படுத்தி அவற்றை நிர்வகிக்கின்றது.

## பச்சை வீட்டுவிளைவும் சூழலில் வெப்பநிலை உயர்வும்

1800 இன் நடுப்பகுதியில் புவியின் பொது வெப்ப நிலை 0.5°C ஆல் உயர்ந்துள்ளதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். அடுத்த நூற்றாண்டின் நடுப்பகுதிக்கு முன்பாக மேலும் 1.5 - 4.5° C ஆல் வெப்ப உயர்வை எதிர்பார்க்கலாம் என விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். இந்த வெப்ப உயர்வுக்குக் காரணமென்ன. எங்கள் வளிமண்டலத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது, விண்வெளி ஆய்வின் சில அவதானங்களே பச்சைவீட்டு விளைவின் (Green House effect) கருத்துக்கு வழிகோலியது. சுக்கிரன் (Venus) கிரகத்தைச் சூழ உள்ள வளிமண்டலத்தில் அதிகளவு காபனீரொட்சைட்டு வாயு உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் அதன் மேற்பரப்பின் வெப்பநிலை மிக உயர்வாக காணப்படுகின்றது. செவ்வாய் (Mars) கிரகத்தைச் சூழ உள்ள வளிமண்டலத்தில் மிகச்சிறிதளவே காபனீரொட்சைட்டு காணப்படுகின்றது. அத்துடன்அதன் மேற்பரப்பு வெப்பநிலை மிகக் குறைவாக உள்ளது. சுக்கிரன் கிரகம் வெப்பம் வாய்ந்ததாகவும், செவ்வாய் கிரகம் சூடாகவும் உள்ளது. இது பச்சைவீட்டு விளைவாலேதான் ஏற்பட்டுள்ளது.

முதன் முதல் 1827 இல் Baron Jean Bastiste Faurier என்பவரால் பச்சைவீட்டு விளைவு விபரிக்கப்பட்டது. தாவரங்களை வளர்க்கும் கண்ணாடியால் அடைக்கப்பட்ட வீடுகளே பச்சை வீடு அல்லது பசிய இல்லங்களாகும். அங்குள்ள வளி வெப்பநிலையை உயர்வாக வைத்துள்ளது. இதனால் தாவரங்கள் உள்ள அறையின் வெப்பநிலை வெளிப்புறச் சூழலின் வெப்பநிலை மாற்றங்களினால் பாதிக்கப்படுவதில்லை இவ்வித பச்சை வீடுகளைப் போன்று வளிமண்டலத்திலுள்ள காபனீரொட்சைட்டு வாயுவும் நீராவியும் தொழிற்பட்டு புவியின் மேற்பரப்பின் வெப்பநிலையை உயர்வாக வைத்திருக்கின்றது. இதுவே பச்சைவீட்டு விளைவு ஆகும். வளியில் காபனீரொட்சைட்டு, நீராவி போன்ற வாயுக்கள் மிகையாகச் சேர்வதால் புவியின் வெப்பநிலை உயர்வடைகிறது. இது உலகளாவிய புவியின் வெப்பநிலை உயர்வுக்கு காரணமாக அமைகின்றது. உலகளாவிய சூழல் வெப்ப ஏற்றத்துக்கு காபனீரொட்சைட்டு வாயு பிரதானமான காரணமாக இருந்த போதிலும் வேறு பல வாயுக்களும் இதற்கு காரணமாக அமைகின்றன என்பதை ஆய்வுகள் காட்டுகின்றன.

மெதேன் ($CH_4$) இயற்கையாகவும் மனிதனின் தொழிற்பாடுகளாலும் உருவாக்கப்படுகின்றது. மெதேன், சேற்று வாயு ( Marsh Gas) எனவும் அழைக்கப்படும். ஒட்சிசன் இல்லா சூழலில் பக்ரீயாக்களால் தோற்றுவிக்கப்படும். உயிரங்கிகளின் உணவுக் கால்வாயிலும் (இரைமீட்கும் விலங்குகள்) மெதேன் உற்பத்தியாக்கப்படுகின்றது. மந்தைகள் அதிகளவில் மெதேனை வெளியேற்றுகின்றன. குதிரைகள், முயல்கள் கரப்பான்பூச்சிகள், கறையான்கள் என்பவற்றின் பிற்குடலில் மெதேன் உற்பத்தியாக்கப்படுகிறது. அழுகும் சேதனப்பொருட்களிலிருந்தும் மரங்கள், சில தாவரங்கள் எரிக்கப்படும் போதும் மெதேன் வாயு வெளியேறுகின்றது. காபனீரொட்சைட்டைப் போலல்லாது, மெதேன் இரசாயன ரீதியில் தாக்கமுறும் வாயுவாகும். எனவே வளிமண்டலத்தில் இது சிதைவடைந்து வேறு விளை பொருட்களையும் தோற்றுவிக்கும். இவையும் பச்சைவீட்டு விளைவைத் தேற்றுவிக்க முடியும்.

நைதரச ஒட்சைட்டு (Nitrous oxide- $N_2O$)பச்சை வீட்டு விளைவை ஏற்படுத்தும் பிறிதொரு வாயுவாகும் சுவட்டு எரிபொருட்களின் எரிதலின் போதும், விவசாய உரங்களின் உபயோகிப்பினாலும், உயிர்த்திணிவுகளின் எரிதலின் போதும். விலங்குக் கழிவுகளிலிருந்தும் 45 வீதம் இவ்வாயு வளிமண்டலத்தில் சேர்க்கப்படுகின்றது.ஓசோன்(Ozone)இயற்கையில் வளிமண்டலத்தில் காணப்படும் வாயுவாகும். தொழில் முறையில் தூய்மையாக்கும் காரணியாக இது உற்பத்தி செய்யப்படுகின்றது. மேல் வளிமண்டலத்தில் அதிக செறிவில் ஓசோன் காணப்படுகின்றது. சூரியக்கதிர் வீசலினால் $O_2$ மூலக்கூறில் தாக்கம் நிகழ்ந்து $O_3$ தோன்றுகிறது. மீண்டும் $O_3$ UV கதிர் வீசலை உறிஞ்சி O அணுக்களாக உடைகின்றது. இது மீண்டும் $O_2$ உடன் தாக்கம் புரிந்து $O_3$ யை உண்டாக்குகிறது. இத்தொடரான சங்கிலித் தாக்கம் படைமண்டலத்திலுள்ள வளியை வெப்பமாக்குகின்றது. மேலும் சில $O_3$ மூலக் கூறுகள் படைமண்டலத்திலிருந்து மாறன் மண்டலத்திற்குள்ளும் இறங்குகின்றன. இவ் ஓசோன் வாயுவும் பச்சை வீட்டு விளைவைத் தோற்றுவிக்கும் வாயுவாகத் தொழிற்படுகின்றது.

புவியின் பரப்புக்கு அண்மையிலிருக்கும் வளிமண்டலத்தில் சூரிய ஒளி, சுவட்டு எரி பொருள் அடுக்குகளின் மீது நிகழ்த்தும் தாக்கத்தாலும் ஓசோன் உருவாக்கப்படும். ஓடும் வாகனங்களிலிருந்தும் $CH_4$,$CO_2$,$N_2O$,CO என்பன தோன்றுகின்றன. வளிமண்டலத்தில் இயற்கையில் நிரம்பியுள்ள இவ்வாயுக்கள் மனிதத் தொழிற்பாடுகளினால் மேலும் அதிகரிக்கப்படுகின்றது. குளோரோ புளுரோ காபன் எனப்படும் இரசாயனப் பதார்த்தம் 1930 இல் தோமஸ் மிட்கெலி (Thomas Midgely) என்பவரால் குளிரூட்டும் சாதனங்களுக்காகக் கண்டுபிடிக்கப்பட்டது. இது இரசாயன ரீதியில் சடத்துவமானது. அதாவது இது சிதைவடைவதுமில்லை, வேறு இரசாயனப் பொருட்களுடன் தாக்க முறுவதுமில்லை. குளோரோ புளுரோ காபன் தற்போது படைமண்டலத்திலுள்ள ஓசோன் படையை அழிப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. காபனீரொட்சைட்டுடன் ஒப்பிடும் போது குளோரோ புளுரோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காபன் 10,000 மடங்கு அதிகமான வெப்பத்தை உறிஞ்சுகிறது. ஓசோன் 2000 மடங்கு வெப்பத்தையும் நைதரஒட்சைட் 150 மடங்கு வெப்பத்தையும் மெதேன் 30 மடங்கான வெப்பத்தையும் உறிஞ்சுகிறது. இவ்வாயுக்களின் வளிமண்டல வாழ்க்கைக் காலங்களானது மெதேனுக்கு 10 வருடங்கள் ஆகும். குளோரோ புளுரோ காபனுக்கு 70 – 110 வருடங்கள், நைதரஒட்சைட்டுக்கு 170 வருடங்கள் ஆகும். எனவே இவை யாவும் தமது கூட்டுமொத்த விளைவால் பச்சை வீட்டு விளைவையும், அதன் காரணமாக சூழல் வெப்பமடைதலையும் எற்படுத்துகிறது.

இப்பச்சை வீட்டு விளைவால் ஏற்படும் முழு உலக வெப்பமேறல் எதிர் காலத்தில் தோற்றுவிக்கலாம் என எதிர்பார்க்கப்படும் விளைவுகளாவன:

(1) 2030 ஆம் ஆண்டளவில் 1.5 – 4.5$^{0}$ C ஆல் புவியின் வெப்பநிலைஉயர்ந்துவிடும். இதனால் புவியின் எல்லா பௌதீக உயிரியல் தொகுதிகளையும் பாதிக்கும்.

(2) அயன மண்டல பிரதேசங்களில் மாரிகாலம் குறுகியதாக இருப்பதுடன் சூழல் இளஞ்சூடாகவும் இருக்கும்.

(3) கோடை காலம் நீண்டதாக இருக்கும். உப அயன மண்டலம் உலர்ந்து போகும்.

(4) மழைவீழ்ச்சியில் பாரதூரமான மாற்றம் ஏற்படும். இது விவசாய அபிவிருத்தியில் பெரும் பாதிப்பை உருவாக்கும்.

(5) அதிக நிலப்பரப்புகள் பாலைவனமாக மாறும். மண்ணரிப்பு அதிகரிக்கும்.

(6) வானிலை மாற்றத்தால் தற்போது வளர்ச்சியில் உள்ள காடுகள் பெருமளவு அழிவுக்குள்ளாகும். விவசாய உணவுப் பொருட்கள், பாவனை மாதிரிகள், உலக வர்த்தக நிலை என்பன மிகப்பாரதூரமான பாதிப்புக்குள்ளாகும்.

(7) அனேக நீர்த்தேக்கங்கள் அணைக்கட்டுக்கள் நீர்வற்றி உலர்ந்து போகும். இதனால் நீர் மின்சக்தி பெறுதல் நின்று போகும்.

(8) முனைவிலுள்ள பனிமலைகள் உருகுவதால் கடல் நீர்மட்டம் உயரும்.

(9) நீரின் விரிவாலும், கடல்நீர் அதிகரிப்பாலும் வெள்ளப்பெருக்கு ஏற்படும். கடலை அண்மிய தாழ்நிலை நிலப்பரப்புகள் கடலால் கொள்ளப்பட்டுவிடும்.

இவையெல்லாவற்றையும் நோக்குமிடத்து நாமும் எமது பூமியும் ஊழியின் விளிம்பில் நின்று கொண்டிருப்பது போல் தோன்றுகிறதல்லவா. எனவே சூழலுக்கு தற்போது ஏற்பட்டுள்ள மிகப் பயங்கரமான தாக்கத்தைக் கருத்திற் கொண்டு இவற்றை கட்டுப்படுத்தும் மாபெரும் அவசரமும், அவசியமுமான பொறுப்பு மனித இனத்திற்கு ஏற்பட்டுள்ளது. பச்சை வீட்டு விளைவைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளை அறிவியலாளர்களும், ஆய்வாளர்களும், விஞ்ஞானிகளும், மக்களும் மேற்கொண்டு ஊழியின் விளிம்பினின்றும் எம்மைப் பாதுகாத்துக் கொள்வது அவசியமாகும்.

## திருகோணமலைப் பிரதேச வறட்சி நிகழ்வு......

### உசாத்துணைகள்


1. Alles, w.s. (1968): A study of the incidence of agricul tural drought at Maha Illupallama. Proc. Cey. Ass. Ad. Se. Pt. 1 (abstract).
2. ...........(1969) : Drought incidence in relation to rainfed rice. Tropical Agriculturist, Vol.125, pp. 1-8.
3. Balachandran, S. (1975): The Assessment of drought in Sri Lanka. (unpublished MSc. Thesis) Department of Geography, University of Birmingham, U.K.
4. ......... (1987 - 88) The Occurrences of drought months in Sri Lanka, Jaffna Geographer (in Tamil) University of Jaffna, Vol.V, pp. 37-46.
5. Domros, M. (1978) : Aspect of aridity and drought in the Monsoon climate of Sri Lanka. Indian Journal of Meteo - Hydrol. Geophys., 29, 1&2, pp. 384-394.
6. Farmer, B.H. (1956): Rainfall and Water Supply in the Dry Zone of Ceylon. in C.A. Fisher and R.W. Steel (eds), Geographical Essays on British Tropical Lands (London), pp. 228-268.
7. Jayamaha, G.S. (1959): Variation of rainfall over Ceylon, The Ceylon Geographer (formerly) Bulletin, Ceylon Geographical Society, Vol. 13, pp. 15-20.
8. Panabokke, C.R. (1967a): Soils and Land Use Patterns in Dry Zone Agriculture" in peries, O.S.(ed.) Development of Dry Zone Agriculture (C.A.A.S., Colombo)
9. ............(1967b) : Soils of Ceylon and Fertilizer Use (C.A.A.S., Colombo).
10. Srinanda, K.U. (1975): Pattern of drought in the Dry Zone of Sri Lanka: a study in water Balance Climatology. Ceylon Geographer, Vol 21, pp. 33- 41.
11. Subramaniyam, V.P. and Subramaniyam, A.R. (1965): Some Characteristics and frequencies of occurrences of droughts in dry climatic Zone of India,Bull. Internat. Assoc. Sci. Hydro. xe Annee No-3.
12. Subramaniyam, V.P. (1971): Climatic Water Bal ances of the Indian Arid Zones. Proc. sym. problems of Indian Arid Zone, Jodhpur.
13. Thornthwaite, C.W. & Mather (1955): The Water Bal ance. publications in Climatology, Vol, 8, (1) (centerton, N.J.).


## அத்துவைதத்திலும் சைவ.......

இவ்வாறு அத்துவைதத்தில் உலகம் வெறுந்தோற்றமாகவும், தோற்றத்திற்குக் காரணமான மாயை வர்ணிக்கமுடியாத, விளக்கமுடியாத அநிர்வசனீயப்பொருளாகவும் இருக்கும்போது, சைவசித்தாந்தத்தில் உள்பொருளாகிய உலகப்படைப்புக்கு முதற் காரணமாக இருப்பதுடன், நித்தியமான வஸ்துவாகவும் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அடிக்குறிப்புகள்:


1. ஐதரேய உபநிடதம் 1.1
2. தைத்திரீய உபநிடதம் 2.1
3. சுவேதாஸ்வதர உபநிடதம் 4.10
4. சாந்தோக்கிய உபநிடதம் 6.2
5. முண்டக உபநிடதம் 2.1.1
6. நிருசிம்ஹறதாபனீய உபநிடதம் 9
7. புருஷுசூக்தம் 3
8. பகவத்கீதை 10.42
9. சாந்தோக்கிய உபநிடதம் 3.12.5
10. நிருசிம்ஹறதாபனீய உபநிடதம் 1.3
11. சிவஞானபோதம் -சூத் 1.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

*With best compliments from*

**CDI ENGINEERS (PVT) LTD.**
ARCHITECTS
ENGINEERS
PROJECT MANAGERS

DEVELOPERS

379 - 2/2, GALLE ROAD,
COLOMBO 6, SRI LANKA.
TEL: 588292, 501206

**CLYDESBUILT GROUP OF COMPANIES**
PROPERTY DEVELOPER
BUILDER
CHARTERED PROFESSIONAL CIVIL/STRUCTURAL ENGINEERS
PROJECT MANAGEMENT / PLANNING CONSULTANTS

809, FRENCH ROAD, #06 - 150,
SINGAPORE 0820
TEL: 29660036

TEAMED TOGETHER UNDER THE NAME OF

# LANKAMIRTHA CLYDESBUILT (PVT) LTD

FOR THE DESIGN AND CONSTRUCTION OF MULTI - STOREYED RESIDENTIAL APARTMENTS UNDER BOARD OF INVESTMENT HOUSING PROGRAMME WORTH OF MILLIONS

UNDER THAT SCHEME THE FIRST PROJECT AT MILAGIRIYA AVENUE, BAMBALAPITIYA, COLOMBO 4 WILL BE COMMENCED VERY SOON.

## CDI ENGINEERS PAST & CURRENT PROJECTS

1. METRO RESIDENTIAL APARTMENTS
   8, 55TH LANE, COLOMBO 6.
2. PEARL RESIDENTIAL APPARTMENTS
   16, PEREIRA LANE, COLOMBO 6.
3. BREEZY RESIDENTIAL APPARTMENTS
   54, RAJASINGHE ROAD, COLOMBO 6.
4. CDI RESIDENTIAL APPARTMENTS
   104, MANNING PLACE, COLOMBO 6.
5. S & A SHOPPING COMPLEX
   348, GALLE ROAD, COLOMBO 6.
6. CHANGAM RESIDENTIAL APARTMENTS
   541/3, GALLE ROAD, COLOMBO 6.
7. TOPAZ RESIDENTIAL APPARTMENTS
   23, FRANKFORT PLACE, COLOMBO 4.
8. CDI RESIDENTIAL APPARTMENTS
   12, ROHINI ROAD, COLOMBO 6.
9. EMERALD RESIDENTIAL APPARTMENTS
   21, FREDRIKA ROAD, COLOMBO 6.
10. CDI LUXURY APPARTMENTS
    19, MILAGIRIYA AVENUE, COLOMBO 4.

CLYDESBUILT GROUP IS ONE OF THE MAJOR DEVELOPERS IN SINGAPORE & MALAYSIA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*from*

# alexandra industries(ceylon)ltd

Leading Manufactures & Importers of Knitted Garments

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

467, Galle Road,
Colombo - 3
P.O.Box 1867
Sri Lanka

Tel: 501495/6
Telex : 21708 ALEX CE
Fax : 501950

**FACTORY**
76, Minuwangoda Road,
Ekala, Jaela
Tel: 536416, 537411

**Branch Factory**
Ganoruwa Road,
Peradeniya
Tel: 08 - 33006
08 - 88201

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org